**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்**
**பத்தாவது பாராளுமன்றம்**
**(முதலாவது கூட்டத்தொடர்)**

**பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. 536**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 122(5)இன் கீழ் சமர்ப்பிக்கப்படுகின்ற, 2025.09.01ஆந் திகதி தொடக்கம் 2025.12.31ஆந் திகதி வரையான காலப்பகுதிக்கான

# பொது மனுக்கள் பற்றிய குழுவின் மூன்றாவது அறிக்கை

**பொது மனுக்கள் பற்றிய குழுவின் தவிசாளர்**

**பாராளுமன்ற உறுப்பினர்**
**கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்க அவர்களால்**

2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

**2026 யூன் மாதம் 12 ஆம் திகதி**

**அச்சிடுவதற்கு இலங்கைப் பாராளுமன்றம் கட்டளையிட்டது.**

**உள்ளடக்கம்**


| | | பக்க எண் |
|---|---|---|
| i | பொது மனுக்கள் பற்றிய குழுவின் கட்டமைப்பு | 1 |
| ii | பொது மனுக்கள் பற்றிய குழுவின் பணிப் பொறுப்புகள் | 3 |
| iii | குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள கொள்கைத் தீர்மானங்கள் | 3 |
| iv | குழுவின் அவதானிப்புக்கு உட்பட்டுள்ள விசேடமான விடயங்கள் | 4 |
| v | விதப்புரைகள் | |
| | 1) விதப்புரை வழங்கப்பட்டுள்ள மனுக்கள் | 6 |
| | 2) நிவாரணம் சிபாரிசு செய்யப்படாத மனுக்கள் | 185 |
| | 3) நிவாரணம் வழங்கல் பிற்போடப்பட்டுள்ள மனுக்கள் | 316 |
| vi | மனு ஒன்றின் மாதிரி வடிவம் | 360 |

## அறிக்கை

### 1. பொது மனுக்கள் பற்றிய குழுவின் கட்டமைப்பு

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 125(1)இன் ஏற்பாட்டுக்கு இணங்க, தெரிவுக் குழுவினால் பத்தாவது பாராளுமன்றத்திற்காக பெயர்குறித்து நியமிக்கப்படும் அமைச்சரவை அமைச்சர்கள் அல்லாத 29 உறுப்பினர்களைக் கொண்ட பொது மனுக்கள் பற்றிய குழு, பின்வருவோரை அங்கத்தவர்களாகக் கொண்டுள்ளது.

**பொது மனுக்கள் பற்றிய குழுவின் அங்கத்துவ உறுப்பினர்கள்**

1. கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்க, பா.உ. (தவிசாளர்)
2. கௌரவ உபாலி சமரசிங்ஹ, பா.உ.
3. கௌரவ ரோஹித அபேகுணவர்தன, பா.உ.
4. கௌரவ சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ, பா.உ. (2025.09.10ஆந் திகதி நியமிக்கப்பட்டுள்ளார்)
5. கௌரவ திலிப் வெத ஆரச்சி, பா.உ.
6. கௌரவ கே. காதர் மஸ்தான், பா.உ.
7. கௌரவ இம்ரான் மஹ்ரூப், பா.உ.
8. கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன, பா.உ.
9. கௌரவ வருண லியனகே, பா.உ.
10. கௌரவ அஜித் அகலகட, பா.உ.
11. கௌரவ சட்டத்தரணி யூ.பீ. அபேவிக்ரம, பா.உ.
12. கௌரவ உபுல் கித்சிறி, பா.உ.
13. கௌரவ சமிந்த லலித் குமார, பா.உ.
14. கௌரவ அஜித் கிஹான், பா.உ.
15. கௌரவ அசோக குணசேன, பா.உ.
16. கௌரவ எம்.ஏ.எம். தாஹிர், பா.உ.
17. கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க, பா.உ.
18. கௌரவ நந்தன பத்மகுமார, பா.உ.
19. கௌரவ சட்டத்தரணி நிஷாந்த பெரேரா, பா.உ.
20. கௌரவ (டாக்டர்) சந்தருவன் மதரசிங்ஹ, பா.உ.
21. கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க, பா.உ.
22. கௌரவ சானக மாதுகொட, பா.உ.
23. கௌரவ சுனில் ரத்னசிறி, பா.உ.
24. கௌரவ (திருமதி) ஏ.எம்.எம்.எம். ரத்வத்தே, பா.உ.
25. கௌரவ மனோஜ் ராஜபக்ஷ, பா.உ.
26. கௌரவ சட்டத்தரணி (திருமதி) ஹிருனி விவஜசிங்ஹ, பா.உ.
27. கௌரவ ஜகத் விதான, பா.உ.
28. கௌரவ (செல்வி) அம்பிகா சாமிவேல், பா.உ.
29. கௌரவ முஹம்மட் பைசல், பா.உ.

பத்தாவது பாராளுமன்றத்திற்கான பொது மனுக்கள் பற்றிய குழு, பாராளுமன்ற நிலையியற் கட்டளை 125(5)இற்கு இணங்க அதனது முதலாவது மற்றும் இரண்டாவது அறிக்கை (பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் 250 மற்றும் 390)களை முறையே 2025 ஓகத்து மாதம் 07ஆந் திகதியும், 2025 திசெம்பர் மாதம் 05 ஆந் திகதியும் பாராளுமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதுடன், பொது மனுக்கள் பற்றிய குழுவின் மூன்றாவது அறிக்கையை 2026.06.12 ஆந் திகதி சமர்ப்பிக்கின்றது.

குழுவின் முதலாம் மற்றும் இரண்டாம் அறிக்கைகள் பாராளுமன்றத்தின் அதிகாரபூர்வ இணையத் தளத்தில் பிரசுரிக்கப்பட்டிருப்பதுடன்,
https://www.parliament.lk/uploads/comreports/1759903869089793.pdf#page=1 மற்றும்
https://www.parliament.lk/uploads/businessdocs/sinhala/23317_sinhala_2025-12-05.pdf ஊடாக
அவற்றை தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கியலம் ஆகிய மும் மொழிகளிலும் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

நிலையியற் கட்டளை 125(6) மற்றும் 125 (7)இன்படி, முதலாவது அறிக்கையில் விதப்புரைகள் வழங்கப்பட்டுள்ள 39 மனுக்கள் மீதான அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒன்பது அமைச்சுகளுக்கும், இரண்டாவது அறிக்கையில் விதப்புரைகள் வழங்கப்பட்டுள்ள மனுக்கள் மீதான அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பதினொறு அமைச்சுகளுக்கும் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 125(5)இற்கு இணங்க முன்னிலைப்படுத்தப்படுகின்ற பொது மனுக்கள் பற்றிய குழுவின் மூன்றாவது அறிக்கையில், 2025 செப்தெம்பர் 01ஆந் திகதியிலிருந்து 2025 திசெம்பர் 31ஆந் திகதி வரை விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள மனுக்கள் சம்பந்தப்பட்டதாக குழுவினால் வழங்கப்பட்டுள்ள விதப்புரைகள் மற்றும் குழுவின் விசாரணைகளின்போது வெளிக்கொணரப்பட்ட சிறப்புத் தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பொது மனுக்கள் பற்றிய குழு 2025 செப்தெம்பர் மாதம் 01ஆந் திகதியிலிருந்து 2025 திசெம்பர் மாதம் 31ஆந் திகதி வரை மனுக்களை விசாரணை செய்வதற்காக 15 கூட்ட அமர்வுகளை நடத்தி உள்ளதுடன், 89 மனுக்கள் விசாரணை செய்யப்பட்டுள்ளன. இவற்றில் விதப்புரைகள் வழங்கப்பட்டுள்ள மனுக்களின் எண்ணிக்கை 43 ஆகக் காணப்படுவதோடு, 33 மனுக்களுக்கு நிவாரணத்திற்கான விதப்புரைகள் வழங்கப்படவில்லை. 13 மனுக்களுக்கான விதப்புரை வழங்கல் பிற்போடப்பட்டுள்ளது.

விசாரணை செய்யப்பட்ட 89 மனுக்கள் பற்றிய தகவல்கள், எதிர்ப்பார்க்கப்பட்ட நிவாரணம், குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் குழு வழங்கியுள்ள விதப்புரைகள் பற்றிய விவரம் – இணைப்பு I இல் தரப்பட்டுள்ளது.

## <u>பொது மனுக்கள் பற்றிய குழுவின் பணிப்பொறுப்புகள்</u>

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30இன்படி, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் மனுவொன்றைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்ததன் பின்னர் அம்மனு பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும். அதன் பின்னர், 125(3)ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளுக்கு இணங்க குழு மனுமீதான அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**நிலையியற் கட்டளை 125(3)** *"பகிரங்க அலுவலரொருவரால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம், உள்ளூரதிகாரசபை அல்லது அதேபோன்ற பிற நிறுவனமொன்றின் அலுவலரொருவரால் அடிப்படை உரிமை மீறப்படுதலை அல்லது வேறு அநீதி இழைக்கப்படுதலை ஏதேனும் மனு வெளிக்காட்டுகின்றதென பொது மனுக்கள் பற்றிய குழு கருதுமிடத்து, பொது மனுக்கள் பற்றிய குழு அத்தகைய மனுபற்றி விசாரணை செய்யலாம் அல்லது அத்தகைய மனுவை விசாரித்து அறிக்கையிடுவதற்காக நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஒம்புட்சுமான்) ஆற்றுப்படுத்தலாம்."*

பொது மனுக்கள் பற்றிய குழு **125(3) ஆம்** இலக்க நிலையியற் கட்டளைக்கு இணங்க விசாரணை செய்யப்பட்ட மனுக்கள் தொடர்பிலான அதனது இறுதியான அபிப்பிராயத்தையும், விசாரணையின்போது அவதானிக்கப்பட்ட விடயங்களையும் **இவ்வறிக்கையில் உள்ளடக்கி இருப்பதுடன், 125(6) மற்றும் 125(7)ஆம் இலக்க நிலையியற் கட்டளைகளுக்கு இணங்க அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பொது மனுக்கள் பற்றிய குழு இவ்வறிக்கையை கௌரவ சபாநாயகரிடம் சமர்ப்பிக்கின்றது.**

**நிலையியற் கட்டளை 125(6)** *"அறிக்கையானது சபாபீடத்தில் இடப்படும்போது, சபாநாயகர் அத்தகைய அறிக்கையின் உள்ளடக்கத்தினை உரிய அமைச்சருக்கு அவரது அவதானிப்புகளுக்காக அனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அவதானிப்புகள் எட்டு வாரக் காலப்பகுதியினுள் அமைச்சரினால் எழுத்துமூலம் சபாநாயகருக்கு அனுப்பிவைக்கப்படுதலும் வேண்டும்."*

**நிலையியற் கட்டளை 125(7)** *"உரிய அமைச்சரின் அவதானிப்புகளைப் பெற்ற பின்னர் சபாநாயகர் அத்தகைய அவதானிப்புகளின் பிரதியொன்றைத் தவிசாளருக்கும் மனுவைச் சமர்ப்பித்த பாராளுமன்ற உறுப்பினருக்கும் அனுப்பிவைத்தல் வேண்டும். வழங்கப்பட்ட பதில் தொடர்பில் திருப்தியடைய முடியாதவிடத்து தகுந்த தீர்வுகளை முன்னெடுக்குமாறு அமைச்சரிடம் கோரப்பட வேண்டும். அமைச்சரினால் ஒரு மாதகாலத்திற்குள் தீர்மானங்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதுடன், அதனை நிறைவேற்றாமைக்கான காரணங்களை எழுத்துமூலம் முன்வைப்பதுடன் நிவாரணம் வழங்குவதற்காகக் கருத்திற்கொள்ளப்படும் மாற்று நடவடிக்கை குறிப்பிடப்பட வேண்டும்."*

**<u>குழுவினால் மனுக்கள் மீதான விசாரணைகளுக்கு ஏற்புடையதாக நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட கொள்கைச்சார்ந்த தீர்மானங்கள்</u>**

(i) மாணவர்களை அரசாங்கப் பாடசாலைகளில் எந்தவொரு தரத்திற்கும் அனுமதிப்பது குறித்த மனுக்கள் ஆராயாதிருத்தல்.

(ii) ஏதேனும் மனு ஒன்றின் உள்ளடக்கம் பற்றி மனு சமர்ப்பிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அல்லது அதன் பின்னர் நீதிமுறைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால், அத்தகைய நீதிமன்றச் செயற்பாடு முடியும் வரை குறித்த மனுவை விசாரணை செய்யாதிருத்தல்.

(iii) பொது மனுக் குழுவினால் ஒரு தடவை விசாரணையின் பின்னர் நிராகரிக்கப்பட்ட / தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்களை குழு மீண்டும் பரிசீலணை செய்வதற்குத் தீர்மானித்தாலன்றி, அவற்றை ஆராய்வதை கைவிடுதல்.

(iv) அரசக் கொள்கைகளுக்கு முரணான விடயங்கள் சம்பந்தப்பட்ட மனுக்களை மனுதாரர் இன்றி விசாரணை செய்தல்.

(v) மனுமீதான பொறுப்பினைக் கொண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர், குழுவின் அங்கத்தவரல்லாதவிடத்து குறித்த மனுமீதான விசாரணைத் திகதியை அவருக்கு அறிவித்து விசாரணையின்போது பங்கேற்க அனுமதி அளித்தல்.

(vi) 15 வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்த ஒரு சம்பவம் பற்றி குழுவுக்கு முதல் தடவையாக முன்னிலைப்படுத்தப்படுகின்ற மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமை.

(vii) மனுதாரர் மனு மீதான விசாரணை முன்னெடுக்கப்படுவதில் ஆர்வத்தை வெளிப்படுத்தாவிடத்து குறித்த மனுமீதான நடவடிக்கைகளை முடிவுறுத்தல்.

(viii) ஏதேனும் மனு குறித்து, சம்பந்தப்பட்ட அமைச்சிலிருந்து கோரப்படுகின்ற அறிக்கை மூன்று மாத காலத்தினுள் கிடைக்காதவிடத்து அந்த அறிக்கையின்றி மனுவை ஆராய்தல்

**குழுவின் அவதானிப்புக்கு உட்பட்ட விசேட தகவல்கள்**

(i) பொது மனுக்கள் பற்றிய குழுவில் மனுக்களை விசாரணை செய்வதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அலுவலர்களை அழைக்கும்போது மனுதாரர்களுக்கு நிவாரணம் வழங்குதல் பற்றிய முடிவுகளை எடுக்கக்கூடிய, நிறைவேற்று தர அலுவலர்கள் பங்கேற்பார்களாயின் குழுவின் நடவடிக்கைகளை பயனுறுதி மிக்கதாக முன்னெடுக்க வாய்ப்பு உள்ளது.

(ii) பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சுக்கு ஏற்புடையதான மனுக்களை ஆராயும்போது, மனுதாரர்களால் இழைக்கப்பட்டுள்ள தவறுகள் குறித்து பொலிசுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட ஒழுக்காற்று விசாரணையில் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு மனுதாரர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டிருந்த நிலையில், அதன் பின்னர் வழங்கப்பட்டுள்ள நீதிமன்றத் தீர்ப்பில் அவர்கள் குற்றமற்றவர்களாகக் கருதி விடுவிக்கப்பட்டுள்ளபோதும், அந்நீதிமன்றத் தீர்ப்பினை ஆதாரமாகக் கொண்டு அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள ஒழுக்காற்றுத் தண்டனையை அகற்றிக்கொள்வதற்கான ஏற்பாடுகள் இல்லாபோதும் மனுதாரர்கள் அந்த அடிப்படை வழிநின்று நிவாரணங்களை விதப்புரை செய்யுமாறு பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு மேன்முறையீடு செய்யும் போக்கு காணப்படுகின்றது.

(iii) ஓய்வூதியத்திற்கு உரித்துபெறாத பணியாளர்களுக்காக ஒரு தடவை மாத்திரம் செலுத்தப்படுகின்ற ரூபா 50,000/- ஆன கருணை அடிப்படையிலான கொடுப்பனவை அதிகரிக்க வேண்டும் எனவும், அதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினதும் ஓய்வூதியத் திணைக்களத்தினதும் கவனம் ஈர்க்கப்பட வேண்டும்.

(iv) ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்வதற்கும் ஒழுக்காற்றுக் கட்டளைகளைப் பிறப்பிப்பதற்கும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நீண்ட காலம் எடுப்பதன் காரணமாக அரசாங்க சேவையிலிருந்த மனுதாரர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

(v) அரசியல் பழிவாங்கல்களை ஆராய்வதற்கான குழுக்களை அமைக்கும்போதும் அத்தகைய குழுக்களால் வழங்கப்படுகின்ற சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தும்போதும் சிக்கல்கள் எழுந்துள்ளன.

(vi) நியதிச் சட்ட நிறுவனங்களினால் அலுவலர் நியமனங்கள், பதவி உயர்வுகள் போன்றவற்றுக்காக நேர்முகப் பரீட்சைகள் அல்லது எழுத்துமூலப் பரீட்சைகளை நடத்தும்போது வெளிப்படைத் தன்மையுடன் செயலாற்றுதல் மற்றும் சரியான வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் பல்வேறு சிக்கள்களைத் தீர்த்துக்கொள்ள முடியும்.

(vii) இருபொருள் தருகின்ற அல்லது தெளிவற்றச் சொற்களைப் பயன்படுத்தாது நிருவாகச் சுற்றறிக்கைகளை வெளியிடுதல்.

**இணைப்பு I**

**1) விதப்புரைகள் வழங்கப்பட்டுள்ள மனுக்கள்**

1. பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு

| தொ இ ல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
|---|---|---|---|---|
| 01 | மனுதாரர் – திரு எச்.எச். பாலித தனபால COM/PP/2025/79 சமர்ப்பித்தவர் – கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் லசித் பாஷன கமகே. 2025.09.09 ஆந் திகதி விசாரணை செய்யப்பட்டுள்ளது.<br>அமைச்சின் தொடர்பு: 02/03/23/25/2017 திகதி : 2017.09.04 | பொலிசுத் திணைக்களத்தில் உப பொலிசுப் பரிசோதகராக 1992.08.12 திகதியில் இருந்து சேவையில் இணைந்து கொண்டதாகவும், பிற்போடப்பட்டுள்ள இரண்டு சம்பள ஏற்றங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் காத்திருப்புப் பட்டியலில் இடப்பட்டிருந்த பொலிசுப் பரிசோதகர் பதவியைப் பெற்றுக்கொள்வதற்காக 2007 ஆண்டில் தேசிய பொலிசு ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டை ஆராய்ந்த அப்போதைய பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகா மற்றும் சட்ட ஒழுங்கு அமைச்சின் செயலாளரினால் 2009.10.15 திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் | (அ) கந்தலாய் தம்பலகாமம் பொரிஸ் பிரிவின் பழைய பொலிஸ் சோதனைச் சாவடியில் நிலைய பொறுப்பதிகாரியாக மனுதாரர் பணியாற்றிய காலப்பகுதியில் ஏற்பட்ட ஒரு சம்பவம் தொடர்பாக மனுதாரருக்கு எதிராக அநாமதேய மனு ஒன்று கிடைத்ததை ஏதுவாகக் கொண்டு, பொலிசார் அவருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை ஒன்றை 2004 ஆண்டில் தொடங்கி 2006 ஆண்டில் நிறைவு செய்து தண்டனை வழங்கி உள்ளதாகவும், அந்த பணிக்காக பொலிசார் மிக நீண்ட காலத்தை எடுத்துக் கொண்டுள்ளதாகவும், அதனால் மனுதாரருக்கு அநீதி நேர்ந்துள்ளது.<br><br>(ஆ) மேற்படி ஒழுக்காற்றுக் கட்டளைக்கு எதிராக மனுதாரரினால் 2008.06.04ஆந் திகதி தேசிய பொலிசு ஆணைக்குழுவுக்கு மேன் முறையீடு செய்யப்பட்டுள்ளதோடு, அதற்கு ஏற்புடைய அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் அடங்கிய அறிக்கை பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னர் உடனடியாக அமலுக்கு வரும் வகையில் 2009.10.15 ஆந் திகதி மனுதாரரை பணி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மனுதாரர் பதவி நீக்கம் செய்யப்பட்ட காலத்தை முனைப்பான சேவைக் காலமாகக் கருதி, அவருக்குக் கிடைக்க வேண்டிய பதவி உயர்வு, நிலுவைச் சம்பளம் மற்றும் உரிய ஏனைய கொடுப்பனவுகளை மனுதாரருக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு விதப்புரை வழங்கப்பட்டுள்ளது. |

| தொ இ ல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
|---|---|---|---|---|
| | | பதவி நீக்கம் செய்யப்பட்டதாகவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் 2014.11.20 திகதியில் இருந்து மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டதாகவும் குறிப்பிட்டு, பணி நீக்கம் செய்யப்பட்ட காலப்பகுதியை முனைப்பான சேவைக் காலமாகக் கருதி கிடைக்கவிருந்த பதவி உயர்வு, நிலுவைச் சம்பளம் ஏனைய கொடுப்பனவுகளை வழங்குமாறு கோரி மனுதாரர் இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | (இ) பின்னர் மனுதாரரினால் செய்யப்பட்ட மேன்முறையீடுகளுக்கான பெறுபேறாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் 2014.05.13ஆந் திகதி நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக மனுதாரர் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டதுடன், பணிநீக்கம் செய்யப்பட்ட 2009ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்ட 2014ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் (04 ஆண்டுகளுக்கும் மேல்) மனுதாரருக்கு அவருடைய தொழிலை இழக்க நேர்ந்துள்ளது.<br><br>(ஈ) மனுதாரருக்கான 05 சம்பள ஏற்றங்கள் பிற்போடப்படல் மற்றும் சேவையில் இல்லாத காலத்தைச் சம்பளமற்ற ஒரு காலமாகக் கருதி அரசாங்க சேவை ஆணைக்குழு மனுதாரரை மீண்டும் சேவையில் அமர்த்த நடவடிக்கை எடுத்துள்ளபோதும், குறித்த தண்டனை காரணமாக மனுதாரரின் சேவைக் காலத்திற்கு பாதிப்பு நேர்ந்துள்ளதால் அவருக்கு கிடைக்க வேண்டிய பதவி உயர்வுகள் மற்றும் ஏனைய வரப்பிரசாதங்கள் இழக்கப்பட்டு மனுதாரருக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.<br><br>(உ) பொலிசுச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ள மனுதாரரின் தற்போதை வயது 62.<br><br>(ஊ) மனுதாரருக்கு எதிராக நடத்தப்பட்ட ஒழுக்காற்று விசாரணையை நியாயமான ஒரு காலத்தில் நிறைவுசெய்து ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அவருடைய ஒழுக்காற்று அதிகாரிகள் தவறி உள்ளமை, பின்னர் அப்போதைய | |

| தொ இ ல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
|---|---|---|---|---|
| | | | பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் செயலாளரினால் 2009.10.15ஆந் திகதி மனுதாரரை பணி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை போன்ற காரணங்களால் மனுதாரருக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.<br><br>(எ) மனுதாரரினால் பின்னர் செய்யப்பட்ட மேன்முறையீட்டின்படி 05 சம்பள ஏற்றங்கள் பிற்போடப்பட்டமை மற்றும் சேவையில் இல்லாத காலத்தை சம்பளம் அற்ற காலப்பகுதியாகக் கருதி அரசாங்க சேவை ஆணைக்குழு மீண்டும் அவரை பணியில் அமர்த்த நடவடிக்கை எடுத்தபோதும், மேற்படி தண்டனை காரணமாக மனுதாரரின் சேவை பாதிக்கப்பட்டு அவருக்குக் கிடைக்கவிருந்த பதவி உயர்வு மற்றும் எனைய வரப்பிரசாதங்கள் இழக்கப்பட்டுள்ளன. | |
| 02 | மனுதாரர் – திரு சீ.எச்.எம். பாலித்த சந்திரசேகர COM/PP/2025/219 சமர்ப்பித்தவர் – கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ திசாநாயக்க. 2025.09.09ஆந் திகதி விசாரணை செய்யப்பட்டுள்ளது. அமைச்சின் தொடர்பு: 02/03/23/41/2021 | 2010ஆம் ஆண்டில் கிண்ணிய பொலிஸ் நிலையத்தின் பல்வேறு முறைப்பாடுகள் பிரிவில், பொலிஸ் சார்ஜட் பதவியில் இணைக்கப்பட்டு பணியாற்றிக்கொண்டிருந்தபோது பொய்யான முறைப்பாட்டை மேற்கொண்டு திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாகவு | (அ) கிண்ணியா பொலிஸ் நிலையத்துடன் இணைக்கப்பட்டு 2010.05.25 ஆம் திகதி காவல் பணியில் ஈடுபட்டிருந்தபோது, நபர் ஒருவரின் வசமிருந்த தங்கக் கட்டியிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட 5.92 கிறாம் எடை கொண்ட துண்டை (தங்க கட்டியின் மொத்த எடை 168 கிறாம்) தான் பொறுப்பேற்று அதனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்காது உடைமையில் வைத்திருந்ததற்காக மனுதாரருக்கு எதிராக ஆரம்ப விசாரணை நடத்தப்பட்டு 2010.12.16 ஆந் திகதி குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டு, அதைத் தொடர்ந்து 2010.06.14ஆந் திகதி ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட்டு பணிநீக்கம் செய்யும் | இலங்கைப் பொலிசார் செயலாற்றி உள்ள விதம் காரணமாக மனுதாருக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், நிலுவைச் சம்பளத்துடன் மனுதாரரை மீண்டும் பெயரளவில் சேவையில் அமர்த்தி, ஓய்வூதியம் கிடைக்கக்கூ |

| தொ இ ல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
| --- | --- | --- | --- | --- |
| | திகதி : 2021.12.18 | ம், பின்னர் அச்சம்பவத்திற்கான ஒழுக்காற்று விசாரணையை நடத்தி பணி நீக்கம் செய்ததாகவும், அதற்கு எதிராக தேசிய பொலிசு ஆணைக்குழுவிலும் நிருவாக மேன்முறையீட்டு நியாய சபையிலும் மேன்முறையீடு செய்தபோதும் நிவாரணம் கிடைக்கவில்லை எனவும், மேற்குறிப்பிட்டுள்ள வழக்கிலிருந்து 2018.02.26 குற்றமற்றவர் எனத் தீர்ப்பளிக்கப்பட்டு ள்ளதாவும், நிலுவைச் சம்பளத்துடன் மீண்டும் சேவையில் அமர்த்துமாறு அல்லது மீண்டும் தொழிலை வழங்கி ஓய்வு பெறும் வயதுவரை கடமையாற்றுவதற் கு அங்கீகாரம் அளிக்குமாறு அல்லது ஓய்வு பெறுவதற்கான அங்கீகாரத்தை அளிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி மனுதாரர் இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | ஒழுக்காற்று கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>(ஆ) அக்கட்டளைக்கு எதிராக மனுதாரர் அரசாங்க சேவை ஆணைக் குழுவில் மேன் முறையீடு செய்திருப்பதுடன், குறித்த அலுவலர் சம்பந்தமாக அரசாங்க சேவை ஆணைக்குழு 2013.07.19 ஆந் திகதிய கடிதமூலம் வினவி உள்ளது. அந்தக் கடிதத்திற்கு ஏற்புடைய அறிக்கை 2016.03.14ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், தேசிய பொலிசு ஆணைக் குழுவிலிருந்து குறிப்பிட்ட கோப்பு தொடர்பாக இதுவரை கட்டளை கிடைக்கப்பெறவில்லை.<br><br>(இ) தங்கக் கட்டி விற்பனை செய்யப்பட்ட வர்த்தக நிலையத்தில் இருந்து 5.92 கிறாம் எடை கொண்ட துண்டை மீட்டு, தங்கத் துண்டையும் சந்தேக நபரையும் கிண்ணிய பொலிஸ் நிலையத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைத்ததாகவும், களவு அல்லது கொள்ளை அல்லது சம்பந்தப்பட்ட தங்கத் துண்டு பற்றி எந்தவொரு முறைப்பாடும் செய்யப்படாததால், பதில் கடமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பல்வேறுபட்ட முறைப்பாடுகள் பிரிவுப் பொறுப்பதிகாரியின் வாய்மொழி மூலம் அறிவுறுத்தலின்படி சம்பந்தப்பட்ட தங்கத் துண்டை சந்தேக நபரிடம் அன்றைய தினமே ஒப்படைத்ததாகவும், அதைத் தொடர்ந்து சுமார் 20 நாட்களின் பின்னர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்தேக நபர் மீது பிரயோகிக்கப்பட்ட அழுத்தம் காரணமாக குறித்த தங்கத் துண்டை தன்னிடம் வழங்கியதாக | டிய வகையில் சேவையிலிரு ந்து ஓய்வுபெற ஏற்பாடு செய்யுமாறு விதப்புரை செய்யப்பட்டு ள்ளது. |

| தொ இல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
|---|---|---|---|---|
| | | | பொய்யான முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளதாகவும், இந்தப் பொய்யான முறைப்பாடு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் அழுத்தம் மற்றும் பழிவாங்கும் நோக்கத்துடன் செய்யப்பட்டுள்ளதாக முறைப்பாட்டாளர் நீதவான் நீதிமன்றத்தில் தெரிவித்ததாகவும், குற்றப்பத்திரிகை மற்றும் சம்பந்தப்பட்ட வழக்கு போலியானது என நீதிமன்றம் தீர்ப்பளித்ததாகவும், பொய்யான முறைப்பாடு காரணமாக தனக்கு அநீதி இழைக்கப்பட்டதால் அதைக் கவனத்தில் கொண்டு மீண்டும் தன்னுடைய தொழிலை வழங்குமாறு மனுதாரர் கோரி உள்ளார்.<br><br>(ஈ) மேற்படி விடயத்துடன் சம்பந்தப்பட்டதாக 2018.02.26 ஆந் திகதி மனுதாரருக்கு திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கு விசாரணையில் அளிக்கப்பட்ட தீர்ப்பின்படி, மனுதாரருக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளை முறைப்பாட்டாளர் நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்க தவறி உள்ளதாக நீதவான் தீர்மானித்துள்ளதுடன் மனுதாரர் அத்தகைய குற்றச்சாட்டுகளிலிருந்து குற்றமற்றவராக விடுவிக்கப்பட்டுள்ளார்.<br><br>(உ) அதன்படி, நீதிமன்றத்தில் மனுதாரருக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளில் இருந்து அவர் குற்றமற்றவராக விடுவிக்கப்பட்டபோதும், | |

| தொ இ ல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
|---|---|---|---|---|
| | | | நிறுவனத்தின் ஒழுக்காற்று விசாரணையில் மனுதாரருக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளில் அவர் குற்றவாளி எனத் தீர்மானித்து மனுதாரரை பணி நீக்கம் செய்வதற்கு பொலிஸ் அலுவலர்கள் நடவடிக்கை உள்ளனர்.<br><br>(ஊ) மனுதாரர் சம்பந்தமாக பொய்யான முறைப்பாட்டைச் செய்துள்ள கிண்ணியா பொலிஸ் நிலையப் பொறுப்பு அதிகாரிக்கு எதிராக இன்றளவிலும் பொலிசாரினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தகவல்கள் வெளிக்கொணரப்படாமை.<br><br>(எ) 1987 ஆண்டு பொலிஸ் சேவையில் இணைந்து 2010 ஆண்டு பொலிஸ் சேவையிலிருந்து பணி நீக்கம் செய்யப்படும்போது மனுதாரர் சுமார் 23 வருட சேவைக் காலத்தைக் கொண்டிருந்ததாகவும் அவர் தற்போது ஓய்வுபெறும் வயதைக் கடந்துள்ளார் என்பதும்.<br><br>(ஏ) இலங்கைப் பொலிசார் மனுதாரர் சம்பந்தமாக செயலாற்றி உள்ள விதத்தால் அவருக்கு அநீதி நேர்ந்துள்ளதாகவும், நீதிமன்றத்தில் மனுதாரருக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளிலிருந்து அவர் குற்றமற்றவரென விடுவிக்கப்பட்டுள்ளபோதும், நிறுவனத்தின் ஒழுக்காற்று விசாரணையில் மனுதாரருக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளில் அவர் குற்றவாளி எனத் தீர்மானித்து நீதவான் அவருடைய தீர்ப்பை அறிவிப்பதற்கு முன்னதாக மனுதாரரரை பணி நீக்கஞ் செய்ய அவருடைய ஒழுக்காற்று | |

| தொ இல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
|---|---|---|---|---|
| | | | அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளதால் மனுதாரருக்கு அநீதி நேர்ந்துள்ளது. | |
| 03 | மனுதாரர் – திரு சரத் ஹேவாபத்திரன COM/PP/2025/92 சமர்ப்பித்தவர் – கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் லால் பிரேமநாத் 2025.10.21 ஆந் திகதி விசாரணை செய்யப்பட்டுள்ளது. அமைச்சின் தொடர்பு: 02/03/23/72/2021 திகதி : 2022.05.23 | 1989.01.15ஆந் திகதி இலங்கைப் பொலிசுச் சேவையில் பொலிஸ் கான்ஸ்பிளாக சேவையில் இணைந்து கொண்டதாகவும், பின்னர் சார்ஜன்ட் பதவிக்கு பதவி உயர்வு பெற்றதாகவும், 2011.09.03ஆந் திகதி தெலிஜ்ஜவில மத்திய மகா வித்தியாலய க.பொ.த (சாதாரண தர) பரீட்சை ஒருங்கிணைப்பு நிலையத்தில் கடமையில் ஈடுபட்டிருந்தபோது நிகழந்த ஒரு சம்பவத்திற்காக மனுதாரருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தியும் குற்றவாளியாக தீர்மானித்தும் பணி நீக்கம் செய்துள்ளதாகத் தெரிவிக்கும் மனுதாரர் மீண்டும் பணியில் அமர்த்துமாறு கோரி இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | (அ) தெலிஜ்ஜவில மத்திய மகா வித்தியாலய க.பொ.த (சாதாரண தர) பரீட்சை ஒருங்கிணைப்பு நிலையத்தின் பாதுகாப்புப் பணியில் மனுதாரர் ஈடுபடுத்தப்பட்டிருந்தபோது 2011.09.03ஆந் திகதி அந்த வளாகத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்திற்காக நடத்தப்பட்ட ஆரம்ப விசாரணையின் பின்னர், 05 குற்றச்சாட்டுகளின் கீழான குற்றப்பத்திரிகை ஒன்றை 2012.05.08ஆந் திகதி மனுதாரருக்கு வழங்கி முறையான ஒழுக்காற்று விசாரணை ஒன்றை நடாத்தி, அந்த ஒழுக்காற்று விசாரணையின் முடிவைக் கவனத்தில்கொண்டு ஒழுக்காற்றுக் கட்டளைப் பிறப்பிக்கப்பட்டுள்ளதோடு, பொலிசுப் பதிசோதகர் தலைமை அதிபதியினால் மனுதாரர் 2014.05.28ஆந் திகதி பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.<br><br>(ஆ) மேற்படி சம்பவத்திற்காக மாத்தறை நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குடன் சம்பந்தப்பட்டதாக சட்டத்துறை தலைமை அதிபதியின் அறிவுறுத்தல்களின்படி, மனுதாரருக்கு எதிராக குற்றவியல் வழக்கொன்றைத் தாக்கல் செய்வதற்கு பின்னர் தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br><br>(இ) மனுதாரரினால் மீண்டும் சேவையில் அமர்த்துமாறு | மனுதாரருக்கு விதிக்கப்பட்டுள்ள பணிநீக்க தண்டனைக்குப் பதிலாக கருணை அடிப்படையிலான ஒரு மாற்றுத் தெரிவாக, கட்டாய ஓய்வு என்ற தண்டனையை விதிப்பதன் மூலம் நிவாரணத்தை வழங்க முடியும் எனவும், அதற்காக மனுதாரரின் ஒழுக்காற்று அதிகாரியான தேசிய பொலிசு ஆணைக்குழுவினால் மனுதாரர் மீது விதிக்கப்பட்டுள்ள முந்திய ஒழுக்காற்றுக் கட்டளை திருத்தம் செய்யப்பட வேண்டும் எனவும் அவ்வாறு செய்வதன் மூலம் 60 வயது |

| தொ இ ல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
|---|---|---|---|---|
| | | | கோரப்பட்டு 2016.10.06 ஆந் திகதி செய்யப்பட்டிருந்த மேன்முறையீடு பொலிசு ஆணைக்குழுவினால் நிராகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி மனுதாரரினால் 2017 ஆண்டில் நிருவாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு மேன்முறையீடு செய்யப்பட்டிருந்த போதும், அந்த மேன்முறையீடு காலதாமதமாகி செய்யப்பட்டிருந்த காரணத்தினால் நிருவாக மேன்முறையீட்டு நியாய சபை அந்த மேன்முறையீட்டையும் நிராகரித்துள்ளது. மேலும், மனுதாரர் மீண்டும் தேசிய பொலிசு ஆணைக்குழுவுக்கு 2023.05.26ஆந் திகதி மேன்முறையீடு ஒன்றைச் செய்துள்ளார்.<br><br>(ஈ) ஏற்கனவே தேசிய பொலிசு ஆணைக் குழுவினால் முடிவு அறிவிக்கப்பட்ட மற்றும் நிருவாக மேன் முறையீட்டு நியாய சபையினால் நிராகரிக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து மீண்டும் ஒருமுறை விசாரணை செய்வதற்கு சட்ட ஏற்பாடுகள் இல்லை என தேசிய பொலிசு ஆணைக்குழுவினால் கொள்கை சார்ந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதால், மனுதாரரின் இரண்டாவது மேன் முறையீட்டை நிராகரிக்க தேசிய பொலிசு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது என மனுதாரருக்கு 2024.03.28 ஆந் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>(ஈ) மனுதாரரின் நீண்ட சேவைக் காலத்தில் ஒழுக்க மீறல் குறித்த முந்திய குற்றச்சாட்டுகள் இல்லை.<br><br>(உ) மனுதாரர் இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தை. தொழிலை இழந்த பின்னர் மனைப் பொருளாதாரம் முறிவடைந்துள்ளது. குடும்பத்தைக் கொண்டு நடத்துவதில் நெருக்கடி | பூர்த்தியாகும் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் ஓய்வூதியம் பெறமுடியும் போன்ற விடயங்களை ஆராய்ந்த குழு, பணி நீக்கம் செய்தல் என்ற தண்டனைக்குப் பதிலாக கருணை அடிப்படையிலான மாற்று தெரிவாக கட்டாய ஓய்வு என்ற தண்டனையை மனுதாரருக்கு வழங்கி முன்னர் வழங்கப்பட்டுள்ள ஒழுக்காற்று கட்டளையை திருத்தம் செய்து மனுதாரரை ஓய்வு பெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென விதப்புரை வழங்கப்பட்டுள்ளது.. |

| தொ இ ல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
|---|---|---|---|---|
| | | | ஏற்பட்டுள்ளது போன்ற விடயங்களை மனுதாரர் சமர்ப்பித்துள்ளார்.<br><br>(ஊ) பணி நீக்கம் செய்யப்படும் வரை, சுமார் 25 வருடங்கள் இலங்கைப் பொலிசுச் சேவைக்காக சேவையாற்றி உள்ள ஓர் அலுவலர். அக்காலப்பகுதியில் ஒழுக்க மீறல் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகள் இல்லை. மற்றும் தொழிலை இழந்தமை காரணமாக குடும்பத்தின் பொருளாதாரம் சீர்கெட்டு அதன் தாக்கம் மனுதாரரின் கல்வி நடவடிக்கைகளில் நேர் மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. | |
| 04 | மனுதாரர் – திரு ஈ.டீ. நந்தசிறி COM/PP/2025/102 சமர்ப்பித்தவர் – கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் நந்தன பத்மகுமார 2025.10.21 ஆந் திகதி விசாரணை செய்யப்பட்டுள்ளது.<br>அமைச்சின் தொடர்பு: 02/03/23/02/2023 திகதி : 2023.03.29 | உப பொலிசுப் பரிசோதகராக இலங்கை பொலிசுச் சேவையில் இணைந்து 27 வருடங்கள் கடமையாற்றி உள்ளதாகவும், 2009 ஆம் ஆண்டு பொய்யான குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதாகவும், பின்னர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டு 11 குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப்பத்திரிகை ஒன்றை வழங்கி முறையான ஒழுக்காற்று விசாரணையின் முடிவில் | (அ) சிவில் பாதுகாப்பு படையணியின் தலைமையகத்தில் இணைக்கப்பட்டு சேவையில் இருந்த காலத்தில் 2013.05.29ஆந் திகதி 16.00 மணியிலிருந்து 2013.05.30ஆந் திகதி 08.00 மணி வரை கடமைப் பொறுப்பு அலுவலராக பணியாற்றிக் கொண்டிருந்தபோது 2013.05.30ஆந் திகதி கடமை நேரத்தில், உரிய கடமையில் இருந்து விலகி சீருடை அணிந்திருந்த வேளையில் தனியார் பேருந்து ஓட்டுநர் ஒருவரிடமிருந்து 100.00 ரூபாவைப் பெற்றுக் கொண்டமை தொடர்பாக பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தின் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரினால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு இணங்க பம்பலப்பிட்டி பொலிசாரினால் மனுதாரர் கைது செய்யப்பட்டு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதுடன், நீதிமன்ற உத்தரவின்படி 2013.06.07ஆந் திகதி வரை | பணி நீக்கம் என்ற தண்டனைக்குப் பதிலாக கருணை அடிப்படையிலான மாற்றுத் தெரிவாக கட்டாயமாக ஓய்வு பெறச் செய்தல் என்ற தண்டனையை மனுதாருக்கு வழங்கி, ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுள்ள ஒழுக்காற்றுக் கட்டளையைத் திருத்தம் செய்து மனுதாரரை ஓய்வெடுக்கச் செய்வதற்கு |

| தொ இ ல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
|---|---|---|---|---|
| | | 2017.07.21ஆந் திகதியில் இருந்து பணிநீக்கம் செய்யும் கட்டளை பிறப்பிக்கப்பட்டதாகவும் அந்த ஒழுக்காற்று கட்டளைக்கு எதிராக தேசிய பொலிசு ஆணைக் குழுவிலும் நிருவாக மேன்முறையீட்டு நியாய சபையிலும் மேன்முறையீடு செய்தபோதும் நிவாரணம் கிடைக்கவில்லை எனவும், மனுதாரருக்கு எதிராக கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு சம்பந்தமாக மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில் (கொழும்பு) மேன் முறையீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து குற்றமற்றவராக விடுவிக்கப்பட்டதாகவும், நேர்ந்த அநீதி தொடர்பாக கவனத்தில்கொண்டு தலைமைப் பொலிசுப் பரிசோதகரின் ஒழுக்காற்றுக் கட்டளையை நீக்கி, மீண்டும் சேவையில் அமர்த்தி ஓய்வு பெறச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோரி மனுதார இந்த மனுவைச் | விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இதன் காரணமாக 2013.05.31ஆந் திகதியிலிருந்து மனுதாரர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டடு அதன் பின்னர் குற்றவாளியாக்கப்பட்டுள்ளார்.<br><br>(ஆ) மேற்படி சம்பவம் தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட விசாரணையை மேற்கொண்டு 11 குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப் பத்திரிகை மனுதாரருக்கு 2014.05.30ஆந் திகதி வழங்கப்பட்டு, பின்னர் நடத்தப்பட்ட முறையான ஒழுக்காற்று விசாரணையில் மனுதாரர் 09 குற்றச்சாட்டுகளுக்கானகுற்றவாளியாகவும், 02 குற்றச்சாட்டுகளுக்கு குற்றமற்றவர் என்றும் விதப்புரை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, முறையான ஒழுக்காற்று விசாரணையில் மேற்படி விதப்புரைகளுக்கு இணங்க மனுதாரர் குற்றவாளி என முடிவு செய்யப்பட்டு 2017.07.21ஆந் திகதி பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதியினால் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.<br><br>(இ) ஒழுக்காற்றுக் கட்டளைக்கு எதிராக மனுதாரர் தேசிய பொலிசு ஆணைக் குழுவிலும் நிருவாக மேன்முறையீட்டு நியாய சபையிலும் மேன் முறையீடு செய்திருப்பதுடன், அம்முறைப்பாடுகள் முறையே 2019.05.22 மற்றும் 2022.09.21 ஆகிய திகதிகளில் நிராகரிக்கப்பட்டுள்ளதால், மனுதாரரை மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கு இலங்கை பொலிசு வசம் ஏற்பாடுகள் இல்லை.<br><br>(ஈ) முன்னர் நிகழ்ந்த ஒரு சம்பவத்தினால் தன்னுடன் | நடவடிக்கை மேற்கொள்ளுமாறு விதப்புரை வழங்கப்பட்டுள்ளது. |

| தொ இல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பித்துள்ளார். | கொண்டுள்ள தனிப்பட்ட பகை காரணமாக, இரண்டு பொலிசு அலுவலர்கள் பாதையில் நின்று கொண்டிருந்த நான் பேருந்தில் இருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டதாக குற்றஞ்சாட்டி கைது செய்ததாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.<br><br>(உ) கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கு விசாரணையில் மனுதாரர் குற்றவாளியாக 2019.06.10ஆந் திகதி தீர்ப்பு அளிக்கப்பட்ட போதும், மனுதாரரினால் மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில் (கொழும்பு) மேற்படி தீர்ப்பைச் சவாலுக்கு உட்படுத்திய பின்னர், மனுதாரருக்கு எதிராக தண்டனைச் சட்டக் கோவையின் 373ஆம் பிரிவின் கீழ் முன்வைக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளிலிருந்து மனுதாரர் குற்றமற்றவராக விடுவிக்கப்பட்டுள்ளார்.<br><br>(ஊ) மனுதாரர் 1990 ஆண்டிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்ட 2007ஆண்டு வரை சுமார் 27 வருட நீண்ட காலம் இலங்கைப் பொலிசுக்குச் சேவை ஆற்றி உள்ள ஓர் அலுவலர். சேவை இழக்கச் செய்யப்பட்டுள்ளதால் அவரின் பொருளாதார நிலைமை தற்போது வீழ்ச்சி அடைந்துள்ளது.<br><br>(எ) மனுதாரருக்கு விதிக்கப்பட்டுள்ள பணி நீக்கம் என்ற தண்டனைக்குப் பதிலாக கருணை அடிப்படையிலான மாற்றுத் தெரிவாக, கட்டாயமாக ஓய்வு பெறச் செய்தல் என்ற | |

| தொ இ ல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
|---|---|---|---|---|
| | | | தண்டனையை மனுதாருக்கு வழங்குவதன் மூலம் அவருக்கு நிவாரணம் வழங்க முடியும் எனவும், அதற்காக மனுதாரரின் நியமன அதிகாரியான தேசிய பொலிசு ஆணைக்குழுவினால் மனுதாரருக்கு விதிக்கப்பட்டுள்ள முந்திய ஒழுக்காற்றுக் கட்டளையைத் திருத்தம் செய்ய வேண்டும் எனவும், அவ்வாறு செய்வதன் மூலம் 60 வயது பூர்த்தியாகும் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மனுதாரருக்கு ஓய்வூதியத்தைப் பெற முடியும் மற்றும் இது குறித்து குழு மேற்கொள்ளும் விதப்புரைகளை தேசிய பொலிசு ஆணைக்குழுவின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | |
| 05 | திரு எஸ். ராஜகருணா<br>COM/P/2025/170<br>சமர்ப்பித்தவர்: கௌரவ சுசந்த குமார நவரத்ன<br>2025.11.17 ஆம் திகதியன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இலக்கம்; 02/03/23/11/2022<br>திகதி: 2022.10.04 | தான் 1989-ஆம் ஆண்டில் பயிலுநர் உப-பொலிஸ் கான்ஸ்டபிள் ஆக பொலிஸ் சேவையில் சேர்ந்து நடவடிக்கை கடமைகளிலும் பொலிஸாரின் சிறப்புப் பிரிவுகளிலும் பின்னர் புலனாய்வுப் பிரிவிலும் பணியாற்றியதாகக் குறிப்பிட்டுள்ளார். சிலாபம் பொலிஸ் நிலையத்துக்கு இணைக்கப்பட்டு கடமையாற்றியபோது, 2013-ஆம் ஆண்டில் மாமதம்பே இரவு விடுதி ஒன்றில் குடிபோதையில் | (அ) முன்னாள் பொலிஸ் சார்ஜன்ட் ஆக பணியாற்றியுள்ள மனுதாரர் பொலிஸ் சேவையில் இருக்கும் போது புலானாய்வுப் பிரிவுக்கு இணைக்கப்பட்டிருந்த நிலையில் தனித்துவமான சேவையினை ஆற்றியுள்ளதாகவும், மனுதாரர் வழங்கிய புலனாய்வுத் தகவல்களின் பேரில் பல்வேறு பயங்கரவாதச் செயல்கள் குறித்து முன்கூட்டியே அறிந்து கொள்ள முடிந்ததாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவம் இடம்பெற்ற போது அவர் 27 ஆண்டு சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருந்தார் எனவும் தொழிலை இழந்து தற்பொழுது பொருளாதார ரீதியாக பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாகவும் தனது நீண்ட சேவைக்காலத்தில் இதற்கு முன்னர் எந்த தவறையும் இழைத்ததில்லை எனவும் மனுதாரர் தெரிவித்துள்ள | மனுதாரருக்கு வழங்கப்பட்ட பூர்வாங்க ஒழுக்காற்று நடவடிக்கை உத்தரவான 'பணி நீக்கம்' என்ற தண்டனைக்கு பதிலாக, கருணை அடிப்படையிலான மாற்றாக 'கட்டாய ஓய்வு' என தண்டனையை திருத்தி, மனுதாரரை ஓய்வு பெறச் செய்வதற்கும் அவருக்கு நிவாரணம் வழங்குவதற்கும் |

| தொ இல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
|---|---|---|---|---|
| | | ஒழுங்கீனமாக நடந்துகொண்டதாக மாதம்பே பொலிஸ் நடமாடும் வாகன அலுவலர்களால் தான் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படாமலேயே பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதாகவும், இந்தச் சம்பவத்திற்கு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, முறையற்ற முறையில் பெறப்பட்ட மருத்துவ அறிக்கையின் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்ட ஒழுக்காற்று உத்தரவில் தான் பணி நீக்கம் செய்யப்பட்டதாகவும் தெரிவித்து தன்னை மீளச் சேவையில் அமர்த்துமாறு கோரி மனுவை சமர்ப்பித்துள்ளார். | விடயங்கள்<br><br>(ஆ) முன்னாள் பொலிஸ் சார்ஜன்டான மனுதாரர், சிலாபம் தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு இணைக்கப்பட்டு பணியாற்றி வந்துள்ளார் என்பதும், 2013.12.12 ஆம் திகதியன்று க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சைக்கான விடைத்தாள்கள் வைக்கப்பட்டிருந்த நிலையமான சிலாபம் வலயக் கல்வி அலுவலகத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது நிகழ்ந்த ஒரு சம்பவம் தொடர்பாக, 2013.12.13 அன்று இவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளாரென்பது<br>(இ)<br>மனுதாரர் மீண்டும் தம்மை பணியில் அமர்த்தக் கோரி மேன்முறையீடு செய்தததை தொடர்ந்து, அது பரிசீலிக்கப்பட்டு, ஒழுக்காற்று விசாரணைக்குட்பட்டதாக, அவர் 2014.08.25 அன்று மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டு புத்தளம் பொலிஸ் பிரிவுக்கு இணைக்கப்பட்டார் என்பதும், அதை தொடர்ந்து, ஒரு பூர்வாங்க விசாரணை நடத்தப்பட்டு, 5 குற்றச்சாட்டுகளுடன் கூடிய குற்றப்பத்திரிகை 2014.03.18 அன்று வழங்கப்பட்டு, மேற்கொள்ளப்பட்ட முறையான ஒழுக்காற்று விசாரணையில், அவர் அந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்திலும் குற்றவாளி எனக் கண்டறியப்பட்டு, 2016.06.20 அன்று, பொலிஸ் மா அதிபர் (IGP) மனுதாரரைப் பணியிலிருந்து நீக்கி, ஒழுக்காற்று உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார் என்பதும். | தேவையான நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரைக்கப்பட்டது. |

| தொ இல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
|---|---|---|---|---|
| | | | (ஈ) மனுதாரர் மேற்கண்ட ஒழுக்காற்று உத்தரவுக்கு எதிராக 2016.12.05 ஆம் திகதி தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிடம் தம்மை மீண்டும் பதவியில் அமர்த்தக் கோரி மேன்முறையீடு செய்தபோதிலும், செய்யப்பட்ட குற்றம் பாரதூரமான செயல் என்பதால் அந்த மேன்முறையீடு 2017.08.15 அன்று நிராகரிக்கப்பட்டதென்பதும்,. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உத்தரவுக்கு எதிராக ஒரு மாத காலத்திற்குள் நிர்வாக மேன்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் மீண்டும் பதவியில் அமர்த்தக் கோரி மேன்முறையீடு செய்வதற்கு மனுதாரருக்கு வாய்ப்பு இருந்தபோதிலும், குறிப்பிட்ட காலக்கெடு முடிந்த பின்னர் மேன்முறையீடு தாக்கல் செய்யப்பட்டதால் நிர்வாக மேன்முறையீட்டுத் தீர்ப்பாயம் மனுதாரரின் மேன்முறையீட்டை நிராகரித்துள்ளதால். இலங்கை பொலிஸாரால் மனுதாரரை மீண்டும் பதவியில் அமர்த்த முடியாதென்பது.<br><br>(உ) மேற்கூறிய சம்பவத்தின் அடிப்படையில் 2016-ல் பணிநீக்கம் செய்யப்படும் வரை, 1989 முதல் 27 ஆண்டுகள் இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் நீண்ட காலம் பணியாற்றியுள்ளார் என்பதும், தொழிலை இழந்துள்ள நிலையில், அவரது பொருளாதார நிலை மோசமடைந்து, அது அவரது குடும்பத்தின் அன்றாட நடவடிக்கைகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதும்,<br><br>(ஊ) மனுதா ரருக்கு விதிக்கப் பட்ட பணி நீக்கம் என்ற தண்டனைக்கு | |

| தொ இ ல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
|---|---|---|---|---|
| | | | பதிலாக கருணை அடிப்படையில் கட்டாய ஓய்வளிப்பதன் மூலம் அவருக்கு நிவாரணம் அளிக்கலாம் என்றும், மேன்முறையீட்டு அதிகார அமைப்பான தேசிய பொலிஸ் ஆணைக்குழு மனுதாரர் தொடர்பாக ஏற்கனவே ஒரு முடிவை எடுத்துள்ளதால், மனுதாரர் மீது விதிக்கப்பட்ட பூர்வாங்க ஒழுக்காற்று உத்தரவை திருத்த வேண்டும் என்றும், அவ்வாறு செய்வதன் மூலம், மனுதாரர் தனது 60வது வயதை அடையும் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் அவருக்கு ஓய்வூதியம் பெற முடியும் என்பதும். | |
| 06 | திரு ஏ.பீ.டீ சிறிபால COM/PP/2025/190 சமர்ப்பித்தவர்: கௌரவ சமந்த வித்யாரத்ன 2025.11.17 ஆம் திகதியன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சு தொடர்பு இல 01/02/03/04/2024 திகதி: 2024.06.11 | உப பொலிஸ் கான்ஸ்டபிள் ஆக 1996.05.15 ஆம் திகதியன்று பொலிஸ் சேவையில் சேர்ந்ததாகவும், நடவடிக்கைக் கடமைகள் மற்றும் பொது பொலிஸ் கடமைகளை மேற்கொண்டுள்ள தாகவும், நுவரஎலிய,உடபுஸ் ஸல்லாவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியபோது 2012.08.23 ஆம் திகதியன்று இடம்பெற்ற ஒழுக்கமீறல் சம்பவமொன்று தொடர்பாக 2013.01.02 ஆம் திகதியன்று | (அ)<br><br>1996 ஆம் ஆண்டிலிருந்து குறித்த சம்பவம் இடம்பெற்ற திகதி வரை, மனுதாரர் சுமார் 18 வருடங்கள் எனும் அளவுக்கு நீண்ட காலமாக இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கு தனது சேவையை வழங்கிய ஒரு உத்தியோகத்தர் என்பது அவதானிக்கப்பட்டுள்ளதுடன், அந்தச் சேவைக் காலத்தின் போது இலங்கை பொலிஸாருக்கு அவர் வழங்கிய சேவையைக் கருத்திற் கொண்டு அவருக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்பதும்;<br><br>(ஆ) மனுதாரருக்கு விதிக்கப்பட்ட தண்டனையான 'சேவை நீக்கம்' என்பதற்குப் பதிலாக, கருணை அடிப்படையிலான ஒரு மாற்று நடவடிக்கையாக 'கட்டாய ஓய்வில் அனுப்புதல்' என்ற தண்டனையை மனுதாரருக்கு விதிப்பதன் மூலம் | மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ள பூர்வாங்க ஒழுக்காற்று உத்தரவான "சேவை நீக்கம்" எனும் தண்டனைக்கு பதிலாக கருணை அடிப்படையிலான மாற்றாக "கட்டாய ஓய்வில் அனுப்புதல்" என்பதாக தண்டனையில் திருத்தம் செய்து மனுதாரருக்கு ஓய்வளிப்பதற்கும் அவருக்கு நிவாரணமளிப்பதற்கும் நடவடிக்கை |

| தொ இல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
|---|---|---|---|---|
| | | குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டு நடைபெற்ற ஒழுக்காற்று விசாரணையின் போது வழங்கப்பட்ட ஒழுக்காற்று உத்தரவுக்கமைய 2014.01.14 ஆம் திகதியன்று பணி நீக்கம் செய்யப்பட்டதாக தெரிவித்து தன்னை மீளச் சேவையில் அமர்த்துமாறு கோரி மனுதாரர் இந்த மனுவை சமர்ப்பித்துள்ளார். | அவருக்கு நிவாரணம் அளிக்க முடியும் எனவும், அதற்காக மனுதாரரின் ஒழுக்காற்று அதிகாரியாகவுள்ள தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் மனுதாரருக்கு விதிக்கப்பட்ட ஆரம்ப ஒழுக்காற்று கட்டளையை திருத்த வேண்டியுள்ளது எனவும், அவ்வாறு செய்வதன் மூலம் 60 வயது பூர்த்தியாகும் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மனுதாரருக்கு ஓய்வூதியம் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கும் என்பது. | மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. |
| **சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு** | | | | |
| 07 | திருமதி டபிளியூ.கே. நிரோஷா COM/PP/2025/50 மனுவை சமர்ப்பித்தவர்: கௌரவ நிஹால் கலப்பத்தி. 2025.09.11 ஆம் திகதியன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சு தொடர்பு இல : MMI/AD2 திகதி : 2025.04.09 | 2004 முதல் 2017 வரை பதிவு செய்யப்பட்ட பதிலீட்டாளராகவும், 2017 முதல் செப்டம்பர் 2024 வரை பதில் உதவி தபால் அதிபராகவும் ஹக்குருவெல உப தபால் அலுவலகத்தில் பணியாற்றியதாகவும், பகிரங்கச் சேவைகள் ஆணைக்குழுவின் PSC/EST/09 ஆம் இலக்க மற்றும் 2022.01.03 ஆம் திகதிய கடிதத்தின் படி, தனக்கு 55 வயது வரை ஓய்வூதியமின்றி பணியாற்ற வாய்ப்பு இருப்பதாக உயர் அதிகாரிகளாலும் | (அ) மனுதாரர் முன்வைத்துள்ள தகவல்களின்படி, அவர் 2004 முதல் 2017 வரை 13 ஆண்டுகள் பதிவு செய்யப்பட்ட பதிலீட்டாளராகவும், மேலும் 7 ஆண்டுகள் தற்காலிக உப தபால் அதிபர் பதவியிலும் பணியாற்றியுள்ளார். அப்படியிருந்தும், பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 20/2004 அல்லது 25/2019-இன் கீழ் நிரந்தரப் பணியில் சேர்க்கப்படாமலேயே, அவருக்கு 50 வயது ஆன நிலையில் 30.09.2024 முதல் அவர் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக மனுதாரர் தரப்பிலிருந்து முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள்<br><br>(ஆ) நிரந்தர உப தபால் அதிபர்களின் பணிகளைக் கவனிப்பதற்கு பதிலீட்டு அலுவலர்களைக் கண்டுபிடிப்பதில் காணப்பட்ட சிரமங்கள் காரணமாக, மனுதாரருக்குத் | மனுதாரருக்கு மாத்திரம் ஏற்புடையதாகும் வகையில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் முதலாவது சந்தர்ப்பத்திலேயே வெற்றிடமாகும் உப தபால் நிலையமொன்றில் பதில் உப தபால் அதிபர் பதவிக்கு நியமிக்குமாறும், 55 வயது வரை பணியாற்றும் வாய்ப்பை வழங்கி அதை தொடர்ந்து ஊழியர் |

| தொ இல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
|---|---|---|---|---|
| | | உப தபால் அதிபர்களின் சங்கத்தாலும் தெரிவிக்கப்பட்டிருந்தபோதிலும், 2024.07.11 திகதியிட்ட தபால் மா அதிபரின் கடிதத்தின்படி, 2024.09.30 அன்று ஹம்பாந்தோட்டை பிராந்திய தபால் அத்தியட்சகரால் தான் பணி நீக்கம் செய்யப்பட்டதாகவும், இது தொடர்பாக தகவலுக்கான சட்டத்தின் கீழ் கோரப்பட்ட தகவல்களும் இதுவரை கிடைக்கவில்லை எனவும் தெரிவித்துள்ள மனுதாரர் 55 வயதில் ஓய்வு பெற்றிருக்க வேண்டிய நிலையில், 50 வயதிலேயே ஓய்வளிக்கப்பட்டதை கருத்திற் கொண்டு தன்னை மீளச் சேவையில் அமர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளார். | தகுதிகள் இல்லாதபோதிலும் அவர் தற்காலிக உப தபால் அதிபர் பதவியில் நியமிக்கப்பட்ட போதிலும், அந்த நியமனக் கடிதத்தில், மனுதாரர் எந்தவொரு நிரந்தர நியமனத்திற்கும் தகுதியற்றவர் என்று ஒரு நிபந்தனை சேர்க்கப்பட்டிருந்ததென்பது.<br><br>(இ) பழைய ஆட்சேர்ப்பு நடைவடிக்கை முறையின் படி, பிரதி தபால் அதிபர் பதவிக்கான அடிப்படைத் தகுதியாக, க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது கணிதம் மற்றும் சிங்களப் பாடங்கள் உள்ளிட்ட 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.. மனுதாரர் இதுவரை அந்தத் தகைமையை பூர்த்தி செய்யாததால், சுற்றறிக்கையின்படி அவருக்கு நிரந்தரப் பணியில் சேர்வதற்கான வாய்ப்பு காணப்படவில்லை என்பது.<br><br>(ஈ) மனுதாரருக்கு 55 வயது பூர்த்தியாகும் வரை தற்காலிகமாகப் பதில் உப தபால் அதிபராகப் பணியாற்ற வாய்ப்பளித்து, பின்னர் சேமலாப நிதிய வைப்பு நிதியை வழங்கும் பொருட்டு சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் விடுத்த கோரிக்கை, 2023.04.04 அன்று பகிரங்கச் சேவைகசள் ஆணைக்குழுவினால் நிராகரிக்கப்பட்டுள்ளதென்பது.<br><br>(உ) மனுதாரர் குறிப்பிட்ட பதவிக்கான தகைமைகளை இன்னும் பூர்த்தி செய்யாதது அவர் தரப்பில் இடம்பெற்றுள்ள தவறு | சேமலாப நிதிய அனுகூலங்களுடன் பணியிலிருந்து விடுவிக்குமாறு தபால் மா அதிபருக்கு விதப்புரைக்கப்பட்டது.<br><br>(இதன் போது பகிரங்கச் சேவைகள் ஆணைக்குழுவினால் 2023.04.04 ஆம் திகதியிட்டு வழங்கப்பட்ட தீர்மானத்தை ஏற்புடையதாக்காமல் இருப்பதற்கு குறித்த ஆணைக்குழுவினதும் இணக்கத்தின் பேரில் குழுவினால் தீர்மானிக்கப்பட்டது) |

| தொ இ ல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
|---|---|---|---|---|
| | | | என்ற போதிலும், தகுதிகள் இல்லாதபோதிலும் அவர் 20 ஆண்டுகள் பதிலீட்டு மற்றும் தற்காலிக அடிப்படையில் பணியாற்றியதும், 50 வயதை எட்டியவுடன் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டமை அவருக்குச் செய்யப்பட்ட பாதிப்பாக காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. | |
| 08 | திருமதி எச்.எம். நிலுகா சாமலி ஹேரத் COM/PP/2025/85 மனுவை சமர்ப்பித்தவர்: கௌரவ சத்துர கலப்பத்தி 2025.09.11 ஆம் திகதியன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சு தொடர்பு இல: MMI/AD2/16/10-vol1 திகதி : 2024.06.03 | 2008 ஆம் ஆண்டு முதல் 15 ஆண்டுகளாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பதில் நிவாரண ஊழியராக பணியாற்றியதாகவும், 2014 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் கீழ் தொடங்கப்பட்ட 180 நாட்கள் சேவையாற்றியுள்ளவர்களை நிரந்தரமாக்கும் திட்டத்தின் கீழ் நிரந்தர சேவைக்கு தான் பரிந்துரைக்கப்பட்டிருந்தபோதிலும், 2015 ஆம் ஆண்டில் புதிய அரசாங்கம் அமைந்ததால் அந்த வாய்ப்பை இழந்ததாகவும்,. மீள 2016 ஆம் ஆண்டில் ஒப்பந்த உதவி நிகழ்ச்சி தயாரிப்பாளர் பதவிக்காக நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையில், நியாயமற்ற முறையில் தான் நீக்கப்பட்டு, குறைந்த கல்வி | (அ) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சேவைத் தேவையின் காரணமாக 2008.02.01 அன்று நிவாரண அடிப்படையிலான பணிக்கு நியமிக்கப்பட்ட மனுதாரர், நியமனக் கடிதத்தின் நிபந்தனைகளின் படி நிரந்தரப் பணியாளர்களுக்கான சலுகைகள் மற்றும் உரிமைகளுக்குத் தகுதியற்றவர் ஆவார். மேலும், 2014.10.24 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்க 2025/2014 (01)-இன் கீழ் தற்காலிக, அமைய, தினக்கூலி, பதிலி, ஒப்பந்தம் அல்லது பகுதி நேர அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு, 180 நாட்கள் சேவையை நிறைவுசெய்த முதல் தர முகாமைத்துவ உதவியாளர்-தொழில்நுட்பமற்ற அலுவலர்கள் 2014.12.29 அன்று நிரந்தரமாக்கப்பட்ட போதிலும், மனுதாரர் அந்தப் பிரிவுகளில் எதிலும் சேராததால் அவரை நிரந்தரமாக்க முடியவில்லை என்பது.<br><br>(ஆ) 2015 ஆம் ஆண்டில் உதவி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் பதவியின் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் நேர்முகப் பரீட்சைகளுக்கு தோற்றிய மனுதாரர் விடய அறிவுக்கு புள்ளிகள் பெறத்தவறியமை அவர் அப்பதவியை பெற முடியாமைக்கான காரணம் எனவும், 2021.06.21 ஆம் | மனுதாரரின் 12 ஆண்டு கால நிவாரண சேவைக் காலம் மற்றும் ஒப்பந்தச் சேவைக் காலத்தையும் அவருடைய கல்வி மற்றும் தொழில் தகைமைகளையும் மற்றும் அனுபவத்தையும் கருத்திற் கொண்டு, உயர் நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்படும் உரிய ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் கீழ் எதிர்காலத்தில் முறையாக நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படும் |

| தொ இல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
|---|---|---|---|---|
| | | மற்றும் தொழில்முறைத் தகைமைகளை கொண்ட ஒருவர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டதாகவும் இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையீடு செய்யப்பட்ட நிலையில், அந்த ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட விசாரணையின்போது, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அப்போதைய பணிப்பாளர் நாயகம், மனுதாரர் நியாயமற்ற முறையில் நடத்தப்பட்டதாக எழுத்துப்பூர்வமான வாக்குமூலத்தில் ஒப்புக்கொண்டதாகவும். அப்படியிருந்தும், அந்த நேர்முகப் பரீட்சையில் அதே மதிப்பெண்களைப் பெற்ற மற்றொரு நபருக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டதாகவும் தனக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் புகார் அளித்திருந்த போதிலும், 2021.06.23 முதல் தனக்கு 'ருஹுனு சேவையில் உதவி செய்தி ஆசிரியர் | திகதி மனுதாரருக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்ட நியமனம் ஊடக அமைச்சு அல்லது முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி கூட்டுத்தாபன, சபை அங்கீகாரத்தின் பேரில் மாத்திரம் வழங்கப்பட்ட நியமனம் என்பதால் SCFR ஆம் இலக்க 20141/22 ஆம் திகதிய உயர்நீதிமன்ற வழக்குத் தீர்ப்பின் கீழ் அரச நிதி தவறான பயன்பாட்டை தடுக்கும் பொருட்டு அந்த நியமனத்தை இரத்துச் செய்ய நேர்ந்ததென்பது.<br><br>(இ) மேற் குறிப்பிட்ட ஆட்சேர்ப்புக்கான நேர்முகப் பரீட்சைகளின் போது ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகத்தினரால் மேற்கொள்ளப்பட்ட முறைகேடுகள் காரணமாக இவர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மீள கூட்டுத்தாபனம் முறையாக நேர்முகப் பரீட்சைகளை நடாத்தும்போது இவருக்கு வாயப்பளிக்கப்படுமென ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் அமைச்சு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளாரென்பது | போது இவருக்கு மாத்திரம் ஏற்புடையதாகும் வகையில் 45 வயதை தாண்டிவிட்டார் என்ற விடயத்தையும் கருத்தில் கொள்ளாது பொருத்தமான நிரந்தர பதவியொன்றுக்கு ஆட்சேர்ப்பு செய்யுமாறு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு பரிந்துரைக்கப்பட்டது. |

| தொ இல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
|---|---|---|---|---|
| | | பதவி ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டதாகவும், ஓராண்டுக்கும் மேலாக அப்பதவியில் பணியாற்றி வந்த நிலையில், நியமனக் கடிதத்தில் குறிப்பிட்டபடி சம்பளம் வழங்கப்படாமல் அப்பதவியும் ரத்து செய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ள மனுதாரர் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு 15 ஆண்டுகளாக தான் வழங்கிய சேவையைக் கருத்தில் கொண்டு, தனக்கு உரித்தாக வேண்டிய நிரந்தரப் பதவி, அதற்குரிய நிலுவைச் சம்பளம் மற்றும் சேர வேண்டிய சலுகைகளை வழங்க நடவடிக்கை எடுக்கக் கோரி இந்த மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். | | |
| 09 | திரு. டபிளியூ.டபிளியூ பிரேமதாச COM/PP/2025/250 மனுவை சமர்ப்பித்தவர்: கௌரவ அஜந்த கம்மெத்தகே. 2025.11.14 ஆம் திகதியன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. | சுமார் 23 ஆண்டுகளாக உப தபால் அதிபராக தபால் திணைக்களத்தில் சேவையாற்றியதாகவும், 1996.08.06 ஆம் திகதியிலிருந்து சேவை நீக்கம் செய்யப்பட்ட காரணத்தினால் மீளச் சேவையில் அமர்த்துமாறு கோரி பொது | (அ) மனுதாரர் பொது மனுக்கள் பற்றிய குழுவிற்கு சமர்ப்பித்த சீஎம்எம்/பீபீ/2003/ 7793 ஆம் இலக்க மனுவை பரிசீலித்த குழு, மனுதாரருக்கு விதிக்கப்பட்ட ஒழுக்காற்று உத்தரவை நீக்கி, கருணை அடிப்படையிலான மாற்றீடாக ஓய்வூதியத்திலிருந்து 20% சதவீதத்தை குறைத்தலுக்கு உட்பட்டதாக ஓய்வளிப்பதற்கு 2006/11/27 ஆம் திகதிய குழு விசாரணையின்போது அப்போதைய தபால் மா அதிபருக்கு சிபார்சு | மனுதாரரின் சட்ட ரீதியான விதவை மனைவியை விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய உரித்துக்கு மனுதாரர் (காலஞ்சென்ற) பணியாற்றிய நிறுவனமான தபால் |

| தொ இல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
|---|---|---|---|---|
| | அமைச்சின் தொடர்பு இல: MMMP/ADM/03/ PPC/2022 திகதி: 2022.06.09<br><br>(மனுதாரர் 10 ஆவது பாராளுமன்றத்துக்கு இந்த மனுவை சமர்ப்பித்துள்ள நிலையில், 2025.03.14 ஆம் திகதியன்று இவர் உயிரிழந்ததால் மனு மீதான விசாரணையில் மனுதாரர் சார்பாக சட்ட ரீதியான பிரதிநிதியாக சீ.ஏ தஹநாயக்க என்பவர் தோற்றினார்.) | மனுக்கள் பற்றிய குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட மனுவை பரிசீலித்த குழுவானது, மேற்படி சேவை நீக்க உத்தரவை கருணை அடிப்படையிலான மாற்றாக ஓய்வூதியத்திலிருந்து 20% குறைத்தலுக்கு உட்பட்டதான ஓய்வளிப்பாக அதனை மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு 2006.11.27 ஆம் திகதிய விதப்புரையை வழங்கியிருந்த போதிலும், இதுவரை அந்த விதப்புரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என தெரிவித்துள்ள மனுதாரர், அந்த விதப்புரைக்கமைய ஓய்வூதியத்தை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரி மேற்படி மனுவை சமர்ப்பித்துள்ளார். | செய்துள்ளதாகவும், எவ்வாறாயினும் அந்த விதப்புரையை செயற்படுத்த முடியாதென பகிரங்கச் சேவைகள் ஆணைக்குழுவினால் குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதென்பது.<br><br>(ஆ) மனுதாரர் உயிரிழந்துள்ளதால் மனுவின் மூலம் கோரப்பட்டுள்ள நிவாரணமான ஓய்வூதிய உரித்தை வழங்க முடியாதெனவும், ஆனாலும், இவருடைய விதவை மனைவி மற்றும் தபுதாரர்கள் இருப்பார்களானால்அவர்களுக்கு விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய உரித்தை கோர முடியுமெனவும், அதன்போது விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய உரித்துக்கான தகுதி பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை ஆராய்ந்து, குறித்த தகைமை பூர்த்தி செய்யப்பட்டிருப்பின்,விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய உரித்தை வழங்க முடியுமென்பது,<br>(இ) மனுதாரரின் பிள்ளைகள் இன்றளவில் அனாதைகள் ஓய்வூதியத்துக்கு உரித்து கோரும் வயதெல்லையை தாண்டியுள்ளதால், மனுதாரரின் விதவை மனைவி விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய உரித்துக்கு விண்ணப்பிக்க வேண்டுமென்பது | திணைக்களத்துக்கு விண்ணப்பிக்குமாறு அறிவிக்கும்படி மனுதாரரின் சட்ட ரீதியான பிரதிநிதிக்கு அறிவிக்கப்பட்டது.<br><br>விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய உரித்துக்கு மனுதாரரின் சட்ட ரீதியான விதவை மனைவியின் கோரிக்கை கிடைத்த பின்னர் அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தபால்மா அதிபருக்கு பரிந்துரைக்கப்பட்டது. |
| 10 | திரு. எஸ்.கே கிரிஎல்ல COM/PP/2025/277 | தபால் திணைக்களத்தில் தபால் அதிபராக பணியில் சேர்ந்து | (அ) 30.12.1985 முதல் II ஆம் நிலை தபால் அதிபராக பணியில் சேர்ந்துள்ள மனுதாரர் மீது 1989-ல் | மனுதாரரின் 33 ஆண்டு கால சேவையை |

| தொ இல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
|---|---|---|---|---|
| | சமர்ப்பித்தவர்: கௌரவ முஜிபர் ரஹுமான். 2025.11.14 ஆம் திகதியன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல: : MMI/AD2/16/10-vol 1 திகதி : 2025.05.09<br><br>(மனுதாரர் சுகயீனமுற்றுள்ளதால் மனுதாரரின் சட்ட ரீதியான பிரதிநிதியாக மனுதாரர் சார்பாக விளக்கமளிப்பதற்கு அவரது பாரியாரான திருமதி அதிகாரிகே சோமலதா தோற்றினார்) | 33 ஆண்டுகள் தொடர்ச்சியாக பணியாற்றியுள்ளதுடன், இடம்பெற்றுள்ள தவறான நடத்தை தொடர்பாக கிடைத்த ஒழுக்காற்று உததரவொன்றின் பேரில் பணி நீக்கம் செய்யப்பட்டதாகவும், நிர்வாகத்துக்கான மேன்முறையீட்டு தீர்ப்பாயத்துக்கு செய்யப்பட்ட மேன்முறையீட்டுக் கமைய பணி நீக்கத்துக்கு பதிலாக கருணை அடிப்படையிலான மாற்றீடாக அதனை கட்டாய ஓய்வாக மாற்றும் பொருட்டு பகிரங்கச் சேவைகள் ஆணைக்குழுவினால் தபால் மா அதிபரிடம் கோரப்பட்டுள்ள போதிலும், அது இதுவரை நிறைவேறவில்லை எனவும் தெரிவித்துள்ள மனுதாரர் தனக்கு எதிராக விடுக்கப்பட்டுள்ள பணி நீக்க உத்தரவை கட்டாய ஓய்வளிப்பாக மாற்றித் தருமாறு கோரி இந்த மனுவை சமர்ப்பித்துள்ளார். | முதன்முறையாகக் குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டுள்ளதெனவும், 2005-ல் செய்யப்பட்ட ஒரு நிதி முறைகேடு காரணமாக முறையான ஒழுக்காற்று விசாரணைக்குப் பின்னர் ஒழுக்காற்று உத்தரவுகள் விதிக்கப்பட்டன என்றும், மீண்டும் அத்தகைய முறைகேட்டில் அவர் குற்றவாளி எனக் கண்டறியப்பட்டால் பணியிலிருந்து நீக்கப்படுவார் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டது என்றும், அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்தியது தொடர்பாக வழங்கப்பட்ட குற்றப்பத்திரிகைக்கு மனுதாரர் மீண்டும் ஒருமுறை குற்றத்தை ஒப்புக்கொண்டார் என்றும், குற்றப்பத்திரிகையில் உள்ள அனைத்துக் குற்றச்சாட்டுகளிலும் அவர் குற்றவாளி எனக் கண்டறியப்பட்டுள்ளதாலும், முந்தைய சந்தர்ப்பத்தில் இறுதி எச்சரிக்கை விடுக்கப்பட்டதாலும், 2018.11.29 முதல் அவர் பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளரென்பது.<br><br>(ஆ) 2018.11.29 முதல் அமுலுக்கு வரும் வகையில் அவர் பணிநீக்கம் செய்யப்பட்ட நேரத்தில் 33 ஆண்டுகள் பணிக்காலத்தை நிறைவு செய்திருந்தார் என்றும், அந்த நேரத்தில் அவர் குற்றப்பத்திரிகையில் குற்றத்தை ஒப்புக்கொண்டு, தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் ரூ. 908,600/- | கருத்தில் கொண்டு, தபால் மா அதபரினால் வழங்கப்பட்டுள்ள பணி நீக்க ஒழுக்காற்று உத்தரவை கட்டாய ஓய்வளிப்பாக மாற்றி, மனுதாரருக்கு ஓய்வூதியத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரைக்கப்பட்டது. |

| தொ இல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
|---|---|---|---|---|
| | | | தொகையும் தபால் திணைக்களத்துக்குத் திருப்பிச் செலுத்தியுள்ளாரெனவும், மேலும் பகிரங்கச் சேவைகள் ஆணைக்குழு மற்றும் நிர்வாக மேன்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீடுகளுக்குச் சாதகமான பதில் கிடைக்கவில்லை என்பது.<br><br>(இ) மனுதாரர் 2023 முதல் கடுமையான புற்றுநோயால் அவதிப்பட்டு வருவதாகவும், சம்பாதித்த சொத்துக்கள் அனைத்தும் நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்காகச் செலவாகிவிட்டதாகவும் தமது இரண்டு மகள்களின் எதிர்காலத்துக்கு கடமைகளை நிறைவேற்றவேனும் தன்னால் முடியவில்லை எனவும், மேலும் தான் 33 ஆண்டுகள் சேவையை நிறைவு செய்துள்ளதால் தனக்கு ஓய்வூதியத்தைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமெனவும் கோரி மனுதாரர் தரப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(ஈ) மனுதாரரைப் பணிநீக்கம் செய்வதற்குப் பதிலாகக் கட்டாய ஓய்வளிப்புக்கு பகிரங்கச் சேவைகள் ஆணைக்குழு ஏற்றுக்கொண்டால் அல்லது பரிந்துரைத்தால், அதற்குத் தான் ஆட்சேபிக்க மாட்டேன் என்று தபால் மா அதிபர் கூறியதும், பகிரங்கச் சேவைகள் | |

| தொ இ ல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
|---|---|---|---|---|
| | | | ஆணைக்குழுவிடம் மனுதாரர் தாக்கல் செய்த மேன்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டதும், நிர்வாக மேன்முறையீட்டுத் தீர்ப்பாயத்திலும் ஒரு மேன்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டதால், மனுதாரரைப் பணிநீக்கம் செய்வதற்குப் பதிலாகக் கட்டாய ஓய்வூதியத்தைப் பரிந்துரைக்கும் அதிகாரம் பகிரங்கச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு இல்லை என்பதும்.<br><br>(உ) 2024.05.28 ஆம் திகதியன்று நிர்வாகத்துக்கான மேன்மறையீட்டு தீர்ப்பாயத்தினால் ஏற்புடைய மேன்முறையீடு பரிசீலிக்கப்பட்டதைதொடர்ந்து அனுப்பப்பட்டுள்ள கடிதத்தின் படி மனுதாரரின் உடல்நிலையை கருத்திற் கொண்டு தாபனக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 24:3:4-ஆம் ஏற்பாடுகளின் படி பணிநீக்கத்திற்குப் பதிலாக ஒரு கருணை அடிப்படையிலான மாற்றாகக் கட்டாய ஓய்வு அளிப்பது குறித்து பரிசீலிக்குமாறும், மேலும் தபால் மா அதிபரிடமும் வினவி பகிரங்கச் சேவைகள் ஆணைக்குழு அது தொடர்பாக பரிசீலிக்குமாறும் அறிவிக்கப்பட்டதாகவும் தபால் மா அதிபர் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை என்ற மனுதாரர் தரப்பின் கூற்று | |
| 11 | திரு ஆர் உப்புல் | சுகாதாரத் | (அ) சுகாதார உதவியாளராக | மனுதாரர் |

| தொ இ ல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
|---|---|---|---|---|
| | நிசாந்த COM/PP/2025/128 சமர்ப்பித்தவர்: கௌரவ சுரவீர. 2025.11.26 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சு தொடர்பு இல: : MH/AD/01/03/PP/03/2025 திகதி : 2025.06.25 | திணைக்களத்தின் சுகாதார உதவியாளராக பணியாற்றியபோது இலங்கை தேசிய மருத்துவமனையின் மருந்து மோசடி தொடர்பாக தாதி உத்தியோகத்தரொருவருடன் 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வாக்குவாத சம்பவமொன்றை அடிப்படையாகக் கொண்டு தான் பணி நீக்கம் செய்யப்பட்டதாகவும், அது தொடர்பாக நடைபெற்ற முறையான ஒழுக்காற்று விசாரணை நீதியாக நடத்தப்படவில்லை எனவும், ஒழுக்காற்று விசாரணையின் முடிவில் கடும் தண்டனையாக தான் பணி நீக்கம் செய்யப்பட்டதாகவும், அதன் மூலம் தனக்கு அநீதி இழைக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ள மனுதாரர், மீண்டும் தன்னை சேவையில் அமர்த்துவதற்கு அல்லது புதிதாகவேனும் சேவையில் இணைத்துக்கொண்டு பிறிதொரு இடத்துக்கு | கடமைகள் அளிக்கப்பட்டிருந்த மனுதாரருக்கு ஏற்புடைய பணிகளுக்கு அப்பாற்பட்ட வேறு பணிகளும் சட்ட ரீதியற்ற முறையில் வழங்கப்பட்டதாகவும், இவ்வாறு மனுதாரருக்கு சட்ட ரீதியாக அளிக்கப்பட்ட கடமைகளுக்கு மேலதிகமாக வேறு மேலதிக கடமைகளும் அளிக்கப்பட்டதன் மூலம் இவருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதென்பது.<br><br>(ஆ) கொழும்பு தேசிய மருத்துவமனையின் விஷேட தர தாதியரொருவரின் கடமைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் மனுதாரர் நடந்துக்கொண்டமை தொடர்பாக இவருக்கு எதிராக நடத்தப்பட்ட முறையான ஒழுக்காற்று விசாரணையில் வழங்கப்பட்ட ஒழுக்காற்று உத்தரவு, தாபனக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 24:3:1 ஆம் பிரிவின் கீழ் கடுமையான தண்டனையான “பணி நீக்கம்” எனும் தண்டனை என்பதை குழு அவதானித்ததோடு, மனுதாரரினால் மேற்கொள்ளப்பட்ட தவறின் இயல்புக்கு ஏற்ப அந்த தண்டனைக்கு பதிலாக வேறு குறைவான தண்டனையை மனுதாரருக்கு வழங்கி இவருடைய சேவையை தொடர்ந்தும் பெற்றுக்கொள்வதற்கு ஏற்புடைய அதிகாரிகளுக்கு வாய்ப்பு இருந்த போதிலும், அதற்கு பதிலாக மனுதாரரை பணி நீக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்பது,<br>(இ) சுகாதார உதவியாளராக பல | தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறையான ஒழுக்காற்று விசாரணை தொடர்பாக மீளாய்வு செய்து மனுதாரரை நிலுவைச் சம்பளமின்றி மீளச் சேவையில் அமர்த்துவதற்கேற்றவாறு, இவருக்கு வழங்கப்பட்டுள்ள ஒழுக்காற்று உத்தரவில் திருத்தம் செய்து மீளச் சேவையில் அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரைக்கப்பட்டது. |

| தொ இ ல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
|---|---|---|---|---|
| | | இடமாற்றத்தையேனும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி மேற்படி மனுவை சமர்ப்பித்துள்ளார். | ஆண்டு கால அனுபவத்தைக் கொண்டிருந்த மனுதாரர் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள தண்டனையானது, இவரால் இழைக்கப்பட்ட தவறோடு பார்க்கும்போது அதிக தண்டனை என்பது,<br>(ஈ) மனுதாரருக்கு மேலும் 13 ஆண்டுகள் சேவையாற்ற முடியுமென்பது | |
| 12 | திருமதி கே.எம். ஹெட்டிஆரச்சி<br>COM/PP/2025/286<br>சமர்ப்பித்தவர்: கௌரவ லசித் பாஷண கமகே. 2025.11.26 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது.<br>அமைச்சு தொடர்பு இல: MH/AD/01/03/PP/05/2024<br>திகதி : 2024.06.07 | 1984.06.04 ஆம் திகதி முதல் II "ஆ" வகுப்பின் தொழில்முறை சிகிச்சையாளர் பதவிக்கு நியமிக்கப்பட்ட போதிலும், நியமனக் கடிதத்தில் III ஆம் நிலை தொழில்முறை சிகிச்சையாளர் பதவி என்றே குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், பின்னர் அது சரி செய்யப்பட்டதாகவும், 1989.01.05 ஆம் திகதிய கடிதம் மூலம் 1988.01.01 ஆம் திகதி தொடக்கம் II ஆம் வகுப்பின் "ஆ" வகுதியின் தொழில்முறை சிகிச்சையாளராக உள்ளீர்க்கப்பட்டதாகவும், சுகாதாரத் திணைக்களத்தின் பொதுச் சுற்றுநிருபம் மற்றும் பொது நிருவாகச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் கிடைக்க வேண்டிய பதவி உயர்வுகள் உரிய | (அ) மனுதாரர் 1995.11.26 ஆம் திகதி நடைபெற்ற II "அ" வகுதியின் தகைமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்ததை தொடர்ந்து II "ஆ" வகுதியின் பரீட்சைகளை நிறைவு செய்யாத போதிலும், 1995.11.26 ஆம் திகதி தொடக்கம் II "அ" வகுதிக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளதாகவும், 2001.11.26 ஆம் திகதி தொடக்கம் தொழில்முறை சிகிச்சையாளர் பதவியின் I ஆம் தரத்துக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ளார் எனவும், 2016.01.01 ஆம் திகதி தொடக்கம் தொழில்முறை சிகிச்சையாளர் பதவியின் விஷேட தரத்துக்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளார் எனவும் அந்த பதவி உயர்வு அப்பதவியில் கிடைக்கக்கூடிய உயரிய பதவி எனவும் அவ்வாறு நடவடிக்கை மேற்கொண்டதன் மூலம் இவருக்கு ஏற்கனவே நிவாரணம் கிடைத்துள்ளதென்பது.<br><br>(ஆ) 2016.01.01 ஆம் திகதி தொடக்கம் தொழில்முறை சிகிச்சையாளர் பதவியின் சிறப்பு தரத்துக்கு பதவி உயர்வளித்ததை தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த சம்பளத் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை என்பதால், அது இவருடைய ஓய்வூதியத்தை பாதித்துள்ளதாகவும் 2022.04.22 ஆம் ஆண்டு நடைபெற்ற | மனுதாரருக்கு தொழில்முறை சிகிச்சையாளர் பதவியின் விஷேட தரத்துக்கு பதவி உயர்வு கிடைத்ததை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய சம்பளத் திருத்தத்தை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்பட்டது.<br>மேலும், பதவி உயர்வுக்கு ஏற்புடையதாக தமது சம்பளத் திருத்தத்தை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் எழுத்துமூலமாக கோருமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட |

| தொ இல | மனு தொடர்பான தகவல்கள் | எதிர்ப்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ள விடயங்கள் | குழுவின் விதப்புரைகள் |
|---|---|---|---|---|
| | | நேரத்தில் கிடைக்கவில்லை என்பதால் பதவி உயர்வு திகதிகளை சீராக்கி உயர் தரத்தின் பதவி உயர்வுகளுடன் அதற்குரிய நிலுவைச் சம்பளத்தையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதோடு வழங்கப்பட்ட பதவி உயர்வுகளை அரசாங்கத்தின் சுற்றுநிருபத்தின் படி சீராக்கித் தருமாறும் கோரி மனுதாரர் இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய 2016.07.31 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் மேலதிக தொழில்முறை சிகிச்சையாளர் பதவியின் விஷேட தரத்துக்கு மனுதாரருக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டதோடு, அது தொடர்பான கடிதம் 2023.09.27 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டுள்ள போதிலும், அதற்குரிய சம்பளத் திருத்தம் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனவும் அது குறித்த பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டு ஓய்வூதியத் திணைக்களத்துக்கு ஆற்றுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது.<br><br>(இ) மனுதாரருக்கு தொழில்முறை சிகிச்சையாளர் பதவியின் விஷேட தரத்துக்கு பதவி உயர்வு வழங்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய சம்பள திருத்தங்கள் மேற்கொள்ளப்படாததால் இவருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதென்பது. | ன |

| பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | | | | |
|---|---|---|---|---|
| 13 | திருமதி டி.எம். குணவதி<br>COM/PP/2025/188<br>கௌரவ தினிந்து சமன் ஹென்னாயக்க, பா.உ. | க.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் சித்தியடைந்து, பிரம்புப் பொருட்கள் உற்பத்தி தொடர்பாக 06 மாத காலப் பயிற்சியைப் பெற்று, அதே பயிற்சி நிறுவனத்தில் 02 | (அ) 1993.03.01ஆந் திகதியன்று ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தில் பிரம்புப் பொருட்கள் ஆலோசகர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் பெறும்போது மனுதாரரின் | மனுதாரர் உட்பட ஊவா மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் கீழ் உள்ள ஏனைய 8 பேரினதும் நியமனக் கடிதங்களின் திகதிகள் மற்றும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>2025.09.11ஆந் திகதி விசாரணை செய்யப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல: PL/6/3/COM/PP/2025/188<br><br>திகதி : 2025.05.27 | வருடங்கள் பணியாற்றி, 1993.03.01ஆந் திகதியன்று ஊவா மாகாண கைத்தொழில் அமைச்சின், சிறு கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் இயங்கும் பிபில, பிட்டக்கும்புர பிரம்புப் பொருட்கள் உற்பத்தி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் அமைய ஆலோசகர் பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும், 20 வருட காலத் தொடர்ச்சியான சேவைக்குப் பின்னர் 2013.01.01ஆந் திகதிக்கு அவரது வயது 45 ஐத் தாண்டியிருந்ததன் காரணமாக ஊவா மாகாண அரச சேவையின் ஊழியர் சேமலாப நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்யும் அடிப்படையிலான நியமனமொன்று வழங்கப்பட்டுள்ளது என்றும், உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட 2003.09.02ஆந் திகதிய PL/6/3/11/2யுபி இலக்கக் கடிதத்திலும் மனுதாரரின் பெயரும் 'பிரம்புப் பொருட்கள் கண்காட்சியாளர்' என்ற பதவியும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அக்கடிதத்தில் | வயது 26 ஆகக் காணப்பட்டது என்றும், 2013.01.01ஆந் திகதி முதல் இப்பதவி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட போதிலும் அக்காலப்பகுதியில் அவரது வயது 45 ஐத் தாண்டியிருந்ததால் சேமலாப நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்யும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது என்றும், தற்போது வரை சுமார் 33 வருட காலச் சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள நிலையில் 60 வயது பூர்த்தியடைவதன் காரணமாக 2026 ஓகத்து மாதத்தில் ஓய்வுபெறவுள்ள போதிலும் தமக்கு மாதாந்த சேமலாபத் தொகையாக ரூ. 6,028/- மாத்திரமே கிடைக்கும் என்றும் மனுதாரர் தரப்பினால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்;<br><br>(ஆ) 1993 ஆம் ஆண்டில் மனுதாரர் ஒப்பந்த அடிப்படையில் பிரம்புப் பொருட்கள் ஆலோசகர் பதவிக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட போதிலும் அனுமதிக்கப்பட்ட பதவியணிக்குள் இப்பதவி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்றும், அதற்கமைய மேற்குறித்த பதவியை அனுமதித்துத் தருமாறு ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் | காலப்பகுதிகள் அவ்வாறே இருக்கும் வகையில், உரிய நியமனங்களின் தன்மையை ஓய்வூதியத்துடனான நிரந்தர நியமனங்களாகத் திருத்துமாறு ஊவா மாகாண அரச சேவை ஆணைக்குழுவிற்கு விதந்துரைக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குறிப்பிடப்பட்டுள்ள 48 பேரில் 47 பேருக்கு ஓய்வூதியத்துடனான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் மனுதாரரின் பதவிக்கு மாத்திரம் 2013.01.01ஆந் திகதி முதல் சேமலாப நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்யும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்றும், இதன் காரணமாக 1993 ஆம் ஆண்டு முதல் 2026 ஆம் ஆண்டு வரை 33 வருடங்கள் தொடர்ச்சியாக அரச சேவையில் ஈடுபடக் கூடியதாக இருந்தபோதிலும் 2026.08.13ஆந் திகதி ஓய்வூதியமின்றி ஓய்வுபெற நேரிட்டுள்ளதாகக் குறிப்பிட்டு, மனுதாரரின் பதவியை ஓய்வூதியத்துடனான நிலைக்கு மாற்றித் தருமாறு கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றினால் 1996 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை அவ்வப்போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் இப்பதவி 2013.01.01ஆந் திகதி முதலே அனுமதிக்கப்பட்டுள்ளது என<br><br>(இ) 2013.01.01ஆந் திகதி மனுதாரர் பதவியில் நிரந்தரமாக்கப்படும் போது அவரது வயது 45 ஐத் தாண்டியிருந்ததால் அவருக்கு ஓய்வூதியத்துடனான நிரந்தர நியமனத்திற்குப் பதிலாக ஊழியர் சேமலாப நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்யும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது என;<br><br>(ஈ) 45 வயதைத் தாண்டி அரச சேவையில் நிரந்தர நியமனம் பெற்ற ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்காகப் பொது நிர்வாக அமைச்சு மூலம் குழுவொன்று நியமிக்கப்பட்டு அதற்காகப் பொது நிர்வாகச் சுற்று நிருபமொன்று வெளியிடப்பட்டுள்ளது என்றும், மனுதாரரின் நியமனத்தின் தன்மையை ஊழியர் சேமலாப | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நிதியத்திற்கான பங்களிப்பு நியமனம் என்பதற்குப் பதிலாக நிரந்தர ஓய்வூதியத்துடனான நியமனம் என மாற்றி அந்த நியமனக் கடிதத்தைத் திருத்த முடியுமாயின் அவருக்கும் மேற்சொன்ன சுற்றறிக்கையின்படி ஓய்வூதியம் கிட்டும் என<br><br>(உ) மனுதாரர் உட்பட நியமனக் கடிதங்களைத் திருத்தி ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொடுக்கக் கூடிய மேலும் 8 பேர் ஊவா மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் கீழ் உள்ளனர் என்றும், அவர்களது நியமனக் கடிதங்களையும் மேற்கூறியவாறு நிரந்தர ஓய்வூதியத்துடனான நியமனக் கடிதங்களாகத் திருத்த முடியும் என | |
| 14 | திரு. ஏ.ஆர்.டி.சி. குமாரசிறி<br><br>COM/PP/2025/195<br>கௌரவ சட்டத்தரணி அனுராத ஜயரத்ன, பா.உ. அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>2025.09.11ஆந் திகதி விசாரணை செய்யப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இல: HA/05/07/03/24 | மனுதாரர் வசிக்கும் காணி 23.5 பேர்சஸ் ஆகும் என்றும், 1989.11.10ஆந் திகதிய விற்பனை உறுதி மூலம் மனுதாரருக்கு இக்காணி உரித்தானது என்றும், கம்பஹா காணிப் பதிவு அலுவலகத்தின் C.238/136 என்ற இருமடித் தாளில் இது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், கடுவெல-கடவத வெளிவட்ட வீதியை அமைப்பதற்காகக் காணிகளைக் சுவீகரிக்கும் போது 2010.02.11ஆந் திகதிய | (அ) 1988.06.15ஆந் திகதிய வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் சர்ச்சைக்குரிய காணியிலிருந்து 7.5 பேர்சஸ் காணித்துண்டு களனி முதுன்கொட வீதி அபிவிருத்திப் பணிகளுக்காக அரசினால் சுவீகரிக்கப்பட்டுள்ளதென வும், 1989.10.10ஆந் திகதி அக்காணியைக் கொள்வனவு செய்யும்போது மேற்சொன்ன சுவீகரிப்புத் தொடர்பாக அறிந்திருக்கவில்லை என்றும், அதற்கமைய இக்காணிக்காக இதுவரை தமக்கு இழப்பீடு கிடைக்கவில்லை | மனுதாரர் மற்றும் சர்ச்சைக்குரிய காணியின் முந்தைய உரிமையைக் கொண்டிருந்த தரப்பினர் ஆகிய இரு தரப்பினரையும் ஒரே சந்தர்ப்பத்தில் அழைத்து, ரத்து செய்யப்பட்ட அற்றோனித் தத்துவப் பத்திரம் தொடர்பாகக் கலந்துரையாடல் மூலமான தீர்வொன்றை எட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், |

| | | | | |
|---|---|---|---|---|
| | திகதி : 2023.03.13<br><br>(மனுதாரர் நோய் நிலைமை காரணமாகக் கட்டிலில் முடங்கியுள்ளதால், மனுதாரரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அவரது மனைவி திருமதி. சேனநாயக்க குழுவின் விசாரணைக்காகச் சமூகமளித்திருந்தார்.) | 1640/26 இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் இச் சொத்து அரசினால் சுவீகரிக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டிருக்கையில் 1987 ஆம் ஆண்டில் மனுதாரரின் காணியிலிருந்து 7 பேர்சஸ் காணி அரசினால் சுவீகரிக்கப்பட்டுள்ளது என 2021.04.08 ஆந் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும், 1989 ஆம் ஆண்டில் இக்காணியைக் கொள்வனவு செய்வதற்கு முன்னர் காணிப் பதிவு அலுவலகத்தின் இருமடித் தாள்களைப் பரிசீலித்து இக்காணியின் உரிமை விற்பனையாளரைத் தவிர வேறு எந்தவொரு மூன்றாம் தரப்பிற்கோ அல்லது அரசிற்கோ சுவீகரிக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தியிருந்த போதிலும் இக்காணிக்கான இழப்பீட்டுத் தொகையை மனுதாரருக்கு வழங்காது பியகம பிரதேச செயலகத்தினால் காணியின் முதல் உரிமையாளர்/விற்பனையாளரின் வாரிசுகளுக்கு அந்த இழப்பீட்டுத் தொகையை | என்பதுடன் 1989 ஆம் ஆண்டில் தாம் காணியைக் கொள்வனவு செய்வதற்கு முன்னர் காணியின் உரிமையைக் கொண்டிருந்த உரிமையாளர்களுக்கு அவ்விழப்பீட்டுத் தொகை உரித்தாகும் என பியகம பிரதேச செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டது என்றும் மனுதாரர் தரப்பினால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்;<br><br>(ஆ) காணி சுவீகரிப்புச் சட்டத்தின் இரண்டாவது பிரிவின்படி, 1988.06.15ஆந் திகதிய வர்த்தமானிப் பத்திரிகை மூலம் அரசினால் சர்ச்சைக்குரிய காணியிலிருந்து 07 பேர்சஸ் சுவீகரிக்கப்பட்டுள்ளது என்றும், அத்திகதியில் அக்காணியின் உரிமையைக் கொண்டிருந்த உரிமையாளருக்கு மாத்திரமே இழப்பீடு உரித்தாகும் என்பதுடன் மனுதாரர் தரப்பினர் இக்காணியைக் கொள்வனவு செய்துள்ளது 1989.10.10ஆந் திகதி என்றும், 2009 ஆம் ஆண்டில் காணியின் முதல் உரிமையாளர் மரணமடைந்துள்ளதுடன் 2010.06.08ஆந் திகதி நடைபெற்ற இழப்பீட்டு விசாரணையொன்றில் முன்னிலையாவதற்காக | அதற்கமையச் செயற்பட்டு மனுதாரர் தரப்பிற்கு அற்றோனித் தத்துவப் பத்திரத்தின் ஊடாகச் சர்ச்சைக்குரிய காணியின் உரிமையை மீண்டும் வழங்கி, அதனடிப்படையில் உரிய இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பியகம பிரதேச செயலாளருக்குப் விதந்துரைக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழங்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது என்றும், ஆரம்பத்திலிருந்தே இழப்பீட்டு ஆய்வுகளுக்காகச் சமூகமளித்த பிரதேச செயலக அதிகாரிகளின் தரப்பில் தவறு நடந்துள்ளது அவதானிக்க முடிகின்றது எனக் குறிப்பிட்டு, பிரதேச செயலாளரால் இழைக்கப்பட்ட நிர்வாகத் தவறை நிவர்த்தி செய்து நீதியை நிலைநாட்டித் தருமாறு கோரி இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | அவரது கணவர் மற்றும் பிள்ளைகளினால் அற்றோனித் தத்துவப் பத்திரம் மூலம் மனுதாரருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது அது ரத்து செய்யப்பட்டுள்ளது என்றும், அதற்கமைய இழப்பீட்டு உரிமை மீண்டும் முந்தைய தரப்பிற்கே உரித்தாகின்றது என்ற விடயம்;<br><br>(இ) பியகம பிரதேச செயலாளரால் செய்யப்பட்ட கோரிக்கையொன்றிற்கமைய, 2022.08.30ஆந் திகதி சட்டத்துறைத் தலைமையதிபதித் திணைக்களத்தினால் மேற்குறிப்பட்ட விடயம் தொடர்பாக அறிவுறுத்தல்களும் அவதானிப்புகளும் வழங்கப்பட்டிருந்தன என்றும், அதற்கமைய காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் இறுதித் தீர்மானமொன்று எடுக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் மீண்டும் 9 ஆம் பிரிவின் கீழ் உரிமை விசாரணையொன்றை நடத்துவதற்கு நீதிமன்றத் தீர்ப்பொன்று அவசியமானது என அறிவிக்கப்பட்டுள்ளது என்றும், 2023.11.07ஆந் திகதி நடைபெற்ற பொது மனுக்கள் பற்றிய குழுவில் நீதிமன்றத்தின் ஊடாக 17 ஆம் பிரிவை ரத்து செய்து 9 ஆம் பிரிவின் கீழ் உரிய | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உரிமை விசாரணையை நடத்தி மனுதாரருக்கு இழப்பீட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக பியகம பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார் என்றும், அது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் இனிவரும் காலத்தில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளினால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்;<br><br>(ஈ) இது தொடர்பாக பாதிக்கப்பட்ட தரப்பினரே நீதிமன்ற நடவடிக்கைகளுக்குச் செல்ல வேண்டும் என்ற போதிலும், அதன்போது பாதிக்கப்பட்ட மனுதாரர் மேலும் சிரமத்திற்குள்ளாவார் என்றும் காணியின் முந்தைய உரிமையைக் கொண்டிருந்த தரப்பினருடனும் பாதிக்கப்பட்ட தரப்பினருடனும் கலந்துரையாடல் மூலமான தீர்வொன்றிற்கு எட்ட முற்படுவது மிகவும் நடைமுறைச் சாத்தியமான தீர்வாக அமையும் என்ற விடயம். | |
| 15 | திரு. டப்ளியூ.ஏ.ஏ.கே. | 1981.08.03ஆந் திகதி முதல் மேல் மாகாண | *(அ)* மனுதாரர் இலங்கை தொழில்நுட்ப சேவைப் | மேல் மாகாண கால்நடை உற்பத்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | அஜித் விக்ரமசிங்க COM/PP/2025/72<br>கௌரவ தர்மப்பிரிய விஜேசிங்க, பா.உ. அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>2025.10.09ஆந் திகதி விசாரணை செய்யப்பட்டது.அமைச்சின் தொடர்பு இல : PL/6/3/COM/PP/19/2369<br><br>திகதி : 2019.07.26 | கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவியில் இணைந்து பணியாற்றியதாகவும், 1991.03.13ஆந் திகதி முதல் அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளின் பேரில் சிறையில் அடைக்கப்பட்டு நீதிமன்றத்தில் போலி வழக்குகள் தொடரப்பட்டு 1994.10.19ஆந் திகதி விடுவிக்கப்பட்டதாகவும் , 1996.05.21ஆந் திகதி முதல் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டு நிலுவைச் சம்பளம் வழங்கப்பட்டதாகவும், சிறையிலிருந்த காலப்பகுதியில் வினைத் திறன்காண் தடைப் பரீட்சைகள் தவறிப்போன போதிலும் பின்னர் 1996.08.23ஆந் திகதி அப்பரீட்சையில் சித்தியடைந்ததாகவும், அதற்கமைய 1996.10.07 முதல் மேல் மாகாண அரச சேவைக்கு மீண்டும் உள்வாங்கப்பட்டதாகவும், அதன்பின்னர் உரிய காலப்பகுதிகளில் கிடைக்க வேண்டிய பதவியுயர்வு வழங்குமாறு செய்யப்பட்ட கோரிக்கைகள் மற்றும் மேல் மாகாண சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களுக்கும் எவ்வித | பிரமாணக் குறிப்பின்படி தரம் II "அ" பிரிவிற்குப் பதவியுயர்வு பெற்று 04 வருடங்கள் பூர்த்தியாகும் 1998.07.01ஆந் திகதியன்று இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் I இற்குப் பதவியுயர்த்துவதைப் விதந்துரைக்க முடியும் என, 2025.07.14ஆந் திகதியிட்ட கடிதம் மூலம் மேல் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் செயலாளர் பொது மனுக்கள் பற்றிய குழுவிற்கு அறியத்தந்துள்ளார் என<br><br>*(ஆ)* விதந்துரைக்கப் பட்டுள்ள மேற்சொன்ன பதவியுயர்வு நடைமுறைப்படுத்தப்படும் திகதி 1998.07.01 என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், வினைத் திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்த 1994.07.01ஆந் திகதியே உரிய பதவியுயர்வைப் பெற வேண்டிய திகதியாக அமைதல் வேண்டும் என மனுதாரரால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்;<br><br>*(இ)* 2025.03.11ஆந் திகதி நடைபெற்ற பொது மனுக்கள் பற்றிய குழுவில் மனுதாரரால் வாய்மொழியாகக் கூறப்பட்டதும், தமக்குச் சமமான தகைமைகளைப் பெற்ற | மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளரின் 2025.07.14ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளவாறு மனுதாரரை 1998.07.01ஆந் திகதியன்று இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் I இற்குப் பதவியுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்து, அத்திகதி முதற்கொண்ட நிலுவைச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை மனுதாரருக்குச் செலுத்துமாறு பரிந்துரைக்கப்பட்டது.<br>நியாயமான இழப்பீட்டுத் தொகையொன்றையும் பெற்றுத்தருமாறு மனுதாரரால் விடுக்கப்பட்ட கோரிக்கை குழுவினால் நிராகரிக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிவாரணமும் கிடைக்கவில்லை எனக் குறிப்பிட்டு, தேவையான தகுதிகள் இருந்தபோதிலும் கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் தரம் I இற்குப் பதவியுயர்வு பெறாமலேயே 2017.03.11ஆந் திகதி ஓய்வுபெற நேரிட்டதாக மேலும் தெரிவித்து, இழந்த பதவியுயர்வுகளை வழங்குமாறும், அதற்கு இணையாகச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குமாறும், ஏற்பட்ட அநீதிக்கு நியாயமான இழப்பீட்டுத் தொகையொன்றையும் பெற்றுத்தருமாறும் கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அதிகாரியொருவருக்கு உதாரணமாகக் காட்டப்பட்டதுமான, தற்போது ஓய்வுபெற்றுள்ள கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் ஒருவரின் தனிப்பட்ட கோப்பினை ஆய்வு செய்து, அவருக்கு IIஆம் வினைத் திறன்காண் தடைப் பரீட்சை மற்றும் IIஆம் திணைக்களப் பரீட்சையிலிருந்து விலக்களிக்கப்பட்டதன் அடிப்படையில் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் II "அ" பிரிவிற்குப் பதவியுயர்த்தப்பட்ட திகதியிலிருந்து, அதாவது 1997.01.01ஆந் திகதியிலிருந்து 04 வருடங்கள் பூர்த்தியாகும் 2001.01.01ஆந் திகதி முதல் இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பின்படி இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் Iஇற்குப் பதவியுயர்த்திய முன்னுதாரணத்தைக் கருத்திற் கொண்டு, மனுதாரருக்கும் இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைவாக தரம் II "அ" பிரிவிற்குப் பதவியுயர்வு பெற்று 04 வருடங்கள் பூர்த்தியாகும் 1998.07.01ஆந் திகதி முதல் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் I இற்குப் பதவியுயர்வை விதந்துரைத்துள்ளது என | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | *(ஈ)* இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் II "அ" பிரிவிலிருந்து தரம் I இற்குப் பதவியுயர்த்துவதற்காக, 04 வருட காலத் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என. | |
| 16<br><br>17 | திரு.ஏ. தர்ம ஸ்ரீ ரணதுங்க COM/PP/2025/233 கௌரவ சட்டத்தரணி கீதா ஹேரத், பா.உ.இனால் முன்வைக்கப்பட்டுள்ளது. 2025.10.23 ஆந் திகதி விசாரணை செய்யப்பட்டுள்ளது. அமைச்சு தொடர்பு இலக்கம்: CS/SLAS/PUB-PET-COM(Vol I) திகதி : 2021.08.21<br><br>திரு.டபிள்யு.எம். விஜேசிங்க COM/PP/2025/235 கௌரவ சட்டத்தரணி கீதா ஹேரத், பா.உ.இனால் முன்வைக்கப்பட்டுள்ளது. 2025.10.23 ஆந் திகதி விசாரணை செய்யப்பட்டுள்ளது. அமைச்சுத் | COM/PP/2025/233,235, 140,139 மற்றும் 434 ஆம் இலக்க மனுதாரர்களினால் பின்வரும் மனுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. 1994ஆம் ஆண்டுக்கான இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு II, தரம் II இற்கு திறன் அடிப்படையில் பதவி உயர்வு வழங்குவதற்காக நடாத்தப்பட்ட பரீட்சை முடிவுகளின் அடிப்படையில், 1999 ஆம் ஆண்டில் நியமனங்கள் வழங்கப்பட்டபோது, அங்கீகரிக்கப்பட்ட புள்ளி வழங்கும் நடைமுறை மற்றும் சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம், விண்ணப்பதாரர்களின் முனைப்பான சேவை காலத்தை அடிப்படையாகக் கொண்டே சிரேஷ்டத்துவப் புள்ளிகள் வழங்கப்பட்டிருக்க வேண்டியபோதிலும், | *2025/233, 235, 140, 139 மற்றும் 434 ஆகிய இலக்கங்களை உடைய மனுதாரர்கள் சார்பில், பின்வரும் அவதானிப்புகளைக் குழு சமர்ப்பிக்கின்றது.*<br><br>*(அ) 1998.08.25ஆம் திகதிய ஒருங்கிணைந்த சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 3/98 இல் உள்ளடக்கப்பட்டுள்ள பதவி உயர்வுகளை வழங்கும் முறையியலுக்கு அமைய, 1994 ஆம் ஆண்டில் நிர்வாக சேவைக்கு திறன் அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டதாகவும், இது தொடர்பாக 1999.03.06 அன்று பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட எழுத்துப்பரீட்சைக்குத் தோற்றி, கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு புள்ளிகளைப் பெற்றிருந்த போதிலும், 1999.08.16 மற்றும் 1999.08.17 ஆகிய திகதிகளில் நடாத்தப்பட்ட* | மனு இலக்கம் 2025/233, 235, 140, 139 மற்றும் 434 ஆகிய மனுதாரர்கள் சார்பில், பின்வரும் விதந்துரைகளை குழு முன்வைக்கின்றது.<br><br>பொது நிர்வாக அமைச்சின் செயலாளரால் விண்ணப்பதாரர்களுக்கு சிரேஷ்டத்துவப் புள்ளிகளை வழங்கும் முறைமையைத் தீர்மானிப்பதற்காக நியமிக்கப்பட்ட இரண்டு குழுக்களும் இரண்டு சந்தர்ப்பங்களில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட தீர்மானங்களை வழங்கியுள்ளதாகவும், அதற்கமைய விண்ணப்பதாரர்களுக்கு மேற்படி பதவி உயர்வுகளை |

| | | | | |
|---|---|---|---|---|
| 18 | தொடர்பு இலக்கம் : CS/SLAS/PUB-PET-COM(Vol I) திகதி : 2021.08.21<br><br>திரு.எம்.கே.பீ. ஹேரத் COM/PP/2025/140 கௌரவ தர்மப்பிறிய திசாநாயக்க, பா.உ. இனால் முன்வைக்கப்பட்டுள்ளது. 2025.10.23 ஆந் திகதி விசாரணை செய்யப்பட்டுள்ளது. அமைச்சின் தொடர்பு இலக்கம் : CS/SLAS/PUB-PET-COM(Vol I) திகதி : 2021.05.11 | பொது நிர்வாக அமைச்சினால் சில விண்ணப்பதாரர்களின் முந்தைய சேவை காலங்களையும் சேர்த்து அதன் அடிப்படையில் சிரேஷ்டத்துவப் புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளதால், ஏனைய விண்ணப்பதாரர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியை விசாரணை செய்த மனித உரிமைகள் ஆணைக்குழுவானது, வழங்கப்பட்டுள்ள நியமனங்களுக்குப் பதிலாக பதிய விதந்துரைகளை முன்வைத்தவாறு, பாதிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு சட்டமா அதிபரின் ஆலோசனைகளுக்கு அமைவாக நிவாரணம் வழங்க வேண்டுமென கட்டளையிட்டுள்ளது என்பதுடன், அவ்வாறு வழங்கப்பட்டுள்ள சிரேஷ்டத்துவப் புள்ளிகளை விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ளகுழுவின் விதந்துரைகளை, பொது நிர்வாக அமைச்சு, அரச சேவை ஆணைக்குழுவிற்கு அறிவித்திருந்த போதிலும், அந்த ஆணைக்குழு மேற்படி விதந்துரைளின் பிரகாரம் செயல்பட மறுத்தமையினால் மனுதாரர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக | *நேர்முகப்பரீட்சைகளுக்கு அழைப்பு கிடைக்கப்பெறவில்லை எனவும், அத்தகைய நேர்முகப்பரீட்சைகளின் போது, அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான குழுவின் விதந்துரைகளுக்கு அமைய நியமனங்கள் முற்திகதியிடப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு, முனைப்பான சேவைக்காலத்தைக் கொண்ட விண்ணப்பதாரர்களையும் விட அதிகமாக சிரேஷ்டத்துவப் புள்ளிகள் வழங்கப்பட்டதன் காரணமாக அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டு, மனுதாரர்களில் ஒரு சாரார் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு செய்திருந்தமை உள்ளிட்ட விடயங்களை மனுதாரர்கள் முன்வைத்துள்ளனர்.* | வழங்கும் முறையியலில் அநீதி இழைக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே, இலங்கை நிர்வாக சேவையிலிருந்து ஓய்வுபெற்ற மனுதாரர்களின் சேவைக்காலத்தை, நிலுவைச் சம்பளக் கொடுப்பனவுகள் இன்றி முற்திகதியிடுமாறும், அதற்கமைய சேவைக்காலத்தைக் கணக்கிட்டு, உரிய சம்பள ஏற்றங்கள் சகிதம் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் விதந்துரைக்கின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 19 | திரு.கே.எல்.என். சகபந்து COM/PP/2025/139 கௌரவ தர்மப்பிறிய திசாநாயக்க, பா.உ.இனால் முன்வைக்கப்பட்டுள்ளது. 2025.10.23 திகதி விசாரணை செய்யப்பட்டுள்ளது. அமைச்சின் தொடர்பு இலக்கம் : CS/SLAS/PUB-PET-COM(Vol I) திகதி : 2021.12.15 | க் குறிப்பிட்டு, ஓய்வூதிய நன்மைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியவாறு தமது நியமனங்களை முற்திகதியிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர். | *1999.03.06 அன்று பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட எழுத்துப்பரீட்சையில் பெற்ற புள்ளிகள்:*<br>• *திரு. எம்.கே.பி. ஹேரத் - 115 புள்ளிகள்*<br>• *திரு. டபிள்யூ.எம். விஜேசிங்க - 111 புள்ளிகள்*<br>• *திரு. கே.எல்.என். சஹபந்து - 107 புள்ளிகள்*<br>• *திரு. தர்ம ஸ்ரீ ரணதுங்க - 107 புள்ளிகள்*<br>• *திரு. ஏ. ஹெட்டியாராச்சி - 98 புள்ளிகள்*<br>• *திரு. எம்.ஜி. புஞ்சிபண்டா - 96 புள்ளிகள்* | |

| | | | | |
|---|---|---|---|---|
| 20 | திரு.எம்.ஜீ.புஞ்சி பண்டா COM/PP/2025/434 கௌரவ அசித நிரோஷண எகொடவித்தான, பா.உ. இனால் முன்வைக்கப்பட்டுள்ளது. 2025.10.23 ஆந் திகதி விசாரணை செய்யப்பட்டுள்ளது. : CS/SLAS/PUB-PET-COM(Vol I) திகதி : 2021.05.11 | | *(ஆ) மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விதந்துரைகளின் அடிப்படையில், அசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர், பணியிலுள்ள ஒரு அதிகாரியை விட, அவருக்குப் பின்னர் சேவையில் இணைந்து நியமனம் முற்திகதியிடப்பட்ட ஒருவருக்கு அதிக சிரேஷ்டத்துவம் வழங்கப்படக்கூடாது என்ற சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம், மேலும் 43 விண்ணப்பதாரர்களுக்கு நியமனங்களை வழங்குவதற்கு அனுமதி வழங்கியதாகவும், மீண்டும் HRC 1712ஆம் இலக்க மற்றும் 2001.08.30 திகதியிடப்பட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையின் மூலம், சட்டமா அதிபரின் ஆலோசனைகளுக்கு அமைய சிரேஷ்டத்துவப் புள்ளிகளை வழங்கி புதிய விதந்துரைகளை முன்வைக்குமாறு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய, பொது நிர்வாக அமைச்சின் செயலாளரினால் குழுவொன்று நியமிக்கப்பட்டதகவும், அந்தக் குழுவின் 2003.05.28 திகதியிட்ட அறிக்கையின் 6.2 பந்தியின் கீழ், மொத்தமாக* | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | *73 முதல் 114 வரை புள்ளிகளைப் பெற்ற 14 அதிகாரிகளுக்கு நியமனங்களை வழங்குமாறு பணிக்கப்பட்ட போதிலும், அது முறையாக நடைமுறைப்படுத்தப்படாததால், தமக்கு குறைந்த சம்பளத்துடன் ஓய்வுபெற நேரிட்டதாகவும் மனுதாரர்கள் மேலும் விடயங்களை முன்வைத்துள்ளனர்.* | |
| | | | *(இ) நிர்வாக சேவைக்கு திறன் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு, பரீட்சைத் திணைக்களத்தினால் வெட்டுப்புள்ளிகள் வழங்கப்பட்டதாகவும், அதன் அடிப்படையில் தகுதிபெற்ற விண்ணப்பதாரர்கள் சிரேஷ்டத்துவத்தை கருத்தில் கொள்வதற்காக நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டபோது, மேற்தரம் அல்லது அதற்கு சமமான சேவைகளில் பணியாற்றிய ஒவ்வொரு வருடத்திற்கும் தலா 5 புள்ளிகள் வீதம் பொது நிர்வாக அமைச்சினால் வழங்கப்பட்டதாகவும், விண்ணப்பதாரர்கள் மேற்தரத்திற்கு நியமிக்கப்பட்ட நிச்சயிக்கப்பட்டதொரு திகதி இல்லாத காரணத்தினால், குழுவொன்றின் மூலம் அவர்களுக்கான சிரேஷ்டத்துவப் புள்ளிகளை வழங்கும் முறைமை* | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | *தீர்மானிக்கப்பட்டதாகவும், இதன்போது அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான குழுவின் தீர்மானங்களின்படி நியமனங்கள் முற்திகதியிடப்பட்டவர்களின் சேவைக்காலத்திற்கு புள்ளிகள் வழங்கப்பட்டதாவும், மீண்டும் மனித உரிமைகள் ஆணைக்குழு சிரேஷ்டத்துவப் புள்ளிகளை விசாரணை செய்யுமாறு வழங்கிய அறிவுறுத்தல்களுக்கு அமைய, பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் இரண்டாவது முறையாகவும் குழுவொன்றை நியமித்த போதிலும், அதில் அரசியல் குழுவின் விதந்துரைகளின்படி முற்திகதியிடப்பட்ட சேவைக்காலங்களுக்கு சிரேஷ்டத்துவப் புள்ளிகளை வழங்காதிருக்கத் தீர்மானிக்கப்பட்டதாகவும், அதற்கமைய கணக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டபோது, ஏற்கனவே நியமனம் பெற்ற 14 பேருக்கும் குறைந்த புள்ளிகளே கிடைக்கப்பெற்ற போதிலும், அவர்களது நியமனங்களை இரத்து செய்ய முடியாது எனவும்* | |
| | | | *(ஈ) எவ்வாறாயினும், மேற்படி இரண்டு சந்தர்ப்பங்களிலும் இந்த மனுதாரர்களுக்கு நியமனங்கள்* | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | *வழங்கப்படவில்லை என்பதையும், சர்ச்சைக்குரிய சம்பவம் 1998 ஆம் ஆண்டில் இடம்பெற்றிருப்பதால், இது தொடர்பாக அவர்கள் நிர்வாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு சமர்ப்பித்துள்ள மேன்முறையீட்டை விசாரிப்பதற்கு, 2002 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட குறித்த நியாயசபை மறுத்துள்ளது எனவும்* | |
| 21 | திருமதி.ஐ.ஆர்.பீ. மெணிக்கே COM/PP/2025/247 கௌரவ சட்டத்தரணி சாகரிகா அதாவுத, பா.உ. இனால் முன்வைக்கப்பட்டுள்ளது. 2025.11.19 ஆந் திகதி விசாரணை செய்யப்பட்டுள்ளது. அமைச்சின் தொடர்பு இலக்கம் DP/02/08/2015 திகதி : 2024.08.22 | 2005.04.01 முதல் சுகாதார முகாமைத்துவ சேவையில் நியமனம் பெற்று, சுகாதார அமைச்சு உள்ளிட்ட பல்வேறு பணியிடங்களில் பணியாற்றி வந்த மனுதாரர், 2009.10.15 முதல் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III பதவிக்கு உள்ளீர்க்கப்பட்டார் எனவும், 2018.03.02 முதல் ரம்புக்கனை பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் பெற்று பணியாற்றி வந்தபோது, ஒருங்கிணைந்த சேவைகள் உதவிப் பணிப்பாளரின் PMAS/56738 இலக்க மற்றும் 2019.08.22 ஆந் திகதிய கடிதத்திற்கமைய, ரம்புக்கனை பிரதேச செயலாளரினால் 2019.08.31 முதல் | *(அ) 2005.04.01 அன்று சுகாதார முகாமைத்துவ சேவையில் நியமனம் பெற்ற தான், முறையே சுகாதார அமைச்சு, பேராதனை சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலை மற்றும் மாவனல்லை பிரதேச செயலகம் ஆகியவற்றில் பணியாற்றியதாகவும், அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III இற்கு உள்ளீர்க்கப்பட்டு,2018.03.02 முதல் ரம்புக்கனை பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றதாகவும், அவ்வாறு பணியில் இருந்தபோது 2019.08.31 அன்று முறையற்ற வகையில் ஓய்வில் அனுப்பப்பட்டதாகவும், மீண்டும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விதந்துரையின் பேரில், 2019.12.24 திகதியிடப்பட்ட கடிதம் மூலம் விவசாய திணைக்களத்தில்* | 2021.01.13 முதல் 2021.02.17 வரையிலான சேவைக்காலத்திற்காக மனுதாரருக்குக் கிடைக்க வேண்டிய நிலுவைச் சம்பளம் மற்றும் இதுவரையில் வழங்கப்படாத ஓய்வூதியம் ஆகியவற்றை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒருங்கிணைந்த சேவைகளின் பணிப்பாளர் நாயகத்திற்குப் விதந்துரைக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஓய்வில் அனுப்பப்பட்டுள்ளார் எனவும், முறையற்ற வகையில் வெளியிடப்பட்டுள்ள மேற்படி ஓய்வில் அனுப்பும் கடிதத்தை இரத்து செய்து, ஒருங்கிணைந்த சேவைகளின் பணிப்பாளர் நாயகத்தினால் PMAS/56738 இலக்க மற்றும் 2019.12.24 ஆந் திகதிய கடிதம் வாயிலாக மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டார் எனவும், இவ்வாறு மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டு, விவசாய திணைக்களத்துடன் இணைந்த கன்னொருவை பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் பணியாற்றி வந்தபோது, விவசாய பிரதிப் பணிப்பாளரின் (தாபன) DOA/Est.3/8/MSO/M/31 இலக்க மற்றும் 2021.04.30 திகதிய கடிதத்தின் மூலம், திறமையின்மை என்ற அடிப்படையில் ஓய்வில் அனுப்பப்பட்டுள்ளபோதிலும், இதன்போது ஓய்வில் | *பணியில் அமர்த்தப்பட்ட போதிலும், 2021.04.30 முதல் அமுல்படுத்தப்படும் வகையில் திறமையின்மை அடிப்படையில் ஓய்வில் அனுப்பப்பட்டதாகவும், நடைமுறை ஒழுங்குவிதிக் கோவையின் 178 ஆம் பிரிவின்படி, ஒரு அதிகாரியைத் திறமையின்மை அடிப்படையில் ஓய்வுபெறச் செய்யும் அதிகாரம் ஒருங்கிணைந்த சேவைகளின் பணிப்பாளர் நாயகத்திடம் காணப்பட்டபோதிலும், குறித்த அதிகாரிக்கு ஆறு மாத கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் எனவும், தனக்கு அத்தகைய கால அவகாசம் வழங்கப்படவில்லை என்பதோடு, முறையான ஒழுக்காற்று கட்டளையோ அல்லது ஒழுக்காற்று விசாரணைகளோ மேற்கொள்ளப்படவில்லை எனவும் மனுதாரர் தனது மனுவில் சமர்ப்பித்துள்ளார்.*<br><br>*(ஆ) 60 வயதை பூர்த்தி செய்துள்ள தான், 2024.01.24 அன்று ஓய்வு பெற்றிருக்க வேண்டிய போதிலும், நிறுவன ரீதியான தாமதங்கள் காரணமாக தனது தனிப்பட்ட கோப்பு இற்றைப்படுத்தப்படுவது தாமதமடைந்தமையால் தான் பாதிக்கப்பட்டதாகவும்,* | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அனுப்புவதற்கான முறையான கடிதமேனும் வழங்கப்படவில்லை எனவும், இது குறித்து அரச சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டினாலும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை எனவும் குறிப்பிடும் மனுதாரர், ஓய்வூதியமும் இன்றி பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ள தன்னை, மீண்டும் சேவையில் அமர்த்தி முறையான அடிப்படையில் ஓய்வுபெறச் செய்யுமாறும், 2020.01.14 முதல் 2020.02.16 வரை தனக்கு கிடைக்க வேண்டிய நிலுவைச் சம்பளம் மற்றும் சம்பள ஏற்றங்களை வழங்குமாறும் கோரி இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். | *2021.01.14 முதல் 2021.02.16 வரையிலான காலப்பகுதிக்கு தனக்குக் கிடைக்க வேண்டிய நிலுவைச் சம்பளம் இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை எனவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.*<br><br>*(இ) 2005 ஆம் ஆண்டு நியமனம் பெற்ற மனுதாரர், 2019.06.28 வரை சேவையில் உறுதிப்படுத்தப்படாமைக்கு அவரது சேவை திருப்திகரமாக அமையாமை காரணமாகும் எனவும், அவரது பணிக் காலத்தில் சம்பள ஏற்றங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும், அவருக்கு எதிராக குற்றப்பத்திரங்கள் வழங்கப் பட்டுள்ள தாகவும், திறமையின்மை அடிப்படையில் ஓய்வில் அனுப்பும்போது, முறையான நடைமுறைகளைப் பின்பற்றி, 2020.05.19 திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம், சாதாரண திறமையின்மை அடிப்படையில் ஓய்வுபெறச் செய்யப்படாமலிருக்க ஏதேனும் காரணங்கள் இருப்பின் அவற்றை முன்வைக்குமாறு மனுதாரர் அறிவுறுத்தப்பட்டுள்ளார் என்பதுடன் மேலும், நிறுவனத் தலைவரின் விதந்துரையையும் கருத்தில் கொண்டு,* | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | *2021.03.17 அன்று திறமையின்மை அடிப்படையில் ஓய்வுவில் அனுப்பட்டுள்ளார் எனவும், அரச சேவை ஆணைக்குழு மற்றும் நிர்வாக மேன்முறையீட்டு நியாயசபை ஆகியனவும் குறித்த தீர்மானத்திற்கு இணங்கி, மனுதாரரின் மேன்முறையீடுகளை நிராகரித்துள்ளனஎனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஈ) மனுதாரரின் தனிப்பட்ட கோப்பானது , அவர் இதற்கு முன்னர் பணியாற்றிய நிறுவனங்கள் ஊடாக பூர்த்தி செய்யப்பட்டு, 2025.08.18 அன்று விவசாயத் திணைக்களத்திற்குக் கிடைத்துள்ளதெனவும், அதற்கமைய குறித்த கோப்பிற்கு முன்னுரிமை அளித்து, ஓய்வூதியக் கொடுப்பனவுகள் தொடர்பில் ஏதேனும் பிழைகள் இருப்பின் அவற்றைச் சரிசெய்து ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்ப முடியும் எனவும் மேலும், அவருக்குக் கிடைக்க வேண்டிய நிலுவைச் சம்பளங்களை வழங்குவதற்கான மேலதிக நடவடிக்கைகளைமேற் கொள்ள முடியுமெனவும், இதன் மூலம் தற்போது ஓய்வுபெற்றுள்ள மனுதாரருக்குத் தாமதமின்றி ஓய்வூதிய நன்மைகளைப் பெற்றுக்கொடுக்க* | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | *நடவடிக்கை எடுக்க முடியுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.* | |

| | | | | |
|---|---|---|---|---|
| **கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு** | | | | |
| 22 | திரு. ஜே.எச்.ஜீ. ஹேமசந்திர COM/PP/2025/99 கௌரவ அசோக குணசேன, பா.உ. இனால் சமர்ப்பிக்கப்பட்டது. 2025.09.23 ஆந் திகதி விசாரிக்கப்பட்டது. அமைச்சின் குறிப்பு: MIC/PAF/01/13 திகதி : 2025.05.26 | சிறு கைத்தொழில் திணைக்களத்தின் மட்பாண்டக் கைத்தொழில் காட்சிப்படுத்துநர் (அமய பதவி) சேவையில் 1989.10.01 ஆம் திகதி இணைந்து, 1994.05.02 ஆம் திகதி நிரந்தர நியமனம் பெற்று, 2006.03.15 ஆம் திகதியிலிருந்து மேற்பார்வையாளர் பதவிக்கு தரம் உயர்த்தப்பட்டு, 2019.12.30 ஆம் திகதி வரை பணியாற்றி ஓய்வுபெற்றுள்ளதாகவும் , அத்துடன், 1989.10.01 ஆம் திகதி முதல் 1994.05.02 ஆம் திகதி வரையிலான அமய சேவை காலத்தையும் ஓய்வூதியத்திற்காக கணக்கிட்டு, மாகாண பணிப்பாளரின் விதப்புரையுடன் மாகாண ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட போதிலும், ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் அவ்விதப்புரையை கருத்திற்கொள்ளாது, ஓய்வூதியக் கணிப்பீட்டின் போது | (அ) மனுதாரருக்கு நிரந்தர நியமனம் கிடைப்பதற்கு முன்னர் 1989.10.01 ஆம் திகதி தொடக்கம் 1994.04.18 ஆம் திகதி வரையிலான அவரது அமய சேவைக்காலத்தை உறுதிப்படுத்துவதற்காக அமய அடிப்படையில் வழங்கப்பட்ட நியமனக் கடிதங்கள் அவரிடம் உள்ளதென்பதையும், 1994.05.02 ஆம் திகதி தொடக்கம் அவருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும், 1994.04.18 ஆம் திகதி தொடக்கம் 1994.05.02 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கான (13 நாட்கள்) சேவைக்காலத்தை உறுதிப்படுத்துவதற்கான நியமனக் கடிதம் எதுவும் இல்லை என்பதையும், வடமேல் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி பணிப்பாளர் உள்ளடங்கிய குழுவொன்றின் மூலம் இந்த உத்தியோகத்தரின் சேவைக்காலத்துடன் தொடர்புடைய அனைத்து ஆவணங்களும் பரிசீலிக்கப்பட்டு சமகால உத்தியோகத்தர்களின் கருத்துக்கள் அறிக்கையிடப்பட்டு, மனுதாரருக்கு | மனுதாரரின் காணாமல் போன 13 நாட்கள் சேவைக் காலத்தை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் மற்றும் விதப்புரைகளையும் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்குமாறு மாகாணக் கைத்தொழில் பணிப்பாளருக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டதுடன், மனுதாரரின் முழுமையான அமயக் காலச் சேவையினை ஓய்வூதியக் கணிப்பீட்டில் கருத்திற் கொள்ளுமாறும், அதற்கமைய அவரது ஓய்வூதியத்தைத் திருத்தியமைத்து, அவருக்குச் சேர வேண்டிய ஓய்வூதிய நிலுவைகளை மனுதாரர் ஓய்வுபெற்ற திகதியிலிருந்து மனுதாரருக்குக் செலுத்துவதற்கு ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்குப் பரிந்துரைக்கப்பட்ட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அமய சேவைக் காலத்தில் 2/3 பகுதியை விடுத்து, 1/3 சேவை காலத்தை மாத்திரமே கருத்திற்கொண்டதன் காரணமாக ஓய்வூதியக் கணிப்பீட்டிற்காகப் பயன்படுத்தப்பட்ட சேவைக் காலம் குறைவடைந்துள்ளதாகவும், இதனால் ஓய்வூதியத்தினதும் ஓய்வூதியப் பணிக்கொடையினதும் பெறுமதி குறைவடைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டு, அமய சேவைக் காலத்தின் எஞ்சிய 2/3 பகுதி சேவைக் காலத்தையும் ஓய்வூதியக் கணிப்பீட்டிற்குள் உள்வாங்கி, தனக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தைத் தவிர்த்துத் தருமாறு கோரி மனுதாரர் இம்மனுவை சமர்ப்பித்துள்ளார். | தொடர்ச்சியான சேவைக்காலம் இருந்துள்ளதாக வடமேல் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு, விதப்புரைகளை உள்ளடக்கிய குழு அறிக்கை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது<br><br>(ஆ) வடமேல் மாகாண சபை பகிரங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு முகவரியிட்டு, வடமேல் மாகாண பிரதம செயலாளரினால் அனுப்பப்பட்ட வ/பிரசெ/3/6/1/3 மற்றும் 1998.07.20 திகதிய கடிதத்தில், 1994.05.01 ஆம் திகதியளவில் 180 நாட்கள் சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ளதாக சிறு கைத்தொழில் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களில் மனுதாரரின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதையும், அதற்கமைய அவரது முழுமையான அமய சேவைக்காலத்தையும் ஓய்வூதியத்திற்கு கணக்கிலெடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக வடமேல் மாகாண பிரதம செயலாளரினால் விதப்புரை செய்யப்பட்டுள்ளது என்பதையும், | து. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அவ்விதப்புரைகளை நடைமுறைப்படுத்துமாறு கௌரவ ஆளுநரும் உத்தரவிட்டுள்ளார் என்பதையும், அது குறித்து 2025.07.28 திகதிய கடிதத்தின் மூலம் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு வடமேல் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி பணிப்பாளரினால் மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளார்<br><br>(இ) ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 20(அ) 1 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அமயப் அடிப்படையில் ஆற்றிய சேவைக் காலத்தை ஓய்வூதியக் கணிப்பீட்டிற்குள் உள்ளடக்குவதற்கான நிபந்தனைகளாக, அமயக் காலத்திற்குரிய முறையான நியமனக் கடிதங்கள் இருத்தல் வேண்டும், நடத்தைப்பதிவேடு பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அமயச் சேவைக் காலத்தினுள் சம்பளம் வழங்கப்பட்டமையை உறுதிப்படுத்தும் பதிவுகள் இருத்தல் ஆகிய தகவல்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும் என்பதையும், மனுதாரர் அமய அடிப்படையில் சேவை ஆற்றிய 13 நாட்களுக்குரிய நியமனக் கடிதம் இல்லாமை மற்றும் நடத்தைப்பதிவேட்டில் குறைபாடுகள் காணப்பட்டமை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஆகியவற்றின் காரணமாக, இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 121 (5) (4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது<br><br>(ஈ) மனுதாரரின் 1990 ஆம் ஆண்டிற்குரிய சம்பளப் பதிவேடுகள் மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை மற்றும் எஞ்சிய காலப்பகுதிக்கான சம்பளப் பதிவேடுகள் இல்லாமை, மனுதாரருக்கு 1997.06.01 ஆந் திகதி நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு, பின்னர் அது 1994.05.02 ஆந் திகதிக்கு முற்திகதியிடப்பட்டமைக்கான அடிப்படை தெளிவின்மை மற்றும் அக்காலப்பகுதியையும் அமயப் அடிப்படையிலான சேவையாகக் கருத வேண்டியேற்பட்டமை, அமய ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்காக வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 16/94 இன் பிரகாரம் நிரந்தரச் சேவை முற்திகதியிடப்பட்டிருப்பின், அதிலுள்ள 180 நாட்கள் தொடர்ச்சியான சேவைக் காலம் காணப்படல் வேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தி செய்யப்பட்டமைக்கான ஆவணங்கள் இல்லாமையும், அனைத்துப் பிரச்சினைகளையும் பரிசீலித்ததன் பின்னர், | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் அமய அடிப்படையில் ஆற்றிய சேவைக் காலத்தில் 1/3 பகுதியை மாத்திரமே ஓய்வூதியக் கணிப்பீட்டிற்குள் உள்ளடக்குமாறு அனுமதி வழங்கியுள்ளார்<br><br>(உ) மனுதாரர் ஓய்வுபெறும் வரை அவரது தனிப்பட்ட கோப்பிற்குப் பொறுப்பாக வடமேல் மாகாண நியமன அதிகாரி செயற்பட்டதுடன், அதனைச் சரியான முறையில் நிரப்பி ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்காமை காரணமாக நிறுவன ரீதியாக ஏற்பட்ட தவறினால் மனுதாரருக்கு நிதி ரீதியான நட்டமும் அநீதியும் ஏற்பட்டுள்ளது என்பதையும், மனுதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டை விசாரணை செய்ததன் பின்னர், அரச உத்தியோகத்தர்களின் அலட்சியம் காரணமாக உரிய காலப்பகுதிக்குரிய நியமனக் கடிதத்தை வழங்காமையினால் முறைப்பாட்டாளரின் விடுபட்ட 13 நாட்கள் சேவைக் காலம் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்காக வழங்கப்பட்டுள்ள விதப்புரைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரினால் (ஒம்புட்ஸ்மன்)<br><br>அறிக்கையிடப்பட்டுள்ளது<br><br>(ஊ) மனுதாரர் தனது முழுமையான அமயக் காலச் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சேவையின் போது தொடர்ச்சியாக சேவையாற்றியுள்ளார் என விதப்புரைத்து, உரிய மாகாண சபை நிறுவனத்தினால் ஏற்கனவே ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது | |
| 23 | திரு. ஆர். விஜயானந்த<br>COM/PP/2025/211<br>கௌரவ உபுல் கித்சிறி, பா.உ. இனால் சமர்ப்பிக்கப்பட்டது. 2025.09.23 ஆந் திகதி விசாரிக்கப்பட்டது.<br>அமைச்சின் குறிப்பு: : MIC/PAF/01/13<br>திகதி : 2025.05.08 | உடவலவ கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தில் 1996 ஆம் ஆண்டிலிருந்து நிரந்தர ஊழியராகப் பணிபுரிந்தாரெனவும், 2014 ஆம் ஆண்டில் அந்நிறுவனத்தில் சாரதிப் பதவியொன்று வெற்றிடமாகியதால் அதற்காகத் தெரிவுசெய்யப்பட்டு தற்காலிகச் சாரதியாக அப்பதவியில் அமர்த்தப்பட்டாரெனவும், நிறுவனத்திற்கு நிரந்தரச் சாரதிகள் சேர்த்துக்கொள்ளப்படும் போது மனுதாரருக்கு முன்னுரிமை அளிக்கப்படுமென நிர்வாகத்தினால் அறிவிக்கப்பட்ட போதிலும் சாரதிகள் சேர்த்துக்கொள்ளப்பட்ட எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வாய்ப்பளிக்கப்படவில்லை எனவும், 2024.05.08 ஆம் திகதியிலிருந்து தற்காலிகச் சாரதிப் பதவியிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளாரெனவும் குறிப்பிடும் மனுதாரர், நிறுவனத்தில் தற்போது | (அ) 1991 ஆம் ஆண்டில் கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தில் அமய ஊழியராகப் பணிபுரிந்து, 1996.04.30 ஆம் திகதியிலிருந்து பண்ணைத் தொழிலாளராக நிரந்தரச் சேவையில் இணைந்துள்ளார் எனவும், சாரதிப் பதவிக்கான அனைத்துத் தகுதிகளையும் பூர்த்தி செய்திருந்த தான், 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் தோற்றி 02 ஆண்டுகள் தற்காலிகச் சாரதியாகப் பணிபுரிந்து, மீண்டும் பொதுத் தொழிலாளர் பதவியில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டார் எனவும், 2022 ஆம் ஆண்டில் மீண்டும் ஒரு முறை சாரதிப் பதவிக் கடமைகளை ஆற்றுவதற்காக ஈடுபடுத்தப்பட்டார் எனவும், அச்சந்தர்ப்பத்தில் சாரதிப் பதவிக்கான உள்ளகத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருந்ததுடன், | சாரதிப் பதவிக்குத் தேவையான அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளமை, அனுபவம் மற்றும் ஒரு சாரதிப் பதவி வெற்றிடமாகக் காணப்படுகின்றமை ஆகிய விடயங்களைக் கருத்திற்கொண்டு, சாரதிப் பதவியில் கடந்த காலங்களில் சில ஆண்டுகளாக பணிப் பொறுப்பு வகித்த மனுதாரருக்குச் சாரதிப் பதவியை வழங்குமாறு கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவருக்குப் விதப்புரை வழங்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வெற்றிடமாகக் காணப்படும் சாரதிப் பதவியைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி இம்மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட சாரதிப் பரீட்சை மற்றும் மருத்துவப் பரிசோதனையில் கலந்துகொண்டு தேவையான தகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டதாகவும்,<br>2023.05.09 ஆம் திகதி மீண்டும் ஒரு முறை சாரதிப் பதவியிலிருந்து நீக்கப்பட்டார் எனவும், சாரதி வெற்றிடங்களுக்காகப் பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது விண்ணப்பிக்குமாறு தனக்கு அறிவிக்கப்படவில்லை எனவும் மனுதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(ஆ) 2021 ஆம் ஆண்டளவில் கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தில் 04 சாரதிப் பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதாகவும், அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு அமைச்சின் ஊடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அனுமதி கோரப்பட்ட போதிலும், 2020.02.21 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் படி 2022.04.26 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத் திட்டச் சுற்றறிக்கை இன் படி அரசாங்க செலவின முகாமைத்துவத்தின் கீழ் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அனைத்து ஆட்சேர்ப்புகளும் இடைநிறுத்தப்பட்டிருந்தமையால், அதற்கான அனுமதி கிடைக்கப்பெறவில்லை.<br><br>(இ) அரசாங்க சேவையின் ஆட்சேர்ப்பு செயல் முறையை மீளாய்வு செய்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் குழுவினால், ஆரம்பச் சேவை தொகுதியின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட் தொகுதி வெற்றிடங்களுக்கு அரசாங்க தொழில் வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்ட பயிலுநர்களான பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களை இணைக்க வேண்டுமென 2023.01.27 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய, 2024.01.16 ஆம் திகதியில் இருந்தவாறான 04 சாரதி பதவி வெற்றிடங்களுள் 03 வெற்றிடங்களை பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களிடமிருந்து நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.<br><br>(ஈ) மனிதவள முகாமைத்துவம் பற்றிய கணக்காய்வு விசாரணை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடத்தப்பட்டு, 2023.03.02 ஆம் திகதி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதுடன், அவ்விதப்புரைகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டு, 2024.05.07 ஆம் திகதி நடைபெற்ற நிர்வாகச் சபையின் 409 வது கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், 2024.05.09 ஆம் திகதியிலிருந்து மனுதாரர் சாரதிப் பதவிக் கடமைகளிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளது<br><br>(உ) நிறுவனத்தின் சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் மனுதாரரிடமிருந்து கணிசமான காலப்பகுதிக்குச் சாரதிச் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மனிதவள முகாமைத்துவம் பற்றி கணக்காய்வு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, பொறுப்பு வகிக்கும் பதவியிலிருந்து அவரை நீக்குவதற்கு நிர்வாகச் சபை நடவடிக்கை எடுத்துள்ளதுடன், முறையான நடைமுறைக்கு புறம்பாக நிறுவனத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காகப் பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டபோது சாரதிப் பதவிக்காகப் பூர்த்தி செய்யப்பட வேண்டிய அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்திருக்கவில்லை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | என்பதுமான விடயங்கள்<br><br>(ஊ) பணிப்பாளர் சபையினால் சாரதி வெற்றிடங்களை நிரப்பும் போது, 2020.10.26 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 (ix) இன் பிரகாரம் ஏற்பாடுகள் காணப்பட்ட போதிலும், சாரதிப் பதவியில் பொறுப்பு வகித்த அப்பதவிக்கான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருந்த மனுதாரர் பற்றிய தகவல்களை முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு அறிவிக்கவில்லை என்பதையும், அதற்கமைய நிர்வாகச் சபை சாரதிப் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவது சம்பந்தமாக தீர்மானங்களை எடுக்கும் போது, மனுதாரர் ஆற்றிய சேவையினைத் திட்டமிட்டுப் புறக்கணித்துள்ளது | |
| **இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு** | | | | |
| 24 | திரு. வீ.ஜீ.தயாரத்ன<br><br>COM/PP/2025/231<br><br>கௌரவ தனுர திசாநாயக்க, பா.உ. இனால் சமர்ப்பிக்கப்பட்டது.<br>2025.09.23 ஆந் | நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின்படி கிடைத்திருக்க வேண்டிய கருத்திட்ட உத்தியோகத்தர் மற்றும் மாவட்ட உத்தியோகத்தர் பதவி கிடைக்காமையினால் உதவி விளையாட்டுப் பணிப்பாளர் பதவி கிடைக்கவில்லையென குறிப்படும் மனுதாரர், | (அ) மனுதாரர் 1986 ஆம் ஆண்டில் விளையாட்டு உத்தியோகத்தராக நியமனம் பெற்றதுடன், 1996 ஆம் ஆண்டில் தடகளப் பயிற்சியாளர் பதவியையும் பெற்றுள்ளதுடன், 2002 ஆம் ஆண்டில் தேசிய விளையாட்டு விழாவின் போட்டிச் செயலாளராகப் பணியாற்றியபோது இடம்பெற்ற முறைகேடு | 2012.09.04 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில், மனுதாரருக்கு கருத்திட்ட உத்தியோகத்தர் மற்றும் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் பதவி கிடைக்க வேண்டும் என்பது புலனாகுவதனால் |

| | | | | |
|---|---|---|---|---|
| | திகதி விசாரிக்கப்பட்டது. அமைச்சின் குறிப்பு: : MOYS/ADM/06/01/07<br><br>திகதி : 2022.08.23 | 2023.08.10 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற பொது மனுக்கள் பற்றிய குழுவினால் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு ஆகியவற்றிற்கு விதப்புரைக்கப்பட்டவாறு, 2018.05.02 ஆம் திகதி தொடக்கம் உதவி விளையாட்டுப் பணிப்பாளர் பதவியில் அமர்த்தி, அப்பதவிக்குரிய சம்பளம் மற்றும் நிலுவைச் சம்பளத்தை வழங்குவதற்கும், அதன் அடிப்படையில் தனது ஓய்வூதியத்தை கணக்கிடுவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரி இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | தொடர்பாக, முதலாம் குற்றப்பத்திரிகை 2006.04.25 ஆம் திகதி விடுக்கப்பட்டது. ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட்டு, 2007.11.13 ஆம் திகதி ஒழுக்காற்று கட்டளை பிறப்பிக்கப்பட்டு இவரின் 2 சம்பள உயர்வுகள் நிறுத்திவைக்கப்பட்டதுடன்,<br><br>குறித்த ஒழுக்காற்று உத்தரவுக்கு எதிராக 2008 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட மேன்முறையீட்டிற்கு அமைவாக, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் 2012.03.08 ஆம் திகதிய கடிதம் மூலம், தனக்கு வழங்கப்பட்ட குற்றப்பத்திரிகையும் ஒழுக்காற்று கட்டளையும் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட ஒழுக்காற்று அதிகாரியினால் வழங்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளமையால், எனவே, தனக்கு வழங்கப்பட்ட குற்றப்பத்திரிகையையும் ஒழுக்காற்று கட்டளையையும் இரத்து செய்வதற்கும், ஆரம்ப கட்ட விசாரணை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு புதிய ஒழுக்காற்று நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கும் உத்தரவிடப்பட்டுள்ளதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ள விடயங்கள்<br><br>(ஆ) அவ்வாறு இருந்தபோதிலும், குற்றப்பத்திரிகை நான்கு (04) தடவைகள் மாற்றி | மனுதாரரின் நியமனத்தை அத்திகதிக்கு முற்திகதியிட்டு, அதற்கமைய கிடைக்க வேண்டிய சம்பள உயர்வுகள், நிலுவைச் சம்பளங்கள் மற்றும் உதவி விளையாட்டுப் பணிப்பாளர் பதவிக்கான பதவியுயர்வை வழங்கி, உரிய சம்பள மட்டத்தில் அவரை அமர்த்துமாறும், அதன் அடிப்படையில் ஓய்வூதியத்தை திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு விதப்புரைக்கப்பட்டது.<br><br>மேலும், மேற்படி பதவிகளில் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதி எண்ணிக்கையில் பதவி வெற்றிடங்கள் இல்லாதபட்சத்தில், மிகை ஊழியர் அடிப்படையில் நியமிப்பதற்கு ஏதுவாக பதவிகளை உருவாக்குவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எழுதப்பப்பட்டு, 2016.04.06 ஆம் திகதி விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கையொப்பத்துடன் மீண்டும் ஒரு குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டுள்ளதாகவும் இதற்கமைவாக, முதலாம் குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டு 10 ஆண்டுகள் வரையில் ஒழுக்காற்று விசாரணையை முடிவுக்குக் கொண்டுவரத் தவறியுள்ளதாக மனுதாரர் சமர்ப்பித்துள்ள விடயங்கள்<br><br>(இ) 2012.09.04 ஆம் திகதி கருத்திட்ட உத்தியோகத்தர் மற்றும் மாவட்ட உத்தியோகத்தர் பதவிக்காக நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வுகளில் தோற்றி, அப்பதவிக்கான தகைமைகளைப் பெற்றிருந்த போதிலும், ஒழுக்காற்று விசாரணை முடிவடையாத காரணத்தினால் அக்குறிப்பிட்ட பதவிகள் கிடைக்கவில்லையெனவும், அதன் பின்னர், 2018.05.02 ஆம் திகதி உதவி விளையாட்டுப் பணிப்பாளர் பதவிக்காக நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் தோற்றி, அப்பதவிக்கான தகைமைகளைப் பெற்றிருந்த போதிலும், ஒழுக்காற்று விசாரணை முடிவடையாத காரணத்தினால் தனக்கு அந்தப் பதவியும் கிடைக்கவில்லையென | சமர்ப்பிக்குமாறும் பரிந்துரைக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தெரிவித்துள்ள மனுதாரர் சமர்ப்பித்துள்ள விடயங்கள்<br><br>(ஈ) நிர்வாகக் குறைபாடுகள் காரணமாக மனுதாரருக்கு எதிராக நடைபெற்ற ஒழுக்காற்று விசாரணைக்காக 14 ஆண்டுகள் போன்ற ஒரு நியாயமற்ற நீண்ட காலம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளமையால், இந்த உத்தியோகத்தருக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியைக் கருத்தில் கொண்டும், 2012.09.04 ஆம் திகதி கருத்திட்ட உத்தியோகத்தர் பதவியில் நிலவிய 02 பதவி வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதைக் கவனித்திற் கொண்டும், மனுதாரருக்கு மாத்திரம் தனிப்பட்ட ரீதியில் அமையக்கூடியதாக மிகை ஊழியர் அடிப்படையில் 2012.09.04 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பிற்திகதியிட்டு கருத்திட்ட உத்தியோகத்தர் பதவியில் நியமிப்பதற்கான அனுமதியைக் கோரி (2023.08.10 அன்று நடைபெற்ற பொது மனுக்கள் பற்றிய குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகளை அடிப்படையாகக் கொண்டு) விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் 2023.11.16 திகதிய கடிதம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது<br><br>(உ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் 2023.12.19 திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளவாறு, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் விதப்புரைக்கமைய 2015.07.06 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் தலைமையக விளையாட்டு உத்தியோகத்தர் பதவியில் அமர்த்தப்பட்டுள்ளதாகவும், இதனால் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் உத்தியோகத்தருக்கு நியாயத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்படுவதால், இது தொடர்பாக அடுத்தகட்ட நடவடிக்கைகள் எதுவும் தேவையில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது<br><br>(ஊ) மனுதாரர் 2012 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கருத்திட்ட உத்தியோகத்தர் பதவிக்காக பதவியுயர்வுக்குரிய நேர்முகப் பரீட்டைக்கு தோற்றியுள்ளாரென்பதும், இந்த பதவியுர்வுக்குரிய காலப்பகுதிக்குள் குறித்த அதிகாரியாக இருந்தவர் விளையாட்டு அபிவிருத்தித் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமே இருந்துள்ளார்<br><br>(எ) மனுதாரருக்கு எதிராக முதலாம் குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டு, ஒழுக்காற்று விசாரணை நிறைவு செய்யப்படுவதற்கு 10 ஆண்டுகள் போன்ற நீண்ட காலம் எடுத்துக்கொண்டமை தொடர்பில், விளையாட்டுத்துறை அமைச்சினால் ஏற்படுத்தப்பட்ட தாமதங்கள் குறித்து குழு தனது அதிருப்தியை வெளியிட்டதுடன், மனுதாரருக்கு கிடைக்க வேண்டிய பதவியுயர்வுகள் கிடைக்காமையினால் மனுதாரர் அநீதிக்குள்ளாகியுள்ளார்<br><br>(ஏ) 2012 ஆம் ஆண்டில் கருத்திட்ட உத்தியோகத்தர் பதவியில் நிலவிய 02 வெற்றிடங்களை நிரப்புவதற்காக நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு, அப்பதவிகளுக்கு மனுதாரர் தகைமைகளை பெற்றிருந்தமையால், ஒழுக்காற்று விசாரணை நிறைவடையும் வரை ஒரு வெற்றிடத்தை நிரப்பாமல் வைப்பதற்கு விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நடவடிக்கை எடுக்கவில்லை<br><br>(ஐ) 2002 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட 28 ஆவது தேசிய விளையாட்டு | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | விழாவிற்கான பதக்கங்களைக் கொள்வனவு செய்தல், சான்றிதழ்களை அச்சிடுதல் மற்றும் விநியோகித்தல் ஆகிய செயல்முறைகளின் பொறுப்பானது, போட்டிச் செயலாளராகக் கடமையாற்றிய மற்றும் அப்போதைய தடகளப் பயிற்சியாளர் பதவியை வகித்த மனுதாரரால் தனியாக மேற்கொள்ளப்பட்ட ஒரு பொறுப்பல்ல எனவும், மனுதாரரை விட உயர் பதவிகளிலிருந்த உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு பணியாகும் எனவும், எனினும் இடம்பெற்ற ஒழுங்கீனத்திற்காக மனுதாரர் மாத்திரமே குற்றவாளியாக்கப்பட்டுள்ளார் என்றும், அதற்கமைய இந்தச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏனைய சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளனர்<br><br>(ஒ) ஒன்பதாவது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த மனு, 2023.08.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கூடிய பொது மனுக்கள் பற்றிய குழுவினால் விசாரணை செய்யப்பட்டதன் பின்னர், அக்குழுவினால் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வழங்கப்பட்ட விதப்புரைகளை விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நடைமுறைப்படுத்தவில்லை | |
| **பாதுகாப்பு அமைச்சு** | | | | |
| 25 | திரு. டீ.ஜீ.தர்மசிறி<br>COM/PP/2025/98<br>கௌரவ அசோக குணசேன, பா.உ. இனால் சமர்ப்பிக்கப்பட்டது. 2025.09.25 ஆந் திகதி விசாரிக்கப்பட்டது. அமைச்சின் குறிப்பு: : MOD/PAC/05/PPC/2025/0<br>திகதி : 2025.05.26 | 1998.12.28 அன்று ஒரு புதிய படைவீரராக இலங்கை இராணுவத்தில் சேவையில் இணைந்துகொண்டதாகவும், 2000.09.28 ஆம் திகதி போர் நடவடிக்கைப் பணியில் ஈடுபட்டிருந்தபோது பயங்கரவாதத் தாக்குதலுக்குள்ளாகி அங்கவீன நிலைக்குள்ளாகியதாகவும், பின்னர் விடுமுறை பெறாமல் சேவைக்குச் சமூகமளிக்கவில்லை என்றும், 2022.10.24 ஆம் திகதி மருத்துவச் சபை பரிசோதனைகளின் பின்னர் மனுதாரரின் அங்கவீன நிலையின் வீதம் 30% எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்காக இராணுவ நடத்தை கட்டளை 12/86 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற போதிலும் இதுவரை அதற்குரிய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை | (அ) போர் நடவடிக்கைப் பகுதிகளில் பயங்கரவாதச் செயல்கள் காரணமாக அங்கவீனமாகி விடுமுறையின்றி சேவைக்குச் சமூகமளிக்காதிருந்த மற்றும் ஏனைய காரணங்களுக்காக இராணுவத்திலிருந்து நீக்கப்பட்டுள்ள இராணுவ உறுப்பினர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக இராணுவத் தளபதியினால் 2019.01.16 ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிவுறுத்தல் கடிதத்திற்கு அமைய, மனுதாரர் போர் நடவடிக்கை காரணங்களால் காயமடைந்த ஒருவராவார் என்பதனால் மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் ஓய்வுபெறுவதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக 2023.06.10 ஆம் திகதி மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டு, இராணுவ நடத்தை கட்டளை 12/86 இன் பிரகாரம் மருத்துவச் சபையொன்றின் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டுஅங்கவீன வீதம் 20% என | அமைச்சரவை அங்கீகாரத்திற்கு அமைவாக எதிர்காலத்தில் மனுதாரர் கோரியுள்ள நிவாரணங்களை வழங்குவதற்கு விதப்புரை செய்யப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் குறிப்பிடும் மனுதாரர், அதற்குரிய சம்பளம், சம்பள நிலுவைகள், அங்கவீனர் கொடுப்பனவுகள் மற்றும் ஓய்வூதியம் ஆகியவற்றை வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு கோரி இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார் | குறிப்பிடப்பட்டு, மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் ஓய்வுபெறுவது தொடர்பான ஆவணங்கள் இராணுவத்தினால் பாதுகாப்பு அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், மனுதாரருக்குக் காயம் ஏற்பட்டு நீண்ட காலத்திற்குப் பின்னரே மருத்துவச் சபையொன்றின் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டமை மற்றும் நீண்ட காலமாக விடுமுறையின்றி சேவைக்குச் சமூகமளிக்காதிருந்தமை ஆகியவற்றின் காரணமாக, நடைமுறையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் ஓய்வுபெறச் செய்வதற்கு சாத்தியமில்லை என MOD/DEF/2/COM/2/SLA(xi) (Tem) (21) என்ற இலக்கத்தைக் கொண்ட மற்றும் 2024.09.06 ஆம் திகதிய பாதுகாப்பு அமைச்சின் கடிதம் மூலம் இராணுவத் தளபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது<br><br>(ஆ) மனுதாரர் மருத்துவச் சபையொன்றில் முன்னிலைப்படுவதற்கு முன்னர் சேவையிலிருந்து விலகியுள்ளார் எனவும், பின்னர் மருத்துவச் சபையொன்றில் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | முன்னிலைப்படுத்தப்பட்டு அங்கவீன வீதம் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும், மனுதாரரைப் போன்ற அதே நிலைமைகளின் கீழ் ஓய்வூதிய உரிமைகளைப் பெற வேண்டியிருந்த உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய தரப்பினருக்கு ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அமைச்சு மட்டத்தில் தீர்மானமொன்று எட்டப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக கணக்காய்வு விசாரணை ஒன்று முன்வைக்கப்பட்டதன் காரணமாக அக்கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளன<br><br>(இ) காயம் ஏற்பட்டு நீண்ட காலத்திற்குப் பின்னரே மருத்துவச் சபையொன்றில் முன்னிலைப்படுத்தப்படும் இராணுவ வீரர்கள் மற்றும் விடுமுறையின்றி சேவைக்குச் சமூகமளிக்காதிருந்த அங்கவீன இராணுவ வீரர்களை, இராணுவ நடத்தை கட்டளை 12/86 இன் பிரகாரம் மீண்டும் மருத்துவச் சபையொன்றில் முன்னிலைப்படுத்தி நிவாரணங்களை வழங்குவது தொடர்பான கொள்கை ரீதியான தீர்மானமொன்றை மேற்கொள்வதற்கான பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும், அது தொடர்பாக எதிர்காலத்தில் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் மனுதாரரின் கோரிக்கையை பரிசீலிக்க | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | முடியும்<br>(ஈ) மனுதாரரைப் போன்ற அதே நிலைமைகளின் கீழ் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள இராணுவ உறுப்பினர்கள் குழுவொன்றும் பாதுகாப்பு அமைச்சினால் தயாரிக்கப்பட்டுள்ள அமைச்சரவைப் பத்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், மனுதாரரின் பெயரும் அந்த அமைச்சரவைப் பத்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ளது என்றும், அங்கீகாரம் கிடைத்த பின்னர் மனுதாரரின் ஓய்வூதிய உரிமையை வழங்க முடியும் | |
| 26 | திரு. ஜே.ஆர்.எஸ்.ரூ பசிங்க<br>COM/PP/2025/113<br>கௌரவ ருவன் மாபலகம, பா.உ. இனால் சமர்ப்பிக்கப்பட்டது.<br>2025.09.25 ஆந் திகதி விசாரிக்கப்பட்டது.<br>அமைச்சின் குறிப்பு : MOD/PAC/05/PPC/2025/03<br>திகதி : | இலங்கை இராணுவ தொண்டர்ப் படையில் மேஜராகக் கடமையாற்றியதாகவும், உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டொன்றை அடிப்படையாகக் கொண்டு சேவையிலிருந்து நீக்கப்பட்டதாகவும், மீண்டும் நியாயமான விசாரணையை நடத்தி அதன் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு கடந்த பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மனுவை விசாரணை செய்து 2016.07.21 ஆம் திகதி பொது மனுக்கள் | (அ) 1991 ஆம் ஆண்டில் இராணுவத்தில் இணைந்துகொண்டதுடன் சுமார் 25 வருட சேவைக்காலத்தைக் கொண்ட ஒரு சிரேஷ்ட உத்தியோகத்தர் எனவும், வன்னி மனிதாபிமான நடவடிக்கையின் இறுதிப் போர்க்களமாக இருந்த ஆனையிறவு, சுண்டிக்குளம், சலை மற்றும் புதுமாத்தளன் ஆகியவற்றில் சுமார் 36 உத்தியோகத்தர்களையும் சுமார் 700 ஏனைய தரப்பினரையும் கொண்ட ஒரு படையணியின் கட்டளையிடும் அதிகாரியாகக் கடமையாற்றியதாகவும், 05 வருடங்கள் தாம் அந்தப் படையணியின் தலைவராகக் | மனுதாரர் தாம் இக்குற்றச்சாட்டுகள் தொடர்பாகக் குற்றமற்றவர் என்றும், முதற்கட்ட விசாரணை நீதிமன்றத்தில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது எனவும், முறையானதொரு விசாரணை மூலம் தாம் குற்றவாளியாக்கப்படவில்லை எனவும் தெரிவிப்பதன் காரணமாக, இது தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2025.05.04 | பற்றிய குழுவினால் இராணுவத் தளபதிக்கு வழங்கப்பட்ட விதப்புரைகள் நடைமுறைப்படுத்தப்பட வில்லை எனவும் குறிப்பிடும் மனுதாரர், நியாயமான விசாரணையை நடத்தி, சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டமையை இரத்துச் செய்து, இழக்கப்பட்ட சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருமாறு கோரி இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார் | கடமையாற்றியதாகவும், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே இராணுவத் தலைமையக நிர்மாணப் பணிகளில் தாம் தனது படையணியுடன் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாகவு ம், அந்தப் பணி முன்னெடுக்கப்பட்டுக்கொ ண்டிருந்த வேளையில் அங்கு இடம்பெற்ற முறைகேடான செயல்கள் தொடர்பாகத் தாம் கருத்து வெளியிட்டமையின் காரணமாக, சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் தம்மீது பழிவாங்குவதற்காக இந்தக் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளதாக மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள்<br><br>(ஆ) 2014.04.04 ஆம் திகதி மனுதாரரின் வாகனத்தில் இராணுவச் வீரர்களின் நுகர்வுக்காக வழங்கப்பட்டிருந்த உலர் உணவுப் பொருட்கள் இருந்தமை தொடர்பாக முதற்கட்ட விசாரணை நீதிமன்றமொன்றை நடத்தி, குற்றத்தை ஒப்புக்கொண்டமையின் காரணமாகவும், அதற்கு மேலதிகமாக மனுதாரரின் கோப்பில் சேர்க்கப்பட்டிருந்த ஒழுங்கீனமான ஒழுக்காற்று அறிக்கைகளின் காரணமாகவும், 1982 ஆம் ஆண்டின் தொண்டர் படை மற்றும் தொண்டர் துணைச்சேவை ஒழுங்குவிதிகளுக்கு அமைய சம்பளமின்றி 2015.07.01 ஆம் திகதி முனைப்பு சேவையிலிருந்து | நியமிக்கப்படும் ஒரு சுயாதீன விசாரணைச் சபையின் முன்னிலையில், மனுதாரருக்கு எதிராக நிலவிய முதற்கட்ட விசாரணை நீதிமன்றத் தீர்ப்பை எட்டுவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்கள் குறித்து மீண்டும் ஒரு மீளாய்வு செய்யப்பட வேண்டும் எனவும், அந்தச் சுயாதீன விசாரணைச் சபையின் முன்னிலையில் நடத்தப்பட்ட ஒழுக்காற்று விசாரணை மற்றும் குற்றப்பத்திரிகை தொடர்பாக முழுமையானதொரு விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்ட து.<br><br>மேற்குறிப்பிட்ட விதப்புரையின்படி நடவடிக்கை எடுத்து, அதன் போது எட்டப்படும் முடிவின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மேலும் விதப்புரைக்கப்பட்ட துடன், விசாரணை அறிக்கையின்படி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | விடுவிக்கப்பட்டுள்ளார்<br><br>(இ) மனுதாரர் தனது கோரிக்கைக்கு அமைவாக இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றதன் பின்னர் ஓய்வூதிய உரிமைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது<br><br>(ஈ) மனுதாரர் தம்மை மீண்டும் சேவையில் அமர்த்துமாறு கோரி 2016.07.07 ஆம் திகதி கௌரவ மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 210/2016 ஆம் இலக்கத்தைக் கொண்ட ரீட் மனுவைச் சமர்ப்பித்துள்ளார் எனவும், குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் 2019.11.15 ஆம் திகதி தொழில்நுட்பக் காரணங்களின் அடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது எனவும், அதன்போது மனுதாரர் தொடர்பாக இராணுவத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை சரியானது எனத் தீர்மானிக்கப்படவில்லை எனவும், எவ்வாறாயினும் அதன் பின்னர் மனுதாரரை 2020.04.30 ஆம் திகதி முதல் இராணுவத்திலிருந்து ஓய்வுபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது<br><br>(உ) அமைச்சு பொது மனுக்கள் பற்றிய குழுவிற்கு அறிக்கையிட்டுள்ளவாறு, தாம் குற்றத்தை ஒப்புக்கொண்டதாகக் | மனுதாரருக்கு நிவாரணம் வழங்குவது கட்டாயமென கருதப்படின், அதற்காக ஜனாதிபதியின் உத்தரவொன்றை அல்லது அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வது பொருத்தமானதென விதப்புரைக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் எந்நேரத்திலும் தமக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை எதுவும் வழங்கப்படவில்லை எனவும், முதற்கட்ட விசாரணை நீதிமன்ற அறிக்கை என்பது இராணுவத்தினால் தயாரிக்கப்பட்ட ஒரு ஆவணம் மட்டுமே எனவும் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள்<br><br>(ஊ) மனுதாரர் 2014.02.26 ஆம் திகதி இராணுவத் தலைமையகத்தில் 07 ஜெனரல்களைக் கொண்டு நிறுவப்பட்டிருந்த சபையின் முன்னிலையில் தமக்கு எதிரான ஒழுக்காற்றுக் குற்றச்சாட்டுகள் குறித்து விடயங்களைச் சமர்ப்பித்துள்ளதுடன், அதன்போது அக்குற்றச்சாட்டுகளிலிருந்து தாம் விடுவிக்கப்பட்டிருந்தார் எனவும், அதனைப் பரிசீலித்த பின்னர் தாம் தெரிவு செய்யப்பட்ட மேஜர்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தார் என்றும் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள்<br><br>(எ) மனுதாரர் தாம் குற்றவாளியாக்கப்பட்டுள்ள மையானது ரூ. 6,209.89 பெறுமதியான உலர் உணவுப் பொருட்களை மோசடி செய்தமைக்காக மட்டுமே என்றும், தாம் இராணுவத்தில் சுமார் 25 வருட சேவைக்காலத்தைக் கொண்ட ஒரு சிரேஷ்ட உத்தியோகத்தர் எனவும், தரைப்படை நடவடிக்கை படையணியொன்றின் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கட்டளையிடும் அதிகாரியாகத் தமது கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பல கோடி ரூபாய் பெறுமதியான நிதி மற்றும் கணக்குகளிலிருந்து எவ்விதப் பணத்தையும் எக்காலத்திலும் மோசடி செய்யவில்லை என்றும், மனுதாரரால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் குற்றம் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இறுதி குற்றப்பத்திரிகையில் மோசடி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதியானது ரூ. 620,989/- எனத் தோன்றும் வகையில் சதங்களைக் குறிப்பதற்கான புள்ளி எதுவும் இடப்படாமல் அறிக்கை செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது<br><br>(ஏ) மனுதாரருக்கு முதற்கட்ட விசாரணை நீதிமன்றத்தில் அநீதி இழைக்கப்பட்டுள்ளமை தெளிவாகத் தெரிவதால், மீண்டும் ஒரு முதற்கட்ட விசாரணை நீதிமன்றத்தை நடத்தி, ஜனாதிபதியிடம் விடயங்களைச் சமர்ப்பித்து, மனுதாரருக்கு நிவாரணம் வழங்குவதற்கான உத்தரவொன்றைப் பெற்றுக்கொள்ளுமாறு 8வது பாராளுமன்றத்தில் 2016.07.21 ஆம் திகதி நடைபெற்ற பொது மனுக்கள் பற்றிய குழுவில் இராணுவத் தளபதிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | (ஐ) மனுதாரருக்கு முதற்கட்ட விசாரணை நீதிமன்றம் நடத்தி முடிக்கப்பட்டுள்ளதால், மீண்டும் ஒரு முதற்கட்ட விசாரணை நீதிமன்றத்தை நடத்த முடியாது என்றும், குழுவின் கூட்டத்தின்போது தனது உத்தியோகத்தர்கள் அத்தகைய இணக்கப்பாட்டுக்கு வரவில்லை எனவும் இராணுவத் தளபதியின் 2016.09.19 ஆம் திகதிய கடிதத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது | |

| | | | | |
|---|---|---|---|---|
| 27 | திருமதி. ரி. அப்சரா ஜீவாங்கனி<br>COM/PP/2025/328<br>கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க பா.உ., அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.<br>2025.11.13 ஆம் திகதியன்று விசாரணை செய்யப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இல. : MOD/DEF/14/22/02 /PPC/03<br>திகதி : 2017.02.24 | 2006.05.10 ஆம் திகதி முதல் திருகோணமலை திஸ்ஸ கடற்படைத் தளத்தில் புலனாய்வுத் தகவல் சேகரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையின் பெண் கடற்படை வீராங்கனை, பயங்கரவாதிகளுக்கு உளவுத் தகவல்களை வழங்குதல் போன்ற குற்றமுறையான காரணத்தின் அடிப்படையில் எவ்வித விசாரணையும் இன்றி 19 வருடங்களுக்கு முன்னர் சேவை முடிவுறுத்தப்பட்ட போதிலும், கடமைக்கு முரணான எந்தவொரு செயலிலும் தாம் ஈடுபடவில்லை எனக் குறிப்பிட்டு, ஒரு பிள்ளையின் தாயான மனுதாரருக்கு நிலுவைச் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்தைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | (அ) மனுதாரர் 2003.12.04 ஆம் திகதியன்று தொண்டர் சேவை அடிப்படையில் கடற்படையில் இணைந்து, கடற்படை புலனாய்வுப் பிரிவில் இணைப்புச் செய்யப்பட்டு கடமையாற்றியுள்ளார் என்பதுடன், அவர் இலங்கை கடற்படை கப்பல் துறையில் கடமையாற்றிக் கொண்டிருந்த போது, எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாத இயக்கத்துக்கு கடற்படை உளவுத் தகவல்களை வழங்குகின்றார் என கடற்படை புலனாய்வுப் பிரிவுக்கு நம்பகமான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டதன் காரணமாக, அக்காலப்பகுதியில் நிலவிய பாதுகாப்பு சூழ்நிலையைக் கருத்திற்கொண்டும், தேசிய பாதுகாப்பிற்கு முன்னுரிமையளித்தும், 1958 தொண்டர் கடற்படை ஒழுங்குவிதிகளின் 23 ஆவது பந்தியின் பிரகாரம் "சேவை இனிமேலும் அவசியமில்லை" என்ற அடிப்படையில் 2007.07.24 ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலம் சட்டப்பூர்வமாக கடற்படை சேவையிலிருந்து | மனுதாரரின் முறைப்பாடு சம்பந்தமாக 2009.10.22 ஆம் திகதியன்று அறிவிக்கப்பட்டுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், அவரை மீண்டும் சேவையில் அமர்த்தி 15 வருட சேவைக்காலம் பூர்த்தியாகும் வகையில் நிலுவைச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும், மனுதாரரின் முந்தைய சேவைக்காலமான 03 வருடங்கள், 07 மாதங்கள் மற்றும் 20 நாட்கள் ஆகிய சேவைக்காலத்தையும் உள்ளடக்கி 15 வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்வதன் அடிப்படையில் ஓய்வூதிய உரித்தையும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் பரிந்துரைக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நீக்கப்பட்டுள்ளார் என்பதும், அதுவரை அவர் 03 வருடங்கள், 07 மாதங்கள் மற்றும் 20 நாட்கள் என்ற வகையில் சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருந்தார் என்பதும்<br><br>(ஆ) தமது பிரசவத்திற்காக 2006.09.18 ஆம் திகதியன்று மகப்பேற்று லீவு பெற்றதாகவும், 2007.06.23 ஆம் திகதியன்று தாம் மீண்டும் சேவைக்கு சமூகமளித்ததாகவும், 2007.07.23 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் சட்டத்திற்குப் புறம்பாக தாம் பதவி நீக்கம் செய்யப்பட்டதாகவும், மேற்படி கடிதத்தில் தமது சேவையை முடிவுறுத்துவது தொடர்பாக எவ்வித காரணமும் தெரிவிக்கப்படாமல் சட்டவிரோதமான முறையில் தாம் பதவி நீக்கம் செய்யப்பட்டதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார் என்பதும்<br><br>(இ) தாம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் HRC/TCO/C/2/51/07 என்ற இலக்கத்தின் கீழ் முறைப்பாடு ஒன்றை தாக்கல் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செய்திருந்ததாகவும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்படி முறைப்பாட்டை விசாரணை செய்த பின்னர் வழங்கியுள்ள தீர்ப்பில் "முறைப்பாட்டின் அனைத்து விபரங்களையும் மற்றும் பிரதிவாதிகளின் மேற்கூறப்பட்ட சமர்ப்பிப்புகளையும் கவனத்தில் கொண்டு, குறித்த முறைப்பாட்டாளரை இலங்கை கடற்படையின் புலனாய்வுப் பிரிவுக்கு வெளியே வேறொரு பிரிவிற்கு இணைப்புச் செய்து சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதிவாதிகளுக்கு அறிவிப்பது உகந்ததெனத் தீர்மானிப்பது பொருத்தமானது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும், இது சம்பந்தமாக தாம் கடற்படைத் தளபதிக்கு குறித்த உத்தரவின் பல பிரதிகளை அனுப்பியிருந்த போதிலும் அதற்கு எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என்பதும்<br><br>(ஈ) மனுதாரர் எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்திற்குப் உளவுத் தகவல்களை வழங்கியதை உறுதிப்படுத்துவதற்காக முறையான விசாரணை எதுவும் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடத்தப்படவில்லை என்பதும், மனுதாரரிடம் முறையற்ற கோரிக்கை (Improper proposal) சமர்ப்பித்தமை ஒன்றை முன்வைத்தமை சம்பந்தமாக அவர் முறைப்பாடு செய்திருந்த போதிலும் அது குறித்து இலங்கை கடற்படையினால் எவ்வித விசாரணையும் நடத்தப்படவில்லை என்பதும், ஒருவேளை யுத்தம் நிலவிய காலப்பகுதியில் மனுதாரரினால் பயங்கரவாதிகளுக்கு உளவுத் தகவல்கள் வழங்கப்பட்டிருந்தால் அது குறித்து சட்ட ரீதியாக முறையானவாறு நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகள் காணப்பட்டன என்பதும், பதவி நீக்கப்பட்டதன் காரணமாக மனுதாரருக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் கடற்படைக்கும் மோசமான பாதிப்பு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருந்தன என்பதும், மனுதாரரின் நடவடிக்கைகள் தவறானவை என்பதை நிரூபிப்பதற்கு சான்றுகள் இருத்தல் வேண்டும் என்பதும் குழுவினால் 2019.09.05 ஆம் திகதியன்று நடைபெற்ற விசாரணையின் போது அவதானிக்கப்பட்டுள்ளது என்பதும்<br><br>(உ) மனுதாரர் தற்போது தனியார் நிறுவனம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஒன்றின் பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றுவதாகவும், தமக்கு கடற்படையின் பதவியை மீண்டும் பொறுப்பேற்க முடியாது என்றும், தன்னை மீண்டும் சேவையில் அமர்த்தி, அதற்குரிய சேவைக்காலத்தின் பின்னர் நிலுவைச் சம்பளம் மற்றும் ஓய்வூதிய உரிமைகளைப் பெற்றுத் தருமாறு கோரியுள்ளார் என்பதும்<br><br>(ஊ) மனுதாரர் தவறான முறையில் செயற்பட்டிருந்தால் அவர் சேவையிலிருந்து நீக்கப்பட்ட சந்தர்ப்பத்திலேயே உளவுத் தகவல்கள் எதிரியின் கைகளுக்குச் சென்றிருக்க வேண்டும் என்பதும், அவ்வாறானதொரு சம்பவம் நடந்துள்ளது என்பதற்கோ அல்லது அவர் எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்திற்கு உளவுத் தகவல்களை வழங்கினார் என்பதற்கோ எவ்வித ஆதாரமும் இல்லை என்பதும்<br><br>(எ) மனுதாரருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு அவர் குற்றவாளியாக்கப்பட வேண்டுமாயின், அக்குற்றச்சாட்டுகள் முறையான விசாரணையொன்றின் மூலம் சந்தேகத்திற்கு | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இடமின்றி நிரூபிக்கப்பட வேண்டும் என்பதால், அவ்வாறானதொரு விசாரணை நடத்தப்படாத சூழ்நிலையில் மனுதாரரை குற்றமற்றவராகக் கருதி விடுவிக்க வேண்டும் என்பதும் | |
| 28 | திரு. ஏ.கே. போயகொட COM/PP/2025/225 கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி அவர்கள், பா.உ., அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. 2025.11.13 ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல. : MOD/PAC/05/PPC/2022/11<br><br>திகதி : 2022.05.19 | மனுதாரர் 1974 ஆம் ஆண்டில் இலங்கை கடற்படையில் கெடட் அலுவலராக இணைந்து, நிரந்தர கமாண்டர் பதவி வரை பதவி உயர்வு பெற்று கடமையாற்றியதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும், ‘சாகரவர்தன’ கப்பலின் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றிக் கொண்டிருந்த போது 1994 ஆம் ஆண்டில் பயங்கரவாதிகளினால் கைது செய்யப்பட்டு 2002 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்டதாகவும் , விடுவிக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் கடற்படைச் சேவையில் இணைந்ததாகவும் தெரிவித்துள்ளார். அவர் சேவையில் இருந்ததாகக் கருதி நிலுவைச் சம்பளங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், அவருக்குக் கிடைக்க வேண்டிய பதவியுயர்வுகள் வழங்கப்படவில்லை | (அ) பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு சேவைக்குத் திரும்பிய போதிலும், சுமார் 1 ½ வருட காலத்திற்கு தனக்கு எந்தவொரு பதவியுயர்வும் வழங்கப்படவில்லை என்றும், தன்னைவிட சேவைமுதுமை குறைந்த அதிகாரிகள் கொமடோர் (Commodore) பதவிக்கு பதவி உயர்த்தப்பட்ட போதிலும், தன்னைப்பற்றி எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை என்றும், 2004 ஆம் ஆண்டில் தாம் ஓய்வுபெறுவதாயின் பதவியுயர்வுகள் வழங்கப்படும் என முன்னாள் கடற்படைத் தளபதி தெரிவித்ததாகவும், அதற்குத் தனக்கு விருப்பமில்லாத போதிலும் சம்மதம் தெரிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும், தனது சேவைக்காலத்தில் | மனுதாரர் கோரிய ரியர் அட்மிரல் பதவி உயர்வை வழங்குவதற்குப் பரிந்துரைக்கப்படவில்லை என்பதுடன், மனுதாரருக்கு நிரந்தர கமாண்டர் பதவிக்குரிய தீர்வையற்ற வாகன இறக்குமதி உரிமத்தைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை உண்டு எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன், அத்தகைய உரிமங்களின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிப்பதா இல்லையா என்பது அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியான முடிவாக இருப்பதால், அது குறித்துப் பொருட்படுத்தாமல் மனுதாரரின் பதவிக்குரிய வாகன உரிமத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | என்றும், அவர் கைது செய்யப்படாமல் இருந்திருந்தால் ரியர் அட்மிரல் பதவிக்கு பதவி உயர்வு பெற்றிருக்க முடியும் என்றும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.<br>எனவே, அந்த பதவியுயர்வுகளுக்குரிய தீர்வையற்ற வாகன இறக்குமதி உரிமத்தைவழங்குமாறு கோரி இந்த மனுவை அவர் சமர்ப்பித்துள்ளார். | இன்னும் 5 வருடங்கள் மீதமிருந்த நிலையில், அவர் விருப்பமின்றியே ஓய்வுபெற வேண்டி ஏற்பட்டது என்பது<br>(ஆ) தாம் கைதுசெய்யப்பட்டிருந்த காலத்தில் தனது அடிப்படைச் சம்பளம் மாத்திரமே தனது மனைவிக்கு வழங்கப்பட்டதாகவும், கமாண்டர் பதவிக்கு வாகன இறக்குமதி உரிமம் வழங்கப்படுவதற்கு தகுதி இருந்தபோதிலும், தாம் சிறைபிடிக்கப்பட்டிருந்த காரணத்தினால் தமக்கு தீர்வையற்ற வாகன இறக்குமதி உரிமம் கிடைக்கவில்லை என்றும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.<br>மேலும், தனது மனைவி தனக்காக தீர்வையற்ற வாகன இறக்குமதி உரிமத்தைக் கோரியிருந்த போதிலும், அது குறிப்பிட்ட அதிகாரிக்குரிய ஒரு உரிமை என்பதால் அந்த அதிகாரியே சுயமாக அக்கோரிக்கையை முன்வைக்க வேண்டும் எனத் தெரிவித்து அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டது | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | என்பது<br><br>(இ) அநீதிக்கும், அரசியல் பழிவாங்கலுக்கும் உள்ளான இராணுவ அதிகாரிகளின் குறைகளை ஆராய்வதற்காக 2015 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் தனது மேன்முறையீட்டை ஒரு விசேட கோரிக்கையாகச் சமர்ப்பித்ததாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். இந்த ஆணைக்குழு தனது கோரிக்கையைப் பரிசீலித்து அமைச்சரவை அங்கீகாரமும் வழங்கப்பட்டிருந்த போதிலும், அக் காலகட்டத்தில் ஒரு நிர்வாகச் சுற்றறிக்கை மூலம் தீர்வையற்ற வாகன இறக்குமதி உரிமங்கள் நிறுத்தப்பட்டிருந்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும், பின்னர் வாகன இறக்குமதி உரிமங்கள் வழங்கப்பட்ட போதிலும், தனது கோரிக்கையை கவனத்தில் கொண்டு மீண்டும் அதற்கான அங்கீகாரம் வழங்கப்படவில்லை என்று மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார் என்பது<br><br>(ஈ) 2008 ஆம் ஆண்டிலும் மனுதாரருக்கு வாகன இறக்குமதி உரிமத்தை வழங்குவதற்காக அமைச்சரவைப் பத்திரம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஒன்று தயாரிக்கப்பட்ட போதிலும், அது அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை என்பது<br>(உ) கடற்படைத் தளபதியின் 2020.09.21 ஆம் திகதிய SLN.02/0082 ஆம் இலக்கத்தைக் கொண்ட கடிதத்தின் மூலம், 2018.02.15 திகதிய 01/2018 இலக்க வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கு இணங்க, அவர் பயங்கரவாதிகளின் பிடியில் இருந்த காலப்பகுதியையும் முனைப்பான சேவையில் இருந்ததாகக் கருத முடியும் என்பதால், மனுதாரருக்கு நிரந்தர கமாண்டர் பதவியில் அல்லது அதற்கு மேற்பட்ட பதவியில் பெற்றுக்கொள்ளக்கூடிய சலுகை அடிப்படையிலான வாகன உரிமத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதி உள்ளதென்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இதற்கமைய மனுதாரருக்கு நிரந்தர கமாண்டர் பதவிக்குரிய தீர்வையற்ற வாகன இறக்குமதி உரிமத்திற்கு உரிமை உள்ளது என்பது<br>(ஊ) நிரந்தர இராணுவச் சேவையில் உள்ள | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | அனைத்து அலுவலர்கள் நிரந்தர கமாண்டர் பதவி மற்றும் அதற்கு மேற்பட்ட பதவிகளில் ஒவ்வொரு 6 வருடங்களுக்கும் ஒருமுறை தீர்வையற்ற வாகன உரிமத்திற்குத் தகுதி பெறுவதுடன், கொமடோர் மற்றும் அதற்கு மேற்பட்ட பதவிகளை வகித்து ஓய்வுபெறும்போதும் மேற்படி உரிமத்திற்கு அவர்கள் உரிமை பெறுகின்றார்கள் என்றும் மனுதாரர் விடய விளக்கங்களை சமர்ப்பித்துள்ளார் என்பது<br><br>(எ) மனுதாரர் பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டதன் பின்னர், 2002 செப்தெம்பர் 20 ஆம் திகதி முதல் மீண்டும் கடற்படையில் முனைப்பான சேவையில் இணைப்புச் செய்யப்பட்டு, 2003 செப்தெம்பர் 28 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நிரந்தர கப்டன் பதவிக்கும், 2004 சனவரி 31 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நிரந்தர கொமடோர் பதவிக்கும் பதவியுயர்வு வழங்கப்பட்டு, 2004 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் இலங்கை கடற்படையிலிருந்து ஓய்வுறுத்தப்பட்டுள்ளார் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | என்றும், அதே திகதி முதல் அதாவது 2004 சனவரி 31 ஆம் திகதி ஓய்வுறுத்த நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும், மனுதாரின் கோரிக்கைக்கு அமைய 2004 பெப்ருவரி 01 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது என்றும்; மனுதாரரின் கோப்பு பரிசீலிக்கப்பட்டபோது, அவர் தன்னை ஓய்வுபெறச் செய்யுமாறு விடுத்த கோரிக்கை ஒன்று அதில் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது என்றும்; அவ்வாறு ஓய்வுபெற்ற பின்னர், தீர்வையற்ற வாகன இறக்குமதி உரிமத்தைப் பெற்றுக்கொள்வதற்காக மனுதாரர் சமர்ப்பித்த விண்ணப்பம், அன்றைய கடற்படைத் தளபதியின் சிபாரிசுடன் பாதுகாப்பு அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், அவ்விண்ணப்பம் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 22/99 (VIII) இன் கீழ் உள்ளடக்கப்படுவதில் லை என அறிவிக்கப்பட்டுள்ளது என்றும்; அதன் பின்னரும், மேற்படி சுற்றறிக்கைக்கு இணங்க தீர்வையற்ற வாகன இறக்குமதி உரிமத்தைப் பெற்றுக்கொள்வதற்கு | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அவர் பல சந்தர்ப்பங்களில் விண்ணப்பித்திருந்த போதிலும், சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நிரந்தர கொமடோர் பதவியில் 3 வருட முனைப்பான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்யாததன் காரணமாக, அத்தகை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவருக்கு தீர்வையற்ற வாகன இறக்குமதி உரிமம் வழங்கப்படவில்லை என்பது<br><br>(ஏ) மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கடிதத்திற்கமைய, ரியர் அட்மிரல் பதவிக்கான பதவி உயர்வை வழங்குவது மற்றும் அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாயின், அப்போது இலங்கை கடற்படையின் சிரேஷ்ட அதிகாரிகளைப் பதவியுயர்த்துவதற்கான நடைமுறைகள் பற்றிய அறிவுறுத்தல்களை உள்ளடக்கிய கடற்படைக் கட்டளைகள் 0639 மற்றும் 0642 இற்கமைய, நிரந்தர கொமடோர் பதவியில் 02 வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருப்பது ஒரு கட்டாயத் தேவைப்பாடாகும் என்றும்; ரியர் அட்மிரல் பதவி உயர்வுக்குப் பரிசீலிக்கப்படும் திகதியில் அப்பதவியில் வெற்றிடம் ஒன்று | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நிலவுவதும் கட்டாயமாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், மனுதாரர் 2004 சனவரி 31 அன்று கொமடோர் பதவிக்கு பதவி உயர்த்தப்பட்டு, 2004 பெப்ருவரி 01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ஒரே நாளில் ஓய்வுறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது | |
| **நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு** | | | | |
| 29 | திரு. டப்ளியூ. அனுர சாந்த COM/PP/2025/446 கௌரவ எஸ்.எம். மரிக்கார் பா.உ., அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. 2025.10.21 ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல. : MF1/11/2/SLIC/06 திகதி : 2024.04.08 | இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனத்தில் மோட்டார் வாகனங்களுக்கான முழுமையான காப்புறுதியைப் பெற்றிருந்த தனது CBJ 4518 என்ற பதிவு இலக்கத்தைக் கொண்ட மோட்டார் கார், 2022.12.12 ஆம் திகதியன்று திடீர் விபத்துக்குள்ளானதன் காரணமாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவித்ததாகவும், 03 மாதங்களுக்குள் தனது காரைத் திருத்தி மேற்பார்வைக்காகச் சமர்ப்பிக்குமாறு 2022.12.16 ஆம் திகதியன்று இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிரு | (அ) மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட CBJ 4518 எனும் இலக்கத்தைக் கொண்ட மோட்டார் கார், 2022.12.12 அன்று மு.ப. 1.00 மணியளவில் விபத்துக்குள்ளானதன் பின்னர், மனுதாரர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் அழைப்பு நிலையத்திற்கு அது குறித்து அறிவித்திருந்தார் என்பது, காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப அதிகாரி ஒருவர் விபத்தைப் பரிசீலிப்பதற்காக வருகை தந்து, விபத்து நடந்து ஒரு மணித்தியாலத்திற்குள் அது குறித்துப் பொலிஸில் முறைப்பாடு | மனுதாரரின் CBJ 4518 என்ற பதிவு இலக்கத்தைக் கொண்ட மோட்டார் காரின் இழப்புகளுக்கான நட்டஈட்டுத் தொகையை வழங்குவதற்கு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ந்து தனக்கு ஒரு குறுஞ்செய்தி கிடைத்ததாகவும், அதற்கமைய, கடன் ஒன்றைப் பெற்று காரைத் திருத்தி காப்புறுதி உரித்தைப் பெற்றுக் கொள்வதற்காகச் சமர்ப்பித்த போதிலும், பல்வேறு காரணங்களைக் கூறி காப்புறுதி உரித்தை வழங்கவில்லை என்றும், திருத்த வேலைகளுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடும் அங்கீகரிக்கப்பட்டிருந்த நிலையில், இந்த காப்புறுதி உரித்தை வழங்காமல் இருப்பது அநீதியானது எனக் குறிப்பிட்டுள்ள மனுதாரர், தனக்குக் கிடைக்க வேண்டிய காப்புறுதி உரித்தைப் பெற்றுத் தருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | செய்யுமாறு சாரதிக்கு அறிவித்துள்ளார் என்பது.<br><br>(ஆ) விபத்து குறித்து இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் சுயாதீன விசாரணை ஒன்றை நடாத்தியுள்ளது என்றும், அதில் வெளிப்பட்ட விபரங்களின் அடிப்படையில் மனுதாரரின் காப்புறுதித் கோரிக்கையை நிராகரிக்கத் தீர்மானிக்கப்பட்டதாகவும், மேற்படி தீர்மானத்திற்கு எதிராக மனுதாரர் 2023.02.26 ஆம் திகதி இலங்கை காப்புறுதி ஒம்பூட்ஸ்மனிடமும், (Sri Lanka Insurance Ombudsman), 2023.03.31 ஆம் திகதி இலங்கை காப்புறுதி ஒழுங்குறுத்தல் ஆணைக்குழுவிடமும் (The Insurance Regulatory Commission of Sri Lanka) முறைப்பாடுகளைச் செய்திருந்த நிலையில், குறித்த நிறுவனங்கள் இலங்கை காப்புறுத்திக் கூட்டுத்தாபனத்திடம் விபரங்களைக் கோரி அந்த முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை நிறைவு செய்துள்ளன என்பது<br><br>(இ) சாரதியின் வாக்குமூலங்கள் முரணானவை என்று இலங்கை காப்புறுத்திக் கூட்டுத்தாபனம் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | தெரிவித்துள்ளது என்றும், எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டிருப்பது 2022.12.16 ஆம் திகதியில் வாகனத்தை புதுப்பித்து சமர்ப்பித்து அறிவிக்கும் குறுஞ்செய்தியை அனுப்பிய பின்னராகும் என்பதும், விபத்தொன்று நடந்த பின்னர் ஒரு சாரதி உள்ளாகும் நிலைமையைக் கருத்திற்கொள்ளும்போது , விபத்து நடந்து ஒரு மணித்தியாலத்திற்குள் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று வாக்குமூலம் அளிப்பது தொடர்பாக எவ்வித சட்ட ஏற்பாடுகளும் இல்லை என்றும், அது நடைமுறைக்குச் சாத்தியமற்றது என்றும், விபத்து நடந்த நேரத்திலேயே பொலிஸ் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வருகை தந்து தேவையான முதற்கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டனர் என்றும் மனுதாரர் சமர்ப்பித்துள்ள விடயங்கள்<br><br>(ஈ) விபத்து நடந்த நேரத்தில் சாரதி மதுபோதையில் இருந்ததாகக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப அதிகாரி அறிக்கையிட்டிருந்ததாகக் காப்புறுதிக் கூட்டுத்தாபன | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அதிகாரிகள் சுட்டிக்காட்டிய போதிலும், அவ்விபத்து குறித்துப் பரிசீலிப்பதற்காகச் சம்பவ இடத்திற்கு வந்திருந்த பொலிஸ் அதிகாரிகள், அந்த நேரத்தில் சாரதியின் மதுபோதை நிலை தொடர்பாக எவ்வித அவசியமான சட்ட நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை என மனுதாரர் சமர்ப்பித்த விடயங்கள்<br><br>(உ) மனுதாரரின் வாகனம் விபத்துக் குள்ளானதன் பின்னர், அவ்விபத்து பற்றிய முதற்கட்ட விசாரணையை மேற்கொள்வதற்காக அவ்விடத்திற்கு வருகை தந்த காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப அதிகாரி, அவ் விபத்தைப் பதிவு செய்வது தொடர்பாகச் செயற்பட்ட விதம் திருப்திகரமாக இல்லை என்பதும், சாரதி மதுபோதையில் இருந்ததாக அவர் அறிக்கையிட்டுள்ள போதிலும், அதனை ஆதாரங்களுடன் நிரூபிப்பதற்கு காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் தவறியுள்ளார்கள் என்பதும்<br><br>(ஊ) தமது மோட்டார் வாகனத்திற்கு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | முழுமையான காப்புறுதி உறுதியைப் பெற்றிருந்த மனுதாரரின் காப்புறுதி உரித்தை வழங்குவது தொடர்பாக, இலங்கை காப்புறுத்திக் கூட்டுத்தாபன பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் பொறுப்பற்ற முறையில் செயற்பட்டதன் காரணமாக, காப்புறுதியாளர் ஆகிய மனுதாரருக்குத் தனது காப்புறுதி உரித்தைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போயுள்ளது என்பது, இதன் மூலம் காப்புறுதியாளருக்கும் காப்புறுதி நிறுவனத்திற்கும் இடையே செய்து கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளது என்பது அதற்கமைய, இலங்கை காப்புறுத்திக் கூட்டுத்தாபனத்தின் இத்தகைய பொறுப்பற்ற நடவடிக்கைகள் காரணமாக, இலங்கை காப்புறுத்திக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளினால் மனுதாரருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பது | |
| 30 | திரு. பிரியந்த இளங்கோன் COM/PP/2025/477 கௌரவ ருவன் மாபலகம பா.உ., | விசேட வைத்திய ஆலோசனையின் பேரில், மனுதாரர் தனது மகளுக்கு சுமார் 2 ½ வருடங்களுக்கு முன்னர் இந்தியாவின் | (அ) தமது மகளின் அறுவை சிகிச்சைக்கான காப்புறுதி உரித்தைப் பெற்றுக்கொள்ளும்போது , சனாதிபதி நிதியம், இலங்கை அக்ரஹார | கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள 'சுரக்ஷா காப்புறுதி கோரிக்கைகள் மேன்முறையீட்டுப் பரிசீலனைக் குழுவிடம்' மேன்முறையீடு ஒன்றைச் |

| | | | | |
|---|---|---|---|---|
| | அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது . 2025.10.21 ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல. : MF1/11/07/SLIC/5/ PPCO<br><br>திகதி : 2025.08.28 | அப்பல்லோ (Apollo) மருத்துவமனையில் ஸ்கோலியோசிஸ் (Scoliosis) நெளிமுதுகு நோய்க்கான அறுவை சிகிச்சை செய்யப்பட்டதாகவும், கொடுப்பனவுப் பற்றுச்சீட்டுகளின் மூலப் பிரதிகள் காணாமல் போயுள்ளதால், 'சுரக்ஷா' காப்புறுதித் திட்டத்தின் கீழ் காப்புறுதி உரித்தை வழங்க முடியாது எனக் கூறி இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தனது கோரிக்கையை நிராகரித்ததாகவும், இந்த விவகாரம் தொடர்பாக அறுவை சிகிச்சை நடத்தப்பட்ட இந்தியாவின் சம்பந்தப்பட்ட மருத்துவமனையிடம் வினவியபோது, காப்புறுதி நிறுவனத்திற்குரிய விரிவான செலவுப் விபரப்பட்டியல் (Detailed Bill மூலம் அந்த காப்புறுதி உரித்தை வழங்க முடியும் என அந்த மருத்துவமனை தெரிவித்துள்ளதாகவும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் இதுவரை ரூ. 100,000/- மட்டுமே செலுத்தப்பட்டுள்ளது என்றும், குறித்த காப்புறுதி உரித்தின் எஞ்சிய நிலுவையான ரூ. 1,400,000.00 | காப்புறுதி நிதியம் மற்றும் சனசக்தி காப்புறுதி நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் தமக்குரிய காப்புறுதி உரித்தைத் தமக்கு வழங்கியிருந்ததாகவும், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மாத்திரமே முழுமையான காப்புறுதி உரித்தை வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்தது என்றும் மனுதாரர் சமர்ப்பித்துள்ள விடயங்கள்<br><br>(ஆ) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வழங்கியுள்ள சுரக்ஷா காப்புறுதித் திட்டத்தின் கீழ் காப்புறுதி உரித்தைப் பெற்றுக்கொள்வதற்கான உரிய விண்ணப்பப் படிவத்தை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடம் கையளித்ததாகவும், அதன் பின்னர் சுமார் 03 மாதங்கள் கடந்த நிலையில், பணக் கொடுப்பனவுப் பற்றுச்சீட்டுகளின் மூலப் பிரதிகளைச்' சமர்ப்பிக்காமல் 'விரிவான செலவு விபரப்பட்டியலை' மாத்திரமே சமர்ப்பித்துள்ளதாகக் குறிப்பிட்டு, காப்புறுதி உரித்தை வழங்க முடியாது எனவும், எனவே தமது விண்ணப்பம் | சமர்ப்பிக்குமாறு மனுதாரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், மனுதாரரினால் அந்த 'சுரக்ஷா காப்புறுதி கோரிக்கைகள் மேன்முறையீட்டுப் பரிசீலனைக் குழுவிடம்' மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், அது தொடர்பில் உரிய கவனம் செலுத்தி நிவாரணம் வழங்குமாறு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கும், அதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கும் பரிந்துரைக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | (பதினான்கு இலட்சம் ரூபாய்) ஆன தொகையைப் பெற்றுத்தரத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | நிராகரிக்கப்படுவதாகவும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன அதிகாரிகள் தமக்கு அறிவித்ததாகவும் பின்னர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் கருணை அடிப்படையில் ரூ. 100,000/- மட்டும் காப்புறுதி உரித்தாகத் தமக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், சம்பந்தப்பட்ட காப்புறுதித் தொகையின் எஞ்சிய நிலுவையான ரூ. 1,400,000.00/- (பதினான்கு இலட்சம் ரூபாய்) ஆன தொகையும் தமக்குக் கிடைக்க வேண்டும் என்று மனுதாரர் சமர்ப்பித்துள்ள விடயங்கள><br><br>(இ) சுரக்ஷா காப்புறுதித் திட்டத்தின் கீழ் காப்புறுதி உரித்தைப் பெற்றுக்கொள்வதற்காகத் தமது தரப்பிலிருந்து விபரங்களைச் சமர்ப்பிப்பதற்குக் கூட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன அதிகாரிகள் தமக்குப் போதிய சந்தர்ப்பத்தை வழங்கவில்லை என்பது<br><br>(ஈ) சுரக்ஷா காப்புறுதிக் கோரிக்கைகளுக்காக தாம் செலுத்திய பற்றுச்சீட்டை அக்ரஹார | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | காப்புறுதி நிறுவனம், சனசக்தி காப்புறுதி நிறுவனம் மற்றும் சனாதிபதி நிதியம் ஆகிய நிறுவனங்கள் ஏற்றுக்கொண்டுள்ளன என்றும், இது தொடர்பாக சனாதிபதி நிதியத்தின் பிரதம கணக்காளர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சுரக்ஷா காப்புறுதிப் பிரிவுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார் என்றும் மனுதாரர் சமர்ப்பித்த விடயங்கள்<br><br>(உ) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் நிறுவன ரீதியான காப்புறுதி உரித்துக் கொடுப்பனவு மற்றும் கணக்காய்வு நடவடிக்கைமுறைகளுக்கமைய, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கும் கல்வி அமைச்சுக்கும் இடையே உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட நிபந்தனைகளுக்கமையவும், காப்புறுதி உரித்தை தீர்ப்பதற்கு அக்கோரிக்கை காப்புறுதி ஆவண நிபந்தனைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டிருப்பதும் 'பணக் கொடுப்பனவுப் பற்றுச்சீட்டுகளின் மூலப் பிரதிகளைச்' சமர்ப்பிப்பதும் கட்டாயமாகும் ஆயினும், மனுதாரரினால் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ‘விரிவான செலவு விபரப்பட்டியல்’ மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், பணக் கொடுப்பனவுப் பற்றுச்சீட்டுகளின் மூலப் பிரதிகள் காணாமல் போயுள்ளனவா என்பது காப்புறுதி செய்தவருக்குத் தெரியாது என மனுதாரர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவித்திருந்தார் என்பது.<br><br>(ஊ) இலங்கையில் மேற்கொள்ள முடியாத அறுவை சிகிச்சைகள் அல்லது காத்திருப்புப் பட்டியலில் இருப்பதன் காரணமாக உயிருக்கு ஆபத்து ஏற்படும் அறுவை சிகிச்சைகள் வெளிநாடொன்றில் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரமே இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் சுரக்ஷா காப்புறுதித் திட்டத்தின் கீழ் கொடுப்பனவுகளை வழங்கும் என்பதும், இந்த அறுவை சிகிச்சை அத்தகையதொரு அறுவை சிகிச்சை அல்ல என்பதும்<br><br>(எ) இந்தியாவின் அப்பலோ மருத்துவமனையில்மனுதாரரின் மகளுக்கு மேற்கொள்ளப்பட்ட அறுவை சிகிச்சை தொடர்பாக | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இக்கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதும், 2021/2022 சுரக்ஷா காப்புறுதித் திட்டத்தின் அதிதீவிர நோய்களுக்கான காப்புறுதியின் கீழ் இக்கோரிக்கை தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களைப் பரிசீலித்ததன் பின்னர், குறித்த உறுதியின் நிபந்தனைகளுக்கமைய இக்கோரிக்கை உள்ளடக்கப்படவில்லையாயினும், இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனம் கருணை அடிப்படையில் ரூ. 100,000/- ஆன காப்புறுதி உரித்தை ஏற்கனவே மனுதாரருக்கு வழங்கியுள்ளது என்பதும், எனவே இது தொடர்பாக மேலும் தலையீடு செய்வதற்கான சாத்தியக்கூறுகள் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு இல்லை என்பதும்<br><br>(ஏ) இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனத்தின் 2021/2022 சுரக்ஷா மாணவர் காப்புறுதித் திட்டத்தில் அதிதீவிர நோய்களுக்கான காப்புறுதியின் கீழ், ஸ்கோலியோசிஸ் (Scoliosis) நெளிமுதுகு நோய் நிலைமையைக் குணப்படுத்துவதற்கான அறுவை சிகிச்சை உள்ளடக்கப்பட்டுள்ளது என்று மனுதாரர் சமர்ப்பித்துள்ள | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | விடயங்கள்<br><br>(ஐ) இக்காப்புறுதி நட்டஈட்டுத் தொகையை மீளப் பெற்றுக்கொள்வதற்காக மனுதாரர் வேறு சில காப்புறுதி நிறுவனங்களிடமும் விண்ணப்பித்திருந்தார் என்பதும், அதன்போது பணக் கொடுப்பனவுப் பற்றுச்சீட்டுகளின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்காமலேயே, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் சனசக்தி காப்புறுதி நிறுவனம் ஆகிய வற்றிடமிருந்து ரூ. 478,302/- ஆன தொகையை மனுதாரர் ஏற்கனவே மீளப் பெற்றுக்கொண்டுள்ளார் என்பதும், அத்துடன் சனாதிபதி நிதியத்தின் மூலம், சென்னைக்கான பிரதி உயர்ஸ்தானிகர் ஊடாக நேரடியாக இந்தியாவின் அப்பலோ மருத்துவ மனைக்கு ரூ. 200,000/- ஆன தொகை செலுத்தப் பட்டுள்ளது என்பதும்<br><br>(ஒ) சுரக்ஷா காப்புறுதி உரித்துக் கோரிக்கைகள் தொடர்பாக எழும் பிரச்சினைகளை ஆராய்வதற்காக கல்வி அமைச்சினால் 2024.07.01 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 'சுரக்ஷா காப்புறுதி உரித்துக் கோரிக்கைகள் பற்றிய | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மேன்முறையீடுகளை ஆராயும் குழு' என்ற பெயரில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்பதும், காப்புறுதி செய்தவர்கள் இத்தகைய பிரச்சினைகளை அக்குழுவிடம் சமர்ப்பிக்க முடியும் என்பதும், எனவே, இந்த மனுதாரருக்கும் தனது மேன் முறையீட்டை அக் குழுவிடம் சமர்ப்பிப் பதற்கான வாய்ப்பு உண்டு என்பதும்<br><br>(ஓ) மனுதாரர் தனது மகளின் அறுவை சிகிச்சையை வெளி நாடொன்றில் மேற்கொள்வதற்காகக் கணிசமான தொகையொன்றைச் செலவிட்டுள்ளார் என்பதும், அதிலிருந்து காப்புறுதி உரித்தாக அவரால் பெற்றுக் கொள்ள முடிந்தது மிகக் குறைந்த அளவிலான ஒரு தொகையை மட்டுமே என்றும்; இதில், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் சுரக்ஷா காப்புறுதித் திட்டத்தின் கீழ் மனுதாரருக்கு எந்தவொரு கொடுப்பனவும் வழங்கப்படவில்லை என்பதுடன், கருணை அடிப்படையில் ரூ. 100,000/- மட்டுமே அவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதும் | |
| **வலுசக்தி அமைச்சு** | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 31 | திருமதி டபிள்யூ.ஜே.பி.சி.யு. விஜேதுங்க<br>COM/PP/2025/84<br>கௌரவ லசித் பாஷண கமகே பா.உ., அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.<br>2025.10.23ஆந் திகதி விசாரணை செய்யப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இல. : மிச/பா/12/மனு/ 2022-15<br>திகதி : 2023.02.17 | அரசு வங்கிகள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியாயாதிக்க சபைகளுக்கான தரவுச் செயலாக்குனர்களை (Data Processors) ஆட்சேர்ப்பு செய்வதற்காக 1990 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையிலும், அதனைத் தொடர்ந்து 1995.11.03 ஆம் திகதி நடைபெற்ற உரிய நேர்முகப் பரீட்சையிலும் தான் சித்தியடைந்திருந்த போதிலும், ஒன்பது (9) வருடங்கள் கடந்த பின்னர் 2004.07.12 ஆம் திகதியிலேயே தாம் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அமைச்சுக்கு மேன்முறையீடு செய்யப்பட்டதன் பின்னர், குறித்த நியமனம் நிலுவைச் சம்பளமின்றி 1997.01.01 ஆம் திகதிக்கு முன்திகதியிடப்பட்டதாகவும், பின்னர் நூலகர் பதவி வரை பதவியுயர்வு பெற்று 2022.12.31 ஆம் திகதியன்று ஓய்வுபெற்றதாகவும், ஓய்வூதியங்களை அங்கீகரித்து அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட | (அ) அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியாயாதிக்க சபைகளுக்கான தரவுச் செயலாக்குனர்களை (Data Processors) ஆட்சேர்ப்பு செய்வதற்காக 1990 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து, 1995.11.10 ஆம் திகதியன்று நடைபெற்ற உரிய நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய போதிலும் தொழில் வழங்கப்படவில்லை என்றும், அவ்வாறு பாதிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் சிலர் தமக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், நீதிமன்ற உத்தரவின் பேரில் 2004.07.12 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை மின்சார சபையின் தரவுச் செயலாக்க இயக்குனர் (Data Processing Operator) பதவிக்கான நியமனங்கள் வழங்கப்பட்டன என்றும் அப்போது நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு 09 வருடங்கள் கடந்திருந்தன என்றும் மனுதாரர் தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்கள்<br>(ஆ) மேற்படி ஆரம்ப நியமனங்களை | அரசியல் பழிவாங்கல்கள் குழுவின் பரிந்துரைகள் மற்றும் அமைச்சின் செயலாளரின் பரிந்துரைக்கு இணங்க, மனுதாரரின் சேவை முன்திகதியிடப்பட்ட 1997.01.01 ஆம் திகதி முதல் அவர் ஓய்வுபெற்ற 2022.12.31 ஆம் திகதி வரையிலான சேவைக்காலத்தைக் கருத்திற்கொண்டும், மற்றுமொரு நபருக்கு ஓய்வூதிய நன்மைகளை வழங்குவது தொடர்பாகப் பின்பற்றப்பட்ட அதே முன்மாதிரியான நடைமுறையைப் பின்பற்றி, மனுதாரரை ஓய்வுபெறச் செய்து அவருக்குரிய ஓய்வூதியத்தை வழங்குமாறு பரிந்துரைக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பரிந்துரைக் கடிதத்தின் பிரகாரம், பிரதிப் பொது முகாமையாளரினால் (ஆளணி) ஒரே தினமான 2022.12.31 ஆம் திகதியன்று ஓய்வுபெற்ற மனுதாரருக்கும் மற்றுமொரு நபருக்கும் அனுப்பப்பட்ட கடிதங்களுக்கமைய, மனுதாரர் ஓய்வூதியத்தை இழந்துள்ளார் என்பதுடன் அதேவேளை, மற்றைய நபருக்கு ஓய்வூதியம் கிடைத்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார் என்பதுடன், தனக்கு ஏற்பட்டுள்ள அநீதியைக் கருத்திற்கொண்டு, தனது 26 வருட காலத் தொடர்ச்சியான சேவைக்குக் கிடைக்க வேண்டிய ஓய்வூதியத்தைப் பெற்றுத் தருமாறு கோரி மனுதாரர் இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் குறித்து அரசியல் பழிவாங்கல்கள் குழுவிடம் மேன்முறையீடு செய்யப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்ட பரிந்துரைக்கு இணங்க, மனுதாரருக்கு ஓய்வூதியம் கிடைக்கும் வகையில் நிலுவைச் சம்பளமின்றி அவரைச் சேவையில் அமர்த்துமாறு அமைச்சின் செயலாளரினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்றும், அதற்கமைய, இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் (ஆளணி) மூலம் மனுதாரருக்கு மாத்திரம் தனிப்பட்ட வகையில் ஏற்புடையவாறு 1997.01.01 ஆம் திகதிக்கு நிலுவைச் சம்பளமின்றி தரவுச் செயலாக்க இயக்குனர் (Data Processing Operator) பதவிக்கான நியமனம் முன்திகதியிடப்பட்டிருந்த போதிலும், அக்குறிப்பிட்ட கடிதத்தில் ஓய்வூதியம் மற்றும் கொடுப்பனவுகள் குறித்து எதுவும் குறிப்பிடப்படாததன் காரணமாக அவருக்கு ஓய்வூதியம் கிடைக்கவில்லை என்றும், | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எவ்வாறாயினும், மேற்படி அமைச்சுச் செயலாளரின் அறிவுரைக்கமைய, மனுதாரருடன் ஒரே நாளில் ஓய்வுபெற்ற மற்றைய நபரின் சேவை முன்திகதியிடப்பட்டு அவருக்குரிய ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இவ்வாறு ஒரே பரிந்துரையின் கீழ் இரு நபர்களுக்கு சமமான முறையில் இல்லாது செயற்பட்டதன் மூலம் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்மேலதிக விடயங்கள்<br><br>(இ) 2004ஆம் ஆண்டில் சேவையில் இணைந்து 2022.12.31ஆம் திகதி ஓய்வுபெற்ற மனுதாரரின் உண்மையான சேவைக்காலம் சுமார் 18 வருடங்களாக இருந்தபோதிலும், அரசியல் பழிவாங்கல்கள் குழுவின் பரிந்துரையின் பேரில் நிலுவைச் சம்பளமின்றி அவரது நியமனம் முன்திகதியிடப்பட்ட 1997.01.01 ஆம் திகதி முதல் கணக்கிடும் போது அவரது சேவைக்காலம் 20 வருடங்களுக்கும் மேற்பட்டதாக உள்ளதனாலும், | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அவ்வாறு ஒரே பரிந்துரையின் கீழ் நியமனங்கள் முன்திகதியிடப்பட்ட மற்றுமொரு நபரின் முழுமையான சேவைக்காலம் கணக்கிடப்பட்டு அவருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்ட ஒரு முன்மாதிரி காணப்படுவதனாலும், பொது மனுக்கள் பற்றிய குழுவின் பரிந்துரைக்கமைய மனுதாரரை ஓய்வுறுத்துவது தொடர்பாக பணிப்பாளர் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர முடியும் என்று இலங்கை மின்சார சபையின் தவிசாளர் உள்ளிட்ட அதிகாரிகள் சமர்ப்பித்த விடயங்கள் | |
| 32 | திரு. எச்.ஏ. ரஞ்சித்<br>COM/PP/2025/111<br>சமர்ப்பித்தவர்: கௌரவ ருவன் மாபலகம, பா.உ.<br><br>2025.10.23ஆம் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்: விஆ/நி/12/மனு-2024-03<br>திகதி: 2024.12.02 | மனுதாரர் 1977 முதல் 1980 வரை இலங்கை மின்சார சபையில் நாளாந்த வேதனம் பெறும் அமைய ஊழியராகச் சேவையாற்றியுள்ளதாகவும், 1980.12.15 ஆந் திகதி Vஆம் வகுப்பில் நிரந்தரப் பதவியொன்றுக்கு நியமிக்கப்பட்ட போதிலும், 1985.01.22 ஆந் திகதி அரசியல் பழிவாங்கல் காரணமாக சேவையை இழந்ததாகவும், அதன் பின்னர் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் | (அ) 2005 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அரசியல் பழிவாங்கல் குழுவின் தீர்மானத்திற்கு அமையப் பெற்றுக்கொள்ளப்பட்ட 2005 யூலை 28 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய, பதவியில் இல்லாத காலப்பகுதியைச் சம்பளமற்ற காலப்பகுதியாகக் கருதி மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு மனுதாரருடன் சேவையில் அமர்த்தப்பட்ட வேறு இரு ஊழியர்கள் 2010 ஆம் ஆண்டில் | அரசியல் பழிவாங்கல் குழுவின் விதந்துரைகளுக்கு அமைய பெற்றுக்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்ட மனுதாரரின் தொடர்ச்சியான சேவைக் காலத்துடன் அவரது முன்னைய சேவைக் காலத்தையும் இணைத்துக் கணிப்பிடுமாறும், அதற்கமைய மனுதாரருக்கு ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொடுக்கத் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2000.04.26 ஆந் திகதி முதல் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டு, பல்வேறு சேவை நிலையங்களில் பணியாற்றி 60 வயதைப் பூர்த்தி செய்து 2019.10.10 ஆந் திகதி ஓய்வு பெற்றதாகவும், தொடர்ச்சியான சேவைக் காலம் 20 வருடங்களைப் பூர்த்தி செய்யாத காரணத்தினால் இதுவரையில் ஓய்வூதியத்தை வழங்குவதற்கு நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும், PV/PE/CEB/D45 இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைவாக, மீண்டும் சேவையில் அமர்த்தப்படுகையில் முன்னைய சேவைக் காலத்தைத் தொடர்ச்சியான சேவைக் காலமாக கணக்கிட்டு ஓய்வூதியம் செலுத்துவதற்குப் விதந்துரைக்கப்பட்டுள் ளது எனவும் தெரிவிக்கும் மனுதாரர், அவ்வாறு அமைச்சரவைத் தீர்மானங்களைப் பெற்ற ஏனைய ஊழியர்களுக்கும் ஓய்வூதிய நிலுவைகள் வழங்கப்பட்டுள்ளமை யைக் கருத்திற்கொண்டு, | ஓய்வுபெறச் செய்யப்பட்ட போதிலும், 2019 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற மனுதாரருக்கு ஓய்வூதியம் வழங்கப்படவில்லை எனவும் மனுதாரர் தரப்பினால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(ஆ) 1980.12.15 ஆந் திகதி V ஆம் தரத் தொழிலாளியாக நிரந்தரச் சேவையில் அமர்த்தப்பட்ட மனுதாரர் 1985.01.23 ஆந் திகதி பதவியைக் கைவிட்டுச் சென்றதன் காரணமாக அவரது சேவை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள தோடு அக்காலப்பகுதியின் போது அவரது சேவைக் காலம் 4 வருடங்களும் 1 மாதமுமாக இருந்ததாகவும், பின்னர் அரசியல் காரணங்களுக்காக 1977 தேர்தலின் பின் மற்றும் 1980 வேலைநிறுத்தத்தின் பின்னர் தொழில்களை இழந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக இலங்கை மின்சார சபையின் மேன்முறையீடுகளை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட அரசியல் பழிவாங்கல் விசாரணைக்குழுவின் விதப்புரைத் தொகுதி இலக்கம் 3 தொடர்பில் 1999.12.24 ஆந் திகதி | தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் விதந்துரைக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தமக்கும் மேற்படி விதந்துரைக்கு அமைவாக ஓய்வூதிய உரித்தினைப் பெற்றுத்தருமாறு கோரி இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய 2000.04.20 ஆந் திகதி முதல் மனுதாரர் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளதாகவும்,<br><br>(இ) இலங்கை மின்சார சபையின் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மனுதாரருக்கு ஓய்வூதியம் வழங்கப்படவில்லை எனவும், மனுதாரரின் இரண்டாவது நியமனக் கடிதத்திற்கு அமைய அவர் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளமையால் அவரது முன்னைய சேவைக் காலத்தையும் தொடர்ச்சியான சேவைக் காலமாக கணக்கிட்டு ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் | |
| **வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு** | | | | |
| 33 | திருமதி ரேணுகா மானகே<br>COM/PP/2025/435<br>சமர்ப்பித்தவர்: கௌரவ அசித்த நிரோஷண எகொடவிதான பா.உ.<br>2025.09.25ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொர்பு இலக்கம்: | மனுதாரர் 1997 ஆம் ஆண்டு முதல் ஹம்பாந்தோட்டை பல்நோக்கு சங்கத்தின் பிரதேச முகாமையாளராகச் சேவையாற்றியுள்ளதாகவும், உயர் நிர்வாகத்தினால் பல்வேறு பொய்யான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு அவரது சேவை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாக | (அ) 2008.08.21 ஆந் திகதியன்று பொருட்கள் பற்றாக்குறை தொடர்பாக மனுதாரரிடமிருந்து ரூ. 114,684.53 தொகை அறவிடப்பட வேண்டியுள்ளதாக எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், அத்தொகையைச் செலுத்தாத காரணத்தினால் 2008.09.08 ஆந் திகதியிட்ட கடிதத்தின் மூலம் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், | மனுதாரருக்குப் பாதகமான முறையில் செயற்பட்டுள்ளகாரணத்தால், மனுதாரரை 2014.07.21 ஆம் திகதி முதல் மீண்டும் சேவையில் அமர்த்த வேண்டும் எனவும், அவருக்கு அன்றைய திகதி முதல் மீண்டும் கடமைக்குச் சமூகமளிக்கும் திகதி வரையில் நிலுவைச் சம்பளம் மற்றும் சட்டரீதியான கொடுப்பனவுகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | MT/ADM/03/PP/1<br><br>திகதி: 2025.07.25 | வும், தொழில் நியாயசபையில் முறையிடப்பட்டதன் பின்னர் இழைக்கப்பட்ட அநீதிக்காக 2019.11.29 ஆந் திகதிக்கு முன்னர் இழப்பீட்டையும் அதற்குரிய சட்டரீதியான கொடுப்பனவுகளையும் வழங்குமாறு உத்தரவிடப்பட்ட போதிலும், இதுவரையில் இழப்பீட்டுத் தொகை மாத்திரமே செலுத்தப்பட்டுள்ளதுடன் கொடுப்பனவுகளை வழங்குவது தவிர்க்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டு, மனுதாரருக்குச் சேர வேண்டிய சட்டரீதியான கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு தருமாறும், மீண்டும் சேவையில் அமர்த்துமாறும் கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஒழுக்காற்று விசாரணையொன்றின் பின்னர் 2010.09.25 ஆந் திகதியிட்ட கடிதத்தின் மூலம் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும்<br><br>(ஆ) அவ்வாறு சேவையிலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பாக தென் மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டிற்கு அமைய, மனுதாரரை நிலுவைச் சம்பளமின்றி அவர் வகித்த பதவியில் 2011.10.01 ஆந் திகதி முதல் மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கும், தொடர்ச்சியாக சேவையை வழங்குவதற்கும், ரூ. 40,000/- இழப்பீட்டுத் தொகையை வழங்குவதற்கும் ஹம்பாந்தோட்டை பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு உத்தரவிடப்பட்டிருந்ததாகவும், குறித்த இழப்பீட்டுத் தொகை வழங்கப்படவில்லை எனவும், 2014.06.10 ஆந் திகதி அவ்விழப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டதாகவும்<br><br>(இ) 2011.10.01 ஆந் திகதி மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்ட போது, வ./ப. ஹம்பாந்தோட்டை பல்நோக்கு கூட்டுறவுச் | செலுத்தப்பட வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டது.<br><br>இதில், மனுதாரருக்கு 2014.07.21 ஆம் திகதி முதல் கடமைக்குச் சமூகமளிக்கும் வரை கிடைக்க வேண்டிய நிலுவைச் சம்பளம் மற்றும் நியதிச்சட்டக் கொடுப்பனவுகளைக் கணக்கிட்டு, மனுதாரருக்கு ஏற்கனவே செலுத்தப்பட்ட நட்டஈட்டுத் தொகையிலிருந்து அதனைக் கழித்து மீதித் தொகையைச் செலுத்துமாறும் பரிந்துரைக்கப்பட்டது.<br><br>2025.10.15 ஆம் திகதி முதல் மனுதாரருக்கு மீண்டும் கடமைக்குச் சமூகமளிக்க வாய்ப்பளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரைக்கப்பட்டதுடன், இதில் அதிகாரிகள் இணக்கப்பாட்டிற்கு வந்தமையினால், மனுதாரர் இறுதியாகப் பணிபுரிந்த பதவியிலேயே அவரை மீண்டும் சேவையில் அமர்த்த வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சங்கத்தின் ஊழியர் வருகைப் பதிவேட்டில் கையெழுத்திடுவதற்கு இடமளிக்காமல் மனுதாரரை அசௌகரியத்திற்குள்ளாக்கியதாகவும், பலவந்தமாக இராஜினாமா கடிதமொன்றைப் பெற்றுக்கொண்டதாகவும் மனுதாரரினால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(ஈ) இது தொடர்பாக மாத்தறை தொழில் நியாயசபையில் LT/M/26/124 இலக்கத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ளதாகவும், அவ்வழக்கின் உத்தரவின்படி 2014.07.14 அல்லது அதற்கு முன்னர் மீண்டும் சேவையில் அமர்த்துமாறும், நிலுவைச் சம்பளமாக ரூ. 288,000/- செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டிருந்ததோடு, அதற்கமைய தான் பணியைப் பொறுப்பேற்கச் சென்றபோதிலும் பணி வழங்கப்படவில்லை எனவும், சில நாட்கள் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் சங்கத்தினால் தன்னை வாதுருப்புவ பிரதேசக் கிளைக்கு இணைப்புச் செய்யப்பட்டதாகவும், அவ்விடத்தில் பணியாற்றுவதற்குப் பொருத்தமான சூழல் காணப்படவில்லை எனவும், அது குறித்து பணிப்பாளர் | எனவும், மனுதாரர் அன்றைய திகதியில் மீண்டும் கடமைக்குச் சமூகமளித்ததன் பின்னர், அவர் தொடர்ந்து சேவையாற்றுவதற்கு இன்னும் சில மாதங்களே உள்ளதால், அவர் ஓய்வு பெறும் வரை பிரதான காரியாலயத்துடனேயே இணைக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டது.<br><br>வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு, அம்பாந்தோட்டை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது) தொடர்பில் பூரண கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டதோடு, குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரையை அமுல்படுத்திச் செயற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சபைக்கு அறிவித்ததாகவும், அதன் பின்னர் புஞ்சிஹேன மற்றும் சூரியவெவ பிரதேசக் கிளைகளுக்கு இணைப்புச் செய்யப்பட்ட போதிலும் அவ்விடங்களிலும் பணியாற்றுவதற்குப் பொருத்தமான சூழல் காணப்படவில்லை எனவும்<br><br>(உ) மேற்படி வழக்கின் உத்தரவின்படி, வ./ப. ஹம்பாந்தோட்டை பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் 2014.07.14 ஆந் திகதிக்கு முன்னர் மீண்டும் சேவையில் அமர்த்துவதற்குப் பொருத்தமான சேவை நிலையமொன்று வழங்கப்படவில்லை எனவும், தான் பணியைப் பொறுப்பேற்க முடியாதவொரு நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் மனுதாரரினால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(ஊ) மாத்தறை தொழில் நியாயசபையின் LT/M/26/124 இலக்க வழக்கின் உத்தரவின்படி சங்கத்தினால் மனுதாரர் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்ட போதிலும், அவர் பதவியொன்றில் கடமையைப் பொறுப்பேற்காமையினால் 2014.08.14 ஆந் திகதி மீண்டும் பணி இடைநீக்கம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செய்யப்பட்டு, ஒழுக்காற்று விசாரணையொன்றின் பின்னர் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும்<br><br>(எ) 2014.08.14 ஆந் திகதி பணி இடைநீக்கம் செய்யப்பட்டு சேவையிலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பாக மனுதாரரினால் LT/M/26/56-2015 இலக்கத்தின் கீழ் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், அவ்வழக்கின் தீர்ப்பின்படி விண்ணப்பதாரியின் வயது (53 வருடங்கள்), சேவைக் காலம் (1997.12.16 - 2014.07.21), சேவையை இழந்திருந்த காலப்பகுதி (2014.07.21 - 2019.10.29) மற்றும் விண்ணப்பதாரி எதிர்காலத்தில் சேவையாற்றக் கூடிய காலப்பகுதி என்பவற்றைக் கருத்திற்கொண்டு, விண்ணப்பதாரியின் மாதாந்த வேதனத்தை ரூ. 11,695/- ஆகக் கருதி 65 மாதங்களுக்குச் சமனான தொகையை, அதாவது ரூ. 760,175/- ஐ இழப்பீடாகச் செலுத்துமாறு கட்டளையிடப்பட்டுள்ளதுடன், அதில் மீண்டும் சேவையில் அமர்த்துமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும்<br><br>(ஏ) இந்தச் சம்பவம் தொடர்பாக கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தினால் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | விசாரணையொன்று நடத்தப்பட்டதாகவும், மனுதாரருக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாக இங்கு வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் அந்த விசாரணையில் வெளிப்படுத்தப்படவில்லை எனவும், அது தொடர்பாகத் தமது கவலையைத் தெரிவிப்பதாகக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள்.<br><br>(ஐ) கூட்டுறவு ஊழியர்களின் இடமாற்றம் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்திற்குப் பொறுப்பு வழங்கப்படவில்லை எனவும், அது தொடர்பில் உரிய கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபை பொறுப்பு வகிப்பதாகவும், முரண்பாடுகள் காணப்படுமாயின் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் பரிசீலிக்கப்பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்குப் விதப்புரைகள் வழங்கப்படுவதாகவும் | |

**போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு**

| | | | | |
|---|---|---|---|---|
| 34 | திரு. பி.ஏ.ஏ. விமலவீர COM/PP/2025/109 சமர்ப்பித்தவர்: கௌரவ ருவன் மாபலகம, பா.உ. 2025.11.11ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்: MT/01/12/16 திகதி: 2025.07.03 | COM/PP/2025/109, 118, 119 மற்றும் 120 ஆகிய இலக்கங்களைக் கொண்ட மனுதாரர்களால் பின்வரும் மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>இலங்கைப் போக்குவரத்துச் சபையின் திவுலப்பிட்டிய டிப்போவில் சேவையாற்றிய 109, 118, 119 மற்றும் 120 ஆகிய இலக்கங்களைக் கொண்ட மனுதாரர்களின் வேலைவாய்ப்பு 2010 ஆம் ஆண்டில் அரசியல் காரணங்களின் மீது பறிக்கப்பட்டதாகவும், தொழிலாளர் நியாயசபையில் நடைபெற்ற வழக்கு விசாரணையைத் தொடர்ந்து நிலுவைச் சம்பளத்துடன் அவர்களைத் தொடர்ச்சியான சேவையில் மீள இணைத்துக் கொள்ளுமாறு 2010.09.30 ஆந் திகதி உத்தரவிடப்பட்டதாகவும், அதற்கு எதிராக இலங்கை போக்குவரத்துச் சபையினால் மீளாய்வு மனுவொன்று (Revision) தாக்கல் செய்யப்பட்டதாகவும், அந்த மனு 2015.09.03 ஆந் திகதி அந்த மனு | மனு இலக்கங்கள் COM/PP/2025/109, 118, 119 மற்றும் 120 ஆகியவற்றைக் கொண்ட மனுக்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்களை குழு முன்வைக்கின்றது.<br><br>(அ) 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் நடைபெற்ற சனாதிபதித் தேர்தலின் போது தபால் மூல வாக்களிப்பில் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கு வாக்களிக்குமாறு பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்கள் மற்றும் அதற்கு இணையாக திவுலபிட்டிய டிப்போ முகாமைத்துவத்தினால் பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்கள் காரணமாக, தாம் உள்ளிட்ட 08 உத்தியோகத்தர்களுக்கு தமது சேவை நிலையத்தில் கடமையாற்றுவதற்குப் பொருத்தமான சூழல் காணப்படாமையினால் சனாதிபதித் தேர்தலின் பின்னர் கடமைக்குச் சமுகமளிக்க முடியாமற் போன காரணத்தால், இலங்கை போக்குவரத்துச் சபையின் முகாமைத்துவத்தினால் தாம் உள்ளடங்கலான 08 உத்தியோகத்தர்களும் சேவையைக் கைவிட்டுச் சென்றதாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மனுதாரர்களால் | COM/PP/2025/109, 118, 119 மற்றும் 120 ஆகிய இலக்கங்களைக் கொண்ட மனுக்களுக்காக, குழுவினால் பின்வரும் விதப்புரைகள் முன்வைக்கப்படுகின்றன. வேலை வாய்ப்பை இழந்திருந்த 70 மாத கால சேவைக் காலத்திற்குரிய நிலுவைச் சம்பளத்திலிருந்து ஏற்கனவே செலுத்தப்பட்டிருந்த 21 மாதங்களுக்கான சம்பளத்தைக் கழித்து, எஞ்சிய 49 மாதங்களுக்குரிய நிலுவைச் சம்பளத்தை மனுதாரர்களுக்கு வழங்குமாறும், நிலுவைச் சம்பளத்தைக் கணிப்பிடும் போது சேவையை இழந்த சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் பெற்றுக்கொண்டிருந்த சம்பளத்தை அடிப்படையாகக் கொள்ளுமாறும் விதந்துரைக்கப்பட்டது. |
| 35 | திரு. ஆர்.ஏ.எம். ரணபாகு COM/PP/2025/118 சமர்ப்பித்தவர்: கௌரவ ருவன் மாபலகம, பா.உ. 2025.11.11ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்: MT/01/12/16 திகதி: 2025.07.03<br><br>திருமதி. ரீ.ஏ. ஐராங்கனி COM/PP/2025/119 சமர்ப்பித்தவர்: கௌரவ ருவன் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 36<br><br>37 | மாபலகம, பா.உ. 2025.11.11ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்: MT/01/12/16<br><br>திகதி: 2025.07.03<br>------------------------------<br><br>திருமதி. விஜித்தா குமாரி<br>COM/PP/2025/120<br>சமர்ப்பித்தவர்: கௌரவ ருவன் மாபலகம, பா.உ. 2025.11.11ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்: MT/01/12/16<br><br>திகதி: 2025.07.03 | தள்ளுபடி செய்யப்பட்டதாகவும் தொடர்ந்து 2015.12.01 ஆந் திகதி அவர்கள் மீண்டும் சேவையில் இணைக்கப்பட்ட போதிலும், குறித்த மீளாய்வு காலப்பகுதிக்காகச் செலுத்தப்பட வேண்டிய நிலுவைச் சம்பளம் இது வரையில் வழங்கப்படாத காரணத்தினால் மனுதாரர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி குறித்து ஆராய்ந்து நியாயத்தைப் பெற்றுத் தருமாறு கோரி இந்த மனு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. | முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(ஆ) மேற்படி விடயத்திற்கு எதிராக திவுலபிட்டிய பொலிஸ் நிலையத்தில் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டதோடு நீர்கொழும்பு தொழிலாளர் தீர்ப்பாயத்தில் தாமும் உள்ளடங்கலான 08 உத்தியோகத்தர்களினால் முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் மனுதாரர்களால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(இ) தொழிலாளர் நியாயசபையினால் மேற்கூறிய 08 வழக்குகளும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட தினத்தில், எதிர்மனுதாரரான இலங்கை போக்குவரத்துச் சபை சார்பில் எவ்வித பிரதிநிதித்துவமோ அல்லது சட்டத்தரணி பிரதிநிதித்துவமோ இல்லாதிருந்தமையின் காரணமாக ஒருமுக விளக்கத்திற்கு உத்தரவிடப்பட்டு, விண்ணப்பதாரர் தரப்பான மேற்கூறிய 08 பணியாளர்களையும் முன்னர் இருந்த அதே சேவைத் தகைமையுடன் முன்னர் இருந்த சேவை நிலையங்களிலேயே | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | முழுமையான நிலுவைச் சம்பளத்துடன் தற்போதைய சம்பள மட்டத்தில் நிலைநிறுத்தி, 2010.11.01 ஆம் திகதி முதல் அல்லது அதற்கு முன்னர் சேவை முறிவின்றி மீண்டும் சேவையில் அமர்த்துமாறு எதிர்மனுதாரர் தரப்பான இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 2010.09.30 ஆம் திகதிய கட்டளை வழங்கப்பட்டுள்ளதாக மனுதாரர்களால் முன்வைக்கப்பட்ட விடயங்கள். | |
| | | | (ஈ) அக் கட்டளைகளுக்கு எதிராக இலங்கை போக்குவரத்துச் சபையினால் நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மீளாய்வு மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டு அக் கட்டளையைத் திருத்துமாறு கோரப்பட்டிருந்த அதேவேளை, 2015.09.03 ஆம் திகதி வழக்கின் தீர்ப்பு பிரகடனப்படுத்தப்பட்டு, தொழிலாளர் நியாய சபையின் வழக்கு விசாரணைக்குச் சமூகமளிக்க முடியாமை குறித்து இலங்கை போக்குவரத்துச் சபையினால் முன்வைக்கப்பட்ட விடயங்களை ஏற்றுக்கொள்வதற்கு எவ்வித காரணமும் இல்லை எனவும், எனவே இந்தச் மீளாய்வு மனுவானது கட்டணங்களின்றி தள்ளுபடி | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செய்யப்பட்டுள்ளதாகவும் மனுதாரர்களால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(உ) சேவை முறிவின்றி தற்போதைய சம்பள மட்டத்தில் நிலைநிறுத்தி, 2015.12.01 ஆம் திகதி முதல் தங்களை மீண்டும் சேவையில் அமர்த்தி, இலங்கை போக்குவரத்துச் சபையினால் வைப்புச் செய்யப்பட்ட 21 மாத காலச் சம்பளம் தமக்குக் கிடைத்துள்ளதாகவும், 2010.02.01 முதல் 2015.11.30 வரை சேவையை இழந்திருந்த 70 மாதங்களில் 21 மாத சம்பளத்தைக் கழித்த பின்னர் மீதமுள்ள 49 மாதங்களுக்குரியதாக தமக்குச் சேர வேண்டிய நிலுவைச் சம்பளம் வழங்கப்படவில்லை எனவும், தமக்குரிய நிலுவைச் சம்பளத்தை வழங்குமாறும் மனுதாரர்களால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(ஊ) மேற்கூறிய மனுதாரர்கள் உள்ளடங்கலான 08 ஊழியர்களும் 2010 சனாதிபதித் தேர்தலின் பின்னர் 2010.02.01 திகதி கடமைக்குச் சமுகமளிக்கவில்லை எனவும், அதற்கமைய தாபன விதிக் கோவையின் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஏற்பாடுகளைப் பின்பற்றி இந்த 08 ஊழியர்களுக்கும் சேவையைக் கைவிட்டுச் சென்றமைக்கான கட்டளைகள் விடுக்கப்பட்டுள்ளதாகவும்.<br><br>(எ) இந்தக் கட்டளைக்கு எதிராக மேற்கூறிய 08 ஊழியர்களினால் நீர்கொழும்பு தொழிலாளர் நியாயசபையில் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டை விசாரணை செய்வதற்காக அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்த அதேவேளை, அழைப்பாணை கிடைக்கப்பெறாமை காரணமாக இலங்கை போக்குவரத்துச் சபை முன்னிலையாகவில்லை எனவும், இதனால் ஒருமுக விசாரணை நடத்தப்பட்டு நிலுவைச் சம்பளத்தைச் செலுத்துமாறு இலங்கை போக்குவரத்துச் சபைக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அக் கட்டளையின் பிரகாரம் ஒவ்வொரு ஊழியருக்கும் செலுத்தப்பட வேண்டிய நிலுவைச் சம்பளம் செலுத்தப்பட வேண்டும் எனவும்.<br><br>(ஏ) தொழிலாளர் நியாயசபையினால் 2010.09.15 ஆம் திகதி விடுக்கப்பட்ட அழைப்பாணை இலங்கை போக்குவரத்துச் சபைக்குக் கிடைக்கப்பெறவில்லை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எனவும், ஒருமுக கட்டளைக்கு எதிராக இலங்கை போக்குவரத்துச் சபையினால் மீளாய்வு விண்ணப்பமொன்று நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும்.<br><br>(ஐ) மேற்குறிப்பிட்ட 08 ஊழியர்களுள் மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு ஊழியர்களைத் தவிர ஏனைய நான்கு ஊழியர்களினால் இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தருக்கு 2015.02.24 ஆம் திகதிய மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட்டு, தொழிலாளர் நியாயசபையின் கட்டளையின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த நிலுவைச் சம்பளத்துடன் மீண்டும் சேவையில் அமர்த்துமாறும், மேன்முறையீட்டிற்காக இலங்கை போக்குவரத்துச் சபையானது தொழிலாளர் நியாயசபையில் வைப்புச் செய்த ஒரு வருட காலப் பணத்தை வழங்குவதாயின் வழக்குகளைச் சமரசம் செய்து கொள்வதற்கு இணக்கப்பாட்டைத் தெரிவிப்பதாக அறியத் தந்துள்ள அதேவேளை, அதற்காகப் பிரதம நிறைவேற்று | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உத்தியோகத்தர் அனுமதி வழங்கி, அந்த நான்கு ஊழியர்களையும் திவுலபிட்டிய டிப்போவில் மீண்டும் சேவையில் அமர்த்தியதுடன், அதற்கமைய அக்குறிப்பிட்ட 04 மீளாய்வு விண்ணப்ப வழக்குகளையும் இலங்கை போக்குவரத்துச் சபை வாபஸ் பெற்றுக்கொண்டுள்ளது எனவும்.<br><br>(ஒ) நீர்கொழும்பு மேல் நீதிமன்ற வழக்கின் கட்டளை 2015.09.03 ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டு மீளாய்வு மனுக்கள் கட்டணங்களின்றி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும், கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய மீளாய்வு வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து வழக்கு நிறைவுறும் காலம் வரையான நிலுவைச் சம்பளத்தை வழங்குவதற்கு எவ்வித ஏற்பாடுகளும் இல்லை எனவும், மேல் நீதிமன்றத்தினாலாவது நிலுவைச் சம்பளத்தை வழங்குவதற்கான கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தால் நிலுவைச் சம்பளத்தைச் செலுத்த முடியுமாக இருக்கும் எனவும், அதன்பின்னர் இந்த 04 உத்தியோகத்தர்களும் நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மீளாய்வுத் தீர்ப்பில் திருப்தியடையாது, பின்னோக்கிய சம்பளத்தை வழங்குமாறு கோரி நீர்கொழும்பு மாகாண மேல் நீதிமன்றத்தில் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மேன்முறையீடொன்றை சமர்ப்பித்துள்ளதாகவும், அது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது எனவும்.<br><br>(ஓ) மேலோட்டமாகப் பார்க்கையில் அரசியல் காரணங்களின் அடிப்படையில் மனுதாரர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது எனவும், இந்த ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக குழுவினால் வழங்கப்படும் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தாம் இணங்குவதாகவும்.<br><br>(ஔ) அரசியல் காரணங்களின் அடிப்படையில் மனுதாரர்களின் வாக்களிக்கும் உரிமையின் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளது என்பதும், அதற்கமைய 2010 சனாதிபதித் தேர்தலின் பின்னர் கடமைக்குச் சமூகமளிப்பதற்கான பொருத்தமான சூழல் திவுலபிட்டிய டிப்போ முகாமையாளர் உள்ளிட்ட குழுவினர் ஏற்படுத்திக் கொடுக்காமை மற்றும் அதன் காரணமாக கடமைக்குச் சமூகமளிக்க முடியாமற்போனதன் அடிப்படையில் சேவையைக் கைவிட்டுச் சென்றதற்கான கட்டளைகளை விடுத்ததன் மூலம் இந்த | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மனுதாரர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனவும்.<br><br>(க) தொழிலாளர் நியாயசபையின் கட்டளைக்கு எதிராக பிரதிவாதியான இலங்கை போக்குவரத்துச் சபை சமர்ப்பித்த மேன்முறையீடும் தொழிலாளர் நியாயசபையின் தலைவரினால் நிராகரிக்கப்பட்டுள்ளது என்பதும், அதன்பின்னர் நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வு மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பதும், அதற்கமைய தொழிலாளர் நியாயசபையினால் 2010.09.30 ஆம் திகதி வழங்கப்பட்ட கட்டளை வலுவிலுள்ளது எனவும்.<br><br>(ங) பிரதிவாதியான இலங்கை போக்குவரத்துச் சபையினால் இவ்வாறாக தொழிலாளர் நியாயசபையின் கட்டளைக்கு எதிராக மேன்முறையீடுகள் மற்றும் மீளாய்வுகளைச் சமர்ப்பித்தமையின் காரணமாக, தொழிலாளர் நியாயசபையினால் 2010.09.30 ஆம் திகதி வழங்கப்பட்ட கட்டளையை நடைமுறைப்படுத்த கணிசமான காலம் எடுத்தமையினூடாக மனுதாரர்களுக்குப் பாதிப்பு | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஏற்பட்டுள்ளது என்பதும், தொழிலை இழந்த முழுமையான சேவைக்காலத்திற்குமாக மனுதாரர்களுக்குச் உரித்தான நிலுவைச் சம்பளம் செலுத்தப்பட வேண்டும் எனவும். | |
| 38 | திரு. ஆர்.யூ.எம். சரத் ராஜகருணா COM/PP/2025/03 சமர்ப்பித்தவர்: கௌரவ ரவி கருணாநாயக்க, பா.உ. 2025.11.11ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்: MT/01/03/04/ PPC06 (புதிய) MT/10/1/3/pp2023/ 1199 (பழைய) திகதி: 2025.06.05 | 1999.12.15 ஆம் திகதி இலங்கை போக்குவரத்துச் சபையின் யட்டிநுவர டிப்போவில் நியமனம் பெற்று, 2002.09.01 ஆம் திகதி தொடக்கம் டிப்போ வீதிப் பரிசோதகராகச் சேவையாற்றிய மனுதாரர், தரம் V உதவி முகாமையாளர் (ஓட்டம்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக 2013 ஆம் ஆண்டில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்து அப்பதவிக்காகத் தெரிவு செய்யப்பட்ட போதிலும், அப்பதவி தொடர்பான பதவி உயர்வுக் கடிதம் தனக்குக் கிடைக்கவில்லை எனவும், எனவே தரம் V உதவி முகாமையாளர் (ஓட்டம்) பதவிக்கான பதவி உயர்வை வழங்குமாறும், அப்பதவிக்குரிய சம்பளத் திருத்தத்தை மேற்கொண்டு நிலுவைச் சம்பளத்தை வழங்குமாறும், தரம் V இற்கு பொருத்தமான | (அ) 2012 ஆம் ஆண்டில் தரம் V உதவி முகாமையாளர் (ஓட்டம்) பதவிக்காக உள்ளக ரீதியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டதாகவும் அதற்கான தகைமைகளைத் பூர்த்தி செய்திருந்ததால் அப்பதவிக்காக விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்ததாகவும் பின்னர் 2013 ஆம் ஆண்டில் நேர்முகத் தேர்வில் கலந்துகொண்டதாகவும், நேர்முகத் தேர்வு சபையினால் தனது தகைமைகள் பரிசோதிக்கப்பட்டதன் பின்னர் குறித்த பதவிக்கான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளதால் தனக்கு அப்பதவியை வழங்க முடியும் என நேர்முகத் தேர்வு பரீட்சை சபையினால் தெரிவிக்கப்பட்டதாக மனுதாரரால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(ஆ) நேர்முகப் பரீட்சையில் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய, இலங்கைப் போக்குவரத்துச் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு மற்றும் ஆட்சேர்ப்பு நடைவடிக்கைமுறை மற்றும் உள்ளீர்த்தல் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொண்டு, உயர் நீதிமன்றத்தில் விசாரணையிலுள்ள வழக்கின் இறுதித் தீர்ப்பையும் கருத்திற்கொண்டு, மனுதாரரினால் கோரப்படும் நிவாரணமான தரம் V உதவி முகாமையாளர் (ஓட்டம்) பதவியை வழங்குவதற்கான ஏற்பாடுகள் காணப்படின், மனுதாரருக்கு அப்பதவியை வழங்குமாறு விதந்துரைக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேறொரு பதவியில் தன்னை நியமிக்குமாறும் கோரி இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | தீர்மானிக்கப்பட்டவாறு தனக்கு கிடைக்கவிருந்த தரம் V உதவி முகாமையாளர் (ஓட்டம்) பதவி கிடைக்காத காரணத்தால் அப்பதவிக்குத் தன்னை நியமிக்குமாறு நிர்வாக அதிகாரிகளிடம் அவ்வப்போது கோரிக்கைகள் விடுத்தபோதிலும் நிர்வாக அதிகாரிகளால் குறித்த அப்பதவிக்குத் தாம் நியமிக்கப்படாமையினால் 2017 ஆம் ஆண்டில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றைத் தாக்கல் செய்ததாகவும் அந்த முறைப்பாடு விசாரிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் தரம் V உதவி முகாமையாளர் (ஓட்டம்) பதவிக்காகப் பொருத்தமான அதிகாரியொருவரைத் தெரிவு செய்வதற்காக நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் தான் சித்தியடைந்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னிலையில் இலங்கை போக்குவரத்து சபையின் நிர்வாக அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டதாக மனுதாரரால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(இ) நிறுவனத்தினால் தன்னை தரம் V உதவி முகாமையாளர் (ஓட்டம்) பதவிக்கு நியமிப்பது தாமதப்படுத்தப்பட்டதன் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மீது தற்போது தனது தொழிலில் சில படிகள் முன்னேற்றமடைவதற்கிருந்த வாய்ப்புகளை தாம் இழந்துள்ளதாகவும், 2013.08.01 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் தன்னை மேற்கூறிய பதவியில் நியமிக்குமாறும் மனுதாரரால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(ஈ) இலங்கை போக்குவரத்து சபையில் பெருமளவிலான பதவிகளுக்கு முறையான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் காணப்படவில்லை எனவும், அனைத்துப் பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகாரம் பெற்று, பதிற்கடமைகளில் பதவிகளை வகித்த அதிகாரிகளின் தகைமைகளைப் பரிசோதித்து, தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அதிகாரிகளை உள்ளீர்க்கும் செயன்முறை முன்னெடுக்கப்பட்டு வருவதாக.<br><br>(உ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஏற்பாடுகளுக்கமைவாக 2018.10.01 ஆம் திகதியன்று வகித்த பதவி / தரத்தின் அடிப்படையில் உள்ளீர்க்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் , உள்ளீர்க்கும் செயன்முறையின் போது ஏதேனும் அநீதி இழைக்கப்பட்ட அதிகாரிகளால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கும் இலங்கை போக்குவரத்து சபைக்கும் முன்வைக்கும் முறைப்பாடுகளுக்குத் தீர்வுகள் வழங்கப்பட்டு வருவதாகவும், மனுதாரரும் தனக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கும் இலங்கை போக்குவரத்து சபையின் தலைவருக்கும் மேன்முறையீடொன்றைச் சமர்ப்பிக்க முடியும் என்பதாக.<br><br>(ஊ) 2018.12.17 ஆம் திகதிக்குப் பின்னர் மனுதாரர் உள்ளிட்ட ஊழியர் குழுவொன்றுக்கு பதவி உயர்வுகள் மற்றும் பதிற்கடமை நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட உள்ளீர்த்தல் ஏற்பாடுகள் அடங்கிய சுற்றுநிருபத்திற்கு முரணாகவும் எவ்வித அனுமதியுமின்றியும் இலங்கை போக்குவரத்து சபையின் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அனைத்து வகையான பதவி உயர்வுகள், பதிற் கடமை நியமனங்கள் மற்றும் சம்பள ஏற்றங்களை வலுவற்றதாக்குமாறு கோரி இலங்கை போக்குவரத்து சபையின் ஊழியர்கள் குழுவொன்றினால் உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதோடு அவ்வழக்கு நடவடிக்கைகள் இன்னும் முடிவடையவில்லை என்பதாக.<br><br>(எ) எவ்வாறாயினும், தரம் V உதவி முகாமையாளர் (ஓட்டம்) பதவியானது 2018 ஆம் ஆண்டில் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், இலங்கை போக்குவரத்து சபையின் நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகள் நீண்ட காலமாக முறையற்ற விதத்தில் இடம்பெற்று வருவதாகவும், தற்போது அது தொடர்பில் நிலவும் பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டு ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகாரம் பெறப்பட்டு உள்ளீர்க்கும் ஏற்பாடுகளுக்கமைவாக உள்ளீர்க்கும் நடவடிக்கைகளை கட்டம் கட்டமாக இலங்கை போக்குவரத்து சபை மேற்கொண்டு | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வருவதாகவும்<br><br>(ஏ) 2018.12.17 ஆம் திகதிக்குப் பின்னர் சில ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பதவி உயர்வுகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குத் தொடர்பாக உயர் நீதிமன்றத்தினால் 2019.09.24 ஆம் திகதியன்று பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவொன்றின் மூலம், இலங்கை போக்குவரத்து சபை சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் வழங்கும் எந்தவொரு பதிற் கடமையையும் எவ்வகையிலும் பதவி உயர்வாக கருதக் கூடாது எனவும், எவ்விதமான சம்பள அதிகரிப்பையும் வழங்கக் கூடாது எனவும் அறிவித்துள்ள அதேவேளை நீதிமன்றத்தின் இறுதி உத்தரவு இதுவரை வழங்கப்படவில்லை என்பது | |
| **வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சு** | | | | |
| 39 | திருமதி கே. சமிலா பிரியங்கனீ குமாரி COM/PP/2025/424<br>சமர்ப்பித்தவர்: கௌரவ லக்ஷ்மன் நிபுண ஆரச்சி, பா.உ.<br>2025.11.17ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட் | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் களுத்துறை அலுவலகத்தில் கணினிப் பொறுப்பு இயக்குபவராகச் சேவையாற்றிய போது, பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட | (அ) 2022 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் போது முதற்கட்ட விசாரணையை நடாத்தி அதற்குரிய குற்றப்பத்திரிகை கையளிக்கப்பட்டு அது குறித்து முறையான ஒழுக்காற்று விசாரணையொன்றை | இச்சம்பவம் இடம்பெற்று தற்போது 03 வருடங்களுக்கும் அதிக காலம் கடந்து, மனுதாரர் பாதிக்கப்பட்டுள்ளமை யினால் மனுதாரர் தொடர்பில் நடத்தப்படும் முறையான ஒழுக்காற்று |

| | | | | |
|---|---|---|---|---|
| | டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்: MUDC&H/GA/PP/P 3/PPC-Vol IV<br><br>திகதி: 2025.09.09 | விசாரணையைத் தொடர்ந்து, 2022.06.09 ஆம் திகதி மனுதாரர் உள்ளிட்ட 10 பேரின் சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டதோடு, அதன் பின்னர் மூன்று வருடங்களுக்குப் பிறகு, அதாவது 2025.07.04 ஆம் திகதி மனுதாருக்கு குற்றப்பத்திரிகையொன்று கையளிக்கப்பட்டதாகவும், குற்றப்பத்திரிகை கையளிக்கப்பட்டு விசாரணை முடிவடைவதற்கு முன்னதாகவே ஏனையோர் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதோடு, அவர்களில் பெரும்பாலானோர் குறித்த குற்றச்சாட்டுகளிலிருந்து குற்றமற்றவர்களாக விடுவிக்கப்பட்டுள்ளமையால் மனுதாரருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும், இரண்டு பிள்ளைகளின் தாயான தாம் தொழில் இன்மையால் கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள காரணத்தால், தனக்கு நியாயத்தைப் பெற்றுத் தருமாறு கோரி மனுதாரர் இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | ஆரம்பிப்பதற்குச் சுமார் 03 வருடங்களும் 05 மாதங்களும் கொண்ட நீண்டகாலம் எடுக்கப்பட்டதாகவும் முறையான ஒழுக்காற்று விசாரணை 2025.10.27 ஆம் திகதி முதன்முதலாக நடத்தப்பட்டதாகவும், இவ்வாறு இந்த விசாரணையைத் தாமதப்படுத்தியதன் மூலம் தனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக மனுதாரரால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(ஆ) தற்போது பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளமையினால் இரு பிள்ளைகளின் தாயான தான் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதால் முறையான ஒழுக்காற்று விசாரணை முடிவடையும் வரை அரைச் சம்பளமாவது வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மனுதாரரால் முன்வைக்கப்பட்ட கூற்று.<br><br>(இ) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் களுத்துறை மாவட்ட அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்ட அறவீட்டுப் பற்றுச்சீட்டுப் புத்தகங்களைப் | விசாரணைக்கு முன்னுரிமை வழங்கி அதனைத் துரிதமாக நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விதந்துரைக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பயன்படுத்தி கடன்பெற்றோர்களுக்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுகளின் தரவுகளை மாற்றியும் மற்றும் கணினித் தரவுகளை மோசடியான முறையில் மாற்றியமைத்தும் பாரதூரமான நிதிக்குற்றத்தை இழைத்துள்ளமை தொடர்பாக உள்ளக கணக்காய்வாளரின் 2022.06.03 ஆம் திகதிய இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதப்புரைகளை அடிப்படையாகக் கொண்டு மனுதாரர் உட்பட இந்த மோசடியுடன் நேரடியாகத் தொடர்புபட்ட நான்கு அதிகாரிகளின் பணி 2022.06.09 ஆம் திகதி இடைநீக்கம் செய்யப்பட்டதாக.<br><br>(ஈ) உள்ளக கணக்காய்வாளரின் 2022.11.17 ஆம் திகதிய முதற்கட்ட விசாரணை அறிக்கையின் விதப்புரைகளை அடிப்படையாகக் கொண்டு இச்சம்பவத்துடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கு குற்றப்பத்திரிகைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வும், அதன் முதலாவது குற்றப்பத்திரிகை 2024 ஆம் ஆண்டில் வேறொரு அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், தற்போழுது மூவரின் முதற்கட்ட விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும், விசாரணை அதிகாரிகளின் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பற்றாக்குறையே இந்தச் செயன்முறை தாமதமடைவதற்குக் காரணமாக அமைந்துள்ளது என்பதாக.<br><br>(உ) 61 குற்றச்சாட்டுகளைக் கொண்ட குற்றப்பத்திரிகையொன்று 2025.07.04 ஆம் திகதி மனுதாரருக்கு ஒப்படைக்கப்பட்டதாகவும், அவ்வனைத்துக் குற்றச்சாட்டுகளுக்கும் தான் குற்றமற்றவர் எனத் தெரிவித்து 2025.07.12 ஆம் திகதி அவர் பதிலளித்துள்ளதாகவும், மனுதாரர் உள்ளிட்ட 04 பிரதான குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் இருப்பதாகவும், அதற்கமைய மனுதாரர் தொடர்பான முறையான ஒழுக்காற்று விசாரணை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், 2025.10.27 மற்றும் 2025.11.17 ஆகிய திகதிகளில் மேற்படி விசாரணையை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.<br><br>(ஊ) இந்த விசாரணையானது நிதி மோசடி தொடர்பில் நடத்தப்படும் ஒரு முறையான விசாரணை என்பதால் அந்த விசாரணை நடவடிக்கைகள் நிறைவடையும் வரையில் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மனுதாரரை மீண்டும் சேவையில் அமர்த்த முடியாது எனவும், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய மனுதாரருக்கு அரைச் சம்பளம் வழங்கவும் முடியாது என்பதாக.<br><br>(எ) 2022 ஆம் ஆண்டில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பில் மனுதாரருக்கு (பெண் மனுதாரர்) குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டு அது சம்பந்தமாக முறையான ஒழுக்காற்று விசாரணையை ஆரம்பிப்பதற்கு சுமார் மூன்று வருடங்கள் போன்றதொரு நீண்ட காலம் எடுத்தமையின் காரணமாக மனுதாரருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக. | |

| | | | | |
|---|---|---|---|---|
| **கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு** | | | | |
| 40 | திருமதி எல். பீ. விக்ரமசிங்க<br>COM/PP/2025/32<br>சமரப்பித்தவர்; கௌரவ ரத்ன கமகே பா.உ. 2025.11.21 ஆம் திகதி விசாசணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல. 2/15/27/210<br><br>திகதி: 2025.04.02 | விவசாயப் பாதையொன்றை அமைப்பதற்காக மனுதாரரின் காணியை அரசாங்கம் சுவீகரித்தமையால் வசிப்பிடம் உட்பட அனைத்து பயிர்ச்செய்கைகளையும் இழந்து 7 குடும்ப அங்கத்தவர்களுடன் வேறு வீடொன்றுக்கு வசிப்பதற்குச் செல்லவேண்டி ஏற்பட்டதாகவும், காணி சுவீகரிக்கப்பட்டமைக்கான நட்டஈட்டை | (அ) 1982 ஆம் ஆண்டில் விவசாயப் பாதையொன்றை அமைப்பதற்காக மனுதாரர் வசித்த காணியில் இருந்து ஒரு பகுதியை அரசாங்கம் சுவீகரித்ததாகவும், விவசாய வீதியை அமைக்கும்போது எல்லையில் அமைந்திருந்த தமது வீட்டுக்கு சேதம் ஏற்பட்டதாகவும்,<br>வசிப்பதற்குப் பொருத்தமற்ற சூழல் காரணமாக தானும் குடும்பத்தினரும் வேறொரு இடத்தில் வசிப்பதற்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும்,<br>சுவீகரிப்பட்ட காணிக்கு | 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி சுவீகரிப்புத் (திருத்தச்) சட்டத்தின் 39 ஆம் பிரிவிற்கு அமைவாக, மனுதாரரின் தாயிடம் இருந்து அரசாங்கம் சுசீகரித்த காணியை, பாராதீனப்படுத்துவதற்கும், அதற்கமைவாக வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல் மூலம் காணியின் உரித்தை மனுதாரருக்கு வழங்குவதற்கும், சவீகரிக்கப்டட காணியின் எல்லைகள் மற்றும் நில அளவையினை சரியான முறையில் நிர்ணயம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழங்குவதை அலுவலர்கள் புறக்கணித்துள்ளதாகவும், குறித்த காணிக்கு ரூ. 80 இலட்சம் நட்டஈடாக வழங்குமாறும் கோரி மனுவைச் சமர்பித்துள்ளார். | அரசாங்கத்திடம் இருந்து எந்தவிதமான நட்டஈடும் கிடைக்கவில்லை என்பதாகவும் குறிப்பிட்டு மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள்,<br><br>(ஆ) தான் உட்பட குடும்ப அங்கத்தவர்கள் வசித்த காணியின் மொத்த நிலப்பரப்பு 54 பர்ச்சர்ஸ் என்பதுடன் காணியின் பூர்வீக உரிமையாளர் தனது தாய் என்றும், விவசாயப் பாதைக்கு சுவீகரிக்கப்பட்ட காணி தவிர்ந்த எஞ்சிய காணிகளை பிற்பட்ட காலத்தில் தனது தாய் விற்பனை செய்ததாகவும், தற்போது தனது பெற்றோர் இறந்துள்ளதாகவும், தான் உட்பட ஐந்து பேர்களைக் கொண்ட குடும்ப அங்கத்தவர்களில் சகோதரி ஒருவர் இறந்துள்ளதாகவும் அவர்களில் இன்றளவில் நான்கு பேர்கள் மாத்திரம் உயிர் வாழ்வதாகவும், காணி சுவீகரிப்புச் செய்கையில் அரசாங்கத்தினால் தமது தாய்க்கு எந்தவிதமான நட்டஈட்டுத் தொகையும் வழங்கவில்லை என்றும், இழந்துள்ள காணிகளுக்கான நட்டஈடாக ரூ. 80 இலட்சம் தொகையினை வழங்குமாறு மனுதாரரால் முன்வைத்துள்ள விடயங்கள்<br><br>(இ) விவசாயப் பாதையொன்றை | செய்வதற்கும், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு, அதுரலிய பிரதேச செயலகம், கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்களம் –மாத்தறை மாவட்ட அலுவலகம், அதுரலிய கமநல சேவைகள் நிலையம், கிராம அலுவலர் மற்றும் பொலிசாரையும் இணைத்துக் கொண்டு காணியின் அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விதந்துரைக்கப்பட்டது.<br><br>காணியின் உரித்தை மனுதாரருக்கு வழங்குவதற்கான விருப்பத்தை தெரிவிக்கும் சத்தியக் கடதாசி, காணியின் உரித்து தொடர்பாக உரிமை கோரும் மனுதாரரின் ஏனைய குடும்ப அங்கத்தவர்களிடம் பெற்றுக்கொண்ட சத்தியக் கடதாசியை அதுரலிய பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்குமாறும் மனுதாரருக்கு விதந்துரைக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அமைப்பதற்காக கமநல சேவைகள் திணைக்களத்திற்கு சுவீகரிப்பதற்காக இஹல அதுரலிய கிராமசேவகர் பிரிவிலுள்ள பட்டகொடயஹேன எனும் காணியில் 0.0319 ஹெக்டயர் (12.6 பேர்ச்சர்ஸ்) பரப்பளவு, 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி சுவீகரிப்புச் (திருத்தச்) சட்டத்தின் 38 ஆம் பிரிவு (அ) உபவிதிக்கு அமைவாக 1983.01.11 ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகையின் சுவீகரிப்பு கட்டளையின் மூலமாக மாத்தறை மாவட்டத்தின் மாவட்ட காணி அலுவலருக்கு மேற்குறித்த காணிப் பகுதி கையளிக்கப்பட்டுள்ளதாகவு ம்<br><br>(ஈ) 1983.06.14 ஆம் திகதி மாத்தறை கச்சேரி காணியின் ஆட்சி உரிமையை பெற்று, அன்றைய தினமே கமநல சேவைகள் உதவி ஆணையாளரிடம் ஆட்சி உரிமையை ஒப்படைத்துள்ளதாகவும், காணி சவீகரிப்புத் தொடர்பான பழைய கோப்பில் காணப்படுகின்ற ஆவணங்களின் அடிப்படையில் சவீகரிக்கப்பட்ட காணியில் காணப்பட்ட மரங்களின் எண்ணிக்கை மற்றும் கல்லறையொன்று காணப்பட்டமை தொடர்பாக ஆவணப்படுத்தப்பட்டிருப்ப தாதாகவும், சுவீகரிக்கப்பட்ட | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | காணியில் எந்தவிதமான அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொண்டமை தொடர்பாக அவதானிக்க முடியவில்லை என்றும், தற்போது பயன்படுத்தப்படாத காடு படர்ந்துள்ள நிறைந்துள்ள காணியாக காணப்படுவதாகவும், விவசாயப் பாதையொன்று அமைக்கப்படவில்லை என்றும், குறித்த வயல் வெளிக்குச் செல்வதற்கான வேறு மாற்றுப் பாதையொன்று பயன்படுத்துவதையும் கள விஜயத்தின்போது அவதானித்ததாகவும்<br><br>(உ) மனுதாரரின் தாயின் பங்குபற்றலுடன் 1984.07.26 ஆம் திகதி நட்டஈடு தொடர்பான விசாரணை இடம்பெற்றதாகவும், அவரது காணியில் அரசாங்கம் சவீகரித்த 12.6 பர்ச்சர்ஸ் காணிக்குரிய அரசாங்கத்தின் மதிப்பீட்டு நட்டஈட்டுத் தொகை ரூ. 2000 எனவும்,<br><br>(ஊ) காணி சுவீகரிப்புச் செய்கையில் காணி உரிமையாளரான மனுதாரரின் தாய்க்கு நட்டஈடு செலுத்தியதாக அதுரலிய பிரதேச செயலகத்தில் காணப்படுகின்ற ஆவணங்கள் மூலம் அறிந்துகொள்ள | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | முடியவில்லை என்றும், நட்டஈட்டுத் தொகையை பெற்றுக் கொள்வது தொடர்பாக அதுரலிய பிரதேச செயலகத்தினால் அடுத்தடுத்து கமநல சேவைகள் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்திய ஆவணக் கோவையில் காணப்படுவதாகவும், அதற்கமைவாக காணி உரிமையாளருக்கு அரசாங்கம் நட்டஈடு செலுத்தவில்லை என்பதை கருத முடியுமெனவும்<br><br>(எ) மனுதாரரின் தாயிடம் இருந்து அரசாங்கம் சுவீகரித்த காணிக்காக நட்டஈட்டுத் தொகை தாய்க்கு வழங்கப்படவில்லை என்றும், கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்களம் சுவீகரிக்கப்பட்ட நோக்கத்திற்காக குறித்த காணியை பயன்படுத்தவில்லை என்றும்<br><br>(ஏ) மனுதாரருக்கு நிவாரணம் வழங்குவதற்கு இரண்டு மாற்று வழிமுறைகள் காணப்படுவதாகவும், அதாவது காணி சுவீகரிப்புச் செய்கையில் வர்த்தமானப் பத்திரிகை வெளியிடப்பட்ட திகதியில் மதிப்பீடு செய்யப்பட்ட நட்டஈட்டுத் தொகை மற்றும் கட்டளை பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட திகதி முதல் நட்டஈடு செலுத்தும் திகதி | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வரையில் கணிப்பீடு செய்யும் வட்டியை மாத்திரம் காணியின் பின் உரிமையாளர்களு செலுத்துவதற்கான சாத்தியம் காணப்படுவதாகவும், அவ்வாறு இல்லாவிட்டால் காணி சுவீகரிக்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமையாலும் நட்டஈடு இது வரையிலும் செலுத்தாதன் காணத்தினாலும் சுவீகரிக்கப்பட்ட காணியை பாராதீனப்படுத்த முடியும். | |
| 41 | திருமதி. எச்.ஏ. ரமணி<br>COM/PP/2025/242<br>சமர்ப்பித்தவர்: கௌரவ அருண் ஹேமச்சந்திரா பா. உ.,<br>விசாரணை மேற்கொள்ளப்பட்ட திகதி: 2025.11.21<br>அமைச்சு தொடர்பு இல : 2/15/27/202<br>திகதி 2024.03.18 | மனுதாரரும் அவரது இரண்டு மகள்களும் 33 ஆண்டுகளாக குடியிருந்த இல. 07/110, 6 ஆவது ஒழுங்கை வெளிச்ச வீட்டு வீதி கந்தளாய் எனும் முகவரியில் காணப்படுகின்ற காணிக்கு, மனுதாரர் மற்றும் பிள்ளைகளை 13 ஆண்டுகளுக்கு முன்னர், கைவிட்டுச் சென்றுள்ள கணவர் உரிமை கோருவதாகவும்,<br>மேலும் 2010 ஆம் ஆண்டு முதல் அந்த வீட்டில் அவர் குடியிருக்கவில்லை என்றும் எந்தவொரு அபிவிருத்தி பணியையும் மேற்கொள்ளவில்லை | (அ) மனுதாரரின் கணவர் 2010 ஆம் ஆண்டிலிருந்து குறித்த காணிக்கு குத்தகை செலுத்தாததால் குத்தகை உறுதியை இரத்துச் செய்யுமாறு விதந்துரைத்து கந்தளாய் உதவிக் காணி ஆணையாளர் 2022.07.27 ஆம் திகதிய கடிதம் மூலம் காணி ஆணையாளர் நாயகத்திற்கு கடிதமொன்றை ஆற்றுப்படுத்தி உள்ளதாகவும்<br>(ஆ) அரசாங்க காணிகளை சட்டவிரோதமாக அனுபவிக்கும் நபர்களுக்கு 30 வருட காலக் குத்தகையின் அடிப்படையில் காணி முறைப்படுத்தும் அங்கீகாரத்தின் கீழ், 1995 ஆம் ஆண்டினை அடிப்படையாகக் கொண்டு, பிரச்சினைக்குரிய காணியை, மனுதாரரின் கணவரின் | குறிப்பிட்ட காணி தொடர்பாக புதிய காணிக் கச்சேரியை நடாத்தி, குத்தகை பெறுநர், மனுதாரர் மற்றும் மூத்த மகள் ஆகியோரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் மனுதாரரின் இளைய மகளுக்கு மேற்படி காணிக்கான அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விதந்துரைக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | என்றும், குத்தகை செலுத்தாமையால் குத்தகை நிபந்தனைகளும் மீறப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் மனுதாரர், திருமணமாகாத தனது இளைய மகளின் பெயரில் காணி அனுமதிப் பத்திரத்தை தயாரித்து வழங்குமாறு கோரி குறித்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | பெயரில் 0.0250 ஹெக்டயர் (10 பேர்ச்சஸ்) குடியிருப்பதற்கும் 0.0655 ஹெக்டயர் (25.9 பேர்ச்சஸ்) விவசாய நோக்கங்களுக்காகவும் 2009.05.12 ஆம் திகதி குத்தகை அடிப்படையில் அங்கீகாரம் வழங்கியதாகவும், 2009.11.03 ஆம் திகதிய உடைமை ஒப்படைப்பு கடிதத்தை ஆற்றுப்படுத்தியுள்ளதாகவும்<br><br>(இ) மனுதாரரின் கணவருக்கு வழங்கியுள்ள நீண்ட கால குத்தகை அனுமதிப்பத்திரத்தின் காலப்பகுதி தற்போது நிறைவடைந்துள்ளதால், மனுதாரர் தனது இளைய மகளின் பெயரில் குத்தகை அனுமதிப்பத்திரத்தை தயாரித்து வழங்குமாறு கோரி காணி ஆணையர் நாயகத்திற்கு கோரிக்கை முன்வைத்துள்ளதாகவும், குறிப்பிட்ட காணியின் குத்தகை பெறுநரான அவரது கணவரும் தான் நிர்மாணித்த வீடு மற்றும் காணிக்கு நுழைவதற்கான சட்டரீதியான அனுமதியை வழங்குமாறு கோரி தலைமை அலுவலகத்திற்கு கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளதாகவும்,<br><br>(ஈ) கந்தளாயில் அமைந்துள்ள மாகாணங்களுக்கு இடையிலான காணி அலுவலகத்தின் குடியேற்ற அலுவலர் 2023.01.17 ஆம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திகதி மேற்கொண்ட கள ஆய்வின் போது குத்தகை பெறுநரின் மனைவியான மனுதாரர், அவரது உறவினரான பெண் ஒருவருக்கு குறித்த வீட்டை வாடகையின்றி வசிப்பதற்காக வழங்கியுள்ளமை தொடர்பாக அப்போது வீட்டில் இருந்த நபர் ஒருவர் வாய்மூலம் தெரிவித்ததாக கந்தளாய் உதவிக் காணி ஆணையாளர் அறிவித்துள்ளதாகவும்<br><br>(உ) குத்தகைதாரரின் மறைவுக்குப் பின்னர் அவரது இளைய மகளுக்கு காணியை வழங்குவதற்கு தான் விரும்புவதாக 2023.01.25 ஆம் திகதி குத்தகைதாரர் கந்தளாய் உதவிக் காணி ஆணையாளர் அலுவலகத்தில் வாக்குமூலம் அளித்துள்ளதாக கோப்பில் காணப்படுவதாகவும்<br><br>(ஊ) மேற்படி பிரச்சினை தொடர்பாக மனுதாரர் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஒம்புட்ஸ்மன்) குறித்த பிரச்சினை தொடர்பாக வழங்கிய முறைப்பாட்டை விசாரணை செய்த பின்னர் குத்தகை பெறுநரான மனுதாரரின் கணவர், இளைய மகளுக்கு குறித்த காணியை வழங்க முடியும் என்பதாக தீர்வு வழங்கியுள்ளதாகவும்<br><br>(எ) குடியிருக்கும் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | காணிப்பகுதியின்அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முன்னர் மற்றும் அதன் பின்னரான பெறுமதியை கணிப்பீடு செய்து வழங்குமாறு காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம் 2010ஆம் ஆண்டில் மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அறிவித்துள்ள போதிலும் இதுவரையில் அதன் அபிவித்தி பெறுமதியை கணிப்பீடு செய்து வழங்கவில்லை என்றும், அதனடிப்படையில் குத்தகை பெறுநருக்கு உரியதான காணிப் பகுதிக்குரிய குத்தகையை செலுத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைக்காமல் போய் இருப்பதாகவும், காணி ஆணையாளர் நாயகம் 2023.06.09 ஆம் திகதி குத்தகை பெறுநர் மற்றும் மனுதாரரை அழைத்து விசாரணை மேற்கொண்டுள்ளதாகவும், அதற்கமைவாக 14 நாட்களுக்குள் குத்தகை தொகையை செலுத்தினால் குத்தகை பெறுநருக்கு குத்தகை உரிமையை வழங்க முடியமென முடிவு செய்துள்ளதாகவும், அதற்கமைவாக விவசாய நோக்கத்திற்கான காணிப் பகுதிக்கு மாத்திரம் குத்தகை பெறுநர் 2023.06.14 ஆம் திகதி குத்தகை தொகையைச் செலுத்தி அனுமதி பெற்றுள்ளதாகவும் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | (ஏ) இன்றளவில் இரண்டு காணிப் பகுதிகளினதும் குத்தகைக் காலம் நிறைவடைந்துள்ளதாகவும், குடியிருக்கும் காணிப் பகுதிக்கு குத்தகை பெறுநர் அதற்கான குத்தகை தொகையை செலுத்தாமையால் அக்காணிப் பகுதி அரசுடமையாகி உள்ளதாகவும், தற்போதுள்ள சிக்கலான நிலைமையில் குத்தகை காலத்தை நீடிக்க முடியாது என்றும்<br><br>(ஐ) மனுதாரர் சமர்ப்பித்துள்ள பிரச்சினை தொடர்பில் அரச நிறுவனத்தினால் மனுதாரருக்கு பாதிப்பு எற்படவில்லை என்றும்<br><br>(ஒ) குத்தகை அனுமதியை சட்டரீதியாக இரத்துச் செய்து புதிய காணிக் கச்சேரிக்கு அமைவாக தற்போதைய மதிப்பீட்டை மேற்கொண்டு, குத்தகை உரித்து தொடர்பாக முன்வரும் தரப்பினர்கள் சமர்ப்பிக்கின்ற தரவுகளின் அடிப்படையில், காணியின் குடியிருப்பை உறுதி செய்து சரியான தரப்புக்கு காணியின் குத்தகை அனுமதியை வழங்குவதற்கான இயலுமை காணப்படுவதாகவும்<br><br>(ஓ) இன்றளவில் இரண்டு காணித் துண்டுகளினதும் குத்தகைக் காலம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நிறைவடைந்துள்ளதாகவும், குடியிருக்கும் காணிக்குரிய குத்தகை தொகையை பெறுநர் செலுத்தாமையால் குறித்த காணிப்பகுதி அரசுடமையாகி இருப்பதாகவும், மனுதாரர் தனது செலவில் குடியிருக்கும் காணியில் வீட்டை நிர்மாணித்துள்ளமை உறுதியாகி இருப்பதாகவும், குறித்த வீட்டில் மனுதாரர் மற்றும் இளைய மகள் வசிப்பதாகவும், குத்தகை பெறுநர் 15 வருடங்களாக குறித்த வீட்டில் குடியிருக்கவில்லை என்பது வாக்காளர் பெயர் பட்டியல் மூலம் உறுதியாகியுள்ளது என | |
| **கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு** | | | | |
| 42 | திரு. நந்ததாச ஜயவீர<br>COM/PP/2025/210<br>சமர்ப்பித்தவர்; கௌரவ உபுல் கித்சிறி பா.உ.,<br>விசாரணை மேற்கொள்ளப்பட்ட திகதி;<br>2025.11.24<br>அமைச்சு தொடர்பு இல: MSVRI/ADM/03/05 -IV<br>திகதி: 2025.04.24 | மனுதாரர், தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்ப அமைச்சில் 14 ஆண்டுகள் ஊழியராகப் பணியாற்றியுள்ளதுடன் 2020.07.07ஆம் திகதியில் 60 வயது பூர்த்தியானதுடன் ஓய்வு பெற்றதாகவும், விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கு சம்பளத்திலிருந்து தனது பங்களிப்புத் தொகையினை அறவிவீடு செய்துள்ள போதிலும் இது வரையில் ஓய்வூதியம் | (அ) மனுதாரர், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சியளித்தல் திணைக்களத்திற்குச் சொந்தமான எம்பிலிப்பிட்டிய தொழில்நுட்பக் கல்லூரியில் 2001.06.19முதல் 2001.12.31ஆம் திகதி வரையில் பதிலீட்டு ஊழியராகப் பணியாற்றியுள்ளதுடன், பின்னர் அப்போதைய தொழில் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சுச் செயலாளரின் 3/11/17ஆம் இலக்க மற்றும் 2006.03.29 ஆம் திகதிய கடிதத்திற்கு அமைவாக தொழில்நுட்பக் கல்வி | தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சியளித்தல் திணைக்களத்தில் பணியாற்றியுள்ள மனுதாரர் உட்பட தொழிலாளர்களாக பணியாற்றியுள்ள போதிலும் ஓய்வூதிய உரித்து கிடைக்காதுள்ள ஏனைய தொழிலாளர்களுக்கும் ஓய்வூதிய உரித்தை பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சரவையின் விசேட அங்கீகாரத்தை பெறுவதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனத்தை தயார் செய்து சமர்ப்பிக்குமாறு விதந்துரைக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழங்கப்படவில்லை என்பதாகத் தெரிவிக்கும் மனுதாரர் தனது ஓய்வூதியத்தை வழங்குமாறு கோரி இம்மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | மற்றும் பயிற்சியளித்தல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DTET/04/P.N./N.S.P. மற்றும் 2006.04.07 ஆம் திகதிய கடிதம் மூலம் 2006.04.19 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எம்பிலிப்பிட்டிய தொழில்நுட்பக் கல்லூரியில் நிரந்தர ஊழியராக நியமிக்கப்பட்டுள்ளார்.<br><br>(ஆ) மனுதாரர் மேற்படி நிரந்தர ஓய்வூதியப் பதவிக்கு நியமிக்கப் பட்டபோது 45 வயதுக்கு மேற்பட்டவராக இருந்துள்ளதுடன் அவரது அமைய கடமைக் காலப்பகுதியை கவனத்திற் கொள்கையில் 2001.12.31ஆம் திகதி முதல் 2006.04.27ஆம் திகதி வரையில் 4 ஆண்டுகளுக்கும் மேலாக பணி இடைவெளியொன்று இடம்பெற்றுள்ளது.<br><br>(இ) மனுதாரர் 60 வயது பூர்த்தியானதன் காரணமாக அரச பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள போதிலும் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் ஓய்வூதிய அறிவுறுத்தல் கடித இல. 5/2016 இன் (உ) மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைவாக, மேற்படி ஊழியருக்கு உரித்தான ஓய்வூதியத்தை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வழங்குவதற்கு முறையான அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதால் குறித்த ஊழியர் உட்பட 45 வயதை பூர்த்தியானதன் பின்னர் அரச சேவையில் நிரந்தர நியமனம் பெற்றுக்கொண்டு தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சியளித்தல் திணைக்களத்தில் இணைக்கப்பட்டு கடமையாற்றியுள்ள இன்னும் சில ஊழியர்களின் பெயர்களை உள்ளடக்கிய 2023.06.15ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தை கௌரவ கல்வி அமைச்சர் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்தாகவும்<br><br>(ஈ) இது தொடர்பில் ஆற்றுப்படுத்திய அமைச்சரவைச் செயலாளரின் அமைப/23/0136/620/003/-1 ஆம் இலக்க மற்றும் 2024.03.19ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் மனுதாரர் அரச சேவையில் நிரந்தர நியமனம் பெறும்போது, அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான அதிகபட்ச வயது எல்லையை விஞ்சியதன் காரணத்தால் ஓய்வூதிய உரித்தை வழங்காமல் இருப்பதற்கு தீர்மானிப்பட்டதாகவும்<br><br>(உ) 45 வயதுக்குப் பின்னர் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அரச பணியில் நிரந்தர நியமனம் பெற்ற ஊழியர்களுக்கு ஓய்வூதிய உரிமை வழங்குவது தொடர்பாக வெளியிட்டுள்ள பொது நிருவாக சுற்றறிக்கை கடித இல. 01/2024 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள், தற்காலிக, அமைய (நாளாந்த), பதிலாள், ஒப்பந்தம் அல்லது சலுகை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் பொது நிருவாக சுற்றறிக்கை இல. 25/2014, 25/2014 (I), 29/2019 இன் கீழ் நியமனம் வழங்கப்பட்ட அலுவலர்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும் என்பதால், மனுதாரருக்கு மேற்படி ஏற்பாடுகளை ஏற்புடையதாக்க முடியாது எனவும்<br><br>(ஊ) அமைய ஊழியராக நியமனம் கிடைக்கப் பெற்று 2001.12.31 ஆம் திகதி வரையில் கடமையாற்றியதாகவும், 2002.01.01 ஆம் திகதி முதல் தனது பணி திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக இடை நிறுத்தப்பட்டதாகவும், இதனை அரசியல் ரீதியான பழிவாங்கலாகக் கருதி தன்னால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு கடிதமொன்று | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வழங்கியதாகவும், பணி இடைவெளி ஏற்பட்டுள்ளமையானது தனது தவறின் காரணமாக ஏற்பட்டதல்ல என்றும் சம்பந்தப்பட்ட திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அறிவித்தலின் அடிப்படையில் பணியை நிறைவுசெய்து மனுதாரர் விடயங்களை முன்வைத்ததாகவும்<br><br>(எ) மேற்படி கோரிக்கைக்கு அமைவாக 2001 ஆம் ஆண்டில் அமைய அடிப்படையில் பணியாற்றியதன் காரணமாக 2006.04.07 ஆம் திகதிய நியமனக் கடிதம் தனக்கு வழங்கப்பட்டதாகவும், விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான பங்களிப்புத் தொகையினை தன்னிடம் இருந்து அறவீடு செய்ததாகவும், ஓய்வூதிய உரித்து கிடையாது என்பது தொடர்பில் அறிந்திருக்கவில்லை என்றும், அரச சேவையில் நியமனம் கிடைத்தமையால் மற்றொரு தொழிலில் ஈடுபட்டு ஊழியர் சேமலாப நிதியை பெறுவதற்கான சந்தர்ப்பமும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் மனுதாரர் தனது நிலைமை தொடர்பாக கவனத்திற் கொண்டு கருணைகூர்ந்து தனக்கு நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குழுவிடம் கோரியதாகவும். | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | (ஏ) மனுதாரர், அப்போதைய தொழில் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப பயிற்சியளித்தல் அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்துடன் 2006.04.19 ஆம் திகதி நிரந்தர நியமனம் பெற்றுள்ளதாகவும், மனுதாரரிடமிருந்து விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வுதியத்திற்கான பங்களிப்புத் தொகை அறவீடு செய்துள்ளதாகவும், மனுதாரர் பதிலாள் ஊழியர் பதவிக்கு 2001.06.19ஆம் திகதி நியமனம் பெற்று அரசியல் பழிவாங்கல் காரணமாக தனது தொழிலை இழந்ததாகவும், மனுதாரரைப் போன்ற அதே பதவியில் நியமனம் பெற்று ஓய்வூதிய உரித்துக் கிடைக்காத இன்னும் பல ஊழியர்கள் காணப்படுவதாகவும் | |
| **வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு** | | | | |
| 43 | திருமதி டபிள்யூ. சீலா காந்தி<br><br>COM/PP/2025/341<br><br>சமர்ப்பித்தவர்; கௌரவ தேவானந்த சுரவீர, பா.உ.<br><br>2025.11.24 ஆம் திகதி விசாரணை | கடவுச்சீட்டு இல. J.O. 382408 மற்றும் குவைத் நட்டஈட்டு இல. 95498 இற்கு அமைவாக மனுதாரருக்குச் செலுத்த வேண்டியுள்ள சுமார் ரூ. 20 இலட்சம் நட்டஈட்டுத் தொகையை வெளிநாட்டு | (அ) 2001.04.19ஆம் திகதி 'லங்காதீபா' பத்திரிகையில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் பிரசுரிக்கப்பட்ட குவைத் நட்டஈட்டு தொடர்பாக பதிவு செய்தவர்களின் பெயர் பட்டியலில் தனது பெயர் டபிள்யூ. காந்தி எனவும், கடவுச்சீட்டு இல. J.O. 382408 எனவும், நட்டஈட்டு | மனுதரர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ரூ. 75000/- இழப்பீட்டு பட்டியலில் உள்ளடங்கி இருந்துள்ளமையால் மேற்படி ரூ.75,000/- இழப்பீட்டுத் தொகையை மனுதாரருக்கு வழங்குமாறு விதந்துரைக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல. FE/ADM/06/01/01/04/2023<br><br>திகதி : 2025.05.28 | வேலைவாய்ப்பு பணியகம் பல்வேறு காரணங்களைக் குறிப்பிட்டு செலுத்தாமல் இருப்பதாகவும், இருப்பினும் மேற்படி பணியகத்தால் 2001.04.19 ஆம் திகதி “லங்காதீப” பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட குவைத் நட்டஈடு தொடர்பான அறிவித்தலில் மனுதாரரின் பெயர் குறிப்பிடப்பட்டு இருந்ததகவும், இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்த போதிலும் மேற்படி ஆணைக்குழுவின் கட்டளையுடன் கூடிய 2024.07.12 ஆம் திகதிய கடிதம் 2024.08.12 திகதி கிடைத்தமையால் மேன்முறையீடு செய்வதற்கான சந்தரப்பமும் தவறவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் மனுதாரர் இழந்துள்ள நட்டஈட்டைப் பெற்றுத் தருமாறு கோரி இந்த மனுவைச் சமர்ப்பித்துடுள்ளார் | இல. 95498 எனவும் குறிப்பிடப்பட்டு இருந்ததாகவும், அதற்கமைவாக நட்டஈட்டு இல. 95498 தொடர்பான கோப்பு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் இருந்திருக்க வேண்டுமென மனுதாரர் தெரிவித்ததாகவும்<br><br>(ஆ) 1989 ஆம் ஆண்டில் குவைத் நாட்டிற்கு வேலைவாய்ப்புக்குச் சென்றுள்ளதுடன், அங்கு வசித்து வந்த எகிப்திய நாட்டவரின் கீழ் பணிபுரிந்தாகவும், அதற்கிடையில் ஏற்பட்ட குவைத் யுத்தம் காரணமாக அவரது எகிப்திய நாட்டைச் சேர்ந்த தொழில் வழங்குநரின் குடும்பத்துடன் தன்னை அவரது சொந்த நாடான எகிப்துக்கு அழைத்துச் சென்றதாகவும், அப்போது தொழில் வழங்குநரின் குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களும் அகதிகளாக காணப்பட்டதாகவும் தனக்கு பாதுகாப்பு மாத்திரம் கிடைத்ததாகவும், விசா மற்றும் கடவுச்சீட்டை பெற்றுக்கொடுத்த போதிலும் சம்பளம் வழங்கவில்லை என்றும், மனுதாரர் மீண்டும் 1993 ஆம் ஆண்டில் இலங்கைக்கு திரும்பியதாகவும், மனிதாபிமான உயிர் பாதுகாப்பு உதவி மட்டுமே | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தனக்கு கிடைத்த தாகவும், சம்பளம் வழங்கியிருப்பின் சமர்ப்பிப்பதற்கான சாட்சிகள் இருந்திருக்கும் எனவும், ஆனால் சம்பளம் வழங்கப்படாமையால் எழுத்து மூலமான சாட்சிகளை சமர்ப்பிக்க முடியாமல் இருப்பதாக மனுதாரர் தெரிவித்தாகவும்<br><br>(இ) 1990 - 1991 குவைட் – ஈராக் யுத்தத்தின் போது, சுமார் 120,000 இலங்கையர்கள் குவைத் நாட்டில் பணிபுரிந்துள்ளதுடன் அவர்கள் தொழில் மற்றும் சொத்துக்களை இழந்து பேரழிவுக்குள்ளானதாகவும், மேலும் இந்தப் பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு ஐக்கிய நாடுகள் நட்டஈட்டு ஆணைக்குழு (UNCC) 1994.12.31ஆம் திகதி வரையில் நட்டஈடு கோருவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியதாகவும், மேலும், நட்டஈடு வழங்குவதற்காக கவனத்திற்கொள்ளும் காலப்பகுதியாக 1990.08.02 ஆம் திகதி முதல் 1991.03.02 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் குவைத் நாட்டிலிருந்து வெளியேறி, தொழில் மற்றும் வருமானங்களை இழந்த, சொத்துக்கள் மற்றும் பணத்தை இழந்த, இறப்பு, | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உடல் காயங்கள், துன்புறுத்தல்கள் போன்ற இழப்புகளுக்கு உள்ளானவர்களுக்கு நட்டஈடு கோருவதற்கு விண்ணப்பித்திருக்கலாம் எனவும், நட்டஈட்டுக்காக விண்ணப்பிப்பதற்கு பணியகம் பல பத்திரிகை அறிவித்தல்களை வெளியிட்டிருந்தாகவும், அதில் நட்டஈட்டுக்கு விண்ணப்பிப்பது தொடர்பாக தெளிவாகக் கூறப்பட்டு இருந்ததகவும்,<br><br>(ஈ) மனுதாரர் ஐக்கிய நாடுகள் நட்டஈட்டு ஆணைக்குழுவிடநட்டஈட்டுக் கோரிக்கையினை முன்வைத்துள்ள போதிலும், அந்தக் கோரிக்கையினை நட்டஈட்டு ஆணைக்குழு நிராகரித்துள்ளதாகவும், அவருடைய நட்டஈட்டுக் கோரிக்கையானது தொழில் இழப்பின் அடிப்படையில் செய்யப்பட்டுள்ளதுடன் அவருடைய கடவுச்சீட்டைப் பரிசோதிக்கையில் தொழில் இழப்பு எதுவும் ஏற்படவில்லை என்பதனை அவதானிக்க கூடியதாக இருப்பதாகவும், மேலும், பணியகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட நட்டஈட்டு விண்ணப்பத்தில் குறைபாடுகள் காணப்படுகின்ற நபர்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் உரிய திருத்தங்களைச் செய்து, சரியான தகவலை மீண்டும் நட்டஈட்டு ஆணைக்குழுற்கு வழங்குமாறு பணியகம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பத்திரிகைகள் மூலம் தெரிவித்துள்ள போதிலும், திருத்தப்பட்ட தகவல் உரிய காலத்திற்குள் வழங்கப்படவில்லை என்பதை அவதானிக்க கூடியதாக இருப்பதாலும் மனுதாரரின் இழப்பீட்டுக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளமை பணியக ஆவணங்களின்படி அவதானிக்க முடிவதாகவும்<br><br>(உ) மனுதாரர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்த பின்னர், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் விடயங்களை தெளிவுபடுத்தியதன் பின்னர் 2024.07.12ஆம் திகதிய ஆணைக்குழுவின் அவதானிப்புக்கள் மூலமாக மனுதாரரின் அடிப்படை உரிமைகள் மீறப்படவில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும்<br><br>(ஊ) ஐ.நா. நட்டஈட்டு ஆணைக்குழு நிராகரித்தமை தொடர்பாக நட்டஈட்டு ஆணைக்குழு வழங்கிய சாட்சி / எழுத்து மூலமான குறிப்புகள் இல்லை என்றும், வீசா அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு எஜமான் நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், 1993ஆம் ஆண்டில் இலங்கைக்கு வரும் வரையில் தனது வருமானத்தை இழந்தாகவும், தான் நட்டஈடு கோரியுள்ளது 2001 ஆம் ஆண்டு ஏப்பிறல் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மாதத்திற்கு முன்னர் என்றும், அது 2001 ஆம் ஆண்டு ஏப்பிறல் 19 ஆம் திகதி 'லங்காதீப' பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள குவைத் நட்டஈடு பெறுநர்களின் பெயர் பட்டியலில் தனது பெயரும் உள்ளடக்கப்பட்டு இருந்ததாகவும், அதன் பின்னர் தொடரச்சியாக இது வரையில் தனது நட்டஈட்டைப் பெறுவதற்கு கோரிக்கை முன்வைத்தாக மனுதாரர் தெரிவித்ததாகவும்<br><br>(எ) 1994.12.31 ஆம் திகதியின் பின்னர் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் ஐ.நா. நட்டட்டு ஆணைக்குழுவால் நிராகரிக்கப்பட்ட கோரிக்கைகள் மற்றும் கோரிக்கைகளை முன்வைக்காத நபர்களை அடையாளம் காண்பதற்காக 2002ஆம் ஆண்டில் பணியகம் ஆய்வொன்றை நடாத்தியதுள்ளதுடன் அதனூடாக மேலும் சுமார் 15,500 நபர்களின் தகவல்களைத் திரட்டியுள்ளதாகவும், 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், நட்டஈட்டுக் கோரிக்கைகளின் உண்மைத் தன்மையை நிரூபிக்கூடியதான ஒவ்வொரு நட்டஈடு பெருநருக்கும் ரூ. 75,000/– வழங்குவதற்கு அங்கீகாரம் அளித்துள்ளதாகவும், அதன்படி 5,472 விண்ணப்பதாரிகளுக்கு நட்டஈடு | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வழங்கியுள்ளத்கவும், இந்தப் பட்டியலில் மனுதாரரின் பெயர் இடம்பெற்றுள்ள போதிலும் பணம் செலுத்தப்படவில்லை என்றும்<br><br>(ஏ) குவைத் நட்டஈடு வழங்கும் செயன் முறையானது 30 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்றுள்ளதுடன், நட்டஈட்டை பெறுவதற்கான வழிமுறைகள் தொடர்பாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் பல தடவைகள் அச்சு ஊடகங்கள் மூலம் தெரிவித்துள்ளதாகவும், இது வரையில் முறையாக ஆவணங்களைச் சமர்ப்பிப்பித்து கோரிக்கை முன்வைக்காமைக்கான காரணம், மனுதாரரிடம் மேலே குறிப்பிட்ட ஆவணங்கள் மற்றும் உறுதிப்படுத்தல்களை உரியவாறு சமர்ப்பிக்க முடியாமல் போனதன் காரணத்தினால் என்றும், மேலும் 30 ஆண்டுகளுக்குப் பின்னர் முன்வைக்கும் கோரிக்கைகளின் உண்மைத் தன்மையை சரிபார்ப்பது கடினமான விடயம் என்பதுடன், பல ஆண்டுகளுக்குப் பிறகு சமர்ப்பிப்பது தொடர்பாகவும் சிக்கலான நிலைமை தற்போது உருவாகி இருப்பதுடன் எவ்வாறாயினும், ரூ. 75,000/-நட்டஈட்டுத் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தொகையை வழங்குவது தொடர்பாக விதப்புரை வழங்கப்படுமாயின் அதனை நடைமுறைப்படுத்தும் இயலுமை காணப்படுவதாகவும்,<br><br>(ஐ) மனுதாரரின் பெயர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ரூ. 75,000/- நட்டஈட்டு தொகைக்கான பட்டியலில் உள்ளடங்கி இருந்துள்ளதுடன், குவைத் யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் எகிப்தில் தனது தொழில் மற்றும் சம்பளத்தை இழந்து அகதியாக இருந்துள்ளதுடன் அதன் பின்னர் குவைத் நாட்டில் பணியாற்றிய போதிலும், 1993.04.10ஆம் திகதி மீண்டும் இலங்கை திரும்பி வரும் வரையில் அவருக்கு கிடைத்துள்ளது ஒரு மாதச் சம்பளம் மாத்திரம் என்பதால் இலங்கைக்கு திரும்புவதற்கான விமான டிக்கட் வழங்கும் வரையில் குவைத் நாட்டில் தங்கியிருக்க வேண்டியிருந்ததால், மேற்படி நட்டஈட்டுத் தொகையை (ரூ. 75,000/-) மனுதாரருக்கு வழங்குவது பொருத்தமானதாகும். | |

**2. நிவாரணங்கள் விதந்துரைக்கப்படாத மனுக்கள்**

**பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு**

| | | | | |
|---|---|---|---|---|
| 44 | திரு. எம்.எம். விமலரத்ன<br>COM/PP/2025/20<br><br>சமர்ப்பித்தவர்;<br>கௌரவ சமிந்த | இலங்கை பொலிசில் யுத்தக் கடமையில் ஈடுபட்டிருக்கையில் விபத்துக்குள்ளாகி அங்கவீனமடைந்த நிலையில் | (அ) 1995.08.19 ஆம் திகதி யுத்தக் கடமையில் ஈடுபட்டிருக்கையில் இடம்பெற்ற விபத்தின் காரணமாக மனுதாரர் அங்கவீனமடைந் தாகவும், | நிவாரணம் வழங்குவதற்கு விதந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | விஜேசிரி, பா.உ.<br><br>2025.09.09ஆம் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல: 01/02/03/01/2025<br><br>திகதி: 2025.06.05 | கடமையாற்றியதாகவும், பண்டாரவளை பொலிஸ் நிலைய அலுவலர்கள் அழுத்தம் மிக்க கடமைகளில் ஈடுபடுத்தியதன் காரணமாக, உடல்ரீதியான பாதிப்புகளுக்கு முகங்கொடுத்ததாகவும், நிதி ரீதியாக பாதிப்புக்ளை ஏற்படுத்தும் வகையில் பணிகளில் தம்மை ஈடுபடுத்தியதாகவும், அங்கு கடமையாற்றிய காலத்தில் பல்வேறு அநீதிகள் மற்றும் முறையற்ற செயற்பாடுகள் நிகழ்ந்ததாக குறிப்பிட்டு மனுதாரர் நீதியைப் பெற்றுத் தருமாறு இந்த மனுவைத் சமர்பித்துள்ளார். | மருத்துவச் சபையின் அறிக்கையின்படி, தமது நிரந்தர வருமானம் ஈட்டும் திறன் இழப்பு 40% என்றும், விபத்தின் காரணமாகத் தாம் நோய்வாய்ப்பட்டதுடன், மேலும் மனநோய்க்கும் தற்போது வரை முகங்கொடுத்து வருவதாகவும் தெரிவித்து முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள்<br><br>(ஆ) மனுதாரர் 1989.08.12ஆம் திகதி பொலிஸ் சேவையில் இணைந்ததாகவும், 2020.08.12ஆம் திகதி பணியிலிருந்து ஓய்வு பெற்றதாகவும், பண்டாரவளை பொலிஸ் நிலையத்திற்கு இணைக்கப்பட்டு பணியாற்றிய காலப்பகுதியில் இடம்பெற்ற பல சம்பவங்கள் தொடர்பாக, சில பொலிஸ் அலுவலர்கள் மீது ஒழுங்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி மனுதாரர் கோரிக்கையினை முன்வைத்ததாகவும், அதன்படி, ஊவா மாகாணத்திற்கான பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி அறிக்கை கோரியதாகவும், பண்டாரவளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இது தொடர்பாக விசாரணை நடத்தியதாகவும்<br><br>(இ) இது தொடர்பாக மனுதாரரிடம் இருந்து | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வாக்குமூலமொன்று பெற்றதாகவும், அதில், அவர் குறிப்பிட்டுள்ள விடயங்கள் அவரது கடமை காலத்தில் அதாவது 2020 ஆம் ஆண்டிற்கு முன்னர் இடம்பெற்றதான சம்பவங்கள் என்றும், அவருக்கு அத்தகைய அநீதிகள் இடம்பெற்று இருப்பின், அப்போது உரிய வழிமுறைக்கு அமைவாக உயர் அதிகாரிகளுக்குத் தெரிவித்து நீதியை பெறுவதற்கான இயலுமை காணப்பட்ட போதிலும், மனுதாரர் அவ்வாறு செயற்படாது ஓய்வுபெற்று சுமார் 05 ஆண்டுகளின் பின்னர் முன்வைக்கும் கோரிக்கை தொடர்பாக விசாரணை செய்வதற்கு போதுமான சாட்சிகள் எதுவும் இல்லை என்றும்,<br><br>(ஈ) மனுதாரர் ஓய்வுபெற்றதன் பின்னர் பண்டாரவளை பொலிஸ் நிலையத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு அழைக்கப்படுவது இல்லை என்று கூறியுள்ளதால், அத்தகைய நிகழ்வுகளுக்கு அவரை அழைப்பது பொருத்தமானது என தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய செயற்படுவது தொடர்பாக பண்டாரவளை தலைமையக பொலிஸ் பரிசோதகரை தெளிவூட்டுவதற்கு பொலிசார் நடவடிக்கை எடுத்துள்ளதுடன்<br><br>(உ) மனுதாரரின் அங்கவீன | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நிலைமையக் கருத்திற் கொண்டு 2000 ஆம் ஆண்டு முதல் அவருக்கு இலகுவான பணிகளை மாத்திரம் ஒப்படைத்து, அவரது சேவைகளை பொலிசுக்கு பெறுவதற்கு உயர் பொலிஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளதுடன்<br><br>(ஊ) மனுதாரருக்கு இடம்பெற்றதாக கூறப்படும் அநீதிகள், அவரது கடமை காலத்தில் அதாவது 2020ஆம் ஆண்டிற்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்கள் என்றும், முன்னர், இடம்பெற்றதாக கூறும் அத்தகைய அநீதிகள் தொடர்பாக உரிய வழிமுறைக்கமைவாக தனது உயர் அதிகாரிகளுக்கு அறிவித்து நீதியைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு இருக்கையில் மனுதாரர் அதனைப் பின்பற்றாது ஓய்வுபெற்று சுமார் 05 வருடங்களுக்கு பிறகு முன்வைக்கும் கோரிக்கை தொடர்பாக விசாரணை மேற்கொள்வது நடைமுறைச் சாத்தியமற்ற விடயமாகும். | |

| | | | | |
|---|---|---|---|---|
| 45 | திரு.எம்.பீ.பர்டி<br>COM/PP/2025/42<br>கௌரவ நிஹால் கலப்பத்தி பா.உ. அவர்களால் | இலங்கை பொலிஸில் 21 வருட தொடர்ச்சியான சேவைக் காலத்தைக் கொண்டிருந்ததாகவும், | (அ) அம்பாறை பொலிஸ் பயிற்சி நிறுவனத்திற்கு சேவை இணைப்புச் செய்யப்பட்டிருந்தபோது 2007.06.25ஆந் திகதி | நிவாரணம் வழங்க பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2025.09.09ஆந் திகதி விசாரிக்கப்பட்டது. அமைச்சு தொடர்பு இலக்கம்: 01/02/03/02/2025<br><br>திகதி : 2025.06.16 | அம்பாறை பிரிவில் சேவையாற்றிக் கொண்டிருந்தபோது சுகவீனமுற்று விடுமுறைப் பெற்றுக் கொண்டதாகவும்,<br><br>அப்போது கல்முனை பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் வழங்கப்பட்டதாகவும்,<br><br>தற்போதும் சுகவீனமுற்று வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைப் பெற்று வருவதாகவும் குறிப்பிட்டு விடுமுறை பெற்றுத்தருமாறு கல்முனை பொலிஸ் நிலையத்திற்கும், சேவைகாலப் பயிற்சி நிலையத்திற்கும் அறிவித்ததாகவும்,<br><br>இருப்பினும் பதவி வெறிதாக்கல் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள மனுதாரர், தனது சேவைக்காலம் தொடர்பில் பரிசீலித்து நியாயமான தீர்வொன்றைப் பெற்றுத் தருமாறு வேண்டுகோள் விடுத்து இம்மனுவை சமர்ப்பித்துள்ளார். | சுகவீனமுற்று சிகிச்சைப் பெற்ற போதும் நோய் நிலை தீவிரமடைந்ததால் 2007.06.28 அம்பாறை அரச வைத்தியசாலையில் 02 நாட்கள் தங்கியிருந்து சிகிச்சைப் பெற்று, மருத்துவ பரிந்துரையின் பிரகாரம் 2007.07.09ஆந் திகதி வரை விடுமுறைப் பெற்று வீட்டுக்குச் சென்றதாக மனுதாரர் தெரிவித்த கூற்று<br><br>(ஆ) மனுதாரருக்கு 2007.07.05ஆந் திகதி தொடக்கம் அம்பாறை பொலிஸ் நிலையத்திலிருந்து கல்முனை பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருந்த போதும் எவ்வித அறிவித்தலுமின்றி கடமைக்குச் சமூகமளிக்காததன் காரணமாக அன்றைய தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அவருக்கு பதவியை வெறிதாக்கல் கட்டளை பிறப்பிகக்கப்பட்டமை<br><br>(இ) அவ்வொழுக்காற்று கட்டளைக்கு எதிராக மனுதாரரால் மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீட்டைக் கருத்திற் கொண்டு 2007.12.08ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் அவரை மீண்டும் சேவையில் அமர்த்தி அம்பாறைப் பிரிவின் கல்முனை பொலிஸ் நிலையத்திற்கு சேவை இணைப்புச் செய்யப்பட்டு இருந்தபோதும் கல்முனை பொலிஸ் நிலையத்திற்குச் கடமை நிமித்தம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செல்லாததன் காரணமாக இரண்டாம் தடவையும் 2008.03.24ஆந் திகதிய பதவி வெறிதாக்கல் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், 2013ஆம் ஆண்டு மனுதாரரால் பொலிஸ் ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதுடன் அதனை பரிசீலித்ததன் பின்னர் காலவிதிப்பின் அடிப்படையில் 2017.01.30ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அம்மேன்முறையீடு ஆணைக்குழுவால் நிராகரிக்கப்பட்டுள்ளமையும்<br><br>(ஈ) ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 20 (1) பிரிவின் பிரகாரம் பதவியை வெறிதாக்கிய அலுவலருக்கு ஓய்வூதிய உரித்து இல்லாததுடன் ஓய்வூதிய சுற்றுநிருபம் 13/2010இன் கீழ் இவ்வலுவலர் 10 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்த அலுவலர் என்பதால், அலுவலரின் மறைவின் பின்னர் சட்டரீதியான மனைவிக்கு விதவை / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்வதற்கான இயலுமை காணப்படுகின்றமை<br><br>(உ) 2007ஆம் ஆண்டு மனுதாரரை பாம்பு தீண்டியதால் சுகவீன நிலை தீவிரமடைந்ததாகவும் தெரிவித்து அதற்காக ஆயுர்வேதச் சிகிச்சைப் பெற்றுக் கொண்டதை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உறுதிப்படுத்துவதற்காக அவரால் 02 ஆயுர்வேத மருத்துவச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதில் ஒரு ஆயுர்தேவ மருத்துவ சான்றிதழ் 2025ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளமை<br><br>(ஊ) மனுதாரர் இருமுறை பதவியை வெறிதாக்கிய பொலிஸ் அலுவலர் எனவும், இவ்வாறான அலுவலரை சேவையில் மீண்டும் தாபிப்பதற்கான சட்டரீதியான ஏற்பாடுகள் இல்லை எனவும், ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 20 (1) பிரிவின் பிரகாரம் பதவியை வெறிதாக்கிய அலுவலரொருவருக்கு ஓய்வூதிய உரித்து இல்லாமல் போவதுடன், அவரது மறைவின் பின்னர் அவரது துணைக்கு விதவை / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய உரித்து கிடைக்கப் பெறுகின்றமையும் | |
| 46 | **திரு. பீ.பீ. சரத் ராஜபக்ஷ**<br>COM/PP/2025/82<br>கௌரவ லசித் பாஷண கமகே, பா.உ., அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>2025.09.09ஆந் திகதி விசாரணை செய்யப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இலக்கம்: 02/03/23/09/2019<br>திகதி: 2019.05.29 | 1993.03.18ஆந் திகதி பொலிஸ் கான்ஸ்டபலாக பொலிஸ் சேவையில் இணைந்ததாகவும், ஒழுக்கக்கேடான செயலொன்றைப் புரிந்தார் என்ற குற்றச்சாட்டின்கீழ் பணித்தடைக்கு உட்பட்டதாகவும் அது குறித்து நடாத்தப்பட்ட ஒழுக்காற்று விசாரணையில் முன்வைக்கப்பட்ட 04 குற்றச்சாட்டுகளில் 02 குற்றச்சாட்டுகளுக்குக் குற்றமற்றவராகக் | (அ) மனுதாரர் கந்தளாய் பிரிவின் தம்பலகமுவ பொலிஸ் நிலையத்துடன் இணைக்கப்பட்டு பாலம்பட்டார் சோதனைச்சாவடியில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போது 2010.11.14ஆந் திகதி புரிந்த ஒழுக்கக்கேடான செயலொன்றுக்காக நடாத்தப்பட்ட பூர்வாங்க விசாரணையின் பின்னர் 2010.11.17ஆந் திகதியிடப்பட்டு மனுதாரர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டதுடன், | நிவாரணங்கள் வழங்குவது பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காணப்பட்டபோதிலும், 04 குற்றச்சாட்டுகளுக்கும் குற்றவாளியாக்கப்பட்டு 2012.12.26ஆந் திகதி சேவையிலிருந்து நீக்கப்பட்டதாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். பகிரங்கச் சேவை ஆணைக்குழுவிற்கும் நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபை சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடுகளும் முறையே 2014 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் நிராகரிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்து, மீண்டும் வேலையைப் பெற்றுத்தருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை செய்து தருமாறு கோரி மனுதாரரினால் இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 2011.03.18ஆந் திகதி இழிவான நடத்தை நடத்தை, கட்டளைக்குக் கீழ்ப்படியாமை, கடமை தவறுதல் மற்றும் ஊழல்மிக்க செயல் ஆகிய நான்கையும் உள்ளடக்கிய குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டுள்ளமை<br><br>(ஆ) ஒழுக்காற்று விசாரணையின் போது மனுதாரர் 04 குற்றச்சாட்டுகளுக்கும் குற்றவாளி என வெளிப்படுத்தப்பட்டதன் பின்னர் 2012.12.01ஆந் திகதியிடப்பட்டு சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்பதுடன், அதற்கு எதிராகப் மனுதாரரினால் 2012.12.29ஆந் திகதி பகிரங்கச் சேவை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டபோதிலும் 2014.04.24ஆந் திகதியிடப்பட்டு அந்த ஆணைக்குழுவினால் அம்மேன்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பதும், மேற்குறித்த கட்டளைக்கு எதிராகப் மனுதாரர் மீண்டும் பணியமர்த்தக் கோரி நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்கு மேன்முறையீடொன்றைச் சமர்ப்பித்ததன் பின்னர் மனுதாரரின் முறையான ஒழுக்காற்று விசாரணைக் கோப்பு பகிரங்கச் சேவை ஆணைக்குழுவினால் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கோரப்பட்டுள்ளதுடன், அக்கோப்பு 2014.09.01ஆந் திகதி பகிரங்கச் சேவை ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை பதில் கிடைக்கவில்லை என்பதுடன், எனவே மனுதாரரை இலங்கை பொலிஸாரினால் மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இன்மை<br><br>(இ) தாபனக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி அல்லாமல், உயர் அதிகாரிகளின் அழுத்தங்களின் பேரில் தனக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்குப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் சாட்சியமளித்தனர் என்றும், தனி நபர் தீர்ப்பாயத்தினால் தனக்கு எதிராகச் சுமத்தப்பட்ட 04 குற்றச்சாட்டுகளில் 02 குற்றச்சாட்டுகளுக்குக் குற்றமற்றவர் என்றும் 02 குற்றச்சாட்டுகளுக்குக் குற்றவாளி என்றும் தீர்மானிக்கப்பட்டதாகவும், பகிரங்ச் சேவை ஆணைக்குழுவினால் அக்குற்றச்சாட்டுகளில் i, ii, iii ஆகிய குற்றச் சாட்டுகள் சாட்சிகளின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், ivவது குற்றச்சாட்டின் பிரதான பெண் சந்தேகநபர் ஒழுக்காற்று விசாரணைக்கு சமூகமளிக்காததால் அக்குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும் பகிரங்கச் சேவை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ளவாறு i, ii,iii ஆகிய குற்றச்சாட்டுகளையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், அதில் i வது குற்றச்சாட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள அப்பிரதேச பள்ளிவாசலின் தலைவர் ஒழுக்காற்று விசாரணைக்குச் சாட்சியமளிக்கச் சமூகமளிக்கவில்லை என்ற போதிலும் பகிரங்கச் சேவை ஆணைக்குழுவின் அறிக்கையில் அத்தகைய ஒருவர் சாட்சியமளிக்கச் சமூகமளித்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், இவ்வாறான பரஸ்பர முரண்பாடான சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு தனக்கெதிராக வழங்கப்பட்ட ஒழுக்காற்று உத்தரவுகளைத் தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் மனுதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(ஈ) மனுதாரருக்கு எதிராகப் பதியப்பட்டிருந்த 04 குற்றச்சாட்டுகளுக்கும் அவரை குற்றவாளியாக்கி 2012.12.26ஆந் திகதி மனுதாரர் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதுடன், மீண்டும் சேவையில் அமர்த்துமாறு கோரி மனுதாரரினால் பகிரங்கச் சேவை ஆணைக்குழுவிற்கும் நிர்வாக மேன்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்ட | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மேன்முறையீடுகளும் முறையே 2014 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் நிராகரிக்கப்பட்டுத் தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன என்பதுடன், எனவே தற்போது சுமார் 53 வயதுடைய மனுதாரரை மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கு சட்ட ரீதியான ஏற்பாடுகள் இன்மை<br><br>(உ) ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கமைய, சேவையிலிருந்து நீக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு ஓய்வூதிய உரிமை அற்றுப்போகும் என்பதுடன், அவரது மறைவின் பின்னர் அவரது துணைவருக்கு விதவை மற்றும் அநாதைகள் ஓய்வூதிய உரிமை கிடைக்கின்றமை | |
| 47 | **திரு. ஜி. கபில அபேநாயக்க** COM/PP/2025/350<br>கௌரவ சுகத் வசந்த த சில்வா, பா.உ., அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>2025.09.09ஆந் திகதி விசாரணை செய்யப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இலக்கம்: 01/02/03/13/2025<br>திகதி: 2025.06.25 | பயிலுனர் பொலிஸ் பரிசோதகராகச் சேவையில் இணைந்ததாகவும், 2013.07.15ஆந் திகதியன்று பதில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு பதவியுயர்த்தப்பட்டதாகவும், தற்போது இப்பதவியில் 11 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் சேவை புரிந்துள்ளதாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறிருந்தபோதிலும், உதவிப் | (அ) உயர் நீதிமன்ற அடிப்படை உரிமைகள் மனுக்களைச் சமரசத்திற்குட்படுத்தியமைக்கமைய, 02 வருட காலப் பதில் கடமைக்காலத்திற்கு உட்பட்டு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் 2018.07.10ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மனுதாரருக்கும் மேலும் பத்து பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு பதவியுயர்வொன்று வழங்கப்பட்டு, பின்னர் அந்தப் பதவியுயர்வு 2013.07.15ஆந் திகதிக்கு முன்திகதியிடப்பட்டு | நிவாரணங்கள் வழங்குவது பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்குரிய வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டிய 05 பாடங்களில் ஒரு பாடத்தில் மாத்திரம், அக்காலப்பகுதியில் நோயுற்றிருந்தமையின் காரணமாகச் சித்தியடையத் தவறியமையால், பதில் கடமைக் காலப்பகுதியினுள் தனது சேவையில் நிரந்தரமாக்கப்படவில்லை என்றும், இதன் காரணமாகப் பெற வேண்டிய சம்பள உயர்வுகளையும் அடுத்த பதவிக்கான பதவியுயர்வையும் பெற்றுக்கொள்ள முடியாமல் போயுள்ளது என்றும், அது தொடர்பான மருத்துவ அறிக்கைகளும் காணப்படுகின்றன என்றும் தெரிவித்து, 2027 ஆம் ஆண்டில் ஓய்வுபெறவுள்ளமையால் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவியில் சேவையை நிரந்தரமாக்குவதற்குத் தடையாகவுள்ள ஒரு பாடத்தில் மாத்திரம் சித்தியடையாமை என்ற விடயத்தைப் மனுதாரருக்கு மாத்திரம் தனிப்பட்ட ரீதியில் விலக்களித்து | வழங்கப்பட்டுள்ளது என்பதும், குறித்த பதவியில் பதில் கடமையாற்றும் காலம் 2018.11.23 முதல் 2020.11.22 வரை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும், அப்பதவியில் நிரந்தரமாவதற்குப் மனுதாரர் வினைத்திறன் காண் தடைப் பரீட்சைகளில் சித்தியடைய வேண்டியமையும்<br><br>(ஆ) மனுதாரரின் மனச்சோர்வு நிலைக்காக 2019 ஆம் ஆண்டு முதல் தனிப்பட்ட மருத்துவச் சிகிச்சைகளைப் பெற்று வந்ததாகக் குறிப்பிட்டுள்ளார் என்பதும், அதற்கு இடைப்பட்ட காலத்தில் நடாத்தப்பட்ட வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் தண்டனைச் சட்டக்கோவை மற்றும் பொலிஸ் கட்டளைச் சட்டம் ஆகிய பாடங்கள் தவிர்ந்த ஏனைய பாடங்களில் சித்தியடைந்துள்ளார் என்பதும், அந்தப் பாடத்திற்காக 2019, 2021, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் தோற்றியுள்ள போதிலும் அதில் சித்தியடைய முடியாமல் போயுள்ளமையும்<br><br>(இ) மனுதாரர் சிகிச்சை பெற்றுவரும் காலப்பகுதியினுள் இரண்டு பாடங்களுக்குத் தோற்றி அவற்றில் சித்தியடைந்துள்ளமையால், மருத்துவச் சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வது அவர் வினைத்திறன் காண் தடைப் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிவாரணமொன்றைப் பெற்றுத்தருமாறு கோரி மனுதாரரினால் இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒரு தடையாக அமையாது என்பதால், வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியடையத் தவறியமை மனுதாரரின் சுகயீன நிலைமையினால் ஏற்பட்டது எனக் கருதி பதவியை நிரந்தரமாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதும், அவ்வாறு செயற்படுவது இப்பரீட்சைகளை வெற்றிகரமாக எதிர்கொண்டு முடிவுகளைப் பெற்றுக்கொள்ளும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாவதுடன் தவறானதொரு முன்மாதிரியாகவும், அரச உத்தியோகத்தர்களின் பதவியுயர்வுகளை வழங்கும்போது முகாமைத்துவச் சிக்கல்களை ஏற்படுத்துவதாகவும் அமையக் கூடியமை<br><br>(ஈ) உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவியின் தகுதிகாண் பருவத்தை மேலும் நீடிப்பதற்காக அல்லது பதவியில் நிரந்தரமாக்குவதற்காக, வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்குரிய தண்டனைச் சட்டக்கோவை மற்றும் பொலிஸ் கட்டளைச் சட்டம் ஆகிய பாடங்களுக்கு மீண்டும் தோற்றுவதற்குப் மனுதாரரினால் பொலிஸ் அதிபருக்குச் செய்யப்பட்டிருந்த மேன்முறையீட்டிற்குப் பொலிஸ் மா அதிபரினால் 2025.05.27ஆந் திகதி அனுமதி | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வழங்கப்பட்டுள்ளமை<br><br>(உ) இலங்கைப் பொலிஸ் சேவையின் உத்தியோகத்தர்களை நியமித்தல், பதவியுயர்த்துதல் மற்றும் இடமாற்றம் செய்தல் மற்றும் அது சார்ந்த, அதன் அத்தியாவசியமான விடயங்களுக்கு ஏற்பாடுகளைச் செய்வதற்கான நடைமுறை விதிகள் தற்போது தயாரிக்கப்பட்டு அதற்காக அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பதும், அதுவரை, 2022.12.14 ஆந் திகதி அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களை நியமித்தல், பதவியுயர்த்துதல் மற்றும் இடமாற்றம் செய்தல் மற்றும் அது சார்ந்த, அதன் அத்தியாவசியமான விடயங்களுக்கு ஏற்பாடுகளைச் செய்வதற்கான நடைமுறை விதிகள் இலங்கை பொலிஸ் சேவையில் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் முகாமைத்துவக் கடமைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்பதும், மனுதாரரின் பதவியுயர்வுடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளும் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மேற்சொன்ன நடைமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட ரீதியான ஏற்பாடுகளுக்கமையவே மேற்கொள்ளப்பட வேண்டியமையும்<br><br>(ஊ) மனுதாரார் கோரியுள்ள உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவியில் சேவையை நிரந்தரமாக்குவதற்குத் தடையாகவுள்ள ஒரு பாடத்தில் மாத்திரம் சித்தியடையாமை என்ற விடயத்தைப் மனுதாரருக்கு மாத்திரம் தனிப்பட்ட ரீதியில் விலக்களித்து வழங்குவதற்கு மேற்சொன்ன நடைமுறை விதிகளுக்கமைய சட்ட ரீதியான ஏற்பாடுகள் இல்லை என்பதும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவியின் தகுதிகாண் பருவத்தை மேலும் நீடிப்பதற்காக அல்லது பதவியில் நிரந்தரமாக்குவதற்காக, வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்குரிய தண்டனைச் சட்டக்கோவை மற்றும் பொலிஸ் கட்டளைச் சட்டம் ஆகிய பாடங்களுக்கு மீண்டும் தோற்றுவதற்குப் மனுதாரரினால் பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதிக்கு செய்யப்பட்டிருந்த மேன்முறையீட்டிற்குப் பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதியினால் ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், மனுதாரர் அந்தப் பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தியடைந்து தமது பதவியில் சேவையை நிரந்தரமாக்கிக் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கொள்வதற்கான வாய்ப்புக் காணப்படுகின்றமையும் | |
| 48 | **திரு. ஏ.டி. பிரேமதிலக** COM/PP/2025/95 கௌரவ டி.வி. சானக்க, பா.உ., அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2025.10.21 ஆந் திகதி விசாரணை செய்யப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்: 01/02/03/39/2023 திகதி: 2024.02.05 | உப பொலிஸ் பரிசோதகராக 1981.02.23ஆந் திகதி இலங்கை பொலிஸ் சேவையில் இணைந்ததாகவும், 1989ஆம் ஆண்டில் புத்தல பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிக்கொண்டிருந்தபோது 1989.12.08ஆந் திகதி பொலிஸ் பிரிவினுள் இடம்பெற்ற ஆட்கடத்தல் நிகழ்வொன்று தொடர்பில் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டதாகவும், அது குறித்து ஆரம்பிக்கப்பட்ட விசாரணை நடாத்தப்படவில்லை என்றும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். இது சம்பந்தமாக பதுளை மற்றும் மொனராகலை ஆகிய இரு மேல் நீதிமன்றங்களிலும் நடாத்தப்பட்ட வழக்கிலிருந்து 2013.03.09ஆந் திகதி மனுதாரர் குற்றமற்றவராக விடுவிக்கப்பட்டார் என்றும், வழக்கு விசாரணை காரணமாகப் பிரதம பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு பதவியுயர்வு பெறுவதற்கு 18 வருடங்கள் எடுத்தன | (அ) மனுதாரர் 1981.02.23 ஆந் திகதி உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளதுடன், அதனைத் தொடர்ந்து பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு 1989.02.23ஆந் திகதியும், பிரதம பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு 2003.01.01ஆந் திகதியும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு 2010.05.09ஆந் திகதியும் பதவியுயர்வுகளைப் பெற்று, 60 வயதைப் பூர்த்தி செய்தமையின் காரணமாக 2015.02.28 ஆந் திகதி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவியில் பொலிஸ் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளமை<br><br>(ஆ) மனுதாரர் 1989.03.25 திகதி முதல் 1990.08.26 திகதி வரை புத்தல பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றியுள்ளதுடன், நபரொருவரைக் கடத்தியமை சம்பந்தமாக மனுதாரருக்கு எதிராக மொனராகலை நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டு, அது விசாரிக்கப்பட்டு தண்டனைச் சட்டக்கோவையின் 359 ஆம் பிரிவின் கீழான குற்றச்சாட்டிலிருந்து குற்றமற்றவராக | நிவாரணங்கள் வழங்குவது பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | என்றும் தெரிவித்துள்ளார். பதவியுயர்வுகளுக்கு ஏற்பட்ட தடைகளைக் கருத்திற்கொண்டு, ஏனைய உத்தியோகத்தர்களுக்குப் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டவாறே 1994 ஆம் ஆண்டு முதல் பிரதம பொலிஸ் பரிசோதகர் பதவிக்கும், 2000 ஆம் ஆண்டு முதல் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கும் பதவியுயர்வுகளை முன்திகதியிட்டு வழங்குமாறும், ஓய்வுபெற்ற திகதியன்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பதவியை ஓய்வுக்கு ஏற்புடைய வகையில் வழங்குமாறும் கோரி மனுதாரரினால் இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | விடுவிக்கப்பட்டு நீதிமன்றத் தீர்ப்பு 2013.03.14 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ளது என்பதும், அச்சம்பவத்திற்காக 1990.08.27 முதல் மனுதாரர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டு பின்னர் 1991.04.08 ஆந் திகதி மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளமையும்<br><br>(இ) 1993, 1994 மற்றும் 1999 ஆகிய ஆண்டுகளில் பொலிஸ் பரிசோதகர் பதவியிலிருந்து பிரதம பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு பதவியுயர்த்தப்படுவதோடு தொடர்புடைய நேர்முகப் பரீட்சைகளில் தான் கலந்துகொண்ட போதிலும், நீதிமன்றத்தில் தனக்கெதிராக நிலுவையிலிருந்த வழக்கின் காரணமாக உரிய பதவியுயர்வு தனக்குக் கிடைக்கவில்லை எனப் மனுதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(ஈ) மனுதாரரின் மேன்முறையீடுகளுக்கமைய 1993, 1994 மற்றும் 1999 ஆகிய ஆண்டுகளில் பொலிஸ் பரிசோதகர் பதவியிலிருந்து பிரதம பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு பதவியுயர்த்துவதுடன் தொடர்புடைய நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அவர் அந்த நேர்முகப் பரீட்சைகளில் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கலந்துகொண்டுள்ளார் என்பதும், நேர்முகப் பரீட்சைகளில் அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தர்கள் உரிய பதவியுயர்வுகளுக்குத் தகைமை பெறுவர் என்பதுடன், அங்கு மனுதாரர் குறிப்பிடுவது போன்று அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கொன்றின் விசாரணை நிலுவையிலிருந்தமை பதவியுயர்வுகளை வழங்குவதில் செல்வாக்குச் செலுத்தாது என்பதும், நீதிமன்றத்திலுள்ள வழக்குகள் முடிவடைந்ததன் பின்னர் பதவியுயர்வுகள் வழங்கப்படும் என்பதும், எனவே நீதிமன்றத்தில் வழக்கொன்று நிலுவையிலிருந்தமையின் காரணமாக மனுதாரருக்கு உரிய பதவியுயர்வுகள் கிடைக்கவில்லை என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாமையும்<br><br>(உ) 2008ஆம் ஆண்டில் திறமையின் அடிப்படையில் பிரதம பொலிஸ் பரிசோதகர் பதவியிலிருந்து உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு பதவியுயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சைக்கு மனுதாரர் தோற்றிய போதிலும், வெட்டுப் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளாமையால் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 2008ஆம் ஆண்டில் அவருக்கு அந்தப் பதவியுயர்வு கிடைக்கவில்லை என்பதுடன், பின்னர் சேவை மூப்பின் அடிப்படையில் 109 பிரதம பொலிஸ் பரிசோதகர்களுக்கு 2010.05.09 ஆந் திகதியன்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அதன் போது மனுதாரருக்கும் அந்தத் திகதியில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு பதவியுயர்வு கிடைத்துள்ளது.<br><br>(ஊ) மனுதாரர் 1993, 1994 மற்றும் 1999 ஆகிய ஆண்டுகளில் பொலிஸ் பரிசோதகர் பதவியிலிருந்து பிரதம பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு பதவியுயர்த்தப்படுவதோடு தொடர்புடைய நேர்முகப் பரீட்சைகளுக்கு தோற்றிய போதிலும், உரிய பதவியுயர்வுகளுக்குத் தேவையான வெட்டுப் புள்ளிகளைப் பெற்றிருக்காமையின் காரணமாக உரிய பதவியுயர்வுகள் அவருக்கு அற்றுப்போயுள்ளமை<br><br>(எ) நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாகத் தனக்குப் பதவியுயர்வு அற்றுப்போனதாகக் குறிப்பிட்டுப் மனுதாரரினால் மேன்முறையீடுகளோ அல்லது கோரிக்கைகளோ சமர்ப்பிக்கப்படாமை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | (ஏ) பிற்காலத்தில் மனுதாரருக்குரிய பதவியுயர்வுகள் உரிய முறையில் கிடைத்துள்ளன என்பதுடன், மனுதாரருக்குப் பதவியுயர்வுகளை வழங்கும் போது இலங்கை பொலிஸ் தரப்பிலிருந்து மனுதாரருக்கு எவ்வித அநீதியும் இழைக்கப்படாமை<br><br>(ஐ) மனுதாரரின் நீதிமன்ற நடவடிக்கைகள் 2013 ஆம் ஆண்டில் முடிவடைந்துள்ளதுடன், அந்த வழக்கு முடிவடைவதற்கு முன்னர் காணப்பட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு பதவியுயர்த்துவதற்காகவிருந்த பதவியுயர்வு குழாமுக்கு அவர் அழைக்கப்பட்டுள்ளார் என்பதுடன், வழக்கு நடவடிக்கைகள் முடிவடைந்ததன் பின்னர் சேவை மூப்பின் அடிப்படையில் 109 பிரதம பொலிஸ் பரிசோதகர்களுக்கு 2010.05.09ஆந் திகதி முதல் வழங்கப்பட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு மனுதாரருக்கும் பதவியுயர்வொன்று வழங்கப்பட்டுள்ளமை | |
| **சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு** | | | | |
| 49 | **திரு. ஆர்.எம்.டி.எஸ். ஜே. ராஜபக்ஷ**<br>COM/PP/2025/05<br>கௌரவ ஹர்ஷன | 1996.12.20ஆந் திகதி சமனபெத்த உப தபால் அலுவலகத்திற்கு நியமனம் | (அ) தகுதிகாண் பருவத்தின்போது நிதி முறைகேடுகள் போன்ற விடயங்கள் தொடர்பாகக் குற்றச்சாட்டுகளுக்குள்ளாவ | நிவாரணங்கள் வழங்குவது பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | ராஜகருணா, பா.உ., அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2025.09.11ஆந் திகதி விசாரணை செய்யப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்: MMI/AD2/16/10-vol 1 திகதி: 2025.03.18 | பெற்றதாகவும், 2000.09.21ஆந் திகதி சேவையில் நிரந்தரமாக்கப்பட்டதாகவும், அதனைத் தொடர்ந்து தபால் திணைக்களத்தின் ஒருங்கிணைந்த தபால் சேவையின் 'ஆ' தொகுதியின் (1) (ஆ) தர தபால் சேவை உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சையில் சித்தியடைந்து 2008.06.20ஆந் திகதி அப்பதவிக்கு நியமிக்கப்பட்டதாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறிருந்த போதிலும், பதவியுயர்வு பெற்றமையால் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்காக வேறொரு நியமனம் வழங்கப்படும் வரை சமனபெத்த அலுவலகத்திலேயே உப தபால் அதிபர் பதவியில் சேவை புரிய நேரிட்டது எனவும், அக்காலப்பகுதியினுள் அலுவலகத்தில் ஏற்பட்ட பணப்பற்றாக்குறை தொடர்பாக 2010.12.09 திகதியிட்ட 10/4/3946 ஆம் இலக்க ஒழுக்காற்று கட்டளை விதிக்கப்பட்டு 02 சம்பள உயர்வுகள் நிறுத்தி | து சேவையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் ஒரு காரணமாக அமையும் என்றபோதிலும், தபால் திணைக்களம் கருணை அடிப்படையில் கருத்திற்கொண்டு மனுதாரரின் சேவையை இடைநிறுத்தாமல், அவரது சம்பள உயர்வுகளை தடுத்து வைப்பதற்கு மாத்திரம் நடவடிக்கை எடுத்துள்ளது என்பதும், 2009 ஆம் ஆண்டில் இது தொடர்பாகக் குற்றப்பத்திரிகையொன்று வழங்கப்பட்டு நடாத்தப்பட்ட ஒழுக்காற்று விசாரணையின்போது அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளமை<br><br>(ஆ) செயல் ஒழுங்கு இலக்கம் 103 இற்கமைய, உத்தியோகத்தர் ஒருவரின் குறைபாடொன்றின் அடிப்படையில் நியமன அதிகாரியினால் அவரது தகுதிகாண் பருவத்தை நீடிப்பதற்கான சாத்தியம் காணப்படுகின்றன என்பதுடன், அதன் காரணமாக பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் அவரது மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டுள்ளது என்றபோதிலும், மனுதாரர் நிர்வாக மேன்முறையீட்டுத் நியாய சபைக்கு மேன்முறையீடொன்றைச் சமர்ப்பிக்காமை<br><br>(இ) மனுதாரர் புரிந்த நிதி முறைகேட்டின் காரணமாக அவரது இரண்டு சம்பள உயர்வுகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளன என்பதுடன், ஏனைய | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வைக்கப்பட்டன எனவும், பின்னர் 2011.06.01ஆந் திகதி மத்திய தபால் பரிவர்த்தனையின் தபால் சேவை உத்தியோகத்தர் 1 "ஆ" பதவியில் கடமைகளைப் பொறுப்பேற்றதுடன் இரண்டு வார காலப் பயிற்சியின் பின்னர் 2011.06.14ஆந் திகதி கடமைக்கு சமூகமளித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். முந்தைய சேவை நிலைமையும் புதிய பதவியின் கடமைகளும் சமமாகவுள்ள பின்னணியில், பழைய மற்றும் திருத்தப்பட்ட 2022.02.14ஆந் திகதியிட்ட முதலாம் தொகுதியின் (புதிய) 118 ஆம் பந்திக்கமைவாக தகுதிகாண் காலம் ஒரு வருடத்திற்கு வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும் என்றபோதிலும், இந்த புதிய நியமனத்தின்போதும் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும், குறித்த ஒழுக்காற்று கட்டளையின்படி நிறுத்தி வைக்கப்பட்ட 02 சம்பளவேற்றங்களுக்கு | இரண்டு சம்பளவேற்றங்கள் நிறுத்தி வைக்கப்பட்டமையானது தகுதிகாண் காலம் நீடிக்கப்பட்டமையின் பக்கவிளைவாகவேயன்றி, ஒரே தவறுக்காக இரண்டு தண்டனைகள் விதிக்கப்பட்டமையினால் அல்ல என்பதும்.<br><br>(ஈ) மனுதாரர் உரிய ஒழுக்காற்று விசாரணையின்போது தனது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார் என்பதும், அவ்வாறிருந்த போதிலும் தபால் திணைக்களத்தினால் அவரது சேவையை முடிவுக்குக் கொண்டு வராமல் சம்பள உயர்வுகளை மாத்திரம் தடுத்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேலதிகமாக, 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்பட்டமையின் காரணமாக, இழைக்கப்பட்ட தவறு தகுதிகாண் காலத்தினுள் இழைக்கப்பட்ட தவறொன்றின் வகையின் கீழ் வருவதனால் மேலும் இரண்டு சம்பளவேற்றங்கள் நிறுத்தி வைக்கப்பட்டன எனக் குறிப்பிடும் மனுதாரர், இந்த பாரிய அநீதியைக் கருத்திற்கொண்டு ஒழுக்காற்று உத்தரவிற்கமைய தடுத்து வைக்கப்பட்டுள்ள 02 சம்பளவேற்றங்களையும் தகுதிகாண் காலம் நீடிக்கப்பட்டமையினால் அற்றுப்போன 02 சம்பள வேற்றங்களையும் உரிய திகதி முதல் வழங்கிடுமாறு கோரி இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | | |
| 50 | **திரு. டப்ளியூ.சீ. நிஷாந்த கொஸ்தா** COM/PP/2025/283 கௌரவ சம்பிக ஹெட்டியாரச்சி, பா.உ., அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2025.11.14ஆந் திகதி விசாரணை செய்யப்பட்டது. | 1988 ஆம் ஆண்டில் தபால் திணைக்களத்தில் சேவையில் இணைந்து 1994.03.24ஆந் திகதி சேவையில் நிரந்தரமாக்கப்பட்டதாகவும், 1997 ஆம் ஆண்டு முதல் நீர்கொழும்பு தபால் அலுவலகத்தில் கடமையாற்றியதாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். | (அ) 1994.03.24 ஆந் திகதி தந்தித் தூதுவர் பதவியில் நிரந்தர நியமனம் பெற்று, 1997.06.07ஆந் திகதி முதல் தபால்காரர் பதவிக்கு பதவியுயர்த்தப்பட்டுள்ள மனுதாரர், 1992 ஆம் ஆண்டில் 18 நாட்கள் சேவை இடை நிறுத்தப்பட்டமை, அறிவிக்காமல் கடமைக்கு சமூகமளிக்காமைக்காகக் கடுமையாக எச்சரிக்கப்பட்டமை, | நிவாரணங்கள் வழங்குவது பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமைச்சின் தொடர்பு இலக்கம்: MMI/AD02/01/17-V திகதி: 2021.09.14 மனு சமர்ப்பிக்கப்பட்ட தன் பின்னர், அது விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்ட சந்தர்ப்பத்தில் மனுதாரர் வெளிநாடு சென்றுள்ளமையி னால், மனுவின் விசாரணையின் போது மனுதாரர் சார்பில், 2640 ஆம் இலக்க விசேட அற்றோனிப் அதிகாரப் பத்திரத்தின் (Attorney Power) மூலம் நியமிக்கப்பட்ட முகவராக முதித கருணாமுனி ஆஜராகியிருந்தார் . | குடும்ப அமைப்பில் ஏற்பட்ட சிக்கலான பின்னணி காரணமாக மனநோய் நிலைமையொன்று ஏற்பட்டதாகவும், அது குறித்து கடமைப் புரியும் இடத்திற்கு அறிவிக்கக்கூட முடியாமல் போனதாகவும், அதன் பின்னர் அறிவிக்காமல் கடமைக்குச் சமூகமளிக்காமையின் காரணமாக 2014.06.27 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பதவி வெறிதாக்கல் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மீண்டும் வேலையைப் பெற்றுக்கொள்வதற் காக மேன்முறையீடுகளைச் சமர்ப்பித்தபோதிலும் அவை தோல்வியடைந்தன எனக் குறிப்பிட்டு, கருணை அடிப்படையில் கருத்திற்கொண்டு மீண்டும் வேலையைப் பெற்றுக்கொள்வதற்கு த் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு தருமாறு கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ள து. | விடுமுறை பெறாமல் படகு மூலம் ஆஸ்திரேலியா நோக்கிச் சென்று கொண்டிருந்த போது கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு பணி நீக்கம் செய்யப்பட்டிருந்த நிலையில், நீதவான் நீதிமன்றத்தில் நிலுவையிலிருந்த வழக்கு மற்றும் திணைக்களத்தின் இறுதி முடிவுகளுக்கு உட்பட்டு 2013.11.23 ஆந் திகதி மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தமை, மீண்டும் ஒருமுறை அறிவிக்காமல் கடமைக்கு சமூகமளிக்காமையின் காரணமாக 2014.07.23 ஆந் திகதியிடப்பட்டு பதவி வெறிதாக்கல் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தமை, 03 மாதங்கள் கடந்தும் அது தொடர்பாக எவ்விதப் பதிலையும் தெரிவிக்காத நிலையில் 2015.07.28ஆந் திகதியிடப்பட்டு சேவை கைவிட்டமை உறுதிப்படுத்தப்பட்டிருந்த மை ஆகிய விடயங்களின் காரணமாக மனுதாரர் திருப்தியற்றதொரு சேவை வரலாற்றைக் கொண்டிருந்தமை<br><br>(ஆ) மீண்டும் சேவையில் அமர்த்தப்படுவதற்காகப் மனுதாரரினால் 2017.12.18 ஆந் திகதியிடப்பட்டு பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பதுடன், அந்தத் தீர்மானம் குறித்துத் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திருப்தியடையாவிடின் நிருவாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு மேன்முறையீடு செய்திருக்க முடியும் என்றபோதிலும் அவ்வாறானதொரு மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளமைக்கான விடயங்கள் நிரூபிக்கப் படாமையும்<br><br>(இ) மனுதாரர் சுமார் 20 வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார் என்றும், நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு மேன்முறையீடொன்றைச் சமர்ப்பிக்க முடியாமல் போனது அக்காலப்பகுதியில் காணப்பட்ட பொருளாதாரக் கஷ்டங்கள் காரணமாகவே என்றும், அறிவிக்காமல் கடமைக்கு அறிக்கையிட முடியாமல் போனது மனநோய் நிலைமையொன்றின் காரணமாகவே என்றும், அதற்காக ஆயுர்வேத மருத்துவ அறிக்கையொன்றைச் சமர்ப்பித்துள்ளதாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள விடயங்கள்.<br><br>(ஈ) மனுதாரர் அறிவிக்காமல் கடமைக்குச் சமூகமளிக்காத காலப்பகுதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மருத்துவ அறிக்கை ஏற்றுக்கொள்ளக் கூடியதொரு மருத்துவ அறிக்கையாக காணப்படாமை<br><br>(உ) மனுதாரரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த COM/PP/2021/585 ஆம் இலக்க மனுவை விசாரணை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செய்ததன் பின்னர், அனுதாப அடிப்படையில் கருத்திற்கொண்டு 20 வருட சேவைக்காலத்தை அடிப்படையாக வைத்து, பதவியை வெறிதாக்கிச் சென்ற திகதி முதல் மீண்டும் சேவையில் அமர்த்தி அன்றைய தினம் முதல் ஓய்வளிப்பதற்குத் தேவையான அனுமதியை வழங்குமாறு 2023.06.06 ஆந் திகதியிடப்பட்டு அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு விதந்துரையொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த விதப்புரையை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் 2023.08.28 ஆந் திகதியிடப்பட்டு குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளமை<br><br>(ஊ) ஓர் அரசாங்க ஊழியராக அரசாங்க சேவைக்குப் பொருத்தமற்ற வகையில் செயலாற்றியுள்ளமையினால், மனுதாரருக்கு ஓய்வூதியத்திற்கான அனுமதியை வழங்குவதை நியாயப்படுத்த முடியாமை | |
| 51 | திரு. ஜி. கொடகே அவர்கள்<br><br>COM/PP/2025/304 கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் | ஒருங்கிணைந்த தபால் சேவையின் "அ" பிரிவின் III ஆம் தரத்தின் "ஆ" தொகுதியில் பதவிநிலை உத்தியோகத்தராக | (அ) 2005 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த தபால் சேவையின் "அ" பிரிவின் III ஆம் தரத்தின் "அ" தொகுதியில் உதவி அத்தியட்சகர் பதவிக்கு பதவி உயர்வு வழங்குவதற்காக | நிவாரணம் வழங்குவதற்குப் பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | முஹம்மட் பைசல் அவர்களால், சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>2025.11.14 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல: 12424<br><br>திகதி: 2016.08.01 | தலைமை தபால் நிலைய அதிபர் பதவியில் பணிபுரிந்த ஓய்வுபெற்ற அலுவலரான தாம், ஒருங்கிணைந்த தபால் சேவையின் "அ" பிரிவின் III ஆம் தரத்தின் "ஆ" தொகுதியில் தலைமைத் தபால் நிலைய அதிபர் நியமனத்தை முற்திகதியிடப்படாத காரணத்தினால், "அ" III "அ" தொகுதிக்கு பதவி உயர்வு வழங்கும் போது முந்தைய பதவியின் சிரேஷ்டத்துவத்திற்கான புள்ளிகள் கிடைக்கப் பெறாமையினால் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளமையினால், 2000.10.07 ஆம் திகதிக்குரிய பதவி உயர்விற்கேற்ப தமக்குரிய சிரேஷ்டத்துவத்தை வழங்குமாறும், 2005.10.07 ஆம் திகதிக்கு ஒருங்கிணைந்த தபால் சேவையின் "அ" பிரிவின் III ஆம் தரத்தின் "அ" தொகுதிக்கான பதவி உயர்வை வழங்கி, அதற்கேற்ப சம்பளம், | 2005.10.07 அன்று நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் படி, மனுதாரர் 24 புள்ளிகளைப் பெற்று 52 வது இடத்தில் இருந்ததாகவும், தலைமைத் தபால் நிலைய அதிபர் பதவியின் நியமனத்தை முற்திகதியிடுவதற்காக மனுதாரரால் நிர்வாக மேன்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு செய்யப்பட்ட மேன்முறையீட்டின் அடிப்படையில், 2001.06.01 ஆம் திகதிக்கு நியமனம் முற்திகதியிடப்பட்டது என்றும், அதன் காரணமாக மேலதிகமாக 03 புள்ளிகள் கிடைத்ததையடுத்து, மேற்படி நேர்முகப் பரீட்சையில் மனுதாரர் பெற்ற புள்ளிகளின் எண்ணிக்கை 27 ஆக உயர்ந்தது என்றும்<br><br>(ஆ) மேற்படி நேர்முகப் பரீட்சையானது 38 வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடத்தப்பட்டது என்றும், அதில் 20 அலுவலர்களுக்கு மாத்திரமே பதவி உயர்வுகள் வழங்கப்பட்டதோடு 27 புள்ளிகளை சமமாகப் பெற்றவர்கள் 22 பேர் இருந்ததால் எஞ்சியிருந்த 18 வெற்றிடங்களை நிரப்ப முடியவில்லை என்றும், மனுதாரருக்கு மேலதிக புள்ளிகள் கிடைத்ததன் மூலம் அவரது மொத்தப் புள்ளிகளின் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொடுப்பனவுகள் மற்றும் வருடாந்த சம்பள உயர்வுகளை முறைப்படி திருத்தியமைக்குமாறும், 2006.08.23 ஆம் திகதியிலிருந்து உரிய ஓய்வூதியத்தை வழங்குமாறும் கோரி மனுதாரரால் இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | எண்ணிக்கை 27 ஆக உயர்ந்த போதிலும், அதனுடன் மனுதாரர் சம புள்ளிகளைப் பெற்றிருந்தவர்களின் குழுவில் இணைந்தார் என்றும்<br><br>(இ) நேர்முகப் பரீட்சையில் சிரேஷ்டத்துவத்திற்கு 60 புள்ளிகளும், செயலாற்றுகைக்காக (சேவை அறிக்கை) 30 புள்ளிகளும், நேர்முகப் பரீட்சைக்காக வெளிப்படுத்தப்பட்ட திறமை/ ஆளுமைக்காக 10 புள்ளிகளும் என புள்ளிகள் வழங்கப்பட்டதாகவும், மனுதாரரின் நியமனம் முற்திகதியிடப்பட்டதன் பின்னர் கிடைத்த மேலதிக 03 புள்ளிகளால் சிரேஷ்டத்துவத்திற்கு கிடைத்த புள்ளிகளின் அளவு 09 இலிருந்து 12 ஆக உயர்ந்ததாகவும், செயல்திறனுக்காக (சேவை அறிக்கை) 10 புள்ளிகளும், நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தப்பட்ட திறமை/ ஆளுமைக்காக 05 புள்ளிகளும் என மொத்தம் 27 புள்ளிகளைப் பெற்றுள்ளதாகவும்<br><br>(ஈ) 2000.10.07 ஆம் திகதிக்கு நியமனத்தை முற்திகதியிட்ட பின்னர், 04 வருடங்களும் 10 மாதங்களும் கொண்ட சேவைக் காலம் கிடைக்கப் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பெறுவதாகவும், ஒரு வருடத்திற்கு 03 புள்ளிகள் வீதமும், 04 மாதங்களுக்கு 01 புள்ளி வீதமும் வழங்கப்பட வேண்டுமென அரச சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளதாகவும், அதற்கமைய அந்த 10 மாதக் காலத்திற்காக தமக்கு மேலும் 02 புள்ளிகள் கிடைக்கப் பெற வேண்டுமென்றும் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்கள்<br><br>(உ) 04 மாத சேவைக் காலத்திற்கு 01 புள்ளி வீதம் வழங்கப்பட வேண்டுமென அரச சேவை ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளதாக மனுதாரர் தெரிவித்த போதிலும், அதற்கான எழுத்துப்பூர்வமான சான்றுகளை சமர்ப்பிக்க மனுதாரர் தவறியுள்ளார் என்பதும், அத்தகையதொரு அறிவித்தல் அரச சேவை ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்டுள்ளமைக்கான எவ்வித குறிப்புகளும் கண்டறியப்படவில்லை என்றும்<br><br>(ஊ) COM/PP/2016/281 இன் கீழ் மனுதாரரால் எட்டாவது பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மனு மீதான பரிசீலனையின் பின்னர், 2017.09.19 திகதியிடப்பட்ட பொது மனுக்கள் பற்றிய குழுவினால் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வழங்கப்பட்டிருந்த பரிந்துரைக்கமைய, பதவி உயர்வுகளை வழங்குவதற்கு வெற்றிடங்கள் ஏற்படும் திகதியே கருத்திற்கொள்ளப்பட வேண்டுமென திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டிருப்பின், "அ" பிரிவின் III ஆம் தரத்தின் "ஆ" தொகுதிக்கான பதவி உயர்வை 2000 ஆம் ஆண்டிற்கு முற்திகதியிடுவதற்கும், அதற்கமைய சேரும் மேலதிக புள்ளிகளைக் கருத்திற்கொண்டு "அ" பிரிவின் III ஆம் தரத்தின் "அ" தொகுதிக்கு பதவி உயர்வு வழங்குவதற்கும் அமைச்சரவை நிருபமொன்றைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரைக்கப்பட்டிருந்ததாகவும், அதற்கமைய சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை நிருபம் நிராகரிக்கப்பட்டது என்றும், நியமனம் முற்திகதியிடப்பட்டதன் பின்னர் கிடைத்த மேலதிக 03 புள்ளிகள் சேர்க்கப்பட்ட பின்னரும் மனுதாரருக்குக் கிடைப்பது 27 புள்ளிகள் என்பதால், அவருக்கு நியமனத்தைப் பெற்றுக்கொள்வதற்கான எவ்வித உரிமையும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |

| பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | | | | |
|---|---|---|---|---|
| 52 | திருமதி கே.ஏ. ரஞ்சனி குசுமலதா<br>COM/PP/2025/62<br>கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அமில பிரசாத் அவர்களால், சமர்ப்பிக்கப்பட்டது.<br>2025.09.11 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல: HA/05/07/03/ (தொகுதி II)<br>திகதி: 2025.07.18 | கம்பஹா மாவட்டத்தின் யடிகஹ வடக்கு பிரிவின் பிறப்பு, இறப்புப் பதிவாளர் மற்றும் ஹாபிடிகம கோரளைப் பிரிவின் விவாக (உடரட்ட/பொது) மேலதிக பதிவாளர் பதவியை வழங்குமாறு கோரி, பொது மனுக்கள் பற்றிய குழுவிடம் மேன்முறையீடொன்றை முன்வைத்ததாகவும், அதற்கமைய 2012.11.14 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இப்பதவியை மனுதாரருக்கு வழங்குமாறு அக்காலப்பகுதியில் இருந்த உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்ததாகவும், எனினும், இப்பதவி நியமனமானது 2018.08.15 ஆம் திகதியே வழங்கப்பட்டதாகவும், மேற்படி தாமதம் காரணமாகத் தான் சேவை செய்திருக்கக்கூடிய காலத்திலிருந்து 06 வருடங்கள் | (அ) பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் கம்பஹா மாவட்டத்தின் ஹாபிடிகம கோரளைப் பிரிவிற்காக பதிவாளர்களைப் ஆட்சேர்ப்பு செய்வதற்கென 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட பரீட்சைகளுக்கு தாம் வெற்றிகரமாகத் தோற்றிய போதிலும், அப்பரீட்சைகள் அநீதியான முறையில் இரத்துச் செய்யப்பட்டதாகவும், 2015 ஆம் ஆண்டிலும் குறித்த பரீட்சைக்குத் தோற்றிய போதிலும், அக்காலப்பகுதியில் தமது வயது 60 ஐத் தாண்டியிருந்தமையினால் அந்த நேர்முகப் பரீட்சையிலும் தமக்கு நியமனம் கிடைக்கவில்லை என்றும், இது தொடர்பாக முன்னைய பொது மனுக்கள் பற்றிய குழுவிடம் மேன்முறையீடு செய்ததையடுத்து, அதன் பரிந்துரைக்கமைய 2018 ஜூலை 25 ஆம் திகதி முதல் தமக்கு நியமனம் வழங்கப்பட்ட போதிலும், அதற்கிடையில் தாம் சேவை செய்திருக்கக்கூடிய சில வருடங்களை இழக்க நேரிட்டதாகவும் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்கள்.<br>(ஆ) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைகளில், கையெழுத்துக்கான குறைந்தபட்ச அடிப்படை | நிவாரணம் வழங்குவதற்குப் பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குறைவடைந்துள்ளதாகவும், தற்போது தனக்கு 69 வயதாகிய போதிலும் தான் தொடர்ந்து பணியாற்றுவதற்கு நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாகவும் கூறும் மனுதாரர் மேலும், தனது திணைக்களத்தில் தற்போதும் 75 வயது வரை சேவையில் ஈடுபட்டுள்ள விவாகப் பதிவாளர்கள் இருப்பதை கவனத்திற்கொண்டு, தனக்கும் 75 வயது வரை சேவையில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குமாறு கோரி மனுதாரரால் இம்மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | மதிப்பெண்களைப் பெற மனுதாரர் தவறியுள்ளார் என்றும், 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற நேர்முகப் பரீட்சையிலும் 60 வயதைத் தாண்டியிருந்த காரணத்தினால் அவர் நிராகரிக்கப்பட்டார் என்றும், இது குறித்து இதற்கு முன்னர் பொது மனுக்கள் பற்றிய குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டதற்கு இனங்க வழங்கப்பட்ட பரிந்துரையின்படி, 65 வயதில் ஓய்வுபெறுவதற்கு உட்பட்டு மனுதாரருக்கு நியமனம் வழங்கப்பட்ட போதிலும், பின்னர் 70 வயது வரை சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது என்றும், சுற்றறிக்கையின்படி 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் வழங்கப்பட்ட நியமனங்களுக்கு 70 வயது வரை சேவையை நீட்டிக்க முடியுமெனினும், அதன் பின்னர் வழங்கப்பட்ட இந்த நியமனத்திற்கு அவ்வாறு சேவையை நீட்டிக்க முடியாதென்றும்<br><br>(இ) சர்ச்சைக்குரிய பதிவாளர் பதவி, அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் வழங்கப்பட்ட மேலதிக திருமணப் பதிவாளர் பதவியாகும் என்பதால், மனுதாரர் ஓய்வு பெற்றவுடன் அந்த மேலதிக திருமணப் பதிவாளர் பிரிவும் இல்லாது போகுமென்றும்,<br><br>(ஈ) மனுதாரருக்கு | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வழங்கப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய பதிவாளர் பதவி ஒரு கௌரவப் பதவியாகும் என்பதோடு அது தற்போதுள்ள சட்ட ஏற்பாடுகளின் கீழ் மேலும் நீடிப்பதற்கான வாய்ப்பு இல்லையென்றும் தெரிவிக்கப்பட்டது. | |
| 53 | திரு. எஸ். எம். விராஜ் குமார சமரவீர அவர்கள் COM/PP/2025/24 கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஈ. எம். பஸ்தநாயக்க அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. 2025.10.09 ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல: MPA/PSD/C2/Sab (தொகுதி II) திகதி: 2022.11.11 | 1999 ஆம் ஆண்டு சேவையில் இணைந்து, தற்போது மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டு, திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு தொடர்பான பணிகளை ஆற்றி வருவதாகவும், 2009.04.19 அன்று நடைபெற்ற இலங்கை திட்டமிடல் சேவைக்கு (மிகை ஊழியர் அடிப்படையில்) ஆட்சேர்ப்பு பரீட்சையில் சித்தியடைந்து, அதற்குரிய நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியதாகவும், நியாயமற்ற மற்றும் அடிப்படைற்ற நடைமுறைகளைப் பின்பற்றி நியமனங்கள் வழங்கப்பட்டதாகவும், நியமனம் பெற்ற அலுவலர்களுக்கு | (அ) 1999 ஆம் ஆண்டு பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக்கொள்ளும் திட்டத்தின் கீழ், பொது நிர்வாக அமைச்சினால் உள்வாங்கப்பட்டு, மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டு, அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் பதவியை வகித்து திட்டமிடல் பணிகளில் ஈடுபட்டதாகவும், இதுவரை சுமார் 26 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகக் கடமையாற்றி வருவதாகவும், 1999 ஆம் ஆண்டு திட்டமிடல் அமுலாக்கம் அமைச்சின் கீழ் இணைக்கப்பட்ட பட்டதாரிகளும் தமக்கு இணையான கடமைகளை ஆற்றி வந்ததாகவும், இலங்கை திட்டமிடல் சேவைக்கு மிகை ஊழியர் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யும்போது, அடிப்படையற்ற மற்றும் நியாயமற்ற முறையில் நியமனங்கள் வழங்கப்பட்டதன் மூலம், இவ்விரு தரப்பினரில் தான் பிரதிநிதித்துவப்படுத்தும் தரப்பினருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதால், தமக்கும் நியமனம் வழங்கி நீதியை நிலைநாட்டுமாறு மனுதாரரால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br>(ஆ) அக்காலகட்டத்தில் திட்ட | சலுகை வழங்குவதற்குப் பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இணையான தகுதிகளைக் கொண்டிருந்த தான் உட்பட சிலருக்கு உரிய பதவி உயர்வுகளை வழங்காதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் குறிப்பிடும் மனுதாரர், இலங்கை திட்டமிடல் சேவைக்கு (மிகை ஊழியர் அடிப்படையில்) நியமனங்களை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | அமுலாக்கல் அமைச்சிற்கு இணைக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அவ்வமைச்சு கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து பிற அமைச்சுகளின் கீழ் சென்றதாகவும், மீண்டும் திட்ட அமுலாக்கல் அமைச்சு செயற்படத் தொடங்கியதையடுத்து, மேற்படி உத்தியோகத்தர்கள் இழந்த பதவி உயர்வுகளை வழங்கும் நோக்கில் சமர்ப்பிக்கப்பட்ட விசேட அமைச்சரவை நிருபத்தின் ஊடாக, மிகை ஊழியர் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டதாகவும், இவ்வாறு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்கள் நிரந்தர ஊழியர் குழாமிற்கு அப்பாற்பட்டவர்கள் என்றும்<br><br>(இ) 2007.01.01 திகதியாகும்போது தகுதிகளைப் பூர்த்தி செய்த, இலங்கை திட்டமிடல் சேவைப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆறு (06) உத்தியோகத்தர் பிரிவினருக்கு மாத்திரமே இந்த மிகை ஊழியர் அடிப்படையிலான ஆட்சேர்ப்புப் பரீட்சை பொருந்தும் என்றும், எனினும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அந்தத் தகுதிகளைப் பூர்த்தி செய்திருப்பது கட்டாயமானதல்ல என்றும், நேர்முகப் பரீட்சையின் போதே அந்தத் தகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பது பரிசீலிக்கப்படும் என்றும், அதற்கமைய மனுதாரர் 31 புள்ளிகளைப் பெற்றுப் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பரீட்சையில் சித்தியடைந்திருந்த போதிலும், சேவை யாப்பின் “உ” பின்னிணைப்புப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர் பிரிவுகளில் அவர் உள்ளடங்கவில்லை என்பதால், நேர்முகப் பரீட்சையின் போது அவருக்கு நியமனம் பரிந்துரைக்கப்படவில்லையென்றும்<br><br>(ஈ) மிகை ஊழியர் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பரீட்சையில் சித்தியடைந்த போதிலும், மேலே குறிப்பிட்ட காரணத்தினால் நேர்முகப் பரீட்சையில் நியமனம் பரிந்துரைக்கப்படாத எழுபத்தி நான்கு (74) அலுவலர்கள் இருப்பதாகவும், சேவை யாப்பின் “உ” பின்னிணைப்புப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர் பிரிவில் உள்ளடங்காத காரணத்தினால் பரீட்சைக்கு விண்ணப்பிக்காத அலுவலர்களும் இருப்பதாகவும், எனவே, பரீட்சையில் சித்தியடைந்தமைக்காக மாத்திரம் நியமனங்களை வழங்குவதை நியாயப்படுத்த முடியாது என்றும்<br><br>(உ) இலங்கை திட்டமிடல் சேவை யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஆறு உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு புறம்பாக, மிகை ஊழியர் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான அலுவலர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதாக மனுதாரரால் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br>(ஊ) இலங்கை திட்டமிடல் சேவைக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும் போது, அதற்கு விண்ணப்பிப்பதற்கான சந்தர்ப்பம் மனுதாரருக்கு இன்னும் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| 54 | திரு. டி. ஜி. சந்திரசேன அவர்கள்<br>COM/PP/2025/215 கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திலங்க யூ. கமகே அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.<br>2025.10.23 ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல: PL/7/4/5/1/2019 திகதி: 2019.07.18 | 1999 ஆம் ஆண்டு யக்கலமுல்ல பிரதேச சபையினால் நபதவ வதோகல வீதி மறுசீரமைக்கும் பணிகளின் போது, மனுதாரரின் வீடு அமைந்துள்ள மனற்குன்று புல்டோசர் மூலம் இடிக்கப்பட்டதால், தற்போது வீடு இடிந்து விழும் நிலையில் உள்ளதோடு, அதில் வசிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும், 2001 ஆம் ஆண்டு முதல் ஏற்பட்ட இப்பாதிப்பு தொடர்பாக இதுவரையில் பல தரப்பினரிடம் மேன்முறையீடுகளைச் செய்துள்ளதாகவும், அந்த | (அ) 1999.05.18 ஆம் திகதி யக்கலமுல்ல பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்தி கருத்திட்டத்தின் போது, தனது வீடு அமைந்துள்ள மனற்குன்று புல்டோசர் மூலம் இடிக்கப்பட்டதால் வீட்டிக்குச் சேதம் ஏற்பட்டதாகவும், சேதமடைந்த வீட்டிற்குப் பதிலாக பிரதேச சபையினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட ஒற்றை அறை கொண்ட வீட்டிலேயே தற்போது தனது மனைவி மற்றும் அங்கவீனமுற்ற பிள்ளையுடன் வசித்து வருவதாகவும், அந்த வீட்டின் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்வதற்குப் பணம் தேவைப்படுவதாகவும்<br>(ஆ) ஒருங்கிணைந்த கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வீதி விரிவுபடுத்தல் பணிகளினால் மனுதாரரின் வீட்டிற்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை | நிவாரணம் வழங்குவதற்குப் பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேன்முறையீடுகளைக் கருத்தில் கொண்ட மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பாராளுமன்றத்தின் பொது மனுக்கள் பற்றிய குழு ஆகியவை, ஏற்பட்ட இழப்பிற்கு ஈடான நட்டஈட்டை வழங்குமாறு பரிந்துரை செய்த போதிலும்,<br><br>இதுவரை அந்த நிவாரணங்கள் கிடைக்கவில்லை என்றும், மேற்படி விடயங்களைக் கருத்தில் கொண்டு, மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பாராளுமன்ற பொதுமனுக்கள் பற்றிய குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தி, மனுதாரருக்குக் கிடைக்க வேண்டிய நட்டஈட்டுத் தொகையைப் பெற்றுத் தருமாறு கோரி இம்மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | என்றும், ஈரப்பதமான ஆபத்தான பகுதியில் அமைந்துள்ள, கற்கள் மற்றும் மண் கலவையைக் கொண்ட அந்த வீட்டின் சுவர் இவ்வாறாகச் சிதைவடைந்தமைக்கு 1999 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்தித் திட்டம் காரணமாக இருக்க முடியாது என்றும்<br><br>(இ) மனுதாரர் 2002 ஆம் ஆண்டு முதல் அவ்வப்போது பொதுமனுக்கள் பற்றிய குழுவின் முன்னிலையில் ஆஜராகியுள்ளார் என்றும், அதற்கமைய வழங்கப்பட்ட பரிந்துரைகளின்படி யக்கலமுல்ல பிரதேச சபையினால் அவரது பழைய வீட்டிற்குப் பதிலாக தற்காலிகக் கொட்டகையொன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், பின்னர் பிரதேச சபையின் 4 வருமானத் தவணைப் பணங்களின் செலவில் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியிலான வீடு ஒன்றை அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்<br><br>(ஈ) மனுதாரருக்கு ஏற்பட்டதாகக் கூறப்படும் சேதத்தை விட, அவருக்குக் கிடைத்த நன்மைகள் அதிகமென தெரிவிக்கப் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பட்டுள்ளது. | |
| 55 | திரு. எஸ்.பீ. சுமனசேகர அவர்கள்<br><br>COM/PP/2025/218 கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திலங்க யூ. கமகே அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>2025.10.23 ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல: PL/6/3/COM/PP/2023 திகதி: 2024.03.15 | 2000.01.10 ஆம் திகதி முதல் இலங்கை தொழில்நுட்ப சேவையின் II (ஆ) பதவியில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக காலி மாவட்ட கட்டிடப் பொறியியல் அலுவலகத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்தபோது, கொக்கல ஹோட்டல் பயிற்சிப் பாடசாலையின் கட்டுமானப் பணிகள் தொடர்பான குறைபாடு குறித்து, ஒழுக்காற்று அலுவலரினால் 01/02 ஆம் இலக்க மற்றும் 2010.03.03 ஆம் திகதியிடப்பட்டதுமான குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டதாகவும், அதற்கமைய முறையான ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட்டு ஒழுக்காற்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும்,<br><br>அவ்வொழுக்காற்று உத்தரவு தொடர்பாக | (அ) தொழில்நுட்ப சேவையின் II (ஆ) தர உத்தியோகத்தராக கொக்கல ஹோட்டல் பயிற்சிப் பாடசாலையின் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டிருந்தபோது ஏற்பட்ட தொழில்நுட்பக் குறைபாடு காரணமாக தனக்கு எதிராக முறையான ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட்டதாகவும்,<br><br>அதற்கமைய 5 சம்பள உயர்வுகளை இடைநிறுத்துதல் மற்றும் 3 ஆண்டுகாலத்திற்கு பதவி உயர்வுகளை ஒத்திவைத்தல் ஆகிய ஒழுக்காற்று உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும்,<br><br>இருப்பினும், ஒரு அரச உத்தியோகத்தர் என்ற ரீதியில் தனது பதவியின் பொறுப்புகளையும் கடமைகளையும் நிறைவேற்றத் தவறியமை மற்றும் உயர் அதிகாரிகளை அசௌகரியத்திற்கு உள்ளாக்கியமை ஆகிய குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்ட தனக்கு இவ்வாறான தண்டனைகளை விதிப்பது நியாயமற்றது என்றும்<br><br>(ஆ) மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சிரேஷ்ட அலுவலர்களுக்கும் ஒழுக்காற்று தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும்,<br><br>தனது முறையான ஒழுக்காற்று | நிவாரணம் வழங்குவதற்குப் பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2011.08.05 ஆம் திகதி வழங்கப்பட்ட இறுதி அறிக்கையின்படி, 3 ஆவது குற்றச்சாட்டின் கீழ் தொழில்நுட்ப உத்தியோகத்தர் என்ற வகையில் தனது கடமைகளையும் பொறுப்புக்களையும் உணர்ந்து செயற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டபோதிலும், அதிலுள்ள ஏனைய மூன்று சிறிய குற்றச்சாட்டுகளுக்காக சம்பள உயர்வை இடைநிறுத்தி, பதவி உயர்வைப் பெறும் காலத்தை நீட்டித்தல் மூலம் ஒழுக்காற்று தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடும் மனுதாரர், நியாயமற்ற முறையில் விதிக்கப்பட்ட 01/02/வி/கொ ஆம் இலக்க மற்றும் 2011.10.05 ஆம் திகதியிடப்பட்டதுமான மேற்படி ஒழுக்காற்று உத்தரவை நீக்கித் தருமாறு கோரி இம்மனுவைச் | விசாரணையின் உத்தரவைத் திருத்தித் தருமாறு கோரி மனுதாரர் தென் மாகாண அரச சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்த மேன்முறையீடும் அந்த ஆணைக்குழுவினால் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும், இருப்பினும், மனுதாரர் தென் மாகாண ஆளுநரிடம் இருமுறை மேன்முறையீடுகளைச் சமர்ப்பித்ததன் அடிப்படையில், அவரது மேற்படி ஒழுக்காற்று உத்தரவு, இரண்டு தடவைகள் ஒரு சம்பள உயர்வை இடைநிறுத்துதல் மற்றும் 3 ஆண்டுகளுக்குப் பதவி உயர்வுகளை இடைநிறுத்துதல் எனத் திருத்தப்பட்டுள்ளதாகவும்<br><br>(இ) 31 ஆவணச் சான்றுகள் மற்றும் 5 நபர்களின் வாய்மொழிச் சான்றுகளின் அடிப்படையில், மனுதாரரினால் இழைக்கப்பட்ட தவறு தென் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் 6/2020 இலக்கச் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாவது அட்டவணைப்படுத்தப்பட்ட தவறு என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால், அவருக்கு 3 ஆண்டுகாலத்திற்குப் பதவி உயர்வுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக<br><br>(ஈ) சர்ச்சைக்குரிய சம்பவம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பித்துள்ளார். | தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஏனைய அலுவலர்கள் ஒழுக்காற்று உத்தரவுகளின்படி தண்டனைகளைப் பெற்றுள்ள போதிலும், மனுதாரருக்கு விதிக்கப்பட்டிருந்த ஒழுக்காற்று உத்தரவு தென் மாகாண ஆளுநரால் ஏளவே திருத்தப்பட்டுள்ளதாகவும், அதற்கமைய மனுதாரர் தனது 60 வயது பூர்த்தியாகி ஓய்வு பெறும் வரை, அதாவது 2031 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து சேவை செய்வதற்கும், அதற்கு இடைப்பட்ட காலத்தில் விசேட தரத்திற்குப் பதவி உயர்வு பெறுவதற்கும் எவ்வித தடையும் இல்லை என்றும், அவ்வாறிருக்கையில், மனுதாரரால் இழைக்கப்பட்ட தவறுக்காக வழங்கப்பட்டுள்ள ஒழுக்காற்று உத்தரவை மேலும் திருத்தம் செய்வதன் மூலம் தவறான முன்னுதாரணத்தை வழங்குவது நியாயமானதல்ல என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| 56 | திரு. டபிள்யூ.ஏ.ஏ.சி. மான்டிலோவ் அவர்கள்<br>COM/PP/2025/168 கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் கயான் ஜானக அவர்களால் | புத்தளம் மாவட்டத்தில் கிராம உத்தியோகத்தராகக் கடமையாற்றிய மனுதாரர், அரச நிர்வாகச் சுற்றுநிருபம் 44/90-இன் பிரகாரம் ஓய்வு பெற்று வெளிநாடு சென்றிருந்ததாகவும், | (அ) 1975 ஆம் ஆண்டு கிராம உத்தியோகத்தர் நியமனம் பெற்ற தான், பல்வேறு பணித்தலங்களில் கடமையாற்றிய பின்னர் தனது இறுதி நியமனத்தை தனது சொந்த ஊரான 'பஹல ஹத்தினிய' பகுதியில் பெற்றதாகவும், ஓய்வு பெற்றதன் பின்னர் தமக்குக் | நிவாரணம் வழங்குவதற்குப் பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டது. 2025.11.19 ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல: HA/3/1/20/19-1 திகதி: 2025.09.02 | 2000.01.04 அன்று மீண்டும் இலங்கை வந்த அவர், தனக்குச் சேர வேண்டிய ஓய்வூதியத்தை வழங்குமாறு கோரி 2001.01.10 அன்று மஹவெவ பிரதேச செயலகத்திற்கு விண்ணப்பக் கடிதம் ஒன்றைச் சமர்ப்பித்ததாகவும், அது தொடர்பில் ஆரம்பத்தில் எவ்வித பதிலும் கிடைக்கப்பெறவில்லை என்றாலும், பின்னர் மனுதாரருக்கு வழங்கப்பட்டதாகக் குறிப்பிடப்படும் பணம் குறித்த அறிக்கையொன்றை அவ்வலுவலகம் அவருக்கு அனுப்பியதாகவும், இருப்பினும், அந்தப் பணம் மனுதாரருக்கு வழங்கப்பட்ட பணம் அல்ல என்றும், அவை வழங்கப்பட வேண்டிய மற்றும் இதுவரை கிடைக்கப் பெறாத பணம் என்றும், மக்கள் வங்கியின் 2018.05.25 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம், சம்பந்தப்பட்ட நிலுவை ஓய்வூதியத் | கிடைக்க வேண்டிய 100,261.69 ரூபாய் நிலுவை ஓய்வூதியத் தொகையை, மஹவெவ பிரதேச செயலகம் 133229 இலக்கக் காசோலை மூலம் 7409 இலக்க மக்கள் வங்கிக் கணக்கிற்கு வரவு வைப்பதற்காக வங்கிக்கு அனுப்பியதாகக் கூறினாலும், இதுவரை அந்தப் பணம் கிடைக்கப் பெறவில்லை என்றும், உரிய பணத்தை தனக்கு வழங்குமாறும் கோரி மனுதாரரால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(ஆ) 1991.01.18 அன்று ஓய்வு பெற்ற மனுதாரருக்கு, சேவைக்காலம் 20 ஆண்டுகள் பூர்த்தியாகும் 1997.03.27 முதல் ஓய்வூதியம் வழங்கத் தொடங்கப்பட்டுள்ளதாகவும், 1997.03.27 முதல் 2000.01.31 வரையிலான காலப்பகுதிக்குச் செலுத்த வேண்டிய நிலுவை ஓய்வூதியத் தொகையான 100,261.69 ரூபாய், அவர் ஓய்வூதியம் பெறுவதற்காக பொது மாதிரிப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள மஹவெவ மக்கள் வங்கியின் 7409 இலக்க அவரின் கணக்கிற்கு வரவு வைப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளதோடு, சம்பந்தப்பட்ட காசோலையின் அடிக்கட்டை தமது அலுவலகத்தில் உள்ளதாகவும், 2000 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அக்காசோலை பணமாக்கப்பட்டமை வங்கி அறிக்கைகளின் மூலம் தெரியவருவதாகவும், அதன் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொகைகள் ஒருபோதும் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ள தாகவும், இது தொடர்பில் விசாரணை செய்த ஓய்வூதியத் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்கள், நிலுவைச் சம்பளத்திற்கான உரிய காசோலையை மஹவெவ பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மனுதாரரிடம் கையளித்துள்ளதாகக் கூறுவதாகவும், பிரதேச செயலகத்தினால், 100,261.68 ரூபாய் நிலுவைத் தொகையை 133229 இலக்கக் காசோலை மூலம் 7409 இலக்கக் கணக்கிற்கு வரவு வைப்பதற்காக 2000.02.14 ஆம் திகதி வங்கிக்கு அனுப்பியதாகக் கூறுவதாகவும், எவ்வாறாயினும், | பின்னர் தொடர்ச்சியாக அவரது மாதாந்த ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளதாகவும்<br><br>(இ) கையெழுத்து முறையில் செயற்பட்டு வந்த மக்கள் வங்கியின் மஹவெவ கிளையின் பணிகள் கணினிமயமாக்கப்பட்டது 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் என்றும், சர்ச்சைக்குரிய காசோலை மஹவெவ பிரதேச செயலகத்தினால் மக்கள் வங்கியின் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்ட திகதி 2000.02.11 என்றும், அந்தக் காலப்பகுதிக்குரிய ஆவணங்கள் வங்கியின் உள்ளகச் சுற்றுநிருபங்களின் விதிகளுக்கு அமைய தற்போது அழிக்கப்பட்டுவிட்டன என்றும்<br><br>(ஈ) மனுதாரரிடம் 7409 இலக்க கூட்டுக் கணக்கிற்காக வழங்கப்பட்ட வங்கி பற்றுவரவேடு இல்லையென்றும், நிலுவை ஓய்வூதியத்தை வழங்குவதில் அநீதி இழைக்கப்பட்டதைச் சான்றுகளுடன் நிரூபிப்பதற்கு அவர் தவறிவிட்டார் என்றும்<br><br>(உ) 2000.02.11 அன்று மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு தொடர்பாக மனுதாரர் நீண்ட காலதாமதத்திற்குப் பின்னர் 2013 ஆம் ஆண்டிலேயே விசாரணை செய்துள்ளதாகவும், 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2006 ஆம் ஆண்டு முதல் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளத் தொடங்கிய போதிலும், இதுவரை எந்தவொரு காசோலையோ அல்லது பற்றுச்சீட்டோ வவுச்சர்களோ கிடைக்கவில்லை எனக் குறிப்பிடும் மனுதாரர், தமக்குக் கிடைக்க வேண்டிய நிலுவை ஓய்வூதியத்தை வழங்குமாறு கோரி இம்மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | பின்னரும் சர்ச்சைக்குரிய மக்கள் வங்கியின் கூட்டுக் கணக்கு மூலம் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றுள்ளமை தெரியவருகின்ற போதிலும், அது குறித்து தனக்குத் தெரியாது என மனுதாரர் தெரிவிப்பதாகவும், இடம்பெற்றதாகக் கூறப்படும் அநீதியை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்கள் மக்கள் வங்கியின் மஹவெவ கிளையிடமோ அல்லது மனுதாரரிடமோ இல்லை என்றும், இருக்கின்ற எழுத்துமூலச் சான்றுகளின் அடிப்படையில் அவருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| 57 | திரு. எம். சண்முகம் லோகசிவம் அவர்கள்<br><br>COM/PP/2025/239 கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>2025.11.19 ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல: EST- | மனுதாரர் யாழ்ப்பாண மாநகர சபைக்குச் சொந்தமான சமூக நிலையலமொன்றில் பணி மேற்பார்வையாளராகக் கடமையாற்றியவரென்றும், ஓய்வூதியத் திணைக்களம் 2019.03.12 ஆம் திகதி முதல் அவருக்கு ஓய்வூதியத்தை வழங்கியபோதிலும், ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதில் குறைகள் காணப்படுவதாகவும், அதற்கமைய | (அ) 1990 ஆம் ஆண்டு நாட்டில் நிலவிய சூழ்நிலை காரணமாக வெளிநாடு சென்ற தான், மீண்டும் நாட்டிற்கு வருகை தந்து பொது நிர்வாகச் சுற்றுநிருபம் 04/2006 இற்கமைய மேற்கொண்ட மேன்முறையீட்டின் அடிப்படையில், வட மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் 2006.06.01 முதல் மீண்டும் பணியில் இணைக்கப்பட்டதாகவும், 60 வயது பூர்த்தியானதைத் தொடர்ந்து 2017.10.11 அன்று ஓய்வு பெற்றதாகவும், அப்போது ஒரு குறிப்பிட்ட | நிவாரணம் வழங்குவதற்குப் பரிந்துரைக்கப்படவில்லை. 47%-57% சதவீதத்தின் கீழ் மனுதாரரின் ஓய்வூதியம் கணக்கிடப்பட்ட விதம் குறித்த விரிவான அறிக்கையொன்றை, பொது மனுக்கள் தொடர்பான குழுவின் பணியகத்திற்கும் ஒரு பிரதியுடன் சேர்த்து மனுதாரருக்கும் அனுப்பி வைக்குமாறு பரிந்துரைக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 3/DICIP/06/0297<br>திகதி: 2022.12.08 | 1986.04.05 முதல் 2017.10.11 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு ஓய்வூதியத்தை வழங்குமாறு 2019.05.19 ஆம் திகதி அப்போதைய பொது நிர்வாக, முகாமைத்துவ மற்றும் சட்ட ஒழுங்கு அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கையை, அந்த அமைச்சு ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பியிருந்த போதிலும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும்,<br><br>1990 இல் இலங்கையில் நிலவிய இன ரீதியான மோதல்களின் போது ஏற்பட்ட உயிர் அச்சுறுத்தல்கள் காரணமாக நாட்டை விட்டு வெளியேற வேண்டியேற்பட்ட போதிலும், 2017.10.11 ஆம் திகதி யாழ்ப்பாண மாநகர சபை, அவர் வெளிநாட்டில் தங்கியிருந்த காலப்பகுதியையும் உள்ளடக்கி ஓய்வூதியத்தைக் | காலப்பகுதிக்கு ஓய்வூதியம் இடைநிறுத்தப்பட்டதாகவும், மேற்படி சுற்றுநிருபத்தின்படி தனது ஊதியமற்ற சேவைக்காலத்தையும் உள்ளடக்கி கணக்கிடும்போது சேவைக்காலம் 30 ஆண்டுகளைத் தாண்டுவதால், 79%-89% சதவீத பெறுமதியிலேயே ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் என்ற போதிலும், ஓய்வூதியத் திணைக்களம் அதனை 47%-57% சதவீத பெறுமதியின் கீழ் கணக்கிட்டுள்ளமை சிக்கலுக்குரியது என்றும் மனுதாரரால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(ஆ) வெளிநாடு செல்வதற்கு முன்னர் 1987.07.01 முதல் 1990.12.01 வரை நிரந்தரச் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த மனுதாரர், இந்நாட்டிற்கு வருகை தந்ததன் பின்னர் பொது நிர்வாகச் சுற்றுநிருபம் 04/2006 இன் விதிகளுக்கமைய 2006 ஆம் ஆண்டு முதல் மீண்டும் பணியில் இணைக்கப்பட்டுள்ளதாகவும், அச்சுற்றுநிருபத்தின் 5 ஆவது பந்தியின்படி, அரச உத்தியோகத்தர் அல்லது உள்ளூராட்சிச் சேவை உத்தியோகத்தர் ஒருவர் மீண்டும் பணியில் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணக்கிடுமாறு ஓய்வூதியத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்திருந்ததுடன், அதற்கமைய 60,497 ரூபாய் பணம் வழங்கப்பட்டதாகவும், ஆயினும், 2019.03.12 முதல் ஓய்வூதியம் வழங்கப்பட்டிருப்பது சேவைக்காலம் 360 மாதங்களாகக் கருதப்பட்டு என்றும், அப்போது ஓய்வூதியக் ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு சேவையற்ற காலப்பகுதியை 79%-89% இடையிலான சதவீத பெறுமதியாகக் கருதுவதற்குப் பதிலாக, அது 47%-57% வரை குறைக்கப்பட்டு கணக்கிடப்பட்டுள்ள தாகவும் குறிப்பிட்டு, அநீதிக்கு உள்ளாகி நாட்டை விட்டு வெளியேறிய நிலையில், அமைச்சரவை பத்திரமொன்றிற்கு அமைய பொது நிர்வாகச் சுற்றுநிருபம் 04/2006 இன் பிரகாரம் மீண்டும் சேவையில் | இணைக்கப்படும்போது, வேலை இழந்த தினத்திற்கும் மீண்டும் பணிக்குத் திரும்பிய தினத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியை விடுமுறைகளைக் கொண்டு ஈடுசெய்ய இடமளிக்கப்பட வேண்டுமென்றும், மீதமுள்ள ஏதேனும் காலப்பகுதி இருப்பின் அது ஊதியமற்ற விடுமுறையாகக் கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும், அதற்கமைய மனுதாரரின் ஓய்வூதியத்தைக் கணக்கிடும்போது ஊதியமற்ற விடுமுறைக் காலத்தையும் உள்ளடக்கி மொத்த தேறிய சேவைக்காலம் 30 ஆண்டுகளைத் தாண்டி கணிக்கப்பட்ட போதிலும், ஓய்வூதியக் பிரமாணக் குறிப்பின் விதிகளுக்கமைய மேற்படி சேவைக்காலத்திலுள்ள 5661 நாட்களான ஊதியமற்ற விடுமுறைக் காலப்பகுதியில் இருந்து 365 நாட்களை நீக்கிவிட்டு, எஞ்சிய ஒவ்வொரு மாதத்திற்கும் 0.2% வீதம் குறைக்கப்பட வேண்டியுள்ளதோடு, அதற்கமைய 47%-57% சதவீதத்தின் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்பட்டதாகவும்<br><br>(இ) பொது நிர்வாகச் சுற்றுநிருபம் 4/2006 இன் கீழ் மனுதாரர் மீண்டும் சேவையில் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இணைக்கப்பட்ட மனுதாரருக்கு, இதனால் ஏற்பட்டுள்ள அநீதியைக் கருத்திற்கொண்டு உரிய முறையில் ஓய்வூதியத்தைக் கணக்கிட்டு வழங்குமாறும், அது தொடர்பான ஏனைய நிவாரணங்களைப் பெற்றுத் தருமாறும் கோரி இம்மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | இணைக்கப்பட்டு ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும், ஓய்வூதியச் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கமைய குறைந்த சதவீதப் பெறுமதியின் கீழ் அவரது ஓய்வூதியத்தைக் கணக்கிட வேண்டியேற்பட்டுள்ளமையால், மனுதாரருக்குக் கிடைக்கும் நிவாரணம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும்<br><br>(ஈ) பொது நிர்வாகச் சுற்றுநிருபம் 04/2006 இன் கீழ், 10 வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்யாத நபர்களுக்கு, சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்து ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி சுற்றுநிருபத்தின் விதிகள் இருந்திருக்காவிட்டால், மனுதாரருக்கு முந்தைய சேவைக்காலத்திற்காக ஓய்வூதியம் உரித்தாகியிருக்காது என்பதோடு, பிந்தைய சேவைக்காலமும் 25 ஆண்டுகளுக்குக் குறைவாக இருப்பதால், ஓய்வூதியக் பிரமாணக் குறிப்பின் விதிகளுக்கமைய ஒவ்வொரு 6 மாதத்திற்கும் 0.1% வீதம் குறைத்து 41%-51% சதவீதத்தின் கீழ் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஓய்வூதியத்தைக் கணக்கிட வேண்டியுள்ளதாகவும், பொது நிர்வாகச் சுற்றுநிருபம் 04/2006 இல் குறிப்பிட்டுள்ளவாறு, ஊதியமற்ற விடுமுறைக் காலமானது சேவைக்காலமாகக் கருதப்பட வேண்டுமே தவிர, அது ஊதியத்துடனான சேவைக்காலமாகக் கருதப்பட வேண்டும் என்று குறிப்பிடப்படவில்லை என்றும், 30 ஆண்டுகளைத் தாண்டிய மொத்த சேவைக்காலத்தில் சுமார் 16 ஆண்டுகள் பணியில் இல்லாத மனுதாரரின் ஊதியமற்ற விடுமுறையைக் கணக்கில் கொள்ளாது ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதற்குச் சாத்தியமில்லையென்றும்<br><br>(இ) பொது நிர்வாகச் சுற்றுநிருபம் 4/2006 இன் ஏற்பாடுகளையும் ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் விதிகளையும் மீறி, மனுதாரர் கோரும் வகையில் அவரது ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதற்குச் சாத்தியமில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| 58 | திரு. ஆர். அகிலன் COM/PP/2025/244<br>கௌரவ அருண் ஹேமசந்திர, பா.உ., அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | மனுதாரரர் 2001.10.01 அன்று எழுதுநர் II-(அ) தரத்தில் நியமனம் பெற்று, வடக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு இணைக்கப்பட்டுச் | (அ) 2010 ஆம் ஆண்டில் தனது தந்தை நோய்வாய்ப்பட்டதன் காரணமாகத் தம்மால் கடமைக்குச் சமூகமளிக்க முடியாமற் போனதாகவும், அதற்கமைய சேவையை கைவிட்டுச் சென்றதாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், 2013 ஆம் ஆண்டில் இது சம்பந்தமாகக் குச்சவெளி பிரதேச செயலாளரிடம் | நிவாரணங்கள் வழங்குவது பரிந்துரைக்கப்பட வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2025.11.19 அன்று விசாரணை செய்யப்பட்டது. அமைச்சின் தொடர்பிலக்கம்: DP/5/44/2016 திகதி: 2022.05.31 | சேவை புரிந்ததாகவும், இடமாற்றம் பெற்று 2002.12.11 ஆம் திகதி முதல் குச்சவெளி பிரதேச செயலகத்தில் பொது எழுதுநர் சேவையின் II ஆம் வகுப்பின் 'ஆ' பதவியில் சேவை புரிந்து கொண்டிருந்தபோது ஏற்பட்ட நரம்புசார் மனநோய் நிலைமை காரணமாகக் கடமைக்குச் சமூகமளிக்க முடியாமல் போனதால், அவர் சேவையை கைவிட்டுச் சென்றதாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். 2013.10.01 அன்று மீண்டும் சேவையில் அமர்த்துமாறு கோரி குச்சவெளி பிரதேச செயலாளரிடம் சமர்ப்பித்த மேன்முறையீட்டினாலும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை என்றும், பின்னர் அரச நிர்வாக அமைச்சு மற்றும் அரச சேவை ஆணைக்குழு ஆகியவற்றிற்கு விடுத்த கோரிக்கைகளினாலு | மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை என்றும், தற்போது வேலையின்றியும் வருமானமின்றியும் பெரும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளதாகவும் மனுதாரரினால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(ஆ) கடமைக்குச் சமூகமளிக்காமை காரணமாக மனுதாரருக்கு 2010 ஆம் ஆண்டில் சேவையை கைவிட்டுச் சென்றதாகக் கருதும் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் அது சம்பந்தமாகக் குச்சவெளி பிரதேச செயலாளரிடம் மேன்முறையீடு செய்துள்ளமை அதற்கு 03 ஆண்டுகள் கடந்த பின்னராகிய 2013.09.24 ஆம் திகதியன்றே என்றும், அது குறித்துப் பிரதேச செயலாளரினால் கோரப்பட்ட மருத்துவச் சபையின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது 2016 ஆம் ஆண்டிலேயாகும் என்றும், அதற்கமைய இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் காலங்கடந்து சமர்ப்பிக்கப்பட்ட அந்த மேன்முறையீட்டை அரச சேவை ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு மனுதாரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதோடு, அந்த அறிவுறுத்தல்களின்படி மனுதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடு அந்த ஆணைக்குழுவினால் 2018.03.14 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் நிராகரிக்கப்பட்டுள்ளது என்ற விடயம்.<br><br>(இ) மனுதாரருக்குச் சேவையை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ம் எவ்வித பலனும் கிடைக்கவில்லை எனக் குறிப்பிடும் மனுதாரரர், தற்போது வேலையும் வருமான வழியும் இன்றி இருக்கும் தமக்கு மீண்டும் சேவை நியமனம் வழங்கி உதவுமாறு கோரி இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | கைவிட்டுச் சென்றதற்கான கட்டளை பிறப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், அவர் சம்பந்தமாகக் குடிவரவு குடியகல்வு அறிக்கை ஒன்று கோரப்பட்டிருந்ததாகவும், அந்த அறிக்கையின்படி மனுதாரர் 2010.05.01 அன்று வெளிநாடு சென்று 2013.02.07 அன்று மீண்டும் நாட்டிற்குத் திரும்பியுள்ளார் என்பது தெரியவந்துள்ளது என்ற விடயம்.<br><br>(ஈ) 2013 ஆம் ஆண்டில் மனுதாரரினால் கடமைக்குச் சமூகமளிக்க முடியாமை சம்பந்தமாக முன்வைக்கப்பட்ட காரணங்களுக்கும் மனுதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவ அறிக்கைக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்படுகின்றன என்ற விடயம். | |
| **கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு** | | | | |
| 59 | திரு. கே. ஆரியரத்ன<br>COM/PP/2025/137<br>கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க, பா.உ., அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>2025.09.23 அன்று விசாரணை செய்யப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பிலக்கம்: MIC/PAF/01/13-1<br>திகதி: 2021.05.10 | மனுதாரரின் மனைவி (மரணமடைந்த) நெசவுத் திணைக்களத்தில் நிரந்தர ஊழியராகச் சேவை புரிந்து கொண்டிருந்தபோது, அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானத்திற்கமைய 1981.02.01 அன்று சம்பளமற்ற முறையில் ஓய்வுபெறச் செய்யப்பட்டதாகவும், பின்னர் 2003.01.01 முதல் ஓய்வூதியத்துடனான ஓய்வு வழங்கப்பட்ட போதிலும் பணிக்கொடைத் தொகையோ நிலுவை ஓய்வூதியமோ | (அ) மனுதாரரின் மனைவி (மரணமடைந்த) விசைத்தறி நெசவுத் திணைக்களத்தில் நிரந்தர சேவையில் ஈடுபட்டு ஓய்வுபெற்று ஓய்வூதியம் பெற்றுக்கொண்டிருந்தபோது 2015 ஆம் ஆண்டில் மரணமடைந்ததாகவும், விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வது சம்பந்தமாகக் கோரிக்கைகளை விடுத்த போதிலும், நெசவுத் திணைக்களத்தின் பணிப்பாளரினால் தமது மனைவியின் ஓய்வுபெறல் சம்பந்தமான தகவல்களைக் கண்டறிய முடியாமல் உள்ளதாகத் தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு விருப்பம் தெரிவித்துள்ள தரவுகள் தன்னிடம் உள்ளதாக மனுதாரரினால் முன்வைக்கப்பட்ட விடயங்கள். | நிவாரணங்கள் வழங்குவது பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கிடைக்கவில்லை என்றும், மனைவி மரணமடைந்த 2015.04.23 ஆந் திகதிக்குப் பின்னர் மனுதாரருக்குக் கிடைக்க வேண்டிய விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியம் இதுவரை கிடைக்கவில்லை எனக் குறிப்பிட்டு, நிலுவை ஓய்வூதியத்துடன் ஓய்வூதியக் கொடுப்பனவை வழங்குமாறு கோரி மனுதாரரினால் இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள் ளது. | (ஆ) மனுதாரரின் மனைவி (மரணமடைந்த) ஓய்வுபெற்றுள்ளது 1981.02.01 ஆம் திகதியென்றும், விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டம் நடைமுறைக்கு வந்தது 1983.02.01 ஆந் திகதி என்பதால் அதன் ஏற்பாடுகளின்படி அவரது மனைவியால் விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிக்க முடியாது என ஓய்வூதியப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் 2016.06.15 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதென்பதும்.<br><br>(இ) 1973.06.01 ஆந் திகதி முதல் தற்காலிக நெசவு உதவியாளர் பதவியொன்றிற்கு நியமிக்கப்பட்டு 1978.10.01 ஆந் திகதி முதல் நெசவு உதவியாளர் பதவியில் நிரந்தர நியமனம் பெற்றுள்ளாரென்றும், 1981.02.01 அன்று விசைத்தறி நெசவுக் கைத்தொழில் திட்டம் கலைக்கப்பட்டதன் அடிப்படையில் ஓய்வுபெறச் செய்யப்பட்டுள்ளாரென்றும், விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டம் 1983.08.01 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இயங்கியதோடு, அவ்வேளையில் அவர் ஓய்வுபெற்றிருந்தமையால் விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கு உரித்துடையவர் அல்ல என்றும், பிற்காலத்தில் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானம் மற்றும் அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய சேவைக்காலத்தைக் கருதாது ஓய்வூதியத்திற்கு | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உரித்தாக்கப்பட்டார் என்ற விடயம்.<br><br>(ஈ) விசைத்தறி நெசவுக் கைத்தொழில் வியாபாரம் மூடப்பட்டதன் பின்னர் அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய மனுதாரரின் மனைவிக்கு ஓய்வூதியம் உரித்தாக்கப்பட்டுள்ளதென்றும், எனினும் அவர் தனது விருப்பத்தை வெளிப்படுத்தியிருக்காததால் அவரது கணவருக்கு ஓய்வூதியம் உரித்தாக மாட்டாது என்றும், 1983.08.01 ஆம் திகதிக்கு முன்னர் நியமனம் பெற்ற ஊழியர்களுக்கு விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது 1983.08.01 அன்று அறிமுகப்படுத்தப்பட்ட விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியச் சுற்றறிக்கையின்படி மட்டுமே என்றும், அவ்வேளையில் மனுதாரரின் மனைவி (மரணமடைந்த) ஓய்வுபெற்றிருந்தார் என்பதும்.<br><br>(உ) மனுதாரரின் மனைவியின் (மரணமடைந்த) சேவைக்காலம் 10 ஆண்டுகளை விடக் குறைவாக இருந்தபோதிலும், பிற்காலத்தில் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானம் மற்றும் அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய சேவைக்காலத்தைக் கருதாது ஓய்வூதியமொன்று உரித்தாக்கப்பட்டது என்ற விடயம்.<br><br>(ஊ) ஓய்வூதியத் திணைக்களத்தினால் 1983.08.01 ஆந் திகதி முதல் விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் பங்களிப்பதற்கான விருப்பத்தை வெளிப்படுத்துவதற்குப் பலமுறை சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்ததென்றும், | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 2014.12.31 ஆந் திகதியுடன் அச்சந்தர்ப்பம் நிறைவடைந்ததென்றும், இச்சந்தர்ப்பமும் வழங்கப்பட்டது 1983.08.01 ஆந் திகதியன்று சேவையில் ஈடுபட்டிருந்த பெண் ஊழியர்களுக்கு மாத்திரமே என்றும், அத்திகதியில் மனுதாரரின் மனைவி (மரணமடைந்த) சேவையிலிருந்து ஓய்வுபெற்றிருந்தார் என்ற விடயம்.<br><br>(எ) இந்த மனு ஒன்பதாவது பாராளுமன்றத்தின் 2023.03.09 அன்று விசாரணை செய்யப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்ட பரிந்துரைகளிலும் மனுதாரருக்கு விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கு உரிமையில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்ற விடயம்.<br><br>(ஏ) விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டம் பற்றிய சுற்றறிக்கை நடைமுறைப்படுத்தப்பட்ட 1983.08.01 ஆந் திகதியளவில் மனுதாரரின் மனைவி (மரணமடைந்த) ஓய்வுபெற்றிருந்தமையால் அவருக்கு அதற்காக விருப்பத்தை வெளிப்படுத்தும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கவில்லை என்றும், பிற்காலத்தில் விருப்பத்தை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்ட போதிலும் அவ்வாறு வழங்கப்பட்டது அவ்வேளையில் சேவையில் ஈடுபட்டிருந்த பெண் ஊழியர்களுக்கு மாத்திரமே என்ற விடயம்.<br><br>(ஐ) மனுதாரருக்கு விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியமொன்றைச் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செலுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்ற விடயம் | |
| **இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு** | | | | |
| 60 | திருமதி டி.எல்.சி. த சில்வா COM/PP/2025/414 கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி, பா.உ., அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2025.09.23 அன்று விசாரணை செய்யப்பட்டது. அமைச்சின் தொடர்பிலக்கம்: MOYS/ADM/06/01/07 திகதி: 2022.08.29 | மனுதாரர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் 30 வருடங்களுக்கும் மேலாகச் சேவை புரிந்து ஓய்வுபெற்ற பெண் உத்தியோகத்தர் என்றும், 1999 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றிருந்த போதிலும் தமக்கு உதவிப் பணிப்பாளர் பதவி வழங்கப்படவில்லை என்றும், 2003 ஆம் ஆண்டில் அந்தப் பதவி வழங்கப்பட்டதும் தழுவல் கடமை பார்க்கும் பதவியாகவே என்றும், இப்பதவிக்கான பதவியுயர்வு 2005.05.18 அன்றே கிடைத்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்த அநீதி சம்பந்தமாக அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டின் மீது விசாரணை நடத்தி நிவாரணம் வழங்குமாறு | (அ) அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் கீழ் நியமிக்கப்பட்ட குழுவிற்கு அனுப்பப்பட்ட மேன்முறையீடுகளை விசாரணை செய்ததன் பின்னர், அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு, அரசியல் காரணங்களால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவது சம்பந்தமான 2018.04.04 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய மனுதாரரின் மேன்முறையீட்டிற்குரிய பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன என்ற விடயம்.<br>(ஆ) 1999 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட உதவிப் பணிப்பாளர் பதவிக்கான நேர்முகப்பரீட்சையில் பங்குபற்றிய, தகைமை பெற்ற புள்ளிகளின் பெயர்ப்பட்டியலில் மனுதாரரின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பதும், 2005.03.14 அன்று நடாத்தப்பட்ட உதவிப் பணிப்பாளர் பதவிக்கான நேர்முகப்பரீட்சையில் பங்குபற்றி அவருக்கு 2005.05.18 அன்று உதவிப் பணிப்பாளர் பதவிக்கு உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்பதும்.<br><br>(இ) 1999 ஆம் ஆண்டில் நேர்முகப்பரீட்சை உதவிப் பணிப்பாளர் பதவிக்காக மட்டுமே நடாத்தப்பட்டுள்ளது என்பதும், பிரதிப் பணிப்பாளர் பதவிக்காக எவ்வித நேர்முகப்பரீட்சையும் உரிய ஆண்டில் நடாத்தப்பட்டிருக்கவில்லை என்ற விடயம்.<br><br>(ஈ) மனுதாரர் உட்பட | நிவாரணங்கள் வழங்குவது பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அமைச்சரவையின் அனுமதியும் பெறப்பட்டுள்ள போதிலும், இதுவரையில் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி 09 ஆவது பாராளுமன்றத்திற்கு மனுவொன்றைச் சமர்ப்பித்ததாகக் குறிப்பிடும் மனுதாரர், அங்கு பொது மனுக்கள் பற்றிய குழுவினால் தமது மனு விசாரணை செய்யப்பட்டு, அமைச்சரவைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்து மாறு வழங்கப்பட்ட பரிந்துரையும் இதுவரையில் நடைமுறைப்படுத்தப் படவில்லை எனக் குறிப்பிட்டு, தமக்குக் கிடைக்க வேண்டிய நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | உத்தியோகத்தர்கள் குழுவொன்றினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கு இலக்கம் 857/06 இன் கோரிக்கைகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால், மனுதாரர் இடைக்காலத் தடை உத்தரவுகளின் கீழ் சேவை புரிந்த 2006.06.01 முதல் 2009.01.30 வரையான காலப்பகுதிக்குரிய சம்பள உயர்வுகளை வழங்குவதற்கான சட்டரீதியான சாத்தியக்கூறுகள் இல்லை என்ற விடயம்.<br><br>(உ) 2018.04.04 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய 2000 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மனுதாரருக்குப் பிரதிப் பணிப்பாளர் பதவியை வழங்குமாறு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், 2000 ஆம் ஆண்டில் பிரதிப் பணிப்பாளர் பதவிக்காக நேர்முகப்பரீட்சை எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை என்ற விடயம்.<br><br>(ஊ) மனுதாரருக்கு 2000 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பிரதிப் பணிப்பாளர் பதவியை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்ற விடயம். | |
| **பாதுகாப்பு அமைச்சு** | | | | |
| 61 | திருமதி பி.எச்.ஜி. நயனி ரேணுகா | இலங்கை இராணுவத்தின் 09 | (அ) மனுதாரரின் கணவர் (மரணமடைந்த) நடவடிக்கைப் | நிவாரணங்கள் வழங்குவது |

| | | | | |
|---|---|---|---|---|
| | COM/PP/2025/322<br>கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி.சூரியபண்டார பா.உ., அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>2025.09.25 அன்று விசாரணை செய்யப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பிலக்கம்: MOD/PAC/05/PPC/2022/18<br>திகதி: 2022.10.26 | ஆவது கெமுனு ஹேவா படையணியுடன் இணைக்கப்பட்டுச் நடவடிக்கைப் பணிகளில் ஈடுபட்டிருந்தபோது மரணமடைந்த லெப்டினன் கேணல் எம்.டீ.பீ.எஸ். குமார என்பவரின் மனைவியான மனுதாரர், கணவரின் மரணத்தின் பின்னர் 14 வருடங்கள் கழித்து 2012.08.24 ஆந் திகதி மறுமணம் புரிந்து, 2014.06.09 ஆந் திகதி இரண்டாவது திருமணத்தின் விவாகரத்தைப் பெற்றுக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். மனுதாரருக்குத் தற்போது கிடைக்கும் கணவரின் அரைப்பங்கு ஓய்வூதியம், மகளின் கல்வி மற்றும் ஏனைய தேவைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமானதாக இல்லை எனச் சுட்டிக்காட்டி, மரணமடைந்த கணவரின் முழுமையான ஓய்வூதியத்தை வழங்குமாறு கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பணிகளில் ஈடுபட்டிருந்தபோது பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக 1998.09.28 அன்று காணாமற் போயுள்ளார் என்பதும், அதற்கமைய அந்த உத்தியோகத்தரின் விதவை மனைவியான மனுதாரருக்கு இராணுவத்திடமிருந்து உரித்துடைய அனைத்துக் கொடுப்பனவுகளும் பின்வருமாறு மாதாந்தம் உரித்தாக்கப்பட்டிருந்ததுடன், மனுதாரர் மறுமணம் புரியும் வரை அக்கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன என்ற விடயம்:<br>(i) இராணுவ உறுப்பினரின் மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்<br>(ii) இராணுவ உறுப்பினரின் சார்பாக உரித்துடைய நட்டஈட்டுத் தொகை<br>(iii) தங்கி வாழ்வோருக்கான கொடுப்பனவு<br>(iv) விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியம்<br><br>(ஆ) அவ்வாறு உரித்துக்களைப் பெற்றுக்கொண்டிருந்த வேளையில் 2012.08.24 அன்று மனுதாரர் மறுமணம் புரிந்துள்ளார் என்பதுடன், அந்தத் திருமணத்திற்கு முன்னர் அது குறித்து உரிய பிரதேச செயலகத்திற்கும் இலங்கை இராணுவத்திற்கும் அறியப்படுத்தியுள்ளார் என்பதும், அதன் பின்னர் நடைமுறையிலுள்ள சட்ட விதிகளுக்கமைய செலுத்தப்பட்ட மாதாந்த கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டு பின்வருமாறு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்ற விடயம்:<br><br>(i) அப/07/2081/305/082 மற்றும் 2007.11.21 ஆந் திகதிய | பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய விதவை மறுமணம் புரியும்போது செலுத்தப்படும் விசேட நட்டஈட்டுத் தொகையாக ரூ. 4,601,867.90 உரித்தாக்கப்பட்டுள்ளது என்ற விடயம்.<br><br>(ii) விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியம் - சாதாரண நடைமுறையின்படி மறுமணம் புரியும் விதவை ஒருவருக்கு விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியம் உரித்தாக மாட்டாது எனினும், ஓய்வூதியச் சுற்றறிக்கை 13/2010 மற்றும் அதற்கு இணையாக 2010 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்ட (முப்படைகள்) சட்டத்திற்கமைய விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்தின் 50% பங்கு மனுதாரருக்கு தற்போது மாதாந்தம் செலுத்தப்பட்டு வருகின்றது என்ற விடயம்.<br><br>(இ) நடைமுறையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் மனுதாரருக்கு உரித்தாக்கக்கூடிய அனைத்து நிவாரணங்களும் உரித்தாக்கப்பட்டுள்ளன என்ற விடயம்.<br><br>(ஈ) மனுதாரரைப் போன்ற அதே நிலைமையின் கீழ் கணிசமான எண்ணிக்கையிலானோர் நிவாரணங்களை எதிர்பார்த்துக் காத்திருப்பதால், அரசாங்கத்தினால் மனுதாரருக்கு மாத்திரம் பிரத்தியேகமாக அமையும் வகையில் மேலதிக நிவாரணங்களை வழங்குவதற்குக் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கொள்கைத் தீர்மானமொன்றை எடுக்க முடியாது என்பதுடன், அத்தகைய தீர்மானமொன்றை வழங்குவது தவறானதொரு முன்மாதிரியாக அமையக்கூடும் என்ற விடயம். | |
| 62 | திரு. ஏ.பி. சோமபால COM/PP/2025/481 கௌரவ லால் பிரேமநாத், பா.உ., அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2025.09.25 அன்று விசாரணை செய்யப்பட்டது. அமைச்சின் தொடர்பிலக்கம்: MPI/ADMIN/12/PPO திகதி: 2016.11.04 | 1983.02.16 ஆந் திகதி முதல் தரம் IX இன் ஓட்டுநராகச் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமாக இருந்த தேயிலைத் தொழிற்சாலையொன்றில் சேவை புரிந்து கொண்டிருந்தபோது, அந்தத் தேயிலைத் தொழிற்சாலை டீ ஸ்மோல் ஹோல்டர் ஃபெக்டரிஸ் லிமிட்டெட் (Tea Smallholder Factories Limited) நிறுவனத்திற்குப் பாரப்படுத்தப்பட்டதென்றும், 2000.06.01 வரை அங்கு சேவை புரிந்தாரென்றும், குறித்த பாரப்படுத்தலின் பின்னர் மனுதாரருக்குக் கிடைத்திருக்க வேண்டிய சம்பளத் திட்டங்கள், சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் முதலான எவையும் உரிய முறையில் செலுத்தப்படவில்லை எனக் குறிப்பிட்டு, தமக்கு நீதியைப் பெற்றுத்தருமாறு | (அ) மனுதாரர் 1983.02.16 அன்று சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் தரம் IX இன் ஓட்டுநர் பதவியொன்றுக்கு நியமிக்கப்பட்டார் என்பதும், 3 வருடங்களின் பின்னர் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் என்பதும், அடிப்படைச் சம்பளம் ரூ. 695/- ஆகும் என்பதும், பின்னர் 1989 ஆம் ஆண்டில் ஹிங்கல்கொட தேயிலைத் தொழிற்சாலையுடன் இணைக்கப்பட்டுள்ளார் என்பதுடன் இதுவொரு தனியார் நிறுவனமாகும் என்பதும், 2000.06.18 ஆந் திகதி வரை வேலை செய்துள்ளார் என்ற விடயம்.<br><br>(ஆ) அன்றைய நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் கட்டளைக்கமைய 1997.01.01 ஆந் திகதிய 114 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின்படி, 4430 - 11 x 110 - 5 x 130 = 6290.00 என்பதற்கமைய தகுதிகூர் காலம் முடிவடைந்த பின்னர் கிடைக்க வேண்டிய ரூ. 2000/- கொடுப்பனவு உட்பட ரூ. 8290/- சம்பளம் தமக்குக் கிடைத்திருக்க வேண்டும் என்றும், தமது தனிப்பட்ட கோப்பினுள் தமது கல்விச் சான்றிதழ்களின் பிரதிகள் இருப்பின் அவற்றை தமக்கு வழங்குமாறும் மனுதாரர் கோரியுள்ளார் என்ற விடயமும்.<br><br>(இ) மனுதாரருக்கு 1997 ஆம் ஆண்டில் நட்டஈட்டுத் திட்டமொன்றின் கீழ் ஓய்வுபெறுவதற்கு வாய்ப்பு | நிவாரணங்கள் வழங்குவது பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கோரி மனுதாரரினால் இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இருந்தபோதிலும், அதன் கீழ் ஓய்வுபெறாது சேவை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார் என்பதும், உத்தேச தொழிற்சாலையினால் அது குறித்து தமக்கு அறிவிக்கப்படவில்லை என்பதும், 15 வருட சேவைக்காலம் இருந்த நிலையில் தொழிற்சாலையிலிருந்து விலகியமை அநீதியானது என்பதும், 1997 ஆம் ஆண்டு முதல் அரசாங்கத்தினால் சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்ட போதிலும், உரிய சம்பள அதிகரிப்பு கிடைக்கவில்லை என்பதும், ஓய்வுபெறும்போது ரூ. 4,490/- சம்பளத்தையே பெற்றார் என்பதும், 1997 நட்டஈட்டுத் திட்டத்தின்கீழ் ஓய்வுபெற்றிருந்தால் நன்மைகள் கிடைத்திருக்கும் என்றும் மனுதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(ஈ) டீ ஸ்மோல் ஹோல்டர்ஸ் ஃபெக்டரீஸ் நிறுவனத்தினால் மனுதாரருக்கு முறையாக எழுத்து மூலம் 1991.10.25 ஆந் திகதி முதல் அவர் அந்நிறுவனத்தின் சேவையில் நியமிக்கப்பட்டார் என்பது அறியப்படுத்தப்பட்டுள்ளது என்ற விடயம்.<br><br>(உ) சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையினால் 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் பாரப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் கோப்புகள் / சாதனங்கள் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்பதும், அதற்கமைய அந்நிறுவனத்தின் கீழ் சேவைக்கு நியமிக்கப்பட்ட | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஊழியர்களின் தனிப்பட்ட கோப்புகளும் உரிய நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்பதும், அக்காலப்பகுதியில் அவர் தனியார் துறை உத்தியோகமாக சேவையில் இணைந்துள்ளார் என்பதுடன், உரிய ஒப்படைப்பு மேற்கொள்ளப்படும் போது மனுதாரரின் மொத்த சேவைக்காலம் 06 வருடங்கள் 01 மாதம் 05 நாட்கள் ஆகும் என்ற விடயம்.<br><br>(ஊ) மனுதாரர் அதிகார சபையின் கீழ் சேவையில் ஈடுபட்டிருந்த காலப்பகுதிக்காக அவருக்கு உரித்துடைய அனைத்துச் சம்பளங்களும் கொடுப்பனவுகளும் முழுமையாகச் செலுத்தப்பட்டுள்ளன என்பதும், மனுதாரரின் எஞ்சிய விடுமுறைகளுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்ற விடயம்.<br><br>(எ) டீ ஸ்மோல் ஹோல்டர்ஸ் ஃபெக்டரீஸ் நிறுவனத்திடமிருந்து மனுதாரருக்குக் கிடைக்க வேண்டிய பணிக்கொடைக் கொடுப்பனவாக ரூ. 38,165/- நிலுவைச் சம்பளமாகச் செலுத்தப்பட்டுள்ளது என்ற விடயம்.<br><br>(ஏ) மனுதாரர் தமது பணிக்கொடைக் கொடுப்பனவுகள் சம்பந்தமாக மாத்தறை தொழில் நியாய சபையில் 13609/2000 ஆம் இலக்கத்தின் கீழ் வழக்குத் தொடர்ந்திருந்த நிலையில் அது நிராகரிக்கப்பட்டுள்ளது என்பதும், அதன் பின்னர் அதே வழக்குடன் சம்பந்தமாக LT468/2000 மற்றும் 2001.03.29 ஆந் திகதியிடப்பட்டு மீண்டும் வழக்குத் தொடரப்பட்ட நிலையில் அதுவும் நிராகரிக்கப்பட்டுள்ளது என்ற | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | விடயம்.<br><br>(ஐ) மனுதாரர் 2000 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் காசோலையை ஏற்றுக்கொள்வதை நிராகரித்த போதிலும், பின்னர் காலி தொழில் ஆணையாளர் ஊடாக இப்பணத்தை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், மனுதாரரினால் அப்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்ற விடயம்.<br><br>(ஒ) மனுதாரரின் தனிப்பட்ட கோப்பினுள் அவரது கல்விச் சான்றிதழ்களின் பிரதிகள் இல்லை என்பதும், நிறுவனத்தின் ஓட்டுநர்களின் தனிப்பட்ட கோப்புகளுள் கல்விச் சான்றிதழ்களின் பிரதிகள் தடுத்து வைக்கப்படுவதில்லை என்பதுடன், அவரது ஓட்டுநர் உரிமத்தின் பிரதியொன்று கோப்பில் காணப்படுகின்றது என்ற விடயம்.<br><br>(ஓ) தனியார் நிறுவனமொன்றுக்குப் பாரப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் ஊழியர்கள் அந்நிறுவனத்தில் தனியார் துறை உத்தியோகமாகப் பிற்காலத்தில் சேவையில் ஈடுபட்டிருந்தனர் என்பதும், அரசாங்கச் சுற்றறிக்கைகள் தனியார் துறையில் ஈடுபடும் ஊழியர்களுக்குப் பொருந்தாது என்றும் தீர்மானித்த குழுவானது, மனுதாரர் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட போதிலும், சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபை அல்லது டீ ஸ்மோல் ஹோல்டர் ஃபெக்டரீஸ் (பி.எல்.சி.) நிறுவனம் மனுதாரர் சம்பந்தமாக அநீதி இழைத்துள்ளமை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உறுதிப்படுத்தப்படவில்லை என்ற விடயம். | |
| 63 | திரு. எச்.எல். சமந்த குமார COM/PP/2025/94 கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜி.டி. சூரியபண்டார, பா.உ., அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2025.10.09 அன்று விசாரணை செய்யப்பட்டது. அமைச்சின் தொடர்பிலக்கம்: MOD/DEF/14/22/03/PPC/08 திகதி: 2017.11.29 | 1997.01.24 அன்று இலங்கை விமானப்படைச் சேவையில் இணைந்து, 11 வருடங்கள் 10 மாதங்கள் சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருந்த நிலையில், 2008.11.04 அன்று பொய்க் குற்றச்சாட்டொன்றின் அடிப்படையில் "சேவை மேலும் தேவையில்லை" என்ற வாசகத்தின் கீழ் விமானப்படைச் சேவையிலிருந்து நீக்கப்பட்டார் என்றும், அக்காலப்பகுதியில் யுத்தத்தில் ஏற்பட்ட காயங்கள் காரணமாக ஊனமுற்ற நிலையில் இருந்த மனுதாரருக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்துச் சுதந்திரமான விசாரணையேனும் நடாத்தப்படவில்லை என்றும், மீண்டும் வேலையைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொண்ட முயற்சிகளும் தோல்வியடைந்தன என்றும் குறிப்பிட்டு, இழந்த வேலையை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு அல்லது | (அ) பல சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட, மனுதாரரின் விமானப்படை ஒழுக்கத்திற்கு முரணான செயற்பாடுகளையடுத்து அவருக்கு 2006.06.26 ஆந் திகதியிடப்பட்டு வழங்கப்பட்ட இறுதி எச்சரிக்கைக் கடிதத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஒழுக்க மீறலையடுத்து, சேவையிலிருந்து நீக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரை விமானப்படைச் சட்டத்தின்படி மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்ற விடயம்.<br><br>(ஆ) இறுதி எச்சரிக்கைக் கடிதம் வழங்கப்படுவதற்கு முன்னர் இவரின் ஒழுக்கக் குறைவான செயற்பாடுகள் சம்பந்தமாக விசேட அறிக்கைகளும் வெளியிடப்பட்டுள்ளதுடன், அதன் பின்னரேனும் மனுதாரருக்குத் தமது நடத்தை குறித்து அவதானம் செலுத்துவதற்கான வாய்ப்பு இருந்தது என்ற விடயம்.<br><br>(இ) விமானப்படைத் தரநிலைகளுக்கு இணங்காத விமானப்படை வீரரொருவருக்கு வழங்கப்படும் எச்சரிக்கை என்ற தலைப்பில் 2006.06.26 ஆந் திகதியிடப்பட்டு தனக்கு வழங்கப்பட்ட இறுதி எச்சரிக்கைக் கடிதத்தில் தான் சான்றளிக்க வேண்டிய இடத்தில் தான் கையொப்பமிடவில்லை எனப் மனுதாரரினால் குழுவின் முன்னிலையில் செய்யப்பட்ட கூற்றும், இவ்வாறானதொரு கடிதம் தனக்கு வழங்கப்பட்டிருப்பது பற்றித் தான் அறிந்திருக்கவில்லை என மனுதாரரினால் செய்யப்பட்ட கூற்றும். | நிவாரணங்கள் வழங்குவது பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் ஓய்வுபெறுவதற்கு நடவடிக்கை எடுத்துத் தருமாறு கோரி மனுதாரரினால் இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள் ளது. | (ஈ) இந்த மனு தொடர்பாக 2025.03.14 அன்று நடாத்தப்பட்ட விசாரணையின்போது, 2006.06.26 ஆந் திகதியிடப்பட்டு மனுதாரருக்கு வழங்கப்பட்ட 'விமானப்படைத் தரநிலைகளுக்கு இணங்காத விமானப்படை வீரரொருவருக்கு வழங்கப்படும் எச்சரிக்கை' என்ற தலைப்பிலான கடிதத்திலுள்ள கையொப்பம் மனுதாரருடையதா என்பதை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளரிடமிருந்து அறிக்கையொன்று கோரப்பட்டிருந்ததுடன், அவ்வறிக்கை கிடைத்த பின்னர் இறுதிப் பரிந்துரையை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட அறிக்கை, இலங்கை விமானப்படைத் தளபதியினால் பொது மனுக்கள் பற்றிய குழுவின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது என்ற விடயம்.<br>(உ) உரிய கடிதத்துடன் அனுப்பி வைக்கப்பட்ட அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் 2025.09.04 ஆந் திகதிய H 563/25 ஆம் இலக்க அறிக்கை விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன், அவ்வறிக்கையின்படி மேற்சொன்ன கையொப்பம் மனுதாரருடைய கையொப்பமே எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது என்ற விடயமும். | |
| 64 | திரு. எம்.ஏ. கௌஷால் மென்டிஸ் | 1991.11.17 அன்று கடே ற் | (அ) மனுதாரர் 2002.01.18 அன்று லெப்டினன்ட் நிலையிலிருந்து | நிவாரணங்கள் வழங்குவது பரிந்துரைக்கப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | COM/PP/2025/253<br>கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன, பா.உ., அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2025.11.13 அன்று விசாரணை செய்யப்பட்டது. அமைச்சின் தொடர்பிலக்கம்: MOD/PAC/05/PPC/2024/15<br>திகதி: 2024.09.05 | உத்தியோகத்தராகப் இலங்கை கடற்படையின் நிறைவேற்றுப் பிரிவில் சேவையில் இணையும்போதும் தான் கண்ணாடி அணிந்திருந்ததாகவும், கண்ணாடி அணிந்தவாறே பாடநெறிகள், மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் பதவியுயர்வுகள் போன்றவற்றை வெற்றிகரமாக எதிர்கொண்டு 16 வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருந்ததாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறிருந்தும், 2002 மே மாதம் முதல் கண்ணாடி அணிந்து நிறைவேற்றுச் சேவையில் கடமைகளை ஆற்றுவது சம்பந்தமாக மாதாந்த/வருடாந்த இராணுவ மருத்துவச் சபையொன்றிற்குஅனுப்பப்பட்டு, 2007.12.31 அன்று சாதாரண ஓய்வுபெறும் வயதிற்கு முன்னரே ஓய்வுபெறச் செய்யப்பட்டதாகவும், அதன் காரணமாகச் சேவை ஓய்வூதியமாக 61% மாத்திரமே கிடைப்பதுடன் பதவியுயர்வுகள் மற்றும் | லெப்டினன்ட் கொமாண்டர் நிலைக்கான பதவியுயர்வு மருத்துவப் பரிசோதனைக்காக ஆஜராகியுள்ளார் என்பதுடன், அந்த மருத்துவப் பரிசோதனை அறிக்கை கடற்படை சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதும், அங்கு அவர் 2001.04.16 அன்று கண்களில் ஏற்பட்ட வலியொன்றின் காரணமாக நோயறிக்கை சமர்ப்பித்து சிகிச்சை பெற்று நோயாளர் வகைப்படுத்தல்களுக்கு உட்பட்டிருந்தமையால் அது குறித்து "மீண்டும் பரிசோதனைக்கு உட்படுத்தி முழுமையான கடற்படை சேவைக்கு தகுதியானவரா / தகுதியற்றவரா எனக் குறிப்பிட்டு மருத்துவ அறிக்கையொன்றை" சமர்ப்பிக்குமாறு கடற்படை சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதும், அதற்கமைய 2002.03.21 அன்று இவ்வுத்தியோகத்தரை மருத்துவச் சபையொன்றின் முன்னிலையில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அந்த மருத்துவச் சபையினால் Impaired Distance Vision என நோயறிதல் செய்யப்பட்டு, தூரப்பார்வை (Distance Vision in Both Eyes) 6/60 ஆகக் காணப்பட்டமையால் தரைவழி கடமைகள் (Ashore Duty) என்ற நோயாளர் வகைப்படுத்தல் ஒரு வருடத்திற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்ற விடயம்.<br><br>(ஆ) மனுதாரர் 2003.05.27 அன்று நடாத்தப்பட்ட மருத்துவச் சபையினால் Impaired Distance Vision என நோயறிதல் செய்யப்பட்டு, தூரப்பார்வை | வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வரப்பிரசாதங்கள் போன்றவைகளும் வரையறுக்கப்பட்டன என்றும் தெரிவித்துள்ளார். குறைந்தது கப்டன் நிலை வரை இரண்டு சேவைப் பதவியுயர்வுகளை வழங்குமாறும், ஓய்வூதியம் பெறுவதற்கு இருக்க வேண்டிய கட்டாய சேவைக்காலத்திற்கு இணங்குமாறு ஓய்வுபெறச் செய்யப்பட்ட திகதியைத் திருத்தித் தருமாறும் கோரி மனுதாரரினால் இந்த மகஜர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | (Distance Vision in Both Eyes) 6/60 ஆகக் காணப்பட்டமையால் தரைவழி கடமைகள் (Ashore Duty) என்ற நோயாளர் வகைப்படுத்தல் இரண்டு வருடங்களுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்ற விடயம்.<br><br>(இ) 2005.06.28 அன்று நடாத்தப்பட்ட மருத்துவச் சபையின்போது மனுதாரர் கடற்படையிலிருந்து விலகுவதற்குத் தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார் என்பதுடன், அந்த மருத்துவச் சபையினால் நோயறிதலாக Impaired Distance Vision எனவும் தூரப்பார்வை (Distance Vision in Both Eyes) 6/60 என்பது மேலும் தொடர்வதனாலும் தரைவழிக் கடமைகள் (Ashore Duty) என்ற நோயாளர் வகைப்படுத்தல் இரண்டு வருடங்களுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்ற விடயம்.<br><br>(ஈ) 2007.06.27 அன்று நடாத்தப்பட்ட மருத்துவச் சபையினால் நோயறிதலாக Impaired Distance Vision எனத் தீர்மானிக்கப்பட்டு, தூரப்பார்வை (Distance Vision in Both Eyes) 6/60 என்பது அப்போதும் காணப் பட்டமையால் அதற்கான ஊனமுற்ற வீதம் 30% எனவும், இந்நிலைமையின் கீழ் மனுதாரர் கடற்படைக் கடமைகளுக்குத் தகுதியற்றவர் எனத் தீர்மானிக்கப்பட்டு கடற்படையிலிருந்து நீக்குவதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்ற விடயம். | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | (உ) மனுதாரர் 1991 ஆம் ஆண்டில் கடற்படையில் இணைந்தது முதல் அவர் கண்ணாடி அணிந்து கடமைகளை ஆற்றிய போதிலும், அவரது கண்களில் ஏற்பட்ட வலியொன்றின் காரணமாக 1996 ஆம் ஆண்டு முதல் அவ்வப்போது நோயறிக்கை சமர்ப்பித்துள்ளார் என்பதும், அவர் பார்வைக் குறைபாடுகளுடனேயே கடமைகளை ஆற்றியுள்ளார் என்பதுடன், 2007 ஆம் ஆண்டாகும்போது அக்குறைபாடானது படிப்படியாக 6/9 என்ற அளவிலிருந்து 6/60 என்ற மட்டம் வரை தீவிரமடைந்திருந்தமையால் அதன் பின்னர் கடல்சார் கடமைகளுக்காக இணைக்கப்படவில்லை என்பதும், மேலும் இறுதியாக நடாத்தப்பட்ட மருத்துவச் சபையின்போது இவ்வுத்தியோகத்தர் கடற்படைச் சேவையிலிருந்து விலகுவதற்கும் தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார் என்ற விடயம்.<br><br>(ஊ) மனுதாரர் 2007 ஆம் ஆண்டில் கடற்படைச் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளதுடன், 2020 ஆம் ஆண்டு வரையிலான நீண்ட காலப்பகுதிக்குள் அவர் கடற்படைச் சேவையிலிருந்து ஓய்வுபெறச் செய்யப்பட்டமை சம்பந்தமாக எவ்வித மேன்முறையீட்டையோ அல்லது குறைகளையோ சமர்ப்பிக்கவில்லை என்பதுடன், 2020 ஆம் ஆண்டிற்குப் பின்னரே இவ்வாறு உரிய தீர்மானத்தைத் திருத்தித் தருமாறு கோரிக்கையொன்றைச் சமர்ப்பித்துள்ளார் என்ற விடயம்.<br><br>(எ) அவ்வாறு மனுதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கையொன்று சம்பந்தமாக | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இலங்கை கடற்படையினால் முறையான ஆய்வுச் சபையொன்று நடாத்தப்பட்டதுடன், அதன் மூலமும் மனுதாரரின் கோரிக்கைகளான பதவியுயர்வுகள் மற்றும் சேவை ஓய்வூதிய வீதத்தைத் திருத்துவதற்குச் சாத்தியமில்லை எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்ற விடயம்.<br><br>(ஏ) மேற்சொன்ன விடயங்களுக்கமைய இவ்வுத்தியோகத்தர் மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் ஓய்வுபெறச் செய்யப்பட்டுள்ளமை அதற்குரிய சட்ட விதிகள் மற்றும் மருத்துவச் சபையின் பரிந்துரைகளுக்கமையவும், மருத்துவச் சபையின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வுத்தியோகத்தாரினால் செய்யப்பட்ட எழுத்துமூலக் கோரிக்கைக்கமையவும் என்பதால், அவரினால் எதிர்பார்க்கப்படும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு சட்ட ரீதியான ஏற்பாடுகள் இல்லை எனக் கடற்படைத் தளபதியைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொண்ட உத்தியோகத்தர்களினால் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விடயம்.<br><br>(ஐ) கடற்படையிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் லங்கா உர நிறுவனத்தின் மனித வள முகாமைத்துவ அதிகாரியாகத் தான் தெரிவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் அரசாங்க மருத்துவப் பரிசோதனையொன்றிற்கு உட்படுத்தப்பட்டதாகவும், அந்த முறையான மருத்துவப் பரிசோதனை அறிக்கையிலும் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தனது பார்வைத் திறன் 6/60 (மூக்குக்கண்ணாடி இன்றி) மற்றும் பார்வைத் திறன் 6/6 (மூக்குக்கண்ணாடியுடன்) எனச் சரியாகக் காணப்படுவதாகவும், தீவின் எந்தவொரு பாகத்திலும் பணியாற்றுவதற்கு முறையாகத் தகுதியுடையவர் எனத் தேசிய வைத்தியசாலையினால் 2009.04.17 அன்று சான்றிதழொன்று வழங்கப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் குறிப்பிடுகின்றார் என்ற விடயம்.<br><br>(ஒ) தனக்குக் கண்ணாடியுடன் 6/6 பார்வைத் திறன் இருக்கும்போது, தனது கண்ணாடி இல்லாத பார்வைத் திறனை 6/60 எனக் காட்டி கடற்படையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தமை பாரிய அநீதியாகும் என்றும், தான் நிபுணத்துவ மருத்துவக் கருத்தைப் பெற்றுக்கொள்வதற்காகக் கண் மருத்துவ நிபுணரொருவரிடம் ஆஜராக்கப்பட்டதாகவும், தன்னைச் சேவையிலிருந்து நீக்குவதற்கு நிபுணத்துவ பரிந்துரையொன்று வழங்கப்படாத சூழ்நிலையில், மருத்துவச் சபையினால் தனது குறைபாட்டை 30% எனக் கருதி சேவையிலிருந்து ஓய்வுபெறச் செய்தமை தனக்கு இழைக்கப்பட்ட அநீதியாகும் என்றும், தான் மேலும் சேவை புரிந்து பதவியுயர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்குக் கதவுகள் திறந்திருந்த நிலையில், மருத்துவக் காரணங்களின் கீழ் கடற்படைச் சேவையிலிருந்து நீக்கியமையால் இழைக்கப்பட்ட அநீதியைச் சீர்செய்வதற்காகத் தனக்கு கப்டன் நிலை வரை 02 பதவியுயர்வுகளை வழங்கி, தனது ஓய்வூதியத்தை 61% இலிருந்து 85% வரை அதிகரித்துத் தருமாறு மனுதாரரினால் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கோரப்பட்டுள்ளது என்ற விடயம்.<br><br>(ஓ) மனுதாரரினால் கோரப்பட்டுள்ள நிவாரணங்களை வழங்குவதற்கு நியாயமான அடிப்படை எதுவும் அவதானிக்கப்படவில்லை என்பதும், மனுதாரர் தனது ஓய்வூதியத்தைப் பெற்றுவரும் அதேவேளை தற்போது வேறொரு தொழிலிலும் ஈடுபட்டுள்ளார் என்ற விடயம். | |

| | | | | |
|---|---|---|---|---|
| **கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு** | | | | |
| 65 | திருமதி எச்.கே.பீ.சீ. ஜயசிங்க<br>COM/PP/2025/15<br>சமர்ப்பித்தவர்:கௌரவ திருமதி ரோஹினீ குமாரி விஜேரத்ன பா.உ. 2025.10.09 ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது.<br><br>அமைச்சின் தொடர்பு இல: ED/05/152/05/2022/1-01<br><br>திகதி: 2022.04.29 | 2006ஆம் ஆண்டில் அதிபர் சேவையில் இணைத்துக் கொள்வதற்காக நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தோற்றி 2009.12.07 முதல் 2ஆம் வகுப்பின் II ஆம் தர அதிபராக கடமையைப் பொறுப்பேற்றதாகவும் அன்றைய திகதி முதல் 6 ஆண்டுகள் நிறைவடையும் 2015.12.07 ஆம் திகதிக்குரிய அதிபர் சேவையின் 1 ஆம் தரத்திற்கான பதவி உயர்வுக்கான நேர்முகப் பரீட்சைக்கு 2017.06.22 ஆம் திகதி தோற்றியிருந்தாலும், வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையை பூர்த்தி செய்யாயதன் காரணமாக உரிய | அ) 1885/31 ஆம் இலக்கமுடைய 2014.10.22 ஆம் திகதிய இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பு தொடர்பான வர்த்தமானியின் இலக்கம் 08 இன் படி, இலங்கை அதிபர் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டு 03 ஆண்டுகள் முடிவடைவதற்குள் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்திருக்க வேண்டும் என்றும், அதன் இலக்கம் 8.2 இன் படி, 6 மாதங்களுக்கு ஒருமுறை அந்தப் பரீட்சை நடாத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், எனினும், 2010,2011, 2013, 2014 ஆகிய ஆண்டுகளில் தொடர்புடைய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் நடாத்தப்படவில்லை எனவும், மேற்படி வர்த்தமானியின் இலக்கம்10.2.1 இன் படி, பதவி உயர்வுக்கான தகைமை பெறும் திகதியில் 06 ஆண்டு கால முனைப்பான சேவைக் காலத்தை | நிவாரணம் விதந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தடைதாண்டல் சலுகைகளைப் பெற்று பதவி உயர்விற்கு ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டதாகவும், தடைதாண்டல் சலுகைகளுக்கு விண்ணப்பித்த பின்னர், அதற்காக 2020.02.07 ஆம் திகதி பெற்ற தடைதாண்டல் சலுகைக் கடிதத்தையும், 2018.01.21 ஆம் திகதி சித்தியடைந்த தடைதாண்டல் பரீட்சை சான்றிதழையும் நேர்முகப் பரீட்சைக் கோப்பிற்கு சமர்ப்பித்து, அந்தக் கோப்பை முழுமைப்படுத்தியதாகவும் தெரிவிக்கும் மனுதாரர், தனக்கு 2015.12.07ஆம் திகதிக்கு உரித்தாக வேண்டிய அதிபர் சேவையின் 1ஆம் தரத்திற்குத் தரமுயர்த்தி, அதற்கேற்ற சம்பளத்தைச் சரிசெய்து தருமாறு கோரி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். | நிறைவு செய்திருப்பதாக தமது அருகிலுள்ள நிறுவனப் பிரதானியான ரத்தொட்ட வலயத்திற்குப் பொறுப்பான பணிப்பாளர் 2020.09.16 ஆம் திகதியில் அத்தாட்சிப்படுத்தியுள்ளதாகவும் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்கள்<br><br>(ஆ) 2025.02.25 ஆம் திகதி நடைபெற்ற குழுக் கூட்டத்தின் விதப்புரையின் பிரகாரம் கருணையுடன் கருத்திற் கொண்டு, ஒரு முன்னுதாரணமாக ஏற்படுத்திக்கொள்ளாமல் மனுதாரருக்கு ஏதேனும் நிவாரணம் வழங்கப்பட்டால், இது போன்ற சிக்கலான நிலமைகளில் உள்ள மற்ற அலுவலர்களுக்கும் இப்பதவி உயர்வை வழங்க நேரிடுவதானது பிழையானதொரு முன்னுதாரணமாக அமையும் என அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவினால் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும்,<br><br>(இ)வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் நடாத்தப்பட்டுள்ள திகதிகள், மனுதாரர் அதற்கு விண்ணப்பித்தாரா இல்லையா மற்றும் சித்தியடைந்தாரா/சித்தியடையவில்லையா என்பது பின்வருமாறு காணப்படுவதாகவும்,<br><br>**<u>பரீட்சை நடாத்தப்பட்டுள்ள திகதிகள்</u>**<br><br>i) 2011.03.13 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ii)2012.06.23 /24<br><br>iii)2013.10.14<br><br>iv)2015.03.21 /22<br><br>v)2015.11.22<br><br>vi)2015.12.20<br><br>vii)2016.12.31<br><br>viii)2018.01.20/21<br><br>இதில், மனுதாரர் 2015.03.21/22 ஆம் திகதிகளில் நடைபெற்ற பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளதோடு, 2 பாடங்களில் சித்தியடைந்துள்ளார். அதன் பின்னர், அவர் 2018.01.20/21 ஆம் திகதிகளில் நடைபெற்ற பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளதோடு, அப்பரீட்சையிலும் சித்தியடைந்துள்ளார்.<br><br>(ஈ) தொடர்புடைய பரீட்சைகள் 2010, 2011, 2013 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகளில் நடத்தப்படவில்லை என்ற மனுதாரரின் கூற்றின்படி, அவ்வாறு பரீட்சைகள் நடத்தப்பட்டனவா இல்லையா என்பது குறித்து குழுவின் மூலம் அவதானிக்கப்பட்டதுடன், அதன்போது மேலே குறிப்பிட்டுள்ளவாறு பரீட்சைகள் நடாத்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளதாகவும், | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | (உ) பரீட்சைகள் நடாத்தப்பட்ட ஆண்டுகள் குறித்து தான் தெரிந்திருக்கவில்லை என்கின்ற மனுதாரரின் கூற்றை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும், அதிபரொருவர் என்ற வகையில் தனது தொழில் ரீதியான பதவி உயர்வுகள் குறித்து கவனம் செலுத்தி, அது குறித்துத் தெரிந்து வைத்திருக்க வேண்டியது மனுதாரருக்கு உட்பட்ட விடயம் எனவும், | |
| 66 | திரு. ஏ.எல்.எம். முக்தார். COM/PP/2025/60 சமர்ப்பித்தவர்:கௌரவ இம்ரான் மகரூப் பா.உ. 2025.10.09 ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இல: ED/4/58/1/8/173/65திகதி: 2024.03.13 | இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு மிகை ஊழியர் அடிப்படையில் III ஆம் வகுப்பு திட்டமிடல் பதவியில் நியமிக்கப்பட்டதாக வும், I ஆம் வகுப்பிற்கு பதவி உயர்வு பெற்றதாகவும், கல்வி அமைச்சின் செயலாளரின் 4/பணிப்பாளர்/ஆ/2/09 மற்றும் 1995.12.20 திகதிய கடிதத்தின் மூலம் கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கு நான்கு மேலதிக சம்பள ஏற்றங்களை வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் கல்வி அமைச்சிடம் | (அ) மனுதாரர் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பின் பதவியொன்றுக்கு மிகை ஊழியர் அடிப்படையில் 1999.11.10 ஆம் திகதி நியமனம் பெற்றுள்ளதாகவும், அன்றைய திகதி முதல் 06 வருட கால திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்த திகதியாகிய 2005.11.10 ஆம் திகதிக்கு ரூ. 255,780/- தொகையான வருட சம்பளத்தில் தாபிக்கப்பட்டதாகவும், இலங்கை கல்வி நிர்வாக சேவையின் பிரமாணக் குறிப்பின் 03ஆம் பந்தியின் படி முதலாம் மற்றும் இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் தகைமைகள் மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தால், திருப்திகரமான 6 வருட கால சேவைக்காலத்தை பூர்த்திசெய்ததன் பின்னர் ரூ. .48,000/- சம்பள அளவுத் திட்டத்தில் நிறுவப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அதன்படி ரூ.48,000/- சம்பள | நிவாரணம் விதந்துரைக்கப்பட வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2022.11.05 ஆம் திகதி நான்கு சம்பள ஏற்றங்களை கோரிய போதிலும் அவை வழங்கப்படவில்லை எனவும், 1998.12.08 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, சமாந்தரமானதும் தீவளாவியதுமான சேவைகளில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு நான்கு சம்பள ஏற்றங்களை வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், சமாந்தர சேவையான இலங்கை திட்டமிடல் சேவையின் பிரமாணக் குறிப்பின்படி, 2009.06.20 ஆம் திகதி முதல் மிகை ஊழியர்களாக நியமனங்களைப் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு நான்கு சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டிருப்பதால், விசாரணையொன்றை நடாத்தி, மனுதாரருக்கு நான்கு சம்பள ஏற்றங்களை வழங்குமாறு | அளவுத் திட்டத்திற்கு இணையாகின்ற, 2004.12.27 ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 09/2004 இல் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.195,300/- சம்பள அளவுத் திட்டமானது, மனுதாரரின் 06 வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்யும் திகதியாகிய 2005.11.10 ஆம் திகதியாகின்ற போது தாண்டப்பட்டுள்ளதாகவும்.<br><br>(ஆ) ”சமாந்தரமானதும் தீவளாவியதுமான சேவைகளின் உத்தியோகத்தர்களுக்கு 4 மேலதிக சம்பள ஏற்றங்களை வழங்குதல்” எனும் தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவைக் குறிப்பாணைக்கு, 1992.12.08 ஆம் திகதிய தொடர்புடைய அமைச்சரவை தீர்மானத்தின்படி, தொடர்புடைய தீவளாவிய சேவையில் நியமிக்கப்படுகின்ற உத்தியோகத்தரொருவர் 6 வருட கால திருப்திகரமான சேவையை நிறைவுசெய்து, இரண்டு வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சையில் சித்தியடைந்து அல்லது அதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டாலோ, அந்த உத்தியோகத்தர் ரூ. 48,000/- என்ற சம்பள அளவுத் திட்டத்தில் நிறுவுவதற்கான வழிவகை செய்யும் வகையில், தொடர்புடைய ஒழுங்குக் கோவையை திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும், எனினும் மேலே கூறப்பட்டுள்ளபடி, மனுதாரர் அந்த சம்பள அளவுத் திட்டத்தை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கும் கல்வி அமைச்சுக்கும் உத்தரவிடுமாறு கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | தாண்டிவிட்டுள்ளதாகவும், 4 சம்பள ஏற்றங்களை வழங்குமாறு கூறப்பட்டிருந்தாலும், ரூ. 48,000/- என்ற சம்பள அளவுத்திட்டத்தை விடக் குறைவாகச் சம்பளம் பெறும் உத்தியோகத்தர்களை இந்தச் சம்பள அளவுத்திட்டத்தில் நிறுவுவதற்கு தேவையான சம்பள ஏற்றங்கள் அதிகபட்சமாக 04 அல்லது அதற்கும் குறைவாகவேனும் வழங்கி ரூ. 48,000/- சம்பள அளவுத்திட்டத்திற்கு கொண்டு வருதல் என்பதும்,<br><br>(இ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை 06/2006 (III) இன் படி, 2006.04.25 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006- இன் இணைப்பு I இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டங்களின் அதிகபட்சத்தை எட்டிய உத்தியோகத்தர்களுக்கு, 2006.01.01 ஆம் திகதி முதல் அவர்கள் ஓய்வு பெறும் திகதி வரை அல்லது பிறிதொரு சம்பள அளவுத்திட்டம் தொடர்புடையதாகின்ற பிறிதொரு பதவிக்கு நியமிக்கப்படும்/பதவி உயர்வு பெறும் வரை மேலும் சம்பள ஏற்றங்கள் வழங்கப்படலாம் என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அதன்படி, தான் அதற்குத் தகுதி பெறுவதாகவும் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள்<br><br>(ஈ) மனுதாரரால் குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையானது, மேலே 3(ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள 1992.12.08 ஆம் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்தின் அடிப்படையில் அப்போதைய பொது நிர்வாக அமைச்சினால் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வெளியிடப்பட்டதொரு சுற்றறிக்கையாகும்எனவும், மேலும் 3(ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, மனுதாரருக்கு இனிமேலும் சம்பள உயர்வுகள் உரித்தாவதில்லை எனவும்,<br><br>(உ) சம்பள ஏற்றங்கள் முனைப்பான சேவை காலத்தை அடிப்படையாகக் கொண்டல்லாது திருப்திகரமான சேவை காலத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படுகின்றன என்றும், மனுதாரரின் நியமனத் திகதியான 1999.11.10 ஆம் திகதி தொடக்கம் 6 ஆண்டுகால திருப்திகரமான சேவைக்காலம் பூர்த்தியாகின்ற திகதி 2005.11.10 ஆம் திகதி எனவும்<br><br>(ஊ) பதவி உயர்வினை முத்திகதியிலேயேசெய்து தரும்படியான மனுதாரரின் கோரிக்கை தொடர்பான விடயங்களைக் கருத்திற் கொள்ளும்போது, 2024.03.13 ஆம் திகதிய அப்போதைய கல்வி அமைச்சின் செயலாளரின் கடிதத்தின்படி, மனுதாரருக்கு இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பில் 10 ஆண்டுகால முனைப்பான சேவைக்காலம் பூர்த்தியாகின்ற 2010.12.01 ஆம் திகதி தொடக்கம் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் II ஆம் வகுப்பிற்கும் 2016.01.01 ஆம் திகதி தொடக்கம் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் I ஆம் வகுப்பிற்கும் உரிய திகதியில் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | (எ) மனுதாரருக்கு அநீதியோ/பாதிப்போ இழைக்கப்பட்டதாக கண்காணிக்கப்படவில்லை எனவும், | |
| 67 | திரு. எஸ். ராஜபக்ஷ COM/PP/2025/302<br>சமர்ப்பித்தவர்:கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம் பா.உ. 2025.11.13 ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது.<br><br>அமைச்சின் தொடர்பு இல: ED/05/152/05/2025/01-09<br><br>திகதி: 2025.05.09 | இலங்கை ஆசிரியர் சேவையில் சுமார் 22 ஆண்டுகள் பணியாற்றியுள்ளதாகவும், நோய் நிலைமை காரணமாக முன்னறிவித்தலொன்றை வழங்கி தங்கிநின்று சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த வேளையில் தனக்கு சேவையை விட்டும் விலகிச் சென்றதாக அறிவித்தல் வழங்கப்பட்டதாகவும், மீண்டும் சேவையில் அமர்த்துமாறு கோரி மூன்று தடவைகள் மேன்முறையீடு செய்ததாகவும், மேல் மாகாணக் கல்விப் பணிப்பாளர் மீண்டும் பணியில் அமர்த்துவது குறித்து நியாயமானதொரு பரிந்துரையை வழங்கியுள்ளார் எனவும் தெரிவித்துள்ள மனுதாரர், தன்னை மீண்டும் சேவையில் அமர்த்துமாறு கோரி இந்த மனுவைத் தாக்கல் | (அ) மனுதாரர் ஆங்கிலப் பயிற்சி ஆசிரியராகப் பணியாற்றிய வேளையில் இடமாற்றம் பெற்று 2018.04.27 ஆம் திகதி கொழும்பு 05 இல் உள்ள வித்யாதிலக கல்லூரியில் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளதுடன், இறுதியாக 2018.06.01 ஆம் திகதி சேவைக்குச் சமூகமளித்துள்ளதாகவும்,<br><br>(ஆ) கொழும்பு வலயக் கல்விப் பணிப்பாளரின் 2018.06.22 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம், 2018.07.02 முதல் கொ/சீவலி மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும்,<br><br>(இ) முறையான வகையில் விடுமுறை அனுமதியைப் பெறாமல் சேவைக்குச் சமூகமளிக்காத காரணத்தினால் வலயக் கல்விப் பணிப்பாளர் 2019.10.09 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் 2018.06.01 முதல் அமுலுக்கு வரும் வகையில் சேவையை விட்டுச் சென்றதாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும்,<br><br>(ஈ) 2011 ஆம் ஆண்டு முதல் மனுதாரர் தொடர்ந்தேர்ச்சியாக சம்பளமற்ற விடுமுறைகள பெற்றுள்ளதாகவும்,<br><br>(உ) மனுதாரர், 2019.11.08 ஆம் திகதி தன்னை மீண்டும் பணியில் | நிவாரணம் விதந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்துள்ளார். | அமர்த்தக் கோரி வலயக் கல்விப் பணிப்பாளருக்கு மேன்முறையீடொன்றைச் சமர்ப்பித்ததாகவும்,<br><br>(ஊ) அதிகளவான சம்பளமற்ற விடுமுறையை பெற்றுள்ளமை மற்றும் கற்பித்தல் நடவடிக்கைகளைச் சரியாக மேற்கொள்ளாமை போன்ற காரணங்களால் கடமைகளை கவனயீனமாக புறக்கணிக்கும் ஒருவர் என்பதால் மீண்டும் பணியில் அமர்த்துவதற்குப் பரிந்துரைக்க முடியாது என கொழும்பு வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார் எனவும்,<br><br>(எ) மேல் மாகாண ஆளுநரிடம் மேன்முறையீடு செய்த மனுதாரர் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு மேன்முறையீடொன்றை தாக்கல் செய்துள்ள போதிலும், சம்பந்தப்பட்ட ஒழுக்காற்று அதிகாரியிடம் மேன்முறையீட்டை சமர்ப்பிக்காததால் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் மேன்முறையீட்டை தாக்கல் செய்யுமாறு ஆளுநரின் செயலாளரின் இலக்கம் GOS/ADM/6/17/1-21/(2020) உடையதும் 2021.11.01 ஆம் திகதியுடையதுமான கடிதத்தின் மூலம் அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும்,<br><br>(ஏ) ஆளுநரின் செயலாளரின் இலக்கம் GOS/ADM/12/EDU/20-1 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உடையதும் 2020.08.27 ஆம் திகதியுடையதுமான கடிதமொன்றை தொடர்புபடுத்தி மேல் மாகாண கல்வி அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் (கல்வி) இன் இலக்கம் 1/26/1/2 மற்றும் 2020.09.04 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் நியாயமான காரணமின்றி சம்பளமற்ற விடுமுறையில் செல்லும் ஆசிரியர் ஒருவர் ஆசிரியர் தொழிலுக்கு பொருத்தமற்ற நபரல்ல என்பதால் அவரை மீண்டும் பணியில் அமர்த்துவதற்குப் பரிந்துரைக்க முடியாதென மேல் மாகாண ஆளுநரின் செயலாளருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும்,<br><br>(ஐ) மனுதாரர் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குச் செய்துள்ள மேன்முறையீடு தொடர்பாக, அவரது சேவைக் காலத்தினுள் கடமைகளை மேற்கொண்டமையானது திருப்தியற்றதாக இருந்ததாலும், அவர் பதவியை விட்டு விலகிச்சென்று சுமார் 02 ஆண்டுகள் தொழிலின் தேவையின்றி இருந்ததாலும், பதவியை கைவிட்டுச் செல்லும் அளவிற்கு அவரது நோய் நிலைமை கடுமையானதாக காணப்படாததாலும், மீண்டும் பணியில் அமர்த்துமாறு கோரப்பட்ட கோரிக்கையானது மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் இலக்கம் WPC/PSC/ADM/04/01-2191 உடையதும் 2022.10.23 ஆம் திகதியுடையதுமான கடிதத்தின் மூலம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும்,<br><br>(ஒ) மனுதாரரினால் அறிவிக்கப்படாமல் சேவைக்குச் சமூகமளிக்காமல் இருந்த காலப்பகுதியில் தான் முதுகெலும்பு சார்ந்த நோயால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும், அதனால் ஆயுர்வேத சிகிச்சையை பெற்றதாகவும், தான் ஆயுர்வேத மருத்துவர் ஒருவரிடம் தங்கிநின்று சிகிச்சை பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டதுடன்,<br><br>(ஓ) மனுதாரர் தனது பணியிடத்திற்கு ஆயுர்வேத மருத்துவச் சான்றிதழை மாத்திரம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளார் எனவும்,<br><br>(ஔ) மனுதாரர் பெற்றுள்ள விடுமுறைகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில், அரசாங்க விதிமுறைகளின்படி ஆயுர்வேத மருத்துவச் சான்றிதழை மாத்திரம் சமர்ப்பிப்பது போதுமானதாக இல்லை எனவும், மனுதாரர் முன்னறிவிப்பின்றி சேவைக்கு சமூகமளிக்காமல் இருந்ததன் மூலம் தான் எவ்விதக் குற்றமும் புரியவில்லை என்பதை மனுதாரர் நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை எனவும், எனவே, மனுதாரர் சேவையை விட்டு விலகிச் சென்றுள்ளார் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. | |
| **நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு** | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 68 | திருமதி கே.பீ. சம்பிக்கா ஜயசிங்க COM/PP/2025/203<br>சமர்ப்பித்தவர்:கௌரவ ரீ.கே. ஜயசுந்தர பா.உ.<br>2025.10.21 ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது.<br><br>அமைச்சின் தொடர்பு இல: MF1/11/2/SLIC/2021/3<br><br>திகதி: 2021.04.27 | 1995 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பத்திரிகையொன்றில் வெளியான அறிவித்தலொன்றின் பிரகாரம் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் ஆங்கிலத் தட்டெழுத்தாளர் மற்றும் எழுதுநர் பதவிக்கான விண்ணப்பமொன்றை அனுப்பியதாகவும்;<br>அதற்கிணங்க, 1995.11.10 ஆம் திகதி நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியதாகவும் 1995.11.16 ஆம் திகதி முதல் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் காலி கிளையில் அமைய அடிப்படையில் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டதாகவும் இரண்டு நாட்கள் பணியாற்றிய பின்னர் தல்கஸ்வல கிளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டதாகவும், சேவையில் நிரந்தரம் செய்யப்படும் என்று பலமுறை தெரிவிக்கப்பட்ட போதிலும் அது செய்யப்படவில்லை | (அ) இம் மனுவானது முதலில் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் பொது மனுக்கள் பற்றிய குழுவினால் (COM/PP/2020/78 எனும் இலக்கத்தின் கீழ்) 2021.10.06 ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டதாகவும், அதன்போது மனுதாரருக்கு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் ஒப்பந்த அடிப்படையிலோ அல்லது அவரது தகைமைகளின் அடிப்படையிலோ தொழிலொன்றை வழங்குமாறு அக்குழு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்குப் பரிந்துரைத்ததாகவும்;<br><br>(ஆ) குழுவின் பரிந்துரை அவ்வகையில் வழங்கப்பட்ட போதிலும், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் நிரந்தர/ஒப்பந்த அடிப்படையில் தொழிலொன்றை வழங்கும் சாத்தியம் இல்லையென்ற போதிலும் வெளிச் சேவைகளை வழங்கும் நிறுவனம் ஊடாக அந்நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் துப்புரவு செய்யும் தொழிலொன்றை வழங்க முடியும் என்று தனக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும், தான் அதற்கு உடன்படாததால் தனக்கு நியாயத்தை பெற்றுத்தரும் படி கோரி, மீண்டுமொரு தடவை பத்தாவது பாராளுமன்றத்தின் பொது மனுக்கள் பற்றிய குழுவிடம் இம்மனுவை சமர்ப்பித்ததாக மனுதாரரினால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்<br><br>இ) மனுதாரர் 1995.03.10 ஆம் | நிவாரணம் விதந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | என்றும் 05 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றிய நிலையிலும் 2000ஆம் ஆண்டில் சேவையிலிருந்து நீக்கப்பட்டதாகவும், தனக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் அறிவித்த போதிலும் எவ்வித நிவாரணமும் கிடைக்கப்பெறவில்லை என்றும், அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 09/2015 இன் படி, நிவாரணம் அளித்தலின் கீழ் 1997.07.12 ஆம் திகதி முதல் ஆங்கிலத் தட்டெழுத்தாளர் பதவியில் நிரந்தர அடிப்படையில் நியமிப்பதற்கும் 2007.07.01 ஆம் திகதி முதல் II ஆம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்குவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளமையால் இது குறித்து ஆராய்ந்து மீண்டும் தொழிலையும் நிலுவையிலுள்ள சம்பளம் மற்றும் | திகதி இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பயிலுநரொருவராக அமைய அடிப்படையில் இணைந்து சுமார் 03 ஆண்டுகள் பணியாற்றியுள்ளதாகவும், இவ்விடயம் தொடர்பில் மேலும் ஆராய்கையில், மனுதாரர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் நிரந்தர ஊழியர் அல்ல என்றும், பயிற்சி காலப்பகுதியொன்றின் கீழ் பணியாற்றியுள்ளார் என்றும் தெரியவந்ததாகவும், பின்னர், ஆறு பேர் சேவையிலிருந்து நீக்கப்பட்டதாகவும், அந்த ஆறு பேரில் மனுதாரரின் பெயர் இரண்டாவதாகக் காணப்பட்டதாகவும், இது தொடர்பாக, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மனிதவள உப குழு (Human Resource Sub-Committee) மேற்கூறிய ஆறு பேருக்கும் கருணைத்தொகை வழங்குவதற்கு 2017.04.21 ஆம் திகதி எட்டிய தீர்மானத்திற்கமைய, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை கருணைத்தொகையாக (Ex-Gratia) ரூ. 500,000/- (ஐந்து இலட்சம்) தொகையை மனுதாரருக்கு இறுதித் தீர்வுத் தொகையாக ஏற்கனவே வழங்கியுள்ளதாகவும், அவர் அந்தத் தொகையை கையொப்பமிட்டு பெற்றுக்கொண்டதாகவும், ஆகையால் மனுதாரரின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக இலங்கை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொடுப்பனவுகளை பெற்றுத்தருமாறும் கோரி மனுதாரரால் இம்மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு மீண்டும் தலையிட சட்டரீதியான ஏற்பாடுகள் எதுவும் இல்லையெனவும்,<br><br>(ஈ) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட கருணைத் தொகையைத் தான் 2017.06.27 ஆம் திகதி பெற்றுக்கொண்டது, மீண்டும் தொழிலைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் நிபந்தனையொன்றை முன்வைத்தாகும் என மனுதாரர் கூறினாலும், அந்தத் தொகையை ஏற்றுக்கொண்டதன் மூலம் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடனான இறுதித் தீர்வொன்றுக்கு மனுதாரர் உடன்பட்டுள்ளார் எனவும்,<br><br>(உ) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் முன்மொழியப்பட்டபடி, வெளிச் சேவை வழங்கும் நிறுவனம் மூலம் அந்த நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் பணிபுரிய தனது விருப்பமின்மையை மனுதாரர் மீண்டும் தெரிவித்துள்ளதோடு, அதற்குப் பதிலாக, பல ஆண்டுகளாக தனது சேவையை வழங்கிய இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலேயே பொருத்தமானதொரு தொழிலுக்காக தற்போது க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றுள்ள தனது பிள்ளைக்கு வழங்குவதாக இருந்தால் அதனைப் பாராட்டுவதாக மனுதாரர் குழுவிடம் சமர்ப்பித்துக்கொண்ட விடயங்கள் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | (ஊ) மனுதாரர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பயிலுநர் பதவியொன்றுக்கு அமைய அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட ஒருவர் எனவும், அங்கு அவரது சேவைகள் நிரந்தர அடிப்படையில் பெறப்படவில்லை எனவும், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அவரை சேவையில் ஈடுபடுத்தியமை தொடர்பில் சம்பந்தப்பட்ட எவ்விதப் பதிவுகளும் தற்போது காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடம் இல்லையெனவும் மற்றும் அதன்படி, மனுவில் மனுதாரர் கோரியுள்ள நிவாரணத்தைத் தவிர இன்னபிற கூடுதல் நிவாரணங்களை வழங்குவதில் குழுவிற்கு தலையீடு செய்ய முடியாது எனவும்,<br><br>(எ) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையானது ஏற்கனவே மனுதாரருக்கு இறுதித் தீர்வாக ஒரு கருணைத் தொகையை வழங்கியுள்ளதாகவும், அவர் அந்தத் தொகையை ஏற்றுக்கொண்டுள்ளதாகவும்,<br><br>ஆகையால், தற்போது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கும் மனுதாரருக்கும் இடையில் எவ்வித சட்டரீதியான பிணைப்புக்களும் இல்லையெனவும்,<br><br>(ஏ) மனுதாரர் பின்னர் விடுத்த கோரிக்கையின்படி, அவர் பல ஆண்டுகளாக இலங்கை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு ஆற்றிய சேவையைக் கருத்திற் கொண்டும், அவரது பிள்ளையின் தகைமைகளை பரீட்சித்ததன் பின்னர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பயிலுநராக பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பை வழங்குமாறு மனுதாரர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தால், அவரது கோரிக்கையைப் பரிசீலிக்க முடியும் என்று இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் குழுவிற்குத் தெரிவித்துள்ளனர் என்பதும், | |
| **கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு** | | | | |
| 69 | திரு ஈ.டபிள்யூ. உபாலி கருணாரத்ன COM/PP/2025/260 சமர்ப்பித்தவர்:கௌரவ சுனில் றாஜபக்ஷ பா.உ. 2025.11.11 ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது.<br><br>அமைச்சின் தொடர்பு இல: MOA/AD/E2/1/15<br><br>திகதி: 2022.05.20. | மனுதாரர் 1995 ஆம் ஆண்டில் சமுர்த்தி ஊக்குவிப்பாளராக சேவையில் இணைந்து கொண்டதாகவும், பின்னர் 1996 ஆம் ஆண்டில் கமநல சேவைகள் திணைக்களத்தில் வட்ட விதானைப் பதவியை பெற்றதாகவும், 2000.01.03 ஆம் திகதி முதல் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளராக பணியாற்றிக் கொண்டிருந்தபோது 2015.10.06 ஆம் திகதி சேவையிலிருந்து நீக்கப்பட்டதாகவும் மனுதாரரின் இருபது | அ) இராணுவ சேவையில் இணைவதற்காக தான் முதன்முதலில் தோற்றிய வருடத்துடன் தொடர்புடைய க.பொ.த (சா/தரம்) 1987 பெறுபேற்று ஆவணத்தை தனது பாடசாலை அதிபரின் அத்தாட்சிப்படுத்தலுடன் பெற்றுக்கொண்டதாகவும் 1995 ஆம் ஆண்டில் சமுர்த்தி ஊக்குவிப்பாளர் பதவிக்கு இணைத்துக் கொள்ளப்பட்டபோது அந்த பெறுபேற்று ஆவணத்தை சமர்ப்பித்ததாகவும், பிற்காலத்தில் கமநல சேவைகள் திணைக்களத்தில் வட்ட விதானை நியமனத்தை பெற்றுக்கொண்டதாகவும்,<br><br>2000.01.03 ஆம் திகதி முதல் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தராக நியமிக்கப்பட்ட வேளையில் மேற்படி பெறுபேற்று ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டதாகவும், | நிவாரணம் விதந்துரைக்கப்பட வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆண்டுக்கால சேவைக் காலத்தைக் கருத்திற் கொண்டு, 2023.08.21 ஆம் திகதி நடைபெற்ற குழுக் கூட்டத்தின் பரிந்துரையான மனுதாரரரை மீண்டும் சேவையில் அமர்த்தி பின்னர் ஓய்வுபெறச் செய்யுமாறு குறிப்பிட்ட பரிந்துரையைச் செயற்படுத்தக் கோரி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். | பிற்காலத்தில் ஆதனக் கடனொன்றை பெற்றுக்கொள்ள விண்ணப்பித்த வேளையில் தனது சேவையை உறுதிப்படுத்தும் கடிதம் தேவைப்படுவதாகவும்,<br>அதன்போது தனது பெறுபேற்று ஆவணத்தை பரீட்சைத் திணைக்களத்தில் உறுதிப்படுத்திய போது அப்பெறுபேற்று ஆவணம் பிறிதொரு நபரினுடையது என உறுதிசெய்யப்பட்டதாகவும்,<br>பிறிதொரு நபரினுடைய பெறுபேற்று ஆவணம் தவறுதலாக தனது பெயரில் வழங்கப்பட்டிருப்பதாக அப்போதைய அதிபர் பின்னர் சத்தியக் கூற்றொன்றை வழங்கியுள்ளதாக மனுதாரரால் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள்<br><br>(ஆ) சமுர்த்தி ஊக்குவிப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்புக்கான கல்வித் தகைமை 8 ஆம் வகுப்பு சித்தி பெற்றிருக்க வேண்டும் என்பதாகவும், பெறுபேற்று ஆவணத்தின்படி, தான் திறமைச் சித்தியொன்றுடன் 4 பாடங்களில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பதாகவும்,<br>விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்புக்கான கல்வித் தகைமை, 2 திறமைச் சித்திகள் மற்றும் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பதாகவும், தகைமையை பூர்த்தி செய்வதற்கு | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மனுதாரர் 1998 ஆம் ஆண்டில் கணிதப் பாடத்திற்கு மாத்திரம் தோற்றி திறமைச் சித்தியைப் பெற்றுள்ளதாகவும் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள்.<br><br>(இ) விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்புக்கான கல்வித் தகைமை பின்னர் 2 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டதாகவும், முதலாம் பிரிவிற்கான தகைமை கணிதம் உட்பட 6 பாடங்களில் 2 திறமைச் சித்திகளுடன் சித்தி பெற்றிருக்க வேண்டும் என்பதும், இரண்டாம் பிரிவிற்கான தகைமை 8 ஆம் வகுப்பில் சித்தி பெற்றிருக்க வேண்டும் என்பதுமாகும். மனுதாரரின் பெயரில் வெளியிடப்பட்ட பிறிதொரு நபருக்குரிய பெறுபேற்று ஆவணத்தின் படி, அவர் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் பதவிக்குத் தகைமை பெறுவதாகவும்,<br><br>(ஈ) மேற்படி 2 பிரிவுகளுக்குமான தகைமைகளை நிரூபிக்கத் தவறியதன் காரணமாகப் பணிநீக்கம் செய்யப்பட வேண்டிய 190 அலுவலர்கள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும்,<br><br>(உ) மனுதாரரால், 1987 ஆம் ஆண்டு அவர் தோற்றிய க.பொ.த சாதாரண தரப் பரீட்சையுடன் தொடர்பான போலிப் பெறுபேற்று ஆவணமொன்றைச் சமர்ப்பித்ததன் மூலம் மோசடி செய்துள்ளதாகவும்,<br><br>(ஊ) மனுதாரரால் ஒன்பதாவது | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மனுவினை (COM/PP/2021/545) 2023.08.22 ஆம் திகதி விசாரணை செய்த குழு, மனுதாரரை மீண்டும் பணியில் அமர்த்தி ஓய்வுபெறச் செய்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்குப் பரிந்துரை செய்துள்ள போதிலும், குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் சாத்தியம் இல்லையென அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் 2024.07.24 ஆம் திகதிய கடிதம் மூலம், பொது மனுக்கள் பற்றிய குழுவின் செயலாளருக்கு அறிவித்துள்ளதாகவும்,<br><br>(எ) மனுதாரர் தனது தொழிலைப் பெறுவதற்காகப் போலிச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்துள்ளமை நிரூபணமானதன் காரணமாக மனுதாரரின் நியமனம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதால், மனுதாரரை மீண்டும் பணியில் அமர்த்துவது ஒரு தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்துவதாகவும், | |
| 70 | திரு கே.டீ. சிறிசேன COM/PP/2025/270 சமர்ப்பித்தவர்:கௌரவ எரங்க குணசேகர பா.உ. 2025.11.11 ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது.<br><br>அமைச்சின் | சந்தைப்படுத்தல் அபிவிருத்தித் திணைக்களம் மூடப்பட்டதன் காரணமாக அந்நிறுவனத்தின் 146 ஊழியர்களுக்கு ஓய்வூதியம் பெறுவதற்குத் தேவையான | (அ) அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானத்தின் அடிப்படையில் சந்தைப்படுத்தல் அபிவிருத்தித் திணைக்களம் 1989.12.31 ஆம் திகதி கலைக்கப்பட்டதன் காரணமாக, அத்திணைக்களத்தில் பணியாற்றிய ஏராளமான ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டதாகவும், அவர்களுள் | நிவாரணம் விதந்துரைக்கப்பட வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடர்பு இல: MOA/AD/E11/1/34<br><br>திகதி: 2022.10.31 | பணிக்காலத்தை நிறைவு செய்யும் வாய்ப்பு இழக்கப்பட்டுள்ளமையால் ஓய்வூதியம் இழக்கப்பட்டிருப்பதன் மூலம் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அந்த அனைத்து சேவையாளர்களுக்கும் 55 வயது வரை பணியாற்றியதாகக் கருதப்பட்டு நிலுவை சம்பளமும் வழங்கப்பட்டு 55 வயது எட்டப்படும் திகதிக்கு ஓய்வு அளிக்கப்பட்டு ஓய்வூதிய உரிமைகளை பெற்றுத்தருமாறு கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | ஓய்வூதியம் பெறத் தகைமையற்ற நிரந்தர நியமனம் பெற்ற 146 ஊழியர்களுக்கு 55 வயது வரை பணியாற்றும் வாய்ப்பும், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஓய்வூதியமும் இழக்கப்பட்டிருப்பதாக மனுதாரர் முன்வைத்த விடயங்கள்.<br><br>(ஆ) மேற்படி 146 ஊழியர்களில் சிலர் இழப்பீட்டை பெற்றுக்கொண்டதாகவும், இன்னும் சிலர் இழப்பீட்டை நிராகரித்து ஓய்வூதியம் உரித்தாக்கப்பட்ட வேண்டும் என கோரியிருந்த போதிலும், அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாகவும், அதன்படி, தமது குழுவினர் 55 வயது வரை பணியாற்றியதாகக் கருதப்பட்டு, ஓய்வூதியம் தயாரிக்கப்பட்டு நிலுவையான ஓய்வூதியத் தொகையுடன் ஓய்வூதியத்தை உரித்தாக்கித் தருமாறு கோரி மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(இ)சந்தைப்படுத்தல் அபிவிருத்தித் திணைக்களம் கலைக்கப்பட்ட சமயத்தில், மனுதாரரின் சேவைக்காலம் 253 மாதங்களாக காணப்பட்டதாகவும், ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 2(7) ஆம் பிரிவின் கீழ் அவருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டிருப்பதாகவும்,<br><br>(ஈ)சந்தைப்படுத்தல் அபிவிருத்தித் திணைக்களம் கலைக்கப்பட்ட நேரத்தில் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானத்தின்படி, ஊழியர்களுக்கு நன்மைகள் உரித்தாகும் என்றும், | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அதன்படி, 10 ஆண்டுகளுக்கு மேலான சேவைக்காலத்தை பூர்த்திசெய்துள்ள ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளதாகவும், 10 ஆண்டுகளுக்குக் குறைவான சேவைக்காலத்தை உடைய ஊழியர்களுக்குப் பரிந்துரைக்கப்பட்ட இழப்பீட்டுத் திட்டத்தின்படி இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாகவும், ஒழுக்காற்று நடவடிக்கை காரணங்களுக்காக இழப்பீடு கிடைக்காமல் உள்ள இன்னும் சில ஊழியர்களுக்கு, அரசியல் பழிவாங்கல் பற்றிய குழுவிற்கு செய்யப்பட்டுள்ள மேன்முறையீடுகளின் பேரில் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி எவ்வித நன்மைகளையும் பெறாத ஊழியர்கள் குறித்த தகவல்களைப் பெற்று அவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பிப்பது பொருத்தமானது என்றும்,<br><br>(உ) சிக்கலுக்குரிய 146 ஊழியர்களின் நியமனங்கள் ஓய்வூதியக் கொடுப்பனவு உரித்தற்ற நிரந்தர நியமனங்களாகும் என்றும், சந்தைப்படுத்தல் அபிவிருத்தித் திணைக்களம் கலைக்கப்பட்ட பின்னர், இந்த ஊழியர் குழுவினர் பரிந்துரைக்கப்பட்ட இழப்பீட்டுத் திட்டத்தின் படியும் பின்னர் பல்வேறு முறையியல்களின் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பிரகாரமும் இழப்பீடு பெற்றுள்ளனர் என்றும், அமைச்சு மீண்டும் அமைச்சரவைப் பத்திரமொன்றைச் சமர்ப்பிக்க முடிவு செய்தாலும், அந்த ஊழியர்கள் பற்றிய தகவல்கள் முழுமையற்றதாக இருப்பதால் சரியான தகவல்கள் பெறப்பட வேண்டும் என்றும்,<br><br>(ஊ) 2023.05.11 ஆம் திகதி நடைபெற்ற பொது மனுக்கள் பற்றிய குழுவின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளின்படி, இந்த மனு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட 02 அமைச்சரவைப் பத்திரங்கள் 02 தடவைகள் நிராகரிக்கப்பட்டுள்ளதால், இது தொடர்பாக கமத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு மேலும் ஒரு பரிந்துரையை வழங்குவதற்கான சட்டரீதியான இயலுமை குழுவிற்கு இல்லை எனவும்,<br><br>(எ) இந்த விடயம் தொடர்பாக 02 அமைச்சரவைப் பத்திரங்கள் 02 தடவைகள் நிராகரிக்கப்பட்டுள்ளதால், மேற்படி 146 ஊழியர்களுள் ஓய்வூதியம் உரித்தாகாத மற்றும் இதுவரை எந்தவொரு இழப்பீட்டுத் தொகையையும் பெறாத ஊழியர்களுக்கு மாத்திரமே மீண்டும் ஒரு தடவை அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும், அது தொடர்பான தகவல்கள் மனுதாரரால் அமைச்சிற்கு வழங்கப்பட வேண்டும் எனவும், | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | (ஏ) மேற்கூறிய 146 ஊழியர்களின் நியமனக் கடிதத்தில் உள்ள நிபந்தனைகளின் படி, அந்த ஊழியர்களின் நியமனங்கள் ஓய்வூதிய உரித்து இல்லாத நிரந்தர நியமனங்கள் என்பதாலும் மற்றும் அவர்களின் சேவைக்காலம் 10 ஆண்டுகளை விடக் குறைவானது என்பதால், அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது ஒரு தவறான முன்னுதாரணமாகும் எனவும். | |
| 71 | திருமதி. டீ.பிரேமலதா<br><br>COM/PP/2025/172<br><br>சமர்ப்பித்தவர்; கௌரவ அருண பனாகொட, பா.உ.<br><br>2025.11.21 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br><br>அமைச்சின் தொடர்பு இலக்கம்; 2/15/27/23<br><br>திகதி: 2021.04.08 | தகப்பனால் மனுதாரருக்கு உரித்தாகியுள்ள 12 ஏக்கர் காணி அரசாங்கத்தினால் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதாகவும் இக்காணிக்காக நியாயமான நட்ட ஈட்டுத் தொகையொன்றைப் பெற்றுத்தருமாறும் கோரி இம்மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | (அ) இரத்தினபுரியில் அமைந்துள்ள புப்பரபொத்தை நின்தகம எனும் காணியில் புப்பரபொத்தை வயல் வெளியில் இருபத்து நான்கு (24) ஏக்கர் வயல் காணி தனது தகப்பனாருக்கு சொந்தமாகியதாகவும், சம்பந்தப்பட்ட உறுதியும் நிலஅளவை வரைபடமும் தன்னிடம் இருப்பதாகவும், அதில் 12 ஏக்கர் காணியை 1979 ஆம் ஆண்டு தன் தகப்பனார் விற்றுள்ளார் என்றும் எஞ்சியிருந்த 12 ஏக்கர் காணி 2008 ஆம் ஆண்டு தன் தகப்பனால் நன்கொடை உறுதி ஒன்றின் மூலம் பங்கிடப்படாத 12 ஏக்கர் என்ற வகையில் தனக்கு உரிமை அளிக்கப்பட்டதாகவும் மனுதாரரால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(ஆ) காணி கொள்ளல் சட்டத்தின் மூலம் அரசாங்கம் புப்பரபொத்தை நின்தகம காணியிலிருந்து காணிகளைக் கையகப்படுத்தி, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு கையளித்து, | நிவாரணங்களை வழங்குவதற்கு பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | காணி அளிப்பு விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் இரத்தினபுரி அரசாங்க அதிபர் மக்களுக்கு வழங்கும் சந்தர்ப்பத்தில் தனது தந்தைக்கு சொந்தமாயிருந்த புப்பரபொத்தை வயல்வெளி எனும் 12 ஏக்கர் காணியும் அதில் உள்ளடங்கியிருந்ததாக மனுதாரினால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(இ) மனுதாரர் உரிமை கோரும் 12 ஏக்கர் பங்கிடப்படாத காணி புப்பரபொத்தை நின்தகம எனும் 1223 ஏக்கரினுள் அமைந்துள்ளதாகவும், காணி அளிப்பு விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் மக்களுக்கு பகிரிந்தளிக்கும் சந்தர்ப்பத்தில் மனுதாரர் உரிமைக் கோருகின்ற காணித் துண்டும் உள்ளடக்கப்பட்டிருப்பதாக எழுந்துள்ள பிரச்சினையை பொது மனுக்கள் பற்றிய குழுவில் விசாரித்து, முன்மொழியப்பட்ட காணியின் எல்லைகளை காணியில் சரியாக அடையாளம் காண்பதற்கு மனுதாரரும் உத்தியோகத்தர்களும் தவறியிருப்பதனால் அதனை அடையாளம் காண்பதற்கு களப்பரிசோதனை ஒன்றை மேற்கொள்ளுமாறு குழு, 2019.04.04 ஆந் திகதி பலாங்கொடை பிரதேச செயலாளருக்கு பரிந்துரைகளை வழங்கியுள்ளது என்றும்<br><br>(ஈ) பலாங்கொடை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட முன்மொழியப்பட்ட காணிக்குரிய கிராம உத்தியோகத்தர் பிரிவு தற்போது கல்தோட்டை பிரதேச செயலக பிரிவுக்குரியது என்றும் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | (உ) 2019.05.15 ஆந் திகதி மனுதாரர், கிராம உத்தியோகத்தர் மற்றும் குடியேற்ற உத்தியோகத்தர் ஆகியோரால் (கல்தோட்டை திட்டம் தெற்குக் கரை) மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையில் இப்பிரச்சனைக்குரிய காணி மேலதிக வர்த்தமானப்பத்திர இலக்கம் 49 இல் 32 மற்றும் 33 காணித்துண்டங்களில் சித்தரிக்கப்பட்டுள்ள புப்பரபொத்தை நின்தகம எனும் காணிக்குள் உள்ளடங்குவதாகவும் 1982 மே 27 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட 194/9 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் காணி அளிப்பு விசேட ஏற்பாடுகளின் பிரகாரம் மக்களுக்கு பகிரிந்தளிப்பதற்கு இந்த 12 ஏக்கர் காணியும் உள்ளடங்கும் வகையில் மே.வ 49 இல் மேலதிக 9 இனைத் தயாரித்து துண்டாக்கியிருப்பதாக குடியேற்ற உத்தியோகத்தர் 2019.05.22 ஆந் திகதிய அறிக்கையின் மூலம் அறிவித்திருப்பதாகவும்<br><br>(ஊ) 2022.11.10 ஆந் திகதி நடைபெற்ற பொது மனுக்கள் பற்றிய குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் மனுதாரர் தரப்பினர்களிடம் இருந்த நில அளவைப் பட பிரதிகள் மற்றும் ஏனைய ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு கல்தோட்டை பிரதேச செயலாளர் 2023.01.24 ஆந் திகதி நில அளவைத் திணைக்களத்தினதும் தலையீட்டோடு சரியான வரைபட கண்காணிப்போடுமேற்கொள்ளப்ப | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ட்டுள்ள மேற்படி ஒருங்கிணைந்த விசாரணையின் பிரகாரம் இந்த பிரச்சினைக்குரிய காணி அமைந்துள்ள திசை சரியாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், மனுதாரருக்குரிய காணித் துண்டானது காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணித் துண்டுக்கு தென் பகுதியில் அமைந்துள்ளது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அதன் பிரகாரம் சம்பந்தப்பட்ட காணியை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு கையகப்படுத்தவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அக்காணி தனியாரினால் அனுபவிக்கப்படுகின்றமையானது வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகவும்,<br><br>(எ) புப்பரபொத்தை வயல் காணி எனும் பெயரில் தன்னிடமிருந்த 24 ஏக்கர் காணியில் விற்பனை செய்யப்பட்ட 12 ஏக்கர் காணியின் கிழக்கு எல்லையில் எஞ்சியுள்ள 12 ஏக்கர் காணி அமைந்துள்ளதாகவும் இந்தக் காணியில் முட்பயிர்கள் பயிரிடப்பட்டு பின்னர் கைவிடப்பட்ட காணியாக பற்றைக் காடுகளோடு காணப்பட்டதோடு, அரசாங்கத்தினால் பொதுமக்களுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்படும்போது, சட்டவிரோத குடியிருப்பாளர்களால் தங்களது காணியும் கைப்பற்றிக் கொள்ளப்பட்டதாக மனுதாரரின் தகப்பனாரால் 1991.08.01 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் இரத்தினபுரி மாவட்ட காணி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக பிரச்சனைக்குரிய கோப்பினை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பரிசீலிக்கும் போது வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகவும்<br><br>(ஏ) மனுதாரரின் தகப்பனாரிடம் இருந்த புப்பரபொத்தை 24 ஏக்கர் வயற்காணிக்குரிய உறுதி மற்றும் நில அளவைப்படத்தின் பிரகாரம் மனுதாரருக்கு 2008 ஆம் ஆண்டு தனது தந்தை நன்கொடை உறுதி ஒன்றின் மூலம் அளித்த பங்கிடப்படாத 12 ஏக்கர் காணியும் 1979 ஆம் ஆண்டு விற்கப்பட்ட 12 ஏக்கர் காணியும் ஒன்றிற்கொண்டு அருகில் இருப்பதைச் சரியாக உறுதிப்படுத்திக்கொள்ள முடியும் என்றும்<br><br>(ஐ) கல்தோட்டை பிரதேச செயலக நில அளவைத் திணைக்களத்தினதும் தலையீட்டுடன் சரியான அளவைப்பட கண்காணிப்பொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த விசாரணையின் பிரகாரம் இந்த பிரச்சனைக்குரிய காணி அமைந்துள்ள திசையைச் சரியாக அடையாளம் கண்டுள்ளதாகவும் அதன் பிரகாரம் மனுதாராரின் காணியானது காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்ட காணிக்குள் உள்ளடக்கப்படாமையானது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அது தனியார் தரப்பினரால் சட்டவிரோதமாக அனுபவிக்கப்படுவதாகவும்<br><br>(ஒ) மனுதாாரின் தகப்பனால் இரத்தினபுரி மாவட்ட காணி பதிவாளர் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ள 1991.08.11 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரமும் தனியார் காணியாக இருக்கும் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மனுதாாரின் தகப்பனுக்குரிய காணியில் சட்டவிரோத குடியிருப்பாளர்கள் வசித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளதால் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு அளித்து மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் காணிகளுக்குள் உள்ளடங்காது என மேலும் உறுதியாகின்றதாகவும்<br><br>(ஓ) மனுதாரருக்கு தனது தகப்பன் நன்கொடை உறுதி ஒன்றின் மூலம் கையளித்த பங்கிடப்படாத 12 ஏக்கர் காணிக்கு சட்டரீதியான உரித்தினை சான்றுப்படுத்த முடியும் என்பதால், முன்மொழியப்பட்ட காணியை சட்டவிரோத குடியிருப்பாளர்கள் அனுபவிப்பார்களாயின் அவர்களை அகற்றுவதற்காக மனுதாரர் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும்<br><br>(ஔ) புப்பரபொத்தை நின்தகம காணியில் காணிகளை கையகப்படுத்தி, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு கையளித்து காணி அளிப்பு விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள காணிகளுக்குள் மனுதாாரின் காணி உள்ளடங்காது என்றும் அந்த காணி தனியார் காணி என்றும் | |
| 72 | திரு.<br>பீ.ஜீ.த சில்வா<br><br>COM/PP/2025/93<br><br>சமர்ப்பித்தவர்;<br>கௌரவ சட்டத்தரணி (திருமதி) ஹசாரா | 1980ஆம் ஆண்டு யூலை மாதம் நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டமையால் இயந்திர சாதான திணைக்களத்தில் கடமையாற்றிய மனுதாாரின் | (அ) 1982.01.01 ஆம் திகதி முதல் இடைநிலை தொழில்நுட்பவியலாளர் சேவையின் தொழில்நுட்பவியலாளர் III ஆம் வகுப்பிற்குரிய நியமனக் கடிதங்களை இயந்திர சாதன பணிப்பாளர் வெளியிட்டதோடு, அவை நீர்ப்பாசனத் | நிவாரணங்களை வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | லியனகே, பா.உ.<br><br>2025.11.26 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br><br>அமைச்சின் தொடர்பு இலக்கம்; MIWRM/AD/05/04/ பொ.ம (04-2021)<br><br>திகதி: 2022.05.27 | சேவையை முடிவுக்கு கொண்டு வந்ததாகவும், 1994 ஆம் ஆண்டு மீண்டும் சேவையில் நிலை நிறுத்தப்பட்டதாகவும் பின்னர் இயந்திர சாதனங்கள் திணைக்களம் மூடப்பட்டமையால் நீரப்பாசன திணைக்களத்தில் மிகை ஊழியரகள் அடிப்படையில் இணைப்புச் செய்யப்பட்டதாகவும் , அங்கு நீர்ப்பாசனப் பணிப்பாளர் மனுதாரருக்குரிய பதவி உயர்வுகளை வழங்கவில்லை என்றும், 2000 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றதாகவும் குறிப்பிட்டு, இடை நிலையிலுள்ள தொழில்நுட்பவியலாளர் சேவைக்கு தகைமைகளைப் பூர்த்தி செய்த திகதிகளுக்கு பதவி உயர்வுகளை வழங்கி, சரியான சம்பளப் படிகளில் நிலைநிறுத்தி சரியான தரங்களிற்கு நியமித்து நிலுவைச் சம்பளங்களையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள் | திணைக்களத்தின் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்படவில்லை என்பதோடு, இயந்திர சாதனத் திணைக்களத்தின் தொழில்நுட்பவியலாளர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் நடவடிக்கைமுறையின் பிரகாரம் சிறு நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு இந்த நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தாலும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் பிரகாரம் நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தினால் குறைந்த அளவு அதிகாரமுடைய நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு இடை நிலையிலுள்ள இணைந்த தொழில்நுட்பவியலாளர் சேவைக்குரிய பதவிகள் வழங்கப்படவில்லை என்றும்<br><br>(ஆ) 1980 வேலை நிறுத்தத்தில் பங்குபற்றாத நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படாத பதவி உயர்வு ஒன்று 1980 வேலை நிறுத்தத்தில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் இடைநிலை இணைந்த தொழில்நுட்பவியலாளர் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் பிரகாரம் முடியாது என்றும்<br><br>(இ) 1977.05.01 ஆந் திகதி இந்த அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறையின் பிரகாரம் பணி மேற்பார்வையாளர் பதவிக்கு | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ளது. | உள்வாங்கும்போது, அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதியினுள் தகைமைகளை உடைய அனைத்து உத்தியோகத்தர்களையும் உள்வாங்குவதற்கு முடியாது போனமையால் அந்த உத்தியோகத்தர்களின் ஒரு பகுதியினரை இடைநிலை இணைந்த தொழில்நுட்பவியலாளர் சேவைக்கு புறம்பாக பணி மேற்பார்வையாளர் உத்தியோகத்தர்களாக தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுத்தியுள்ளதாகவும்<br><br>(ஈ) மனுதாரர் உட்பட இந்த உத்தியோகத்தர்கள் ஆரம்ப நிலையிலுள்ள உத்தியோகத்தர்கள் ஆவதோடு, அவர்கள் கோருகின்ற இடை நிலையிலுள்ள இணைந்த தொழில்நுட்பவியலாளர் சேவை இரண்டாம் நிலைக்குரியது ஆகையால், இந்த பதவி உயர்வுகள் தங்களது தரத்தின் சேவை மூப்பின் அடிப்படையில் உரித்தாக வேண்டிய தர நிலைப்படுத்தப்பட்ட பதவி உயர்வுகள் இல்லை என்பதோடு, இடை நிலையிலுள்ள இணைந்த தொழில்நுட்பவியலாளர் சேவையின் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் பிரகாரம் கிடைக்க வேண்டிய பதவி உயர்வு என்றும் இந்த உத்தியோகத்தர்களின் சேவைகளை மீண்டும் நிலை நிறுத்திய பின்னர் அ.நி.சு 32/89 (viii) பிரகாரம் ஊழியர் தரத்தில் சிறு நிர்வாக உத்தியோகத்தர் I தரத்திற்கு நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தினால் தரம் உயர்த்தப்பட்டிருப்பதாகவும் அதன் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பிரகாரம் மனுதாார் கோருவது பிறிதொரு சேவையின் பிறிதொரு தரம் என்றும்<br><br>(உ) மனுதாரர் உட்பட நபர்களின் கோரிக்கைத் தொடர்பில் நிறுவன பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்ட்ட அறிவுரைகளின் பிரகாரம் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம் அமைச்சரவை குறிப்பாணை ஒன்றின் வரைவொன்றைத் தயாரித்து 2016.04.06 ஆந் திகதி நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சின் செயலாளரக்கு சமர்ப்பித்திருப்பதாகவும் இது தொடர்பில் அமைச்சின் மேலதிக செயலாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) 2016.05.30 ஆந் திகதி நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டு இந்த கோரிக்கையை நிறைவேற்ற முடியாது என்று அவர்களுக்கு தெரிவித்திருப்பதாகவும்<br><br>(ஊ) ‘1980 யூலை வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டமையால், சேவை இடைநிறுத்தப்பட்டு மீண்டும் சேவை நிலை நிறுத்தப்பட்ட நபர்களுக்கு கிடைக்கவேண்டிய பதவி உயர்வுகள் கிடைக்காமையால், மனுதாரர் உட்பட மேலும் ஒன்பது நபர்கள் 2013.12.12 ஆந் திகதி அக்காலத்திலிருந்த நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் அமைச்சின் செயலாளருக்கு மேன்முறையீடு ஒன்றைச் சமர்ப்பித்திருப்பதாகவும்<br><br>(எ) மனுதாாரர், திரு.ஜீ.அமரதுங்க | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உள்ளிட்ட நபர்கள் ‘1980 யூலை வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டு மீண்டும் சேவையை நிலைநிறுத்திய பின்னர் கிடைக்கவேண்டிய பதவி உயர்வுகள் கிடைக்காமை’ தொடர்பில் பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடொன்றைச் சமர்ப்பித்திருப்பதாகவும் அம்மேன்முறையீடு, நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்தவ அமைச்சின் செயலாளரின் IWR/AD/MA10/ஜூலி வ.எ.இலக்கமுடையதும் 2018.01.23 மற்றும் 2018.08.15 ஆந் திகதிய அறிக்கைகள் உட்பட அனைத்து ஆவணங்களையும் பரிசீலித்து பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அம்மேன்முறையீடு 2019.10.16 ஆந் திகதி நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும்<br><br>(ஏ) 2000 ஆம் ஆண்டு சேவையிலிருந்து ஓய்வுபெற்ற மனுதாரரின் தனிப்பட்ட கோவை தற்போது அப்புறப்படுத்தப்பட்டுள்ளது என்றும்<br><br>(ஐ) 1964 ஆம் ஆண்டு பிரதான தொழில்நுட்பவியலாளராக கொலன்னாவையில் அரசாங்க கைத்தொழில் சாலையொன்றிற்கு தொழில் பயிற்சியொன்றின் பின்னர் சேவையில் இணைந்து கொண்டு 1976 ஆண்டு வரை சுமார் 12 வருடங்கள் கடமை ஆற்றியதாகவும், பின்னர் 1977 ஆம் ஆண்டு திணைக்களங்களை ஒன்றிணைத்தமையால் தான் இரத்மலானை நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு இடமாற்றத்தைப் பெற்றுக் கொண்டு பின்னர் அங்கு | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சேவையில் இணைப்புச் செய்யப்பட்டதாகவும் அவ்வாறு கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது 1980 ஆம் ஆண்டில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டமையால் சேவையை கைவிட்டுச் சென்றதாகக் கருதி நடவடிக்கைகளை முன்னெடுத்ததாகவும் பின்னர் 1994 ஆம் ஆண்டில் மீள சேவைக்கு அழைத்து எஞ்சிய காலப்பகுதியின் பின்னர் 2000 ஆம் ஆண்டு சேவையிலிருந்து ஓய்வு பெற்றதாகவும் அரசாங்க கைத்தொழில்சாலையில் 12 வருடங்களும் நீர்ப்பாசன திணைக்களத்தில் சுமார் 8 வருடங்களும் கடமையாற்றியதாகவும் அதன் பிரகாரம் சுமார் 20 வருடங்கள் அரசாங்க சேவையில் ஈடுபட்டதாகவும்<br><br>(ஒ) மனுதாரருக்கு ஊழியர் தரத்தில் சிறு நிர்வாக உத்தியோகத்தர் I ஆம் தரம் வரைக்கும் பதவி உயர்வுகளை வழங்கியிருப்பதாகவும் மனுதாரர் கோரியிருப்பது பிறிதொரு சேவையின் பிறிதொரு தரம் என்றும், அத்தரத்தை அவருக்கு வழங்குவதற்கான சட்ட ஏற்பாடுகள் இல்லை என்றும்,<br><br>(ஓ) மனுதாரர் குறித்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது நீர்ப்பாசன திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் அவருக்கு அநீதி இழைக்கும் வகையில் நடவடிக்கைகளை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மேற்கொள்ளவில்லை என்றும், | |
| 73 | திரு.ரஜீவ ஹெட்டிகே<br><br>COM/PP/2025/171<br><br>சமர்ப்பித்தவர்: கௌரவ அருண பனாகொட, பா.உ.<br><br>2025.11.26 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br><br>அமைச்சின் தொடர்பு இலக்கம்; MOI/AD/COMPP/09 /01-2025<br><br>திகதி: 2025.05.20 | நீர்ப்பாசனத் திணைக்களத்தில் கடமையாற்றிய மனுதாரர் அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் 14/2022 இன் பிரகாரம் வெளிநாடு செல்வதற்கு விண்ணப்பித்திருந்தாலும் விண்ணப்பத்தை சரியான நேரத்திற்கு அங்கீகரிப்பதற்கு நீர்ப்பாசன திணைக்களம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையால் வெளிநாடு செல்ல முடியாது போனதாகவும் தற்போது தொழிலையும் இழந்திருப்பதாகவும் அதனால், அநீதி இழைக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கும் மனுதாரர் மீண்டும் சேவையை நிலைநிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி இம்மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | (அ) மனுதாரர் வெளிநாட்டு விடுமுறையை விண்ணப்பித்த பின்னர் அவரது வெளிநாட்டு விடுமுறையை அங்கீகரிப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கணிசமான காலத்தை அதற்காக செலவிட்டிருப்பதாகவும் அதனால், மனுதாரருக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாகவும்<br><br>(ஆ) எவ்வாறிருப்பினும், தற்போது மனுதாரர் மீள சேவைக்கு அழைக்கப்பட்டிருப்பதனால் மனுதாரர் தனது மனுவில் கோரியிருந்த நிவாரணம் தற்போது அவருக்கு கிடைத்திருப்பதாகவும்<br><br>(இ)ஆகையால், மனுதாரர் குறிப்பிட்ட வகையில் அவருடைய சேவைமூப்பு மற்றும் ஓய்வூதியத்திற்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தால், அது தொடர்பில் நீரப்பாசன திணைக்களத்தின் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களை அறிவூட்டுவதற்கு அவருக்கு வாய்ப்பு இருப்பதாகவும், அதன் பிரகாரம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் குழு மனுதாரருக்கு ஆலோசனை வழங்கியது. | நிவாரணங்களை வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட வில்லை. |
| 74 | திரு.எம்.ஏ.தயானந்த COM/PP/2025/189<br><br>சமர்ப்பித்தவர்; கௌரவ தினிந்து சமன் ஹென்னாயக்க, | 1980.07.07 ஆந் திகதியிலிருந்து 28 வருடங்கள் எழுதுநராக கடமை ஆற்றியதாகவும் எழுதுநர் சேவையில் I ஆம் வகுப்பு | (அ) பதுளை மேல் நீதிமன்றத்தில் மனுதாரருக்கு எதிராக இருந்த வழக்கில் போலி ஆவணங்களைத் தயாரித்த குற்றத்திற்கு மனுதாரரை குற்றவாளியாக்கி 07 வருட கடூழிய சிறைத் தண்டனையும் ஒவ்வோர் குற்றச்சாட்டிற்கும் தண்டப்பணம் விதிக்கப்பட்டிருப்பதாகவும் அதன் | நிவாரணங்களை வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | பா.உ.<br><br>2025.11.26 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br><br>அமைச்சின் தொடர்பு இலக்கம்; DP/02/01/2005<br><br>திகதி: 2024.03.06 | வரையில் பதவி உயர்வு பெற்றதாகவும், இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் பதுளை பிரதேச நில அளவை காரியாலயத்தில் கடமையாற்றியிருந்த காலத்தில், அங்கு கடமை புரிந்த நபர்களின் தவறான செயற்பாடுகளை பொலிசாருக்கு அறிவித்தமையால், கோபமடைந்த தொழிலாளர்கள் மனுதாரரின் கடமை மேசையின் இழுப்பறையினுள் உத்தியோகபூர்வ முத்திரை மற்றும் ஆவணங்களை இட்டு குற்றவாளியாக்கியதாகவும், அத்தோடு சம்பந்தப்பட்ட வழக்கில் சிறைத்தண்டனை மற்றும் ஒவ்வோர் குற்றத்திற்காக தண்டப்பணம் விதிக்கப்பட்டதாகவும் அதன் மூலம் மனுதாரர் ஓய்வூதியத்தை இழந்ததாகவும் முறையான ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்ளாது செய்யாத | பிரகாரம் மனுதாரர் தொடர்பில் ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் கீழ் அரசாங்க நிர்வாக அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மனுதாரருக்கு ஓய்வூதியம் வழங்காது இருப்பதற்கு கட்டளை விதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க நிர்வாக , மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகம் பற்றிய அமைச்சின் செயலாளர் 2015.05.12 ஆந் திகதி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்திருந்ததாகவும் அதன் பிரகாரம் தாபனக் கோவையின் ஏற்புடைய ஏற்பாடுகளின் பிரகாரம் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்கள் மனுதாரரை வேலையிலிருந்து நீக்கியிருப்பதாகவும்<br><br>(ஆ) மனுதாரருக்கு பதுளை மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புத் தொடர்பில் அவர் திருப்தியடையவில்லை எனில், மனுதாரருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடொன்றைத் தாக்கல் செய்ய முடியுமாக இருந்தாலும் அவர் அந்த வாய்ப்பைப் பெறவில்லை என்றும்<br><br>(இ) மனுதாரர் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் அவருக்கு அநீதி இழைக்கப்படவில்லை என்றும் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குற்றத்திற்கு ஓய்வூதியம் இரத்துச் செய்யப்பட்டமையால் கடும் அசௌகரியங்களுக்கு ஆளாகி இருப்பதாகவும் தற்போது 70 வயதையும் கடந்திருப்பதாகவும் அது குறித்து கவனம் செலுத்தி ஓய்வூதியம் அல்லது அதன் ஏதேனும் வீதமொன்றைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரி மனுதாரரால் இம்மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | | |
| **வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு** | | | | |
| 75 | திரு.யூ.ஜீ.பீ.எம். உடலமத்த COM/PP/2025/297 <br> சமர்ப்பித்தவர்; கௌரவ ருவன் மாபலகம, பா.உ. <br> 2025.11.24ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. <br> அமைச்சின் தொடர்பு இலக்கம்; FA/A9/PAR/MSO/01 <br> திகதி: 2025.06.30. | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக 2022.01.13 ஆந் திகதியிலிருந்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சர்வதேச பாதுகாப்பு ஒத்துழைப்புப் பிரிவில் கடமையாற்றியதோடுஅ.நி.சு. 14/2022 இலக்கத்தின் பிரகாரம் பிரிவுத் தலைவரின் அனுமதியின் கீழ் 2023.02.16 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்களுக்கு உள்நாட்டு ஊதியமின்றிய விடுமுறைக்கு விண்ணப்பித்து, | (அ) 2022.06.22 ஆந் திகதி வெளியிடப்பட்ட 14/2022 அரசாங்க நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மனுதாரர் தனியார் துறையில் தொழிலில் ஈடுபடுவதற்கு 2023.02.16 ஆந் திகதியிலிருந்து 2028.02.16 ஆந் திகதி வரை 05 வருடங்களுக்கு உள்நாட்டு ஊதியமற்ற விடுமுறை வழங்குமாறு கோரி 2023.02.07 ஆந் திகதி விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்திருப்தோடு, முறையான அனுமதியைப் பெறாது 2023.02.16 ஆந் திகதியிலிருந்து சேவைக்கு அறிக்கையிடவில்லை என்றும் <br> (ஆ) அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் 14/2022 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் விடுமுறை வழங்குவதன் மூலம் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களின் பணிகளை முறையாகவும் வினைத்திறனாகவும் | நிவாரணங்களை வழங்குவதற்கு பரிந்துரைக்கப்படவில்லை. (எவ்வாறு இருப்பினும், மனுதாருக்கு(ஐ) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குமுறையைப் பின்பற்றி பகிரங்க சேவை ஆணைக்குழு பரிந்துரை ஒன்றை வழங்குவதற்கு மேற்படி தீர்மானம் எந்தவொரு பாதிப்பையும் ஏற்படுத்தாது என குழு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உள்நாட்டில் தனியார் துறையில் சேவையில் இணைந்து கொண்டதாகவும், 03 மாதங்களிற்குப் பின்னர் 05 வருட விடுமுறை விண்ணப்பத்தை சிபாரிசு செய்யவில்லை என அறிவித்ததாகவும் இருப்பினும் மீள சேவைக்கு அறிக்கையிடுமாறு 01 வருடமும் 08 மாதங்களும் கடந்து 2024.10.08 ஆந் திகதி அறிவித்ததாகவும், அதன் பிரகாரம் 2024.11.12 ஆந் திகதி சேவை வறிதாக்கல் அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டதாக வும் குறிப்பிடும் மனுதாரர் பிறப்பிக்கப்பட்டுள்ள சேவை வறிதாக்கல் அறிவித்தலை இரத்துச் செய்யுமாறும் 2023.02.16 ஆந் திகதியிலிருந்து இது வரையில் ஊதியமற்ற விடுமுறையை அனுமதித்து மீள சேவையை நிலைநிறுத்துமாறும் , அல்லது மேற்படி சுற்றுநிரூபத்தின் பிரகாரம் 05 வருட | கொண்டு நடாத்துவதற்கு தடையேதும் இல்லை என்று விடுமுறைகளை அனுமதிக்கும் அதிகாரி உறுதி செய்த பின்னர் மாத்திரம் விடுமுறைகளை அனுமதிக்க வேண்டும் என அதன் 04(க) பிரிவில் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் அதனையும் கவனத்திற் கொண்டு அமைச்சின் அனேகமான உத்தியோகத்தர்கள் மேற்படி சுற்றுநிரூபத்தின் பிரகாரம் வெளிநாடு செல்வதற்கு விண்ணப்பித்திருப்பதனால் உத்தியோகத்தர்களுக்கு அவ்வாறு விடுமுறைகளை வழங்கும்போது அமைச்சின் நாளாந்த பணிகளை முறையாகவும் வினைத்திறனாகவும் தொடர்ச்சியாகவும் தடையின்றி கொண்டு நடாத்துவதற்கு ஈடுபடுத்தக்கூடிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை போதுமானதல்ல என்பதால், 2022.12.30 ஆந் திகதிய உள்ளக குறிப்பாணையின் மூலம் சேவைமூப்பு மற்றும் ஓய்வூதியத்திற்கு பாதிப்பு ஏற்படாதவாறு விடுமுறைக்கு விண்ணப்பித்த உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களை ஏற்பதானது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருக்கின்றமை குறித்து உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டியிருப்பதாகவும்<br><br>(இ) மனுதாரின் விண்ணப்பத்தை சேவைமூப்பு மற்றும் ஓய்வூதியத்திற்கு பாதிப்பு ஏற்படாதவாறு அரச உத்தியோகத்தர்களுக்கு உள்நாட்டு/வெளிநாட்டு | தீர்மானித்தது.) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உள்நாட்டு ஊதியமற்ற விடுமுறைக்கு அனுமதிக்குமாறும் கோரி இம்மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஊதியமற்ற விடுமுறை வழங்குவது குறித்து நியமிக்கப்பட்ட குழுவிற்கு ஆற்றுப்படுத்தியதாகவும் அத்தருணத்தில் இந்த அமைச்சு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு விடுமுறைக்கு விண்ணப்பித்த உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களை ஏற்பதனை 2022.12.30 ஆந் திகதி வெளியிடப்பட்ட உள்ளக குறிப்பாணையின் பிரகாரம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தமையால் இந்த ஊதியமற்ற விடுமுறையை அக்குழு பரிந்துரைக்கவில்லை என்றும் அந்த பரிந்துரைகள் குறித்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் மனுதாரருக்கு எழுத்துமூலமாக 2023.05.04 ஆந் திகதி அறிவிக்கப்பட்டதாகவும்<br><br>(ஈ) 2024.02.12 ஆந் திகதி மனுதாரருக்கு இந்த ஊதியமற்ற விடுமுறையை வழங்குவது தொடர்பிலான விண்ணப்பத்தை மீள பரிசீலனைச் செய்வதற்கு உள்நாட்டு/ வெளிநாட்டு ஊதியமற்ற விடுமுறை வழங்குவது தொடர்பில் நியமிக்கப்பட்ட குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டதோடு, அதன்போதும் உத்தியோகத்தருக்கு ஊதியமற்ற விடுமுறையை வழங்குவது தொடர்பிலான தீர்மானத்தில் மாற்றம் ஏதும் இடம்பெறவில்லை என்றும் அது குறித்தும் மனுதாரருக்கு 2024.04.29 அறிவித்ததோடு, உத்தியோகத்தர் மீண்டும் 2024.07.05 ஆந் திகதி நிர்வாகப் பிரிவிற்கு மின்னஞ்சல் ஒன்றை அனுப்பி தனக்கு அந்த ஊதியமற்ற விடுமுறையை வழங்க | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | முடியாது எனில், 2023.02.16 ஆந் திகதியிலிருந்து தான் பதவி விலகுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கோரியுள்ளதாகவும்<br><br>(உ) அதன் பிரகாரம் மேலதிக செயலாளர் (நிர்வாகம்) இனது 2024.10.08 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் உத்தியோகத்தரை உடனடியாக சேவைக்கு அறிக்கையிடுமாறும் அவ்வாறு செய்யமுடியாது போனால் சேவை வறிதாக்கல் கட்டளையை ஆக்குவதற்கு நேரிடும் எனவும் அறிவிக்கப்பட்டிருப்பதோடு உத்தியோகத்தர் கடமைக்கு அறிக்கையிடாத காரணத்தினால் தாபனக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறைக்கைமுறை விதிகளின் பிரகாரம் உத்தியோகத்தர் 2023.02.16 ஆந் திகதியிலிருந்து முறையாக விடுமுறையை அங்கீகரித்துக் கொள்ளாது கடமைக்கு சமூகமளிக்காமையினால் அன்றிலிருந்து அமுலாகும் வகையில் உத்தியோகத்தருக்கு சேவை வறிதாக்கல் அறிவித்தல் 2024.11.12 ஆந் திகதி பிறப்பித்திருப்பதாகவும்<br><br>(ஊ) பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறை ஒழுங்கு விதியின் XIV அத்தியாயத்தின் 200 ஆம் பிரிவில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரச உத்தியோகத்தர் ஒருவர் இறந்த | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | காலத்திற்கு தாக்கம் செலுத்தும் வகையில் அரச சேவையிலிருந்து பதவி விலக முடியாது என்றும்<br><br>(எ) பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் XV அத்தியாயத்தின் 216 ஆவது பிரிவின் பிரகாரம் சேவை வறிதாக்கல் அறிவித்தல் பிறப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 03 மாதத்திற்குள் தான் கடமைக்கு சமூகமளிக்காதது குறித்து எழுத்துமூல விளக்கம் ஒன்றை அவரது ஒழுக்காற்று அதிகாரியான இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்து மீண்டும் சேவையை நிலை நிறுத்துவதற்கு மனுதாரருக்கு மேன்முறையீடு செய்ய முடியுமாக இருந்தாலும் அக்காலப்பகுதியினுள் சம்பந்தப்பட்ட மேன்முறையீட்டை மேற்கொண்டிருக்கவில்லை என்றும்<br><br>(ஏ) தான் 2021.02.16 ஆந் திகதி தனியார் துறையில் கடமைகளை பொறுப்பேற்றது சர்வதேச பாதுகாப்பு ஒத்துழைப்புப் பிரிவின் பணிப்பாளர் நாயகத்தின் 2023.02.07 ஆந் திகதிய அனுமதியின் கீழ் என்பதோடு, மீண்டும் அரச சேவையின் கடமைக்கு அறிக்கையிட முடியாது என அறிவித்து 2024.10.24 ஆந் திகதிய மேலதிக செயலாளருக்கு (நிர்வாகம்) கடிதத்தின் மூலம் அறிவித்ததாக மனுதாரர் முன்வைத்த விடயங்கள்<br><br>(ஐ) மனுதாரர் மீள சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு நியமன அதிகாரியான இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு மேன்முறையீ | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | டு செய்ய முடியும் என்றும் நேர வரம்பின் அடிப்படையில் இந்த மேன்முறையீடு நிராகரிக்கப்படுமிடத்து அதிலிருந்து 03 மாத காலப்பகுதிக்குள் மேன்முறையீட்டு அதிகாரியான இணைந்த சேவைகள் ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்த பின்னர் அதனை சரியான முறையில் பரிசீலித்து தீர்ப்பு வழங்க முடியுமென்றும்<br><br>(ஒ) மனுதாரர் முறையான வகையில் விடுமுறையை அங்கீகரித்துக் கொள்ளாது கடமைக்கு அறிக்கையிடவில்லை என்றும் 2024.10.28 திகதிய கடிதத்தின் மூலம் அவரை மீண்டும் சேவைக்கு அறிக்கையிடுமாறு அறிவித்திருந்தாலும் இச்சந்தர்ப்பம் வரையிலும் அவர் சேவைக்கு அறிக்கையிடவில்லை என்றும் | |
| **போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு** | | | | |
| 76 | திருமதி.சிறியாணி ஹெட்டிவத்தகே<br><br>COM/PP/2025/327<br><br>சமர்ப்பித்தவர்;<br>கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க, பா.உ.<br><br>2025.11.17 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br><br>அமைச்சின் தொடர்பு இலக்கம்;<br>MUDH/GA/PP/P3/P | 'துன்லியத்தை வயல்' எனும் காணி 2020.10.14 ஆந் திகதிய 2356 எனும் உறுதியின் மூலம் மனுதாரருக்கு அறுதி உறுதியாக அளிக்கப்பட்டிருப்ப தாகவும் இக்காணி எவ்வித அறிவித்தலுமின்றி மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தின் பேராதனை புதிய நகர அபிவிருத்திக்காக கையகப்படுத்தப்பட் | (அ) மனுதாரர் தன்னுடையது என்று கூறும் 'துன்லியத்தை வயல்' எனும் காணியின் சட்டரீதியாக உரித்து குறித்து இதுவரையில் ஆறு நபர்கள் தங்களது உரிமைகளை சமர்ப்பித்திருப்பதாகவும்<br><br>(ஆ) மேற்படி காணி 2008 ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கு அளிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அதன் உரிமை மனுதாரருக்கு சட்டரீதியாக அளிக்கப்பட்டிருக்கவில்லை எனவும்<br><br>(இ) மனுதாரரினால் குழுவில் முன்வைக்கப்பட்ட விடயங்களின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் | நிவாரணங்களை வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட வில்லை.<br><br>(மேற்படி காணியின் சட்டரீதியான உரித்து பற்றிய பிணக்கினைத் தீர்த்துக் கொள்வதற்கு நீதிமன்ற நடவடிக்கைகளுக் குச் செல்வது பொருத்தமானது என குழு மனுதாரருக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | PC-Vo1 III<br><br>திகதி: 2025.07.11. | டிருப்பதாகவும் அதனை நகர அபிவிருத்தி அதிகார சபை தடுத்து வைத்திருப்பதாகவும் அதனால் ஏற்பட்ட பாதிப்பினைக் கருத்திற்கொண்டு மேற்படி காணியை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி இம்மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அவருக்கு அக்காணி அளிக்கப்பட்டுள்ளதாகவும்<br><br>(ஈ) 'துன்லியத்தை வயல்' எனும் காணியின் சட்டரீதியான உரித்து இதில் எவருக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பது பற்றி நீதிமன்றத்தினால் தீர்வினைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் | அறிவுறுத்தப்பட்டுள்ளதோடு,<br>நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடையும் வரையில் இது குறித்து வேறு எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டாம் என<br>யட்டிநுவர பிரதேச செயலாளருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.) |

| | | | | |
|---|---|---|---|---|
| **3. ஒத்திவைக்கப்பட்ட மனுக்கள்** | | | | |
| **பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு** | | | | |
| 77 | திரு. ஜி.எச்.டி. ஜகத் பண்டித<br><br>COM/PP/2025/205<br><br>பாராளுமன்ற உறுப்பினர், கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>2025.10.09ஆம் திகதியன்று விசாரணை செய்யப்பட்டது.<br><br>அமைச்சுத் தொடர்பிலக்கம்: ES/DIR/J/9(II)<br><br>திகதி : | மனுதாரர், தான் தென்மாகாண அரசாங்க சேவையின் இலங்கை தொழில்நுட்ப சேவையில் ஓர் உத்தியோகத்தராகப் பணிபுரிந்து வருவதாகவும், 2020ஆம் ஆண்டில் இலங்கை பொறியியல் சேவையின் தரம் III மட்டுப்படுத்திய ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பித்து, 2021ஆம் ஆண்டில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய போதிலும் அப்பதவி தனக்குக் கிடைக்கவில்லை | (அ) மனுதாரர், இலங்கை பொறியியல் சேவையின் மூன்றாம் தரம் III உத்தியோகத்தர்களுக்கான ஆட்சேர்ப்புக்கான நேர்முகப் பரீட்சைகளுக்கு மூன்று முறை தோற்றியிருப்பதாகவும், தான் தென்மாகாணத்தில் பொறியியல் உதவியாளர் பதவியில் மிக அதிககூடிய காலம் பணியாற்றிய உத்தியோகத்தர் என்றும், 2020ஆம் ஆண்டில் சிவில் 7 (C7) வகுதியின்கீழ் மட்டுப்படுத்திய அடிப்படையில் நடைபெற்ற ஆட்சேர்ப்பின் போது 13 பதவி வெற்றிடங்களுக்கு ஐந்து (05) நியமனங்கள் வழங்கப்பட்ட போதிலும், தென்மாகாண சபைக்கு எந்தவொரு | இலங்கை தொழில்நுட்பச் சேவை உத்தியோகத்தர்கள், கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளராக இணை உறுப்பினர் ஆவதற்கான ஒரு முறைமையை இலங்கை கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர்கள் நிறுவகம் கொண்டுள்ளது என்றும், ஆயினும் அந்த முறைமை இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் இலங்கைப் பொறியியற் பேரவையின் பதிவாளர் தெரிவித்த கருத்து கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இலங்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2024.05.28 | என்றும், தான் தோற்றிய சிவில் வகுதியின்கீழ் தென்மாகாணத்திற்கு பதவிகள் வழங்கப்படவில்லை என்றும், 2205ஆம் இலக்க, 2020.12.04ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகைக்கு அமைய ஆட்சேர்ப்புக்கான அடிப்படைத் தகைமைகளாக 4.1.4, 4.1.6ஆகிய பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை தான் பூர்த்திசெய்திருப்பதாகவும் குறிப்பிட்டு இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். ஆகையால், இலங்கை பொறியியல் சேவையின் தரம் III இல் மட்டுப்படுத்திய அடிப்படையில் குறித்த நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று இந்த மனுவின் மூலம் மனுதாரர் கோரியுள்ளார். | நியமனமும் வழங்கப்படவில்லை என்றும், கூட்டிணைக்கப்பட்ட பொறியாளர்கள் நிறுவகத்தில் பதிவுசெய்வதற்காக விண்ணப்பித்திருந்த போதிலும் தனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டு மனுதாரர் சமர்ப்பித்துள்ள விடயங்கள்.<br><br>(ஆ) மனுதாரர், 2020ஆம் ஆண்டில் இலங்கை பொறியியல் சேவையின் தரம் III உத்தியோகத்தர் ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பம் கோரிய அறிவித்தலுக்கு அமைய தொகுதி 02இன் கீழ் விண்ணப்பித்துள்ள போதிலும், உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்காத காரணத்தால் அப்பதவிக்கு நியமிக்கப்படவில்லை என்றும், 2024 திசெம்பர் மாதத்தில் மேற்படி பதவிக்கு மீண்டும் ஒருமுறை விண்ணப்பித்திருந்த போதிலும், உரிய தகைமைகளை நிரூபிக்க இயலாத காரணத்தால் தனக்கு நியமனம் கிடைக்கவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளமை.<br><br>(இ) இலங்கை பொறியியல் சேவைப் பிரமாணக் குறிப்பின்படி, 2020.12.04 ஆம் திகதியிட்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விண்ணப்பம் கோரல் அறிவித்தலின்படி, மனுதாரர் பின்வரும் இரண்டு பிரிவுகளுக்கு | கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர்கள் நிறுவகத்தின் தவிசாளர் குழுவின் முன்னிலையில் அழைக்கப்பட்டு இந்த மனு குறித்து எதிர்காலத்தில் மீண்டும் விசாரணை செய்த பின்னர் விதப்புரைகள் வழங்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | விண்ணப்பித்துள்ளமை:<br><br>i) இலங்கை தொழில்நுட்ப சேவையில் 15 ஆண்டுகளுக்குக் குறையாமல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவராகப் பணியாற்றி, அதில் குறைந்தபட்சம் 05 ஆண்டுகள் அந்த சேவையில் தரம் I-க்கு பதவியுயர்வு பெற்று பணியாற்றிருத்தல் அத்துடன் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் நடத்தப்படும் அரசாங்க தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான மூன்றாவது பரீட்சையில் (1979 பிரமாணக்குறிப்பு) முழுமையாக சித்தியடைதல்.<br><br>ii) இலங்கை தொழில்நுட்ப சேவையில் 21 ஆண்டுகளுக்குக் குறையாமல் தொழில்நுட்ப உத்தியோகத்தரொருவராகப் பணியாற்றி, அதில் விசேட தரத்திற்கு பதவியுயர்வு பெற்றிருத்தல் அத்துடன் அந்த சேவையில் தரம் I இல் 05 ஆண்டுகள் பணியாற்றிருத்தல் அத்துடன் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் நடத்தப்படும் அரசாங்க தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது பரீட்சையில் (1979 பிரமாணக்குறிப்பு) முழுமையாக சித்தியடைதல்.<br><br>(ஈ) இல. 2233/27ஆம் இலக்க, 2021.06.23ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பொறியியல் சேவைப் பிரமாணக்குறிப்பின் திருத்த இல.07 இன்படி, இலங்கை பொறியியல் சேவையில் மட்டுப்படுத்திய அடிப்படையில் ஆட்சேர்ப்புச் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செய்வதற்குத் தேவையான தகைமைகளிலிருந்து, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் நடத்தப்படும் அரசாங்க தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற நிபந்தனை நீக்கப்பட்டு, 2017ஆம் ஆண்டின் 04ஆம் இலக்கச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை பொறியியற் பேரவையில் கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர் ஒருவராகப் பதிவுசெய்திருக்க வேண்டும் எனத் திருத்தப்பட்டுள்ளது. அதன்படி, இந்தத் திருத்தம் 2024ஆம் ஆண்டில் இலங்கை பொறியியல் சேவையின் தரம் III க்கான ஆட்சேர்ப்புக்கு ஏற்புடைத்தானதாக இருந்தது.<br><br>(உ) மனுதாரர், 2020 மற்றும் 2024ஆம் ஆண்டுகளில் இலங்கை பொறியியல் சேவையில் மட்டுப்படுத்திய அடிப்படையில் ஒரு பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான மேற்கூறிய அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்யாததால், அவருக்கு நியமனம் வழங்கப்படவில்லை.<br><br>(ஊ) 2020 ஆம் ஆண்டில், அவர் சிவில் 7 (சி7) இன் கீழ் மட்டுப்படுத்திய அடிப்படையிலான ஆட்சேர்ப்பின் போது 13 பதவி வெற்றிடங்களுக்கு ஐந்து(05) நியமனங்கள் வழங்கப்பட்டதாக மனுதாரர் தெரிவித்த போதிலும், குறித்த தகைமைகளைப் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பூர்த்திசெய்த உத்தியோகத்தர்கள் மட்டுமே ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள் என்பதும், ஐந்து உத்தியோகத்தர்கள் மட்டுமே குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளனர் என்பதும் காரணமாக அந்த ஐந்து(05) உத்தியோகத்தர்களும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளமை.<br><br>(எ) 2017ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க இலங்கை பொறியியற் பேரவைச் சட்டத்தின் 14(1) மற்றும் 14(2) ஆம் பிரிவுகளின்படி அத்தகைய பொறியியல் தொழிலர் எவரும் பிரிவு 15 அல்லது 18இன் கீழ் ஒரு பொறியியல் தொழிலராகப் பதிவுசெய்யப்பட்டாலொழிய, பொறியியல் உயர்தொழிலைப் புரிவதில் ஈடுபடுதலாகாது என்றும், மேற்கூறிய ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் பொறியியற் தொழிலர் தவறான்றைப் புரிந்தவராகக் கருதப்படுவார் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. அதன்படி, அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பொறியியல் சேவைப் பிரமாணக்குறிப்பிற்கு, திருத்த இல. 07 இன் கீழ் 2017ஆம் ஆண்டின் 04ஆம் இலக்கச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை பொறியியற் பேரவையில் ஒரு கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளராகப் பதிவுசெய்யப்பட்டு, இலங்கை தொழில்நுட்ப சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவராக 21 ஆண்டுகளுக்குக் குறையாத ஒரு காலப்பகுதிக்கு செயலூக்கமுடனும் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திருப்திரகமாகவும் பணியாற்றியுள்ள, அச்சேவையின் விசேட தரத்திற்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு இலங்கை பொறியியல் சேவைப் பதவியொன்றுக்காக மட்டுப்படுத்திய அடிப்படையில் நியமனமொன்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற திருத்தம் செய்யப்பட்டுள்ளமை.<br><br>(ஏ) கூட்டிணைக்கப்பட்ட ஒரு பொறியியலாளராகத் தகுதி பெறுவதற்கு, 2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க இலங்கை பொறியியற் பேரவைச் சட்டத்தின் “அ” அட்டவணையின் படி, 1992ஆம் ஆண்டின் 64ஆம் இலக்க இலங்கை எந்திரவியல் டிப்புளோமாதாரிகள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை பொறியியலாளர்களின் கூட்டிணைக்கப்பட்ட நிறுவகத்தின், கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர் ஒருவராக இருத்தல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் இருப்பினும், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் முதிர்ச்சியை (முதிர்ந்த வேட்பாளர் குழு) (Mature Candidate Group), மதிப்பிடுவதற்கும் அதற்கேற்ப கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளராக இணை உறுப்பினர் ஆவதற்கும் இலங்கை கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர்கள் நிறுவகம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஒரு முறையைக் கொண்டுள்ளது என்றும், ஆயினும் அந்த முறை இதுவரை செயற்படுத்தப்படவில்லை என்றும், ஆகையால் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், இலங்கை பொறியியற் பேரவை இந்த முறையைச் செயற்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர்கள் நிறுவகத்திற்கு (IIESL) கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.<br><br>(ஐ) 2303/04ஆம் இலக்க, 2022.10.25ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை பொறியியல் சேவைப் பிரமாணக்குறிப்பின் 08ஆம் திருத்தத்தின்படி, வர்த்தமானியில் இலங்கை பொறியியல் சேவைப் பிரமாணக்குறிப்பின் திருத்த இல. 08 இன்படி இலங்கை பொறியியல் சேவைப் பிரமாணக்குறிப்பின் 07ஆம் திருத்தம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 03 ஆண்டு காலத்திற்கு அதாவது 2024.06.23ஆம் திகதி வரை, 2017ஆம் ஆண்டின் 04ஆம் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை பொறியியற் பேரவையில் கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர் ஒருவராகப் பதிவு செய்யப்பட்டிருக்க | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வேண்டும் என்ற நிபந்தனையானது, மட்டுப்படுத்திய பிரிவின்கீழ் உத்தியோகத்தர்களை நியமிப்பதில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது என்றும், இருப்பினும், 2024.06.23ஆம் திகதி வரை ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள், அவ்வாறு ஆட்சேர்ப்புசெய்யப்பட்ட நாளிலிருந்து 03 ஆண்டுகளுக்குள் தொடர்புடைய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்றும், குறிப்பிட்ட காலத்திற்குள் அந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்களின் 03ஆம் சம்பள ஏற்றமானது, அந்த நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்படும் நாள் வரை இடைநிறுத்தி வைக்கப்படும் என்றும், மேற்கூறிய 03 ஆண்டு காலமானது, கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர் ஒருவராக தகுதியைப் பூர்த்திசெய்வதற்கு இந்தக் கால அவகாசம் சலுகைக் காலமாக வழங்கப்பட்டுள்ளமை.<br><br>(ஒ) பொறியியற் பணிகளில் முழுத் தகுதி பெற்ற பொறியியல் தொழிலர்களின் பங்களிப்பு இன்றியமையாததாக இருப்பினும், வேறு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பங்களிக்கக்கூடிய சில பணிகளும் உள்ளன. மேலும் பொறியியற் சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை பதவிகளுக்கு நியமிக்கும் போது இதுவும் கருத்திற்கொள்ளப்பட வேண்டும். | |
| 78 | திரு. ஏ. ஹெட்டிஆரச்சி<br>COM/PP/2025/433<br>பாராளுமன்ற உறுப்பினர், கௌரவ அசித நிரோஷன எகொட விதான அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>2025.10.23ஆம் திகதியன்று விசாரணை செய்யப்பட்டது. அமைச்சுத் தொடர்பிலக்கம்: CS/SLAS/PUB-PRT-COM<br>திகதி: 2019.02.25 | 1994ஆம் ஆண்டில் இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு II தரம் II திறமை அடிப்படையில் பதவியுயர்வு வழங்குவதற்காக நடத்தப்பட்ட பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில் 1999ஆம் ஆண்டில் செய்யப்பட்ட நியமனங்களில், விண்ணப்பதாரிகளின் முனைப்பான சேவைக்காலத்திற்கு, ஒப்புதலளிக்கப்பட்ட புள்ளிவழங்கும் நடைமுறையின்படியும் சட்டத்துறை தலைமையதிபதியின் அறிவுறுத்தல்களின்படியும் முதுமுறைக்கு (சேவை மூப்பு) புள்ளிகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆயினும், சில விண்ணப்பதாரிகளின் முற்றேதியிட்ட சேவைக்காலங்களுக்கு முதுமுறைக்கான புள்ளிகளைச் சேர்த்து நியமனங்களை வழங்கியதன் மூலம் | இந்த மனுதாரருடன் மனுக்களைத் தாக்கல்செய்திருந்த இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த மேலும் ஐந்து(05) மனுதாரர்கள் சார்பாக குழு விதப்புரைகளை வழங்கியது. | எழுதுநர் விசேட தர பதவியிலிருந்து ஓய்வுபெற்ற மனுதாரரின் மனு குறித்து எதிர்காலத்தில் மேலும் விசாரணை செய்யப்பட்டு இறுதி விதப்புரை வழங்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஏனைய விண்ணப்பதாரிகளுக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து விசாரித்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, அவ்வாறு வழங்கப்பட்ட நியமனங்களுக்குப் பதிலாக புதிய விதப்புரைகளைச் சமர்ப்பித்துள்ளது. சட்டத்துறை தலைமையதிபதியின் அறிவுறுத்தல்களின்படி பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு நிவாரணம் வழங்கவும் உத்தரவிட்டுள்ளது. அவ்வாறு வழங்கப்பட்ட முதுமுறைக்கான புள்ளிகள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட குழுவின் விதப்புரைகள், பொது நிர்வாக அமைச்சால் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த விதப்புரைகளின்படி செயலாற்ற அந்த ஆணைக்குழு மறுத்ததன் மூலம் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் ஓய்வூதிய நன்மைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு நியமனங்களுக்கு முற்றேதியிட நடவடிக்கை | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | | |
| **கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு** | | | | |
| 79<br><br>80<br><br>81 | திரு. ஈ.ஏ.டி.என். தம்மிக எதிரிசூரிய<br>COM/PP/2025/282<br>பாராளுமன்ற உறுப்பினர், கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>2025.11.11 ஆம் திகதியன்று விசாரணை செய்யப்பட்டது. அமைச்சுத் தொடர்பிலக்கம்: Agri/AD/E11/1/57<br>திகதி: 2025.06.13<br>-------------------------<br>திரு. ரி.எம்.எஸ். தென்னகோன்<br>COM/PP/2025/303<br>பாராளுமன்ற உறுப்பினர், கௌரவ காஞ்சன வெலிப்பிட்டிய அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டு | COM/PP/2025/282, 303, 407, 408 ஆகிய மனு இலக்கங்களைக் கொண்ட மனுதாரர்கள் பின்வரும் மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>தேசிய உரச் செயலகத்தில் பிரதி/உதவிப் பணிப்பாளர்களாகப் பணியாற்றிவரும் மனுதாரர்கள் உரிய சம்பள அளவுத்திட்டத்தில் நிறுவப்படவில்லை என்றும், அதன் காரணமாக பெரும் அநீதிக்குள்ளாகி இருப்பதாகவும் குறிப்பிட்டு, தேசிய உரச் செயலகத்தில் பணியாற்றும் பிரதி/உதவிப் பணிப்பாளர்களுக்கு 2006ஆம் ஆண்டு முதல் MM சம்பளப் படிநிலையை வழங்கி, அதற்குரிய சிறப்புரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று கோரி மனுதாரர்கள் இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | COM/PP/2025/282, 303,407, 408 ஆகிய மனு இலக்கங்கள் மீது குழுவால் பின்வரும் அவதானிப்புகள் செய்யப்பட்டுள்ளன.<br><br>(அ) கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை 2002.12.31ஆம் திகதி ஒழிவுக்கு உட்படுத்தப்பட்ட போது, கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தித்திறன் உத்தியோகத்தர் பதவியில் பணியாற்றிவந்த 69 உத்தியோகத்தர்கள் இழப்பீட்டைப் பெற மறுத்து மற்றுமோர் அரச நிறுவனத்தில் தங்களை இணைக்குமாறு கோரியதாகவும், நிதி அமைச்சுக்கும் கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் அமைச்சின் செயலாளருக்கும் இடையில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டின் படி, கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் அவர்கள் பெற்ற சம்பளங்கள் மற்றும் படிகளுடன் சீராக்கம் செய்து, கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் அமைச்சுடன் இணைக்கப்பட்ட பொருத்தமான இடங்களில் அவர்களை இணைப்பதற்காக எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் அவர்கள் தேசிய உரச் செயலகத்தில் இணைக்கப்பட்டதாகவும் மனுதாரர்கள் முன்வைத்த விடயங்கள். | COM/PP/2025/282, 303, 407 மற்றும் 408 ஆகிய மனு இலக்கங்கள் தொடர்பாக, குழு பின்வரும் பரிந்துரையை வழங்கியுள்ளது.<br><br>அன்றைய மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர், முகாமைத்துவ சேவைகள் திணைக்களகத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் ஆலோசனை கோரி அனுப்பிவைத்த 2019.12.20ஆம் திகதிய கடிதத்திற்குரிய பதில் இதுவரை கிடைக்கப்பெறாமையால், சம்பந்தப்பட்ட கடிதத்தை மீண்டும் அனுப்புமாறு பரிந்துரைக்கப்படுகிறது.<br><br>மேலும், அனைத்துத் தரப்பினரும் இந்த மனுக்களை மேலும் ஆராய்ந்து தமது |

| | | | | |
|---|---|---|---|---|
| 82 | ள்ளது.<br><br>2025.11.11 ஆம் திகதியன்று விசாரணை செய்யப்பட்டது.<br><br>அமைச்சுத் தொடர்பிலக்கம்: Agri/AD/E11/1/58<br><br>திகதி: 2025.07.15<br><br>திரு. டி.எஸ். திசாநாயக்க COM/PP/2025/407 பாராளுமன்ற உறுப்பினர், கௌரவ அஜித் அகலகட அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>2025.11.11ஆம் திகதியன்று விசாரணை செய்யப்பட்டது.<br><br>அமைச்சுத் தொடர்பிலக்கம்: Agri/AD/E11/1/59<br><br>திகதி: 2025.07.31<br><br>திரு. எஸ்.எம்.யூ.பி. ரத்னசிங்க<br><br>COM/PP/2025/408 | | (ஆ) கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை ஒழிவுக்குட்படுத்தப்பட்ட போது அவர்கள் பெற்றுவந்த T-5-7 சம்பள அளவுத்திட்டத்திற்கு இணையாக 21, 25 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைகளின் அடிப்படையில் சரியான சம்பள வகுதியில் நிறுவப்பட்டனர் என்பதும் திறைசேரியின் செயலாளர், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் ஆகியோரால் வெளியிடப்பட்ட கூட்டுத்தாபனங்களினதும் நியதிச்சட்ட சபைகளினதும் முழுவதும் அரசுடைமையான கம்பனிகளினதும் ஊழியர் சம்பளத் திருத்தம் - 2006 என்ற தலைப்பில் 2006.09.22ஆம் திகதி வெளியிடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 30 இற்கு அமைய மேற்கொள்ளப்பட்ட புதிய சம்பளப் பரிவர்த்தனையின் மூலம் அவர்கள் JM 08 என்ற சம்பள வகுதியில் நிறுவப்பட்டதன் காரணமாக சம்பளப் பிரிப்புகளுக்கு வழிவகுத்தது என்பதும், அதன்படி அவர்களின் நிறைவேற்று சேவை வகுதி தரமிறக்கப்பட்டது என்பதும் மனுதாரர்களால் முன்வைக்கப்பட்ட விடயங்களாகும்.<br><br>(இ) மனுதாரர்கள், தங்களோடு | கருத்துக்களை முன்வைக்க ஏதுவாக, மேலதிக விசாரணைக்குப் பிறகு எதிர்காலத்தில் இறுதிப் பரிந்துரை வழங்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பாராளுமன்ற உறுப்பினர், கௌரவ அஜித் அகலகட அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>2025.11.11ஆம் திகதியன்று விசாரணை செய்யப்பட்டது.<br><br>அமைச்சுத் தொடர்பிலக்கம்: Agri/AD/E11/1/60<br><br>திகதி: 2025.07.31 | | சமமான நிலையிலுள்ள ஏனைய நியதிச்சட்ட நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள MM-1 சம்பள வகுதியில் நிறுவுமாறு, 2007.01.26ஆம் திகதிய கடிதத்தின் மூலம் தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக மனுதாரர்களால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(ஈ) மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட 2085/04 ஆம் இலக்க வழக்கை 2008.01.07ஆம் திகதி தள்ளுபடிசெய்ய முடிவுசெய்யப்பட்டுள்ளதால், அந்த உத்தியோகத்தர்களுக்கு முன்மொழியப்பட்ட சம்பள அளவுத்திட்டத்தை தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைத்து, அதன் விதப்புரையை தனக்குக் கிடைக்க ஆவண செய்யுமாறும், அதுவரையில் முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகம், தனது 2008.03.18ஆம் திகதிய கடிதத்தில் கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைத்த, தனது 2007.08.10ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தவாறு MA-5-3 இன்படி 03 சம்பளப் படிநிலையில் இந்த உத்தியோகத்தர்களை நிறுவ முடியும் எனத் தெரிவித்திருந்தார் என்றும், ஆயினும் அமைச்சு அது | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | குறித்து இதுவரை பதில் அனுப்பவில்லை என்றும் மனுதாரர்களால் முன்வைக்கப்பட்ட விடயங்கள். | |
| | | | (உ) கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தித்திறன் உத்தியோகத்தர் பதவி வகித்த 69 உத்தியோகத்தர்களுக்கு MA-5-3 சம்பள அளவுத்திட்டம் அனுமதிக்கப்பட்டுள்ளதைக் கருத்திற்கொண்டு, தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் செயலாளர், இந்த உத்தியோகத்தர்களைப் பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல.06/2006 இன் சம்பள அளவுத்திட்டத்தின் தரம் III இன் கீழ் ஒத்திசைவான சம்பளப் படிநிலைகளுக்கு உள்ளீர்ப்புச் செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டு அனுப்பிவைத்த 2010.03.23ஆம் திகதிய கடிதத்தின் மூலம் விதந்துரைக்கப்பட்டுள்ளது என்றும், அந்த விதப்புரைகளின்படி செயலாற்றுமாறு முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளதாகவும் மனுதாரர்களால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்<br><br>(ஊ) 2011.04.27 ஆம் திகதிய அமைச்சரவை முடிவின்படி, கமத்தொழில் அமைச்சர் மற்றும் கமநல சேவைகள் மற்றும் வனசீவராசிகள் அமைச்சர் ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்ட 'ஒழிவுக்குட்படுத்தப்பட்ட | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து இந்த அமைச்சுக்கு இணைக்கப்பட்டிருந்த கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தித்திறன் உத்தியோகத்தர்களைப் பொதுச் சேவையில் உள்ளீர்த்தல்' என்ற தலைப்பிலான அமைச்சரவைப் பத்திரம் தொடர்பாக, 69 கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தித்திறன் உத்தியோகத்தர்களுக்கு தனிப்பிட்ட ரீதியில் 69 உதவிப் பணிப்பாளர் பதவிகளை உருவாக்கி, அவர்கள் கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் அனுபவித்த அதே சேவை நிபந்தனைகளின் கீழ் அப்பதவிகளில் அவர்களை நியமிக்க ஒப்புதலளிக்கப்பட்டுள்ளதாக மனுதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(எ) கமத்தொழில் அமைச்சர், "தேசிய உரச் செயலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள உதவிப் பணிப்பாளர்களுக்கு ஓய்வூதிய அந்தஸ்து வழங்குதல்" என்ற தலைப்பில் ஒரு அமைச்சரவைப் பத்திரத்தை மீண்டும் சமர்ப்பித்ததாகவும், 2015.04.29ஆம் திகதிய அமைச்சரவை முடிவு I (iv)-இன் படி, 2015.01.01ஆம் திகதி முதல் அவர்கள் தற்போது பெற்றுவரும் சம்பளத்திற்கு இணையான SL 1 - 2006 சம்பள அளவுத்திட்டத்தின் உரிய சம்பளப் படிநிலையில் அவர்களை வைப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதாகவும், | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மேலும், அமைச்சரவை முடிவின் II (i) (அ) இன் பிரகாரம் 2003.01.01ஆம் திகதிக்குப் பின்னர் முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் விதித்துரைக்கப்பட்ட சம்பள அளவுத்திட்டத்தின்படி உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் சரியாக பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளன என்பதை உறுதிசெய்து கொண்ட பின்னர், SL 1 - 2006 சம்பள அளவுத்திட்டத்தின் உரிய சம்பளப் படிநிலையை வழங்க வேண்டுமென்று கமத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக மனுதாரர்களால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(ஏ) கமத்தொழில் அமைச்சின் சிரேட்ட உதவிச் செயலாளர், ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம், தாபனப் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் அடங்கிய ஓர் அமைச்சரவை உபகுழு விசாரணைக்காக நியமிக்கப்பட்டதாகவும், உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் சிதறடிக்கப்பட்டிருப்பதை அந்த உபகுழு கண்டறிந்ததாகவும், 2015.04.29ஆம் திகதிய அமைச்சரவை முடிவின் பிரிவு II (அ) பிரிவிற்கு அமைய மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று அந்த உபகுழு பரிந்துரைகளை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வழங்கியதாகவும் மனுதாரர்களால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(ஐ) தங்கள் உத்தியோகத்தர்கள் குழுவைச் சேர்ந்த மூன்று மூத்த உத்தியோகத்தர்கள் பொது மனுக்கள் மீதான குழுவிடம் சமர்ப்பித்த மனுவை விசாரித்த பின்னர் மேற்படி குழு வழங்கிய பரிந்துரையைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட மூன்று உத்தியோகத்தர்கள் மட்டுமே 2006.01.01ஆம் திகதி முதல் MM-1 சம்பள வகுதியில் நிறுவப்பட்டு நிறைவேற்றுநர் மட்டத்திலுள்ள சிறப்புரிமைகள் வழங்கப்பட்டதாகவும், மேலும் அமைச்சரவையின் முடிவு அனைத்து 69 உதவிப் பணிப்பாளர்களுக்கும் செயல்வலுப்பெறுமாறு வழங்கப்பட்டதால், அதே உத்தியோகத்தர்கள் சமமற்ற முறையில் நடத்தப்பட்டதாகவும் மனுதாரர்களால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(ஒ) 2006.01.01 ஆம் திகதி முதல் நிறுவப்பட வேண்டிய MM-1 சம்பள வகுதி, தமக்கு 2012 ஆம் ஆண்டிலேயே வழங்கப்பட்டது என்றும், 2006.01.01 முதல் தமது சம்பளம் துண்டு துண்டாகப் பிரிக்கப்பட்டதன் காரணமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தவாறு தமக்கு நிறைவேற்றுநர் அந்தஸ்து கிடைக்கப் பெறவில்லை; மேலும், தரம் I-க்கான தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்திருந்த | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | போதிலும், தமக்குக் கிடைக்க வேண்டிய பதவி உயர்வுகள் இழக்கப்பட்டன என்றும், கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் 25 ஆண்டு கால சேவையுடன் தாம் அனுபவித்து வந்த சேவை நிபந்தனைகள் மீறப்பட்டு, தமது சேவை நிபந்தனைகள் மீறப்பட்டு தமது சிறப்புரிமைகள் இழக்கப்பட்டுள்ளதாக மனுதாரர்களால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(ஓ) ஒழிவுக்கு உட்படுத்தப்பட்ட கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் T-5-7 வகுதிக்கு உரிய படிநிலையை அனுபவித்துவந்த கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தித்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பொதுச் சேவைக்கு உள்ளீர்க்கும் போது, தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழு, அவர்களின் தகுதிகள், பொறுப்புகள் மற்றும் பணிகளைக் கருத்திற் கொண்டு, பொதுநிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 இன்படி பொதுச் சேவையில் தற்போதுள்ள சம்பள அளவுத்திட்டத்திற்கு இணையாக JM-8 சம்பள வகுதியைப் பரிந்துரைத்தது என்றும், நிறைவேற்றுநர் தரத்தில் பணியாற்றி வந்த இந்த உத்தியோகத்தர்கள் குழு, அதற்கு உயர் சம்பள அளவுத்திட்டத்தைக் கோரி மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஒரு வழக்கைத் தாக்கல் செய்தது என்றும், அதனைத் தொடர்ந்து, ஓர் இடைக்காலத் தீர்வாக, M A-5-3 என்ற உயர் சம்பளப் படிநிலை நிறுவப்படலாம் என்றும் முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.<br><br>(ஔ) 2011.04.27ஆம் திகதிய அமைச்சரவை முடிவுப்படி, இந்த உத்தியோகத்தர்களுக்காக உதவிப் பணிப்பாளர் பதவிகள் உருவாக்கப்பட்டு, அவர்கள் MA-5-3 இற்குரிய சம்ப வகுதியில் நிறுவப்பட்டுள்ளனர் என்றும், 2015.04.29 ஆம் திகதிய அமைச்சரவை முடிவுப்படி, S L -1-2006 சம்பள அளவுத்திட்டத்தின் தரம் III இற்குரிய இணையான சம்பளம் 2015.01.01ஆம் திகதி முதல் வழங்கப்பட்டுள்ளது. | |
| | | | (க) தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழு, இந்த உத்தியோகத்தர்களுக்கு இடைநிலை முகாமைத்துவ மட்டத்தில் MM-1 சம்பள வகுதி வழங்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது. மேலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம், 2012.08.14 ஆம் திகதிய கடிதத்தின் மூலம், 12 ஆண்டுகள் செயலூக்கமுடன் பணியாற்றிய உத்தியோகத்தர்கள் MM-1-1 சம்பள வகுதியில் நிறுவப்பட வேண்டும் என்றும், இந்தப் பரிந்துரை அனைத்து 69 உத்தியோகத்தர்களுக்கும் பொருந்தும் என்றும் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பரிந்துரைத்தது.<br><br>(ங) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2015.06.08ஆம் திகதிய கடிதத்தின் மூலம், இந்த உத்தியோகத்தர்கள் அனைவரையும் 2006.01.01ஆம் திகதியில் இருந்து அமுலுக்குவருமாறு MM-1-1 சம்பள வகுதியில் நிறுவ மீண்டும் பரிந்துரைகளை வழங்கியுள்ளார் என்பதும், 2015.07.13 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் கமத்தொழில் உற்பத்தித்திறன் உத்தியோகத்தர் பதவியில் 12 ஆண்டுகள் செயலூக்கமுள்ள சேவையைப் பூர்த்திசெய்த உத்தியோகத்தர்கள், மேற்கூறிய 2012.08.14ஆம் திகதிய கடிதத்திற்கு இணங்க MM-1-1 சம்பள வகுதியில் நிறுவப்பட வேண்டும் என்பதும்.<br><br>(ச) இந்த 69 உத்தியோகத்தர்களும் ஒரே சேவை வகுதியைச் சேர்ந்தவர்களாக இருந்த போதிலும், சேவைக்காலம் அதிகமாக இருத்தல் மற்றும் உழைத்த சம்பள ஏற்றத்தின் பேரில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பரிந்துரையின்படி, 12 ஆண்டு செயலூக்கமுள்ள சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்து, உயர் சம்பளம் பெற்றுவந்த மூன்று உத்தியோகத்தர்கள் மட்டும் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 2006.01.01ஆம் திகதி முதல் MM-1-1 சம்பள வகுதியிலும், 2006.01.01 அன்றுள்ளவாறு 12 ஆண்டு செயலூக்கமுள்ள சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்கள் M A - 5-3 சம்பள வகுதியிலும் நிறுவப்பட்டுள்ளனர்.<br><br>(ஞ) இந்த உத்தியோகத்தர்களின் நிறைவேற்று அந்தஸ்து சிதறல் பிரச்சினையை நீக்குவதற்காக, 2006.01.01ஆம் திகதி முதல் MM-1-1 சம்பள அளவுத்திட்டத்தில் நிறுவுவதற்கான சாத்தியக்கூறு குறித்து ஆலோசனை கோரி மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு 2019.12.20ஆம் திகதிய கடிதம் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளார் என்பதும், 5 ஆண்டுகள் கடந்த பின்னரும், இதுவரை எந்த பதிலும் கிடைக்கப் பெறவில்லை என்பதும். | |
| **போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு** | | | | |
| 83 | திரு. எம். ஹரிப்ரிய ரோஹண<br><br>COM/PP/2025/291<br><br>பாராளுமன்ற | தங்காளை டிப்போ களஞ்சியக் காப்பாளராகப் பணியாற்றி வரும்போது, கிளட்ச் ஃபின்கல் கிட் ஒன்றை மோசடியான | (அ) மனுதாரர், இலங்கை போக்குவரத்துச் சபையின் கெஸ்பேவ டிப்போவில் 1995.01.23 ஆம் திகதியில் இருந்து ஒப்பந்த அடிப்படையில் பொறிவலராகப் பணியில் சேர்ந்தார் என்றும், 1997ஆம் | மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட பின் அட்டை மற்றும் ரசீதுகளை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர |

| | | | | |
|---|---|---|---|---|
| | உறுப்பினர், கௌரவ அஜந்த கம்மெத்தகே அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>2025.11.11 ஆம் திகதியன்று விசாரணை செய்யப்பட்டது.<br><br>அமைச்சுத் தொடர்பிலக்கம்: MT/01/07/PP/26<br><br>திகதி: 2024.04.01 | முறையில் அதிக விலைக்கு வாங்கி, தவறான விலைமதிப்பீட்டுடன் விலைப்பட்டிகளைச் சமர்ப்பித்த குற்றச்சாட்டின் பேரில் நடத்தப்பட்ட ஒழுக்காற்று விசாரணையைத் தொடர்ந்து தான் பணிநீக்கம் செய்யப்பட்டதாகவும், இது தொடர்பாக எழுத்திலான சாட்சியங்களைச் சமர்ப்பிக்க வாய்ப்பு மறுக்கப்பட்டதாகவும் கூறும் மனுதாரர், தன்னை மீளப் பணியில் அமர்த்துமாறும், 2013.09.09ஆம் திகதி முதல் பணியில் அமர்த்தப்பட்ட திகதி வரையிலான நிலுவைச் சம்பளம், சம்பள ஏற்றங்கள், உரிய பதவியுயர்வுகள் ஆகியவற்றை வழங்குமாறும் கோரி இந்த மனுவைச சமரபபததுளளார. | ஆண்டில் ஏற்பட்ட ஒரு வாகன விபத்து காரணமாக உபகரணங்கள் விநியோகத்தராகப் பணியாற்றினார் என்றும், 1999ஆம் ஆண்டில் களஞ்சியக் காப்பாளராக நியமிக்கப்பட்டு, கெஸ்பேவ, கட்டுபெத்த, தங்காளை ஆகிய 3 டிப்போக்களில் 14 ஆண்டுகள் களஞ்சியக் காப்பாளராகப் பணியாற்றினார் என்றும் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்கள்.<br><br>(ஆ) இறுதியாக தங்காளை டிப்போவில் களஞ்சியக் காப்பாளராகப் பணிபுரிந்த போது, கிளட்ச் ஃபிங்கல் கிட் ஒன்றைக் கொள்வனவு செய்தது மற்றும் தவறான விலைமதிப்புடன் விலைப்பட்டிகளைச் சமர்ப்பித்தது ஆகிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் 2013.07.31 அன்று பணித்தடை விதிக்கப்பட்டது என்றும், ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட்ட பின்னர் 2014.04.27 அன்று முதல் அவர் பணிநீக்கம் செய்யப்பட்டார் என்றும் மனுதாரரால் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள்.<br><br>(இ) தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின்படி, ஓர் அரச ஊழியரின் பிறழ்நடத்தை கண்டுபிடிக்கப்பட்டவுடன், ஓர் | அபிவிருத்தி அமைச்சு உண்மையான ஆவணங்கள் எனச் சான்றளித்து அவற்றை அக்குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்றும், மனுதாரர் தொடர்பான ஒரு சேவை அறிக்கையை அக்குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்றும்,<br><br>மேலும், தொழிலாளர் தீர்ப்பாயத்தில் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பின் அட்டையைச் சான்றாகக் கோரி இலங்கை போக்குவரத்துச் சபையிடம் மனுதாரர் கோரிய எழுத்துப்பூர்வ ஆவணங்களை அக்குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு மனுதாரருக்கு அறிவுறுத்த வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது. இறுதிப் பரிந்துரையானது பிற்காலத்தில் மறுபரிசீலனைக்குப் பின்னர் வெளியிடப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஆரம்ப ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றபோதிலும், அவ்வாறு செய்யாமல் அவருக்கு பணித்தடை விதிக்கப்பட்டுள்ளது. ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட்டு அவரது சேவை முடிவுறுத்தப்பட்டுள்ளது என்றும், அதன்படி, நிறுவனம் ஒழுக்காற்று நடவடிக்கைமுறையின் பிரிவு 48 க்கு முரணாக செயற்பட்டுள்ளததாக மனுதாரரால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(ஈ) தனது மேற்பார்வை அதிகாரியின் ஒழுக்காற்று விசாரணையின் போது, தான் கொள்வனவு செய்ததாகக் கூறப்படும் பொருட்களுக்காக அவை கொள்வனவுசெய்யப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்பட்ட விலைப்பட்டிகளின் அத்தாட்சிப்படுத்திய பிரதிகளைக் கோரிய போதிலும் தனக்கு வழங்கப்படவில்லையாதலால், தனக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கத் தேவையான ஆதாரங்களைச் சமர்ப்பிக்க இயலவில்லை என மனுதாரரால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(உ) இலங்கை போக்குவரத்துச் சபை நியாயமான மற்றும் தகுந்த காரணமின்றித் தன்னைப் பணிநீக்கம் செய்ததாக குற்றஞ்சாட்டி, 2014.06.04 ஆம் திகதியன்று மாத்தறை தொழில் நியாயசபையில் தான் ஒரு முறைப்பாட்டைத் தாக்கல் செய்த பின்னர், அந்த முறைப்பாட்டை விசாரித்த | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | போது, இலங்கை போக்குவரத்துச் சபையால் பராமரிக்கப்படும் Bin Card எனும் அட்டையின் பிரதியொன்றை தான் கோரியிருந்த போதிலும், அது தனக்கு வழங்கப்படாமையால், தனது குற்றமற்ற தன்மையை நிரூபிப்பதற்கான வாய்ப்பு தனக்கு மறுக்கப்பட்டு, தனக்குப் பாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டதால் தான கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக மனுதாரரால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(ஊ) பின்னைய நாட்களில் தனது காப்பு உத்தியோகத்தர் அந்த நிறுவனத்திடமிருந்து Bin Card பத்திரத்தின் அத்தாட்சிப்படுத்திய பிரதியைப் பெற்றார் என்றும், அதனைப் பரீட்சித்த போது தன்னால் ரூ.3,500/-க்கு கொள்வனவு செய்யப்பட்ட அதே கிளட்ச் ஃபின்கல் தொகுதியை வேறு உத்தியோகத்தர்கள் 6 முறை ரூ.3,950/-க்கு கொள்வனவு செய்திருப்பதாக Bin Card பத்திரத்தில் குறிப்பிடப்படுகிறது என்றும், அந்த உத்தியோகத்தர்கள் மீது நிறுவனம் எந்தவோர் ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கவில்லையென்பது தெரியவந்தது என்றும் மனுதாரரால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(எ) தன்னால் கொள்வனவு செய்யப்பட்ட கிளட்ச் ஃபின்கல் கிட் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டி ஒரு போலியான விலைப்பட்டி | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | என்பதை உறுதிசெய்வதற்கு இலங்கை போக்குவரத்துச் சபை உரிய முறையில் விசாரணை நடத்தியிருக்கவில்லை என்று மனுதாரரால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்.<br><br>(ஏ) தொழில் நியாய சபையால் மனுதாரர் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர், மேல்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்ய மனுதாரருக்கு வாய்ப்பு இருந்தும், அவர் அவ்வாறு செய்யவில்லை.<br><br>(ஐ) விசாரணைக்காகக் கைப்பற்றப்பட்ட அனைத்து ஆவணங்களும் விசாரணைக் கோப்பில் உள்ளன என்பதும், இந்த ஊழியர் மீதான விசாரணையை நடத்திய விசாரணை அதிகாரி தற்போது பிரதிப் பொது முகாமையாளர் (பயிற்சி) பதவியில் பணியாற்றி வருகிறார் என்பதும், மேலும் எதிர்காலத்தில் ஒரு குழுவிற்கு அவர் அழைக்கப்பட வாய்ப்புள்ளது என்பதும்.<br><br>(ஒ) மனுதாரர் தரப்பு, சாட்சிகளுக்காக எதிர்வாதி தரப்பான இலங்கை போக்குவரத்துச் சபையிடமிருந்து ஏதேனும் ஆவணத்தைப் பெற்று தொழில் நியாய சபையில் சமர்ப்பிக்க வேண்டியிருந்திருந்தால், தேவையான அத்தகைய ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு மனுவின் மூலம் உத்தரவிட வாய்ப்பிருந்தும் மனுதாரர் தரப்பு அவ்வாறு செய்யவில்லை.<br><br>(ஓ) மனுதாரர் களஞ்சியக் காப்பாளர் பதவிக்கு முறைப்படி நியமிக்கப்பட்டுள்ளார் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | என்பதும், மனுதாரர் கெஸ்பேவ, கட்டுபெத்த, தங்காளை ஆகிய 3 டிப்போக்களிலும்14 ஆண்டுகளாகப் களஞ்சியக் காப்பாளர் பதவியில் பணியாற்றியுள்ளார் என்பதும்,<br>அந்த சேவைக் காலத்தில், மேற்கூறிய பிறழ்நடத்தை தவிர ஒரு பிறழ்நடத்தையை மேற்கொண்டு அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்பதுமாகும்.<br><br>(ஔ) தொழில் நியாயசபையில் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த பின்னர் வழங்கப்பட்ட தீர்ப்பு பின்வருமாறு: “எதிர்வாதி தரப்பால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து விடயங்கள் தொடர்பாகவும், மனுதாரரின் பிறழ்நடத்தை சாட்சியங்களின் பெரும்பான்மையின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று முடிபு செய்கின்றேன். மேலும், சொல்லப்பட்ட பிறழ்நடத்தையின் அடிப்படையில் மனுதாரர் பணிநீக்கம் செய்யப்பட்டது நியாயமான மற்றும் நேர்மையான அடிப்படையில் செய்யப்பட்டது என்றும் நான் முடிவு செய்கின்றேன்.’’<br>அதன்படி, மனுதாரரின் மனு செலவுகள் இன்றி தள்ளுபடி செய்யப்படுகிறது.<br><br>(க) தொழில் நியாயசபை வழக்கு விசாரணையின் போது மனுதாரரால் சாட்சியங்களைச் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சமர்ப்பிக்க இயலாததால், தொழில் நியாயசபை வழங்கிய தீர்ப்பு மனுதாரருக்கு பாதகமான முறையில் வெளியிடப்பட்டுள்ளது.<br><br>(ங) முறைசார்ந்த அடிப்படை இன்றி மனுதாரரின் வேலையைப் பறித்தது அரசியல் பழிவாங்கலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு விடயம் என்று மனுதாரர் தரப்பு முன்வைத்த உண்மைகளை ஏற்றுக்கொள்ளும் நிலையில் குழு இல்லை. | |
| **கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு** | | | | |
| 84 | ஜே. எம். சேனாதீர COM/PP/2025/275 கௌரவ கே.வி. சமந்த வித்யாரத்ன, பா.உ., இனால் முன்வைக்கப்பட்டுள்ளது. 2025.11.13ஆந் திகதி விசாரணை செய்யப்பட்டது. அமைச்சுத் தொடர்பு இலக்கம் : ED/4/58/1/5/173/71<br><br>திகதி : 2025.05.14 | இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு 2007ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்த மனுதாரர் தற்போது கல்வி நிர்வாக சேவையில் Iஆந் தர உத்தியோகத்தராக சேவையாற்றுவதாகவும், இலங்கை கல்வி நிர்வாக சேவை IIIஆந் தரத்திற்கு திறந்த அடிப்படையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்வதற்காக 2005 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தி அடைந்து 266 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டதாகவும், இருப்பினும் பரீட்சைகள் திணைக்களத்தினால் | (அ) இது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கு அமைவாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 10/01/04/139 ஆம் இலக்க மற்றும் 2025.04.30 ஆந் திகதிய கடிதத்தில் அறிவித்துள்ளதாவது 2005.03.24 ஆந் திகதிய கடிதத்தின் ஊடாக வெளியிடப்பட்டுள்ள பெறுபேறு அறிக்கையில் விசேட கல்வி விடயத் துறையின் கீழ் மனுதாரரின் பெயர் உள்ளடக்கப்பட்டிருப்பதாகவும், பெறுபேறு அறிக்கைக்கு அமைவாக மனுதாரர் 11 – சாதாரண ஊழியர் எண்ணிக்கை, 30 – வணிக விஞ்ஞானம், 33 – விசேட கல்வி ஆகிய விடயத் துறைகளுக்கு விண்ணப்பித்து இருப்பது அவதானிக்கப்பட்டதாகவும்<br><br>(ஆ) மனுதாரரின் அக்காலத்தில் கல்வி அமைச்சின் மேலதிக | குறித்த மனு மீள் விசாரணையின் பின்னர் எதிர்வரும் நாளொன்றில் இறுதி பரிந்துரை வெளியிடப்படும்.<br><br>(மீள் விசாரணைக்கு மனுதாரரின் தனிப்பட்ட கோவை மற்றும் அதில் அடங்கியுள்ள கேள்விக்குரிய விண்ணப்பப்படிவத்தின் மூலப்பிரதியை குழுவிற்கு முன்வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்டது.) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மனுதாரர் விண்ணப்பித்த தகவல் தொழிநுட்பப் பாடத்தை சரியாக குறித்துக் கொள்ளாமையினால் 2005 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட பரீட்சைக்கு அமைவாக நியமனம் கிடைக்கப்பெறாமல் அநீதிக்கு உள்ளானதாகவும் குறிப்பிட்டு, மேல் காணும் விடயத்தை கருத்திற் கொண்டு கல்வி நிர்வாக சேவை III ஆந் தர நியனத்தை 2005.08.01 ஆந் திகதிக்கு முன் திகதியிடுமாறு கோரி மனுதாரர் மனு ஒன்றினை முன்வைத்துள்ளார். | செயலாளரை விழித்த 2025.07.28 ஆந் திகதிய கடிதத்தின் படி, விசேட கல்வி விடயத் துறையின் கீழ் குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்திருப்பதை ஏற்றுக் கொண்டு இருப்பதாகவும் விசேட கல்வி விடயத் துறையின் கீழ் நியமனம் வழங்குவதற்கு முடியாமல் இருப்பின் தகவல் தொழிநுட்ப பாடத்துறையின் கீழ் நியமனம் வழங்குமாறும் கோரி இருப்பதாகவும், அதேபோல் தான் விண்ணப்பிக்காத விடயத்தின் கீழ் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தால் மனுதாரர் அச்சந்தர்ப்பத்திலேயே அதனை தெரிவித்து இருக்க வேண்டும் எனவும்<br><br>(இ) 2005 ஆம் ஆண்டில் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தாலும் கூட வியாபார நிர்வாக பட்டதாரியொருவரான மனுதாரரால் முன்வைக்கப்பட்டிருந்த பட்டப்படிப்புச் சான்றிதழில் அவர் விண்ணப்பித்திருந்த “விசேட கல்வி” பாடத் துறைக்கு அமைவான பாடங்கள் உள்ளடங்காமையினாலேயே குறித்த பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படவில்லை எனவும்<br><br>(ஈ) எந்தப் பாடத் துறைக்கு அமைவாக நேர்முகப் பரீட்சைக்கு | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அழைக்கப்படுகின்றது என்பதுவும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற கடிதத்தில் குறிப்பிடப்படுவது இல்லை எனவும், அக்காலத்தில் கல்வி அமைச்சினால் பிழையான விடயத் துறையின் கீழ் தன்னைப் பரிந்துரைத்துள்ளமையால் பொதுச் சேவை ஆணைக்குழு தனக்கு குறித்த நியமனத்தை வழங்கவில்லை என மனுதாரர் குறிப்பிடப்படுகின்ற விடயங்கள்<br><br>(உ) தான் விடயக் குறியீடு 33 – விசேட கல்வித் துறையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்படவில்லை எனில் தனது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயக் குறியீடு 36 – தகவல் தொழிநுட்ப பாடத் துறையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யுமாறு எழுத்துமூலம் வேண்டுகோள் விடுக்குமாறு கல்வி அமைச்சு அறிவித்திருந்ததன் படி அந்த விடயத்தைக் குறிப்பிட்டு 2005.07.28ஆந் திகதிய கடிதத்தை தான் வழங்கியதாக மனுதாரர் மேலும் குறிப்பிட்டுள்ள விடயங்கள்<br><br>(ஊ) 2005 ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு 11 – சாதாரண ஊழியர்கள் எண்ணிக்கை, 30 – வணிக விஞ்ஞானம், 36 – தகவல் தொழிநுட்பம் ஆகிய விடயத் துறைகளின் கீழ் விண்ணப்பித்ததாகவும் அதனை உறுதிப்படுத்துவதற்கு மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சட்டம் கீழ் பெற்றுக் கொண்ட பரீட்சை விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்றை குழுவுக்கு ஆற்றுப்படுத்தியதாகவும்<br><br>(எ) மனுதாரர் முன்வைத்த விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 36 – தகவல் தொழநுட்ப விடயக் குறியீடு கேள்விக்குறியது எனவும், திறந்த அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக 2005 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட பரீட்சைக்கு மனுதாரர் முன்வைத்த விண்ணப்பப்படிவத்தின் மூலப்பிரதியுடன் ஒப்பிட்டு அதனை உறுதி செய்து கொள்ள வேண்டுமெனவும், ஊவா மாகாண கல்வித் திணைக்களத்திடமுள்ள மனுதாரரின் தனிப்பட்ட கோவையில் குறித்த மூலப் பிரதி காணப்படுவதாகவும்<br><br>(ஏ) மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான சட்டத்தின் கீழ் பெற்றுக் கொண்டு குழுவிற்கு முன்வைத்திருக்கும் விண்ணப்படிவத்தின் பிரதியினூடாக மனுதாரர் முன்வைத்த விடயங்கள் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் உறுதிப்படுத்தப்படவில்லை எனவும், அந்தத் தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஊவா மாகாணத்தின் கல்வித் திணைக்களத்திடம் காணப்படுகின்ற மனுதாரரின் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தனிப்பட்ட கோவை அடங்கிய குறித்த பரீட்சை விண்ணப்பப் படிவத்தின் மூல ஆவணத்துடன் ஒப்பிட்டு இறுதி பரிந்துரை வழங்கப்பட வேண்டுமெனவும் | |
| 85<br><br><br><br><br>86 | எம். பீ. நவரத்ன COM/PP/2025/395 கௌரவ உபுல் கித்சிறி, பா.உ., இனால் முன்வைக்கப்பட்டுள்ளது. 2025.11.24 ஆந் திகதி விசாரணை செய்யப்பட்டுள்ளது. அமைச்சுத் தொடர்பு இலக்கம் : MSVRI/ADM/03/05-iv திகதி: 2024.06.19<br>--------------------<br>திரு. சந்திரசிறி வெத்தசிங்க லியனகே COM/PP/2025/450 கௌரவ அருண பனாகொட பா.உ., இனால் முன்வைக்ப்பட்டுள்ளது. 2025.11.24 ஆந் திகதி விசாரணை செய்யப்பட்டுள்ளது.<br>அமைச்சுத் தொடர்பு இலக்கம்: MSVRI/ADM/03/0 | மனு இலக்கம் COM/PP/2025/395, 450 மற்றும் 516 ஆகிய மனுதாரர்களால் கீழ்க் காணும் மனு முன்வைக்கப்பட்டுள்ளது.<br><br>2006 வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட அரச சேவையின் சம்பளத்தினை மறுசீரமைப்பதற்கான முன்மொழிவுகளை செயற்படுத்துவதற்கு வெளியிடப்பட்ட அரச நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 06/2006 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக இலங்கை தொழிநுட்பக் கல்விச் சேவையின் சேவை யாப்பு திருத்தப்பட்டு 2006.01.01 ஆந் திகதியிலிருந்து அமுல்படுத்த வேண்டி இருப்பினும் 2020.07.06ஆந் திகதியிலிருந்தே அமுல்படுத்தப்பட்டதாகவும், அதன்படி இலங்கை தொழிநுட்பக் கல்விச் சேவையின் II ஆந் தரத்தில் உரிய தகுதியினை பூர்த்தி | மனு இலக்கம் COM/PP/2025/395,450 மற்றும் 516 இற்கு கீழ்க்காணும் அவதானிப்புகள் குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ளன.<br><br>அரச நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 06/2006 இன் ஏற்பாடுகளை செயற்படுத்துவதற்காக புதிய தொழிநுட்ப கல்விச் சேவை யாப்பினை அமுல்படுத்துவதற்கு தாமதம் ஏற்பட்ட காரணத்தினாலும் திருத்தப்பட்ட புதிய தொழிநுட்ப கல்விச் சேவை யாப்பினூடாக 7 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்ததன் அடிப்படையிலும் I ஆந் தரத்திற்கு பதவி உயர்வு பெறுவதற்கான சந்தர்ப்பம் இழக்கப்படுதல் மற்றும் இடைக்கால ஏற்பாடுகளினூடாக தற்போது சேவையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மாத்திரம் நிவாரணம் கிடைத்திருக்கின்றமை ஆகிய காரணங்களினால் அரச நிர்வாக சுற்றநிருப இலக்கம் 06/2006 அமுலாக்கப்பட வேண்டிய 2006.01.01 ஆந் திகதியிலிருந்து 2020.07.06 ஆந் திகதிவரை உரிய பதவி உயர்வுகள், சம்பள உயர்வுகள் இன்றி சேவையில் ஈடுபடுவதால் தொழிநுட்ப கல்விச் சேவை உத்தியோகத்தர்கள் அநீதிக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாக தீர்மானித்த குழு கொள்கை அனுமதிக்காக அமைச்சரவைக்கு அனுப்பி | மனு இலக்கம் COM/PP/2025/395,450 மற்றும் 516 இற்கு கீழ்க் காணும் பரிந்துரைகள் குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ளன.<br><br>2020.07.06 ஆந் திகதியிலிருந்து அமுலாக்கப்பட்ட புதிய சேவை யாப்பு 7 வருட திருப்திகரமான சேவைக் காலத்தை நிறைவு செய்ததற்கு அமைவாக தரம்I இற்கு பதவி உயர்வு பெறுவதற்கான சந்தர்ப்பத்தையும் உள்ளீர்த்து 2015.05.05ஆந் திகதிக்கு முற்திகதியிடுவதற்கான இயலுமை தொடர்பாக அரச சேவை ஆணைக்குழு, கல்வி, உயர்க் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு மற்றும் தொழிநுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வழங்குவதற்கான திணைக்களத்தின் பரிந்துரையுடன் மேற்படி மனு மீள் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு தீர்மானித்ததோடு மீள் விசாரணையின் பின்னர் இறுதி பரிந்துரைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| 87 | 2i-iii தொகுதி<br>திகதி : 2023.05.26<br>---<br>திரு. டபிள்யூ. எம். ரணதுங்க COM/PP/2025/516 கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான, பா.உ., இனால் முன்வைக்கப்பட்டுள்ளது. 2025.11.24 ஆந் திகதி விசாரணை செய்யப்பட்டுள்ளது. அமைச்சுத் தொடர்பு இலக்கம் : MSVRI/ADM/03/05-iv<br>திகதி : 2024.02.21 | செய்து சேவையில் ஈடுபட்டிருக்கும் தான் உட்பட உத்தியோகத்தர்களுக்கு குறித்த சுற்று நிருபத்தின் கீழ் இலங்கை தொழிநுட்ப கல்விச் சேவையின் I ஆந் தரத்திற்கு பதவி உயர்வதற்கான சந்தர்ப்பம் இல்லாமலாக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ள மனுதாரர்கள் தமக்கு ஏற்பட்டுள்ள அநீதியை சரி செய்வதற்குத் தகுந்த ஆணையினை வழங்குமாறும்,<br>2006.01.01 ஆந் திகதி தொடக்கம் இலங்கை தொழிநுட்ப கல்விச் சேவையில் சேவை யாப்பினை அமுலாக்குமாறும் கோரி இந்த மனு முன்வைக்கப்பட்டுள்ளது. | வைக்கப்பட்ட அரச சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டு சேவை யாப்பின் அமுலாக்கத் திகதியாக குறிப்பிடப்பட்டுள்ள 2015.05.05 ஆந் திகதியிலிருந்து அமுலாக்குவதன் மூலம் மனுதாரர்கள் உட்பட தொழிநுட்பக் கல்விச் சேவை உத்தியோகத்தர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முடியுமென அவதானிக்கப்பட்டது. | வெளியிடப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு** | | | | |
| 88 | திரு. கே.எல்.சீ. நிஷாந்த COM/PP/2025/86 கௌரவ சதுர கலப்பத்தி, பா.உ.., இனால் முன்வைக்கப்பட்டுள்ளது. | 2007.09.23 ஆந் திகதி பொலிஸ் சேவையில் இணைந்து பல்வேறு பிரதேசங்களில் சேவை செய்ததாகவும், மனைவிக்கு ஏற்பட்ட நோய் நிலைமை காரணமாக சத்திர சிகிச்சை | 2025.11.17 ஆந் திகதி விசாரணைக்கு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் சுகயீனம் காரணமாக குறித்த திகதியில் குழுக் கூட்டத்திற்கு வருகை தர இயலாது என மனுதாரர் அறிவித்திருந்தார். | மனுதாரரின் கோரிக்கைக்கு அமைவாக எதிர்வரும் நாளொன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2025.11.17 ஆந் திகதி விசாரணை செய்யப்பட்டது. அமைச்சுத் தொடர்பு இலக்கம்: 01/02/03/32/2023<br>திகதி : 2023.10.20 | மேற்கொண்டதுடன் தொடர்ந்தும் சிகிச்சைப் பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டதாகவும், அதனால் பிள்ளைகளினதும், வயது முதிர்ந்த பெற்றோரினதும் அலுவல்கள் காரணமாக நேரத்தை செலவிட வேண்டி ஏற்பட்டமையால் சரியான நேரத்திற்கு சேவைக்கு சமுகமளிக்க முடியாமல் போனதாகவும், குறித்த நிலைமை காரணமாக மூன்று தடவைகள் சேவையை இழந்ததாகவும், இறுதியாக 2021.07.20 ஆந் திகதி பதவி வெறிதாக்கல் ஆணை பிறப்பிக்கப்பட்டதுன் மூன்று மாத காலத்திற்குள் பொலிஸ்மா அதிபருக்கு மேன்முறையீடு செய்ததாகவும், கிடைக்கப் பெற்ற மறுமொழிக்கு அமைவாக 2022.05.12 ஆந் திகதி அரச சேவை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்த போதிலும் பின்னர் அது தேசிய பொலிஸ் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆணைக்குழுவிற்கு மாற்றப்பட்டதன் பின்னர் 2023.07.14 ஆந் திகதி நிராகரிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ள மனுதாரர் இது தொடர்பாக கருணை அடிப்படையில் கவனம் செலுத்துமாறு கோரி இந்த மனுவை முன்வைத்துள்ளார். | | |
| 89 | திரு.கே.சீ.ஏ ஜயலத் COM/PP/2025/200 கௌரவ திலின சமரகோன், பா.உ., இனால் முன்வைக்கப்பட்டுள்ளது. 2025.11.17 ஆந் திகதி விசாரணை செய்யப்பட்டது. அமைச்சுத் தொடர்பு இலக்கம்: 02/03/23/63/2021 திகதி : 2022.03.02 | 1996.01.07 ஆந் திகதி பயிற்சி பெறும் பொலிஸ் கான்டபிளாக இலங்கை பொலிஸ் சேவையில் இணைந்ததாகவும், 2016.09.05 ஆந் திகதி கின்னியா பொலிஸ் நிலையத்திற்கு இணைந்து கின்னியா பாலத்தின் அருகில் அமைந்துள்ள வீதித் சோதனைச் சாவடியில் பணியில் ஈடுபட்டிருக்கையில் இலஞ்சம் பெற்றதாக குற்றச்சாட்டப்பட்டு 2016.09.06ஆந் திகதி மனுதாரர் உட்பட அன்றைய தினம் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் பணி இடை நீக்கம் செய்யப்பட்டதாகவும், இது தொடர்பான நான்கு குற்றச்சாட்டுக்களுட | (அ) அனுமதிப் பத்திரமின்றி மணல் கொண்டு சென்ற லொறி ஒன்றிடம் இலஞ்சம் பெறுதல் தொடர்பான சம்பவமொன்றிற்கு மனுதாரருக்கு குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டு, அது தொடர்பாக முறையான ஒழுக்காற்று விசாரணையின் பின்னர் மனுதாரருக்கு ஒழுக்காற்றுக் கட்டளை வழங்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி முறையான ஒழுக்காற்று விசாரணையில் ஏழு சாட்சியாளர்களில் இருவர் மாத்திரம் சாட்சி வழங்கியுள்ளதாக தெரிய வந்துள்ளதாகவும், மனுதாரர் குழுவிற்கு முன்வைத்த ஆவணங்களின் படி குறித்த லொறி மணல் கொண்டு செல்வதற்கு புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தினால் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருந்ததாகவும், குறித்த லொறியிடம் இலஞ்சம் பெற்றது குறித்த அதே | எதிர்வரும் நாளொன்றில் இந்த மனு மீள விசாரணை செய்யப்பட்டு பின்னர் இறுதி பரிந்துரைகள் வழங்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ன் கூடிய குற்றப்பத்திரிகை மனுதாரருக்கு வழங்கப்பட்டு நடாத்தப்பட்ட ஒழுக்காற்று விசாரணையின் போது மூன்று குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளியாக்கப்பட்டு, தண்டனையாக இரண்டு சம்பள உயர்வுகள் பிற்போடப்பட்டதாகவும், 2021.01.23ஆந் திகதி இரண்டாவது ஒழுக்காற்றுக் கட்டளை இரத்து செய்யப்பட்டு மீண்டும் சேவையில் இணைக்கப்பட்டதாகவும் அப்போது 22 வருட சேவைக்காலம் கிடைக்கப்பெற்றாலும், இந்த ஒழுக்காற்றுத் தண்டனை காரணமாக பலத்த அநீதி நடைபெற்றதாகவும் கிடைக்கப்பெற வேண்டிய பதவி உயர்வுகளை இழந்துள்ளதாகவும் குறிப்பிட்டு, ஒழுக்காற்று கட்டளையை முழுமையாக இரத்து செய்து, பணி இடை நீக்கம் செய்யப்பட்ட காலத்திற்கு நிலுவைச் சம்பளத்துடன் அல்லது இன்றி ஆனால் செயற்பாட்டு சேவைக்காலமாக கருதி நிவாரணம் | உத்தியோகத்தர் என்பதை உறுதிப்படுத்துவதற்கு சாட்சியாளருக்கு முடியாமல் போனது அவதானிக்கப்பட்டதாகவும்,<br><br>அதே போல், இந்த சம்பவம் தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது இலஞ்ச சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கு போதுமான காரணங்கள் இல்லாமையால், முறைப்பாடு தொடர்பாக மேலும் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு மேற்படி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும்<br><br>(ஆ) பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, பொலிஸ் மா அதிபரை பிரநிதித்துவப் படுத்திய உத்தியோகத்தர்களாலும் மனுதாரராலும் சபைக்கு முன்வைக்கப்பட்ட விடயங்கள் ஒன்றுக்கு ஒன்று முரணானவை எனவும் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரர் கோரிக்கை முன்வைத்துள்ளார். | | |

இணைப்பு II

**மாதிரி மனுவொன்றின் வடிவம்**

Comment 1: இந்தக் குறிப்பு தற்கால பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால் மனுவின் மேல் குறித்து கையொப்பமிட வேண்டும். (மனு உறுப்பினரின் முகப்புக் கடிதத்துடன் முன்வைப்பது போதுமானதாகாது)

Comment 2: உதா:- திசாநாயக்க முதியான்சேலாகே பத்ம பண்டார

Comment 3: உதா:- 65/5, பிளியன்தல வீதி, மஹரகம

Comment 4: இந்த மனுவால் கோரப்பட்டுள்ள நிவாரணங்களின் அடிப்படையில், இதற்கு முன்னர் மனு முன்வைக்கப்பட்டுள்ளதாயின் அந்த மனுவின் இலக்கத்தை உட்சேர்ப்பது உகந்தது.

“கௌரவ சபாநாயகர் அவர்களே,

இந்த மனுவை முன்வைக்கிறேன்.”

..................................................................

முன்வைக்கும் உறுப்பினரின் ஒப்பம், திகதி மற்றும்

உத்தியோகபூர்வ முத்திரை

மனுதாரரின் முழுப் பெயர் :

வசிப்பிட முகவரி :

(அலுவலக முகவரியல்ல)

தேசிய அடையாள அட்டை இலக்கம் :

நிலையான தொலைபேசி இலக்கம் :

கையடக்கத் தொலைபேசி இலக்கம் :

வேறு :

திகதி :

Comment 5: உரிய முறையில் விடுப்பு பெற்றுள்ள நிலையில் இழக்கப்பட்ட எனது தொழிலை மீள பெற்றுக் கொள்ளல்

கௌரவ சபாநாயகர்

இலங்கைப் பாராளுமன்றம்

ஸ்ரீ ஜயவர்தனபுர

கோட்டை

கௌரவ சபாநாயர் அவர்களே,

**(தலைப்பு)** நடைபெற்றுள்ள அநீதி, எதிர்ப்பார்க்கப்படும் தீர்வை உணர்த்தும்

(தலைப்பு சுருக்கமாகக் காணப்பட வேண்டும்)

**(நடைபெற்றுள்ள அநீதி)**

சம்பவத்திற்குரிய விடயங்கள் தெளிவாக, திகதிகள் மற்றும் கால வரையறைகளுடன், குறித்த சம்பவம் மற்றும் பாதிக்கப்பட்ட நபர் தொடர்பான உரிய நிறுவனத்திடமோ அமைச்சுக்கு இலகுவாக விடயங்களை தேடிக் கொள்ள முடியுமான அத்தியாவசிய மற்றும் முக்கியமான விடயங்களை மாத்திரம் மரியாதைக்குரிய மொழியில் முன்வைக்க வேண்டும்.

Comment 6: உதா:- திசாநாயக்க முதியான்சேலாகே பத்ம பண்டார ஆகிய நான் 2015.01.01 திகதி பயிற்சி உப பொலிஸ் காவளராக (சொ.கொ. 147xx) இலங்கை பொலீஸில் இணைந்து மஹரகம பொலிஸில் பணியாற்றும் போது 2019.5.30 ஆந் திகதி கடுமையாக நோய்வாய்ப்பட்டமையினால் முறையாக இரண்டு தினங்களுக்கு விடுப்புக்கோரி விண்ணப்பித்து சேவை நிலையத்தில் இருந்து வெளியேறினேன். இருப்பினும் நோய் நிலைமை அதிகரித்ததால் களுபோவில போதனா வைத்தியசாலையில் 3 வாரம் தங்கியிருந்து சிகிச்சைப் பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்பட்டது. நான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக தந்தி மூலம் 2019.06.02ஆந் திகதி சேவை நிலையத்திற்கு அறிவித்தேன். இருப்பினும் 2019.06.15ஆந் திகதிய கடிதத்தினூடாக 2019.06.02ஆந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் எனக்கு (முன்கூட்டிய அறிவிப்பின்றி சேவைக்கு வருகை தராமலிருத்தல் எனக் குறிப்பிட்டு) சேவை வரிதாக்கல் கடிதம் வழங்கப்பட்டது. வைத்திய அறிக்கைகளின் பிரதிகளும் ஏனைய ஆவணங்களும் தேவையேற்படின் முன்வைக்கலாம்.

**(எதிர்ப்பார்க்கப்படும் நிவாரணம்)**

கோரப்படும் நிவாரணம் என்ன என்பது திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட வேண்டும்

**(மனுதாரரின் கையொப்பம்) ........................................**

<u>மனுதாரரின் கையொப்பம்/ பெருவிரல் அடையாளம்</u> (எழுத முடியாத ஒருவர் சாட்சியாளர் ஒருவரின் முன்னிலையில் தனது கைவிரல் அடையாளத்தை வைக்க வேண்டும்).

Comment 7: கௌரவ சபாநாயகர் அவர்களே, இது தொடர்பாக ஆராய்ந்து எனக்கு மீண்டும் தொழிலைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கௌரவத்துடன் கேட்டுக் கொள்கிறேன். (இங்கு நீதியை பெற்றுத் தருமாறு அல்லது நிவாரணம் பெற்றுத் தருமாறு மாத்திரம் குறிப்பிடாது எதிர்ப்பார்க்கின்ற நிவாரணம், மேற்குறிப்பிட்ட உதாரணத்தில் காட்டப்பட்டவாறு திட்டவட்டமாக குறிப்பிடப்படல் வேண்டும்)